# யாழ்ப்பாணம்
# எனது முதுசம், சீதனமல்ல

யாருக்காக?
“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்” - என்றார் திருவள்ளுவர்

ஆகவே
யாழ். மூதாதையோரின் அறிவுக் களஞ்சியத்தை
புண்படுத்திய எமது பாவம் கழிய வேண்டி நிற்கும்
எமக்காக இந்த உண்மை தொகுப்புரை

சீதனம் கடனை உள்ளடக்காது
முதுசம் கடனையும் சேர்த்து எடுத்து
கடன் பாவமாவதை தடுக்கும் - யாழின் தேசவழமை

யாழ்ப்பாணம் எனது முதுசம், சீதனமல்ல

# 1. முற்கர்ம பலன்

**நாம் நம்பிக்கையுடன் செயற்படும்போது நம்பிக்கை எமது ஊக்க சக்தியாகிறது**

08-05-2018 காலை 5 மணி. யாழ் நூலகம் பக்கம் பார்த்து அங்கிருக்கும் சரஸ்வதியை விழுந்து கும்பிட்டு என் இரண்டாவது புத்தகமாக இதை எழுதுகின்றேன். சாவிக்கொத்தில் தெரிந்த ஷிருடி பாபாவிடம் ஆசீர்வாதம் கிடைத்த உணர்வு. அந்த கீ செயின் (Key Chain) பார்வதி அக்கா தந்தவ. பார்வதி அக்கா இங்லிஷ் ப்ரவசர் (English Professor). அவவின் அம்மாவும் எனது பாட்டியும் சகோதரிகள். பார்வதி அக்காவின் மூத்த சகோதரி ரதி அக்கா அறிவால் உயர்ந்தவ. திருமதி ரதி ஆனந்தகுமாரசுவாமியாக அவ கோப்பாய் ட்ரெய்னிங் கொலிஜ் பிரின்ஸிப்பல் (Kopaai Training College Principal) ஆக தலைமை வகுத்தா.

இப்படியான ஒரு பகிர்வுக்கு (Sharing) அந்த கீ செயின் (Key Chain) படம் கண்ணுக்குத் தெரிந்தது ஒரு தற்செயலான சம்பவம் அல்ல. நான் திட்டமிட்டுச் செய்த அலுவலும் அல்ல. அது இயற்கையின் அமைப்பு. என்னைப் பொறுத்தவரை அதுதான் விதி. நான் அமைத்த கர்மா. ஷிருடி பாபாவின் உருவம் நான் யாழ்ப்பாணத்தில் வாழும்போது எமது குடும்பத்தில் பெண்கள் படித்து கல்வித்துறையில் உயர் பதவியிலிருந்து மரியாதைக்குரியவர்களாகக் கருதப்பட்டவர்களின் ஆசீர்வாதம் எனக் குண்டு என்று உணர்த்திய அனுபவம். யாழ்ப்பாண அனுபவங்கள் என்றால் எனக்கு ஷிருடி பாபாவின் அருள் உள்ளடக்கப்பட்டவை என்று நம்புகின்றேன். நம்பிக்கை அந்த விளைவின் வேர் / ரூட் (Root). இதை அடிப்படையாக வைத்து ரூட் கோஸ் (Root Cause) / அடிப்படை காரணம் என்ன என்று ஆராய்வார்கள் - உண்மை தேடுபவர்கள்.

பல வருடங்களுக்கு முன் ஷிருடி பாபா எமது வீட்டிற்கு கார்த்திகைத் திங்களன்று வந்தார். எனது சிநேகிதி விஜயா அமிர்தலிங்கம் சத்திய

சாய்பாபா பக்தை. அவ என்னை மகளிர் தினம்/ லேடீஸ் டே (Ladies day) அன்று தமது சாய்பாபா சென்டர் (Sai Baba Centre) இல் கதைக்கும்படி கேட்டா. நானும் உடன்பட்டேன். அங்கு சென்ற போது அது எனது ஒரு முக்கிய கனவில் வந்த இடம் என்று தெரிந்தது. அந்தக் கனவில் நான் ஒரு இடத்துக்குப் போகின்றேன். அங்கு எமது சிநேகிதி தர்மராணி இருக்கின்றா. வேறு பெண்களும் இருந்தார்கள். அங்கு ஒரு வெள்ளைக்கார பெண்மணி ஒரு சிறுமியைக் கண்டிக்கின்றா. சிறுமி பெரிய கறுத்த பொட்டு வைத்திருக்கிறா. பெண்மணி அங்கால போனதும் நான் சிறுமியைக் கேட்கின்றேன் - 'நீங்க பிழை விட்டீங்களா?' என்று. அதற்கு சிறுமி தனக்குத் தெரியவில்லை என்பது போல் மௌனமாக இருக்கிறா. அங்கிருந்த ஜன்னல் மூலமாக ஒரு காட்சி தெரிந்தது. விவசாயிகள் மாதிரி பலர் தோளில் கலப்பை ஏந்தியவாறு நின்றனர். அவர்களில் முன்னால் நின்ற ஒருவர் என்னையே பார்க்கின்றார். யோகர்சுவாமியின் சாயல் மனதில் வந்தது. அவர் வாய் திறக்காமல் சொன்னார் / உணர்த்தினார்- 'தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் உதவி செய்' என்று. கனவு முடிந்ததும் அந்தமாதிரி ஒரு அனுபவம் யோகசுவாமியுடன் எனக்கு 14 வயதளவில் நடந்தது மனதிற்கு வந்தது. அந்த அனுபவத்தில் நான் எனது அம்மாவுடன் டொக்டர் பசுபதி (Dr Pasupati) வீட்டு வாசலில் யோகர்சுவாமியை தரிசனம் செய்ய நின்றேன். மற்றவர்களும் பசுபதி குடும்பத்தினரும் நின்றார்கள். யோகசுவாமி என்னையே பார்ப்பது போல் உணர்வு. அது இப்ப நடந்தது போல் ஒரு பசுமையான அனுபவம். இடைக்கிடை மனதில் தோன்றும். அது நடந்து ஒரு 30 - 35 வருடங்களுக்கு பிறகு கலப்பை ஏந்தியவர்களுக்காக சுவாமி கனவில் வந்த அனுபவம், அதை நான் அம்மாவுடன் டெலிவோன் (Telephone) இல் பகிர்ந்தேன். நான் சிட்னி, ஒஸ்ரேலியா (Sydney, Australia) வில். அம்மா ட்ரண்டோ கனடா (Toronto, Canada)வில். அடிக்கடி வோன் (Phone)இல் கதைப்போம். அம்மா நேரத்தைக் கணித்து வோன் பண்ணுவா. இந்தக் கனவைப் பற்றி சொன்னதும் அவ முன் டொக்டர் பசுபதி (Dr. Pasupati) வீட்டில் நடந்த அனுபவத்தை தான் எப்படி மனதில் பதித்தா என்று எனக்குக் கூறினா. அதன்படி சுவாமி கால் முறிந்து குணமாகி வந்து கொண்டிருந்த நேரம். ஆகவே காரை விட்டு இறங்கவில்லை. அம்மா தம்பி சிவாவை (குழந்தை) தூக்கி சுவாமியிடம் ஆண் பிள்ளைக்கு ஆசீர்வாதம் கேட்டிருக்கின்றா. ஆனால் சுவாமி கேட்டின் ஓரத்தில் ஒதுங்கி நின்ற

என்னையே பார்க்கின்றார். அம்மா இதைச் சொன்னதும் நான் சொன்னேன் அம்மாவுக்கு, 'அந்த அனுபவம் எனக்கு நல்ல நினைவிருக்கின்றது. நயன தீட்சை அதுவென்று எடுத்துக்கொள்கிறேன்' என்று. அம்மாவும் ஆமோதித்தா. மேலும் அம்மா சொன்னா தனது தாத்தா ஏ.எம்.பிள்ளை ( A.M. Pillai) அவர்களுக்கு ஷிருடி பாபாவின் அருளுண்டு. நான் ஏ.எம். பிள்ளை தாத்தாவை குல பெரியவராக வழிபடுவதால் அந்த அருளில் எனக்கும் பங்குண்டு என்று.

மகளிர்தின விழாவிற்குப் பிறகு நான் அந்த சாய்பாபா சென்டர்-அதன் பெயர் காலிங்வேட் சாய் சென்டர்-(Carlingford Sai Centre) ஒவ்வொரு கிழமையும் போகத் தீர்மானித்தேன். எங்கள் வீடு கிழக்கில் கூஜி (Coogee) என்ற இடத்தில். காலிங்வேட் வடமேற்கில் - 1- 1 ½ மணித்தியாலம் காரில் போக வேணும். ஒவ்வொரு ஞாயிறும் காலை 7.30 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனை தொடங்கும். முதல் ஞாயிறு எம்மை வரவேற்றவர்களில் தர்மராணியின் அக்கா ரஞ்சியின் மகன் ப்ரபாவும் அவரது மாமி திருமதி சிவராஜாவும் இருந்தனர். ப்ரபாவை ஏற்கனவே எங்களுக்கு நல்ல பழக்கம். தர்மராணி மூலம் . இருவருமாக எம்முடன் கதைத்து ஷிருடி சாய்பாபாவின் பெரிய படம் இல்லை என்று தெரிந்துகொண்டு அடுத்த கிழமை கொண்டு வருவதாகக் கூறினார்கள். நானும் சரியென்றேன். அடுத்த ஞாயிறு கொண்டு வந்தார்கள். அந்த கனவில் வந்த அதே முகம். காரில் ஏற்றி ஹோம்புஷ் (Homebush) என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கு எனது கணவர் பரம் எச்.எஸ்.ஸி (H S C) சோதனை எடுக்கும் பிள்ளைகளுக்கு ட்யூசன் (Tuition) சொல்லிக் கொடுப்பார். பின்னேரம் போல வீடு திரும்புவோம். அன்று வீடு வரமுன்னர் ஷண் - சேதாவைப் பார்க்கப் போனோம். ஷண்முகசோதி என்னுடன் எயர்லங்கா (Airlanka)வில் வேலை செய்தார். அவர் மூலம் சேதாவும் சிநேகிதியானா. சிவராஜா ஆண்டி (Aunty) தந்த ஷிருடி பாபாவின் கதையை சேதாவுடன் பகிர்ந்தேன். அந்தக் குடும்பத்தைப் பற்றி சேதா உயர்வாக கதைத்தா. ஆண்டியின் மகன் யாதவன் என்றும் அவர் ஒரு தமிழ் பத்திரிகை வெளியிடுபவர் என்றும் சொன்னா. பின்னர் அன்று கார்த்திகை தீபம் என்று சொன்னா. சேதா முருகன் பக்தை. நல்லூர் முருகனில் ஆழ்ந்த நம்பிக்கை. ஆகவே அவ அன்று கார்த்திகை தீபம் என்று சொன்னது ஷிருடி பாபா என் வீட்டுக்கு வருவது முருகன் தான் வருவதாக சொன்னது போல

இருந்தது. எனக்கும் நல்லூர் முருகனில் ஆழ்ந்த நம்பிக்கை. மனமுருகி நான் கேட்டு அவர் அருளாதது ஒன்றுமே இல்லை. கூஜி வீட்டுக்கு வந்ததும் படத்தை மாட்ட வெளிக்கிட்டோம். ஹோல் (Hall)இல் கிச்சின் (Kitchen) பக்கம் இருந்த சுவரில் ஒரு ஆணி இருந்தது. அதில் கொழுவினோம். அப்ப இருட்டுப்படும் நேரம். கூஜி கடற்கரை ஓரமாக நீட்டிற்கு லைட் (Light) போடுவார்கள். அன்று அந்த லைட்களின் பிரதிபிம்பம் ஷிருடி பாபாவின் படத்தில் விழுந்து அழகான கார்த்திகை விளக்கீடு அனுபவத்தைத் தந்தன. மனமுருகி நன்றி கூறினேன் சிவராஜா ஆண்டிக்கும் ப்ரபாவுக்கும். இப்பவும் இரவு நேரங்களில் அந்த விளக்கீடு படத்தை பார்த்து மகிழ்வேன். பல வருடங்களுக்குப் பிறகு கார்த்திகை விளக்கீடன்று மாவீரர் தினம் கொண்டாட யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் திட்டமிட்டபோது ஏன் சுவாமி கார்த்திகை தீபமன்று வீடு வந்தார் என்று விளங்கியது. அந்த சர்ச்சையில் நானும் கலந்து சிறிலங்கா காடியன் (Sri Lanka Guardian) மூலம் எனது கருத்தைப் பகிர்ந்தேன்.

நான் காலிங்வேட் சாய் சென்டர் செல்லத் தொடங்கிய சில கிழமைகளில் எனது கம்பியூட்டரில் கூகுல் சேர்ச் (Google Search) செய்தபோது யாதவன் சிவராஜாவின் பெயரும் கண்ணில் தட்டுப்பட்டது. அப்படியான நிகழ்வுகள் தற்சமயம் நடப்பவை அல்ல. வாசித்துப் பார்த்தபோது தெரிந்தது யாதவனும் இயக்கத்திற்குப் பணம் கொடுத்த காரணத்தால் கைது செய்யப்பட்டு பெய்ல் (Bail) மறுக்கப்பட்டு மெல்பன் (Melbourne) சிறையிலிருந்தார் என்று. அப்ப அவரது அம்மா மௌனமாக வருந்தி ஷிருடி பாபா படத்தின் முன்னால் நின்று கும்பிட்டது நினைவில் வந்தது. அந்தத் தருணங்களில் ஒரு சக்தியின் ஊடகமாக நான் வருவேன். இயற்கையாக இயங்குவேன். என்னை தங்களில் ஒருவராக ஏற்றுக் கொண்ட சாய் குடும்பத்திற்கு செய்ய உந்தப்பட்டேன். எனது பாணியில் ஒஸ்ரேலியன் கவன்மன்ட் (Government)க்கு கடிதம் எழுதினேன். அப்ப மதிப்பிற்குரிய விலிப் ரடொக் (The Hon Philip Ruddock) அட்டேர்னி ஜெனரல் (Attorney General)ஆக இருந்தார். அவர் விரைவில் மறுமொழி போட்டார். அதன்படி எல் டி டி ஈ (L T T E) சட்டப்படி ஒஸ்ரேலியாவில் பயங்கரவாதக் குழு என்று பட்டம் சூட்டப்படவில்லை என்றும் ஆனால் அவர்களுக்கு காசு அனுப்புவது சட்டப்படி குற்றம் என்றும் எழுதியிருந்தார். சட்டத்தின் வரையறுப்பைப் புரிந்து கொண்டு அரசியலை இயக்க முற்பட்டேன். நம்பிக்கை மூலம் சட்டத்திற்கு

அப்பாற்பட்ட அமைப்புக்களை இயக்கமுடியும். எனது சட்டபூர்வமான பதவிப்படி கடமை செய்தால்தான் அதற்கு அப்பாற்பட்ட மேற்பட்ட உயர்ந்த அமைப்புகள் மட்டத்தில் தீர்வு வரும் என்பது எனது அனுபவம் மூலம் நான் உணர்ந்த உண்மை. எந்த மட்டத்தில் நாம் கடமையை வெளிப்படுத்து கின்றோமோ அந்த மட்டத்தில் எனது நம்பிக்கையால் வரும் தீர்வு வெளிப்படுத்தப்படும். என்னைப் பொறுத்தவரையில் இது உண்மையின் நியதி.

ஒஸ்ரேலியாவில் அட்டர்னி ஜெனரல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர். மினிஸ்டர் (Minister). எனது பல்கலைக்கழக அனுபவங்களின் போது திரு விலிப் ரடொக்குடன் அடிக்கடி தொடர்பு கொண்டேன். அவரும் தனது விஷயங்களில் தவறாது பதில் போட்டார். நம்பிக்கை வளர்ந்தது. நான் சட்டபூர்வமான அமைப்பு மூலம் செயற்பட்டு அந்த அமைப்பில் அதி உயர்ந்த அதிகாரியை மையமாக வைத்து கணிக்கும்பொழுது வரவேண்டிய பலனைவிடக் குறைவாக எனக்கு அந்த அமைப்பு மூலம் வந்தால் அந்தப்பலன் உண்மையின் அமைப்பில் எனக்கு அங்கீகாரம் கொடுக்கின்றது. வரவேண்டிய பலனை ஒறுக்கும்போது பலன் உண்மையான அமைப்பை உருவாக்கி இயக்கும் சக்தியாகின்றது. உண்மையின் அமைப்பை இயக்குவது நம்பிக்கை. அந்த வழியில் பலருக்கு வேலை செய்யாத அமைப்பு எனக்கு வேலை செய்திருக்கின்றது. அதை விளைவு மூலம் பார்க்க முடியாது. மனதுக்கு வரும் நிம்மதி, சந்தோஷம், தன்னம்பிக்கை மூலம் உள்ளுக்குள் உணரலாம். அப்படித்தான் ஒஸ்ரேலியாவின் சட்ட மகாதிபதியும் (Attorney General) நியூ சவுத் வேல்ஸ் ஓடிட்டர் ஜெனரல் (New South Wales Auditor General) உம் எனக்குச் சொந்தமானவர்கள். இவ்விஷயத்தில் ஒஸ்ரேலியன் மனித உரிமை கமிஷன் பிரஸிடன்டும் பதில் போட்டார். அவர்கள் நேரடியாக ஒன்றும் செய்யமாட்டார்கள். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ தமது பதவியில் தாம் மனமுவந்து போட்ட ஈடுபாட்டை என்னுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள். அப்படியே நானும் அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

நான் கனவில் ஷிருடி பாபா உணர்த்தியதாக நம்பிய செய்திக்கு உருவம் கொடுத்தேன். தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் சமத்துவ உரிமை கிடைக்க உதவவேண்டும் என்று பெட்டிஷன் (Petition) தயார் பண்ணி

கையெழுத்துக்களை வாங்கினேன். சிலர் வெள்ளைக்காரர். பெரும்பாலானோர் தமிழர். அதுவும் ஹோம்புஷ் (Homebush) இல் வசிக்கும் தமிழர். பெரும்பாலானோர் மௌனமாகக் கையெழுத்திட்டனர். ஓரிருவர் ஏன் முஸ்லிமையும் சேர்த்திருக்கின்றேன் என்று விவாதித்தார்கள். ஒருவர் சொன்னார் ஒஸ்ரேலியன் அரசாங்கத்தில் எமக்கு ஆதரவான பிரதிநிதிகளில் சிலர் முஸ்லிம்களுக்கு எதிராக நிற்பர் என்று. நான் எனது பெட்டிஷனை மாற்றவில்லை. கனவில் ஷிருடி சுவாமி கூறியது எனது வேதம். அதை அப்படியே எடுத்தால்தான் உள் ஆசீர்வாத சக்தி மேலிருந்து வரும் என்று நம்புகின்றேன் . அடுத்தமுறை நீதிமன்றத்திற்கு சில கிழமைகளில் இவ் விஷயம் வந்தபொழுது அவர்களுக்கு பெய்ல் கிடைத்தது. பின்னர் சிறு கண்டிப்புடன் குற்றம் நீக்கப்பட்டது. அந்த நம்பிக்கையின் வெளிப்பாடு அந்தக் கனவில் வந்த சிறுமி ஒஸ்ரேலியன் சட்டத்தில் பெரும்பாலும் ஈடுபடா விட்டாலும் (யாதவனின் தாயார் உட்பட) தாம் தமிழர் என்ற நம்பிக்கை உடையவர்கள். ஏன் முஸ்லிமை சேர்க்க வேண்டும் என்று பின்னர் தெளிவாக விளங்கியது. முஸ்லிம் மக்களை சேர்க்காவிட்டால் இலங்கையில் தமிழருக்கு சமஉரிமை கோரும் அதிகாரம் உண்மைப்படி இல்லை. மதிப்பிற்குரிய பொன்னம்பலம் 50 : 50 கோரும்போது பெரும்பான்மை சாதியினருக்கு 50% சிறுபான்மை எல்லோருக்கும் ஒன்றாக 50% என்று வாதாடினார் - இந்த அடிப்படையில் தான் என்று நான் உணர்ந்தேன். இப்ப முஸ்லிம்களுக்கு அந்தப் பதவி அவர்கள் சிறுபான்மையாக இருக்கும் இடங்களில் குறைக்கப்படும்போது தமிழருக்கு அவர்களுடன் இணைய வேண்டிய கடமை உண்டு. அதுதான் உண்மையின் தீர்வு. ஷிருடி சுவாமி முஸ்லிம் - இந்து மக்களுக்கு பொதுவானவர். அவரது ஆசி இருக்கும் மனங்களில் முஸ்லிம் - இந்து ஒற்றுமை நிச்சயம் உண்டு.

மேலும் 2019 ஈஸ்ட ஸண்டே (Easter Sunday) குண்டு வெடிப்பு நடந்த பின் மேலும் விளங்கியது எனது சேவை எப்படி அமைய வேண்டும் என்று.

# 2. கடவுள் என்னுள்

**கலாசார வேறுபாடுகள் கூடும்போது இடைவெளி இருந்தால்**
**சமத்துவ நிலை உருவாகி சண்டைகளும் சச்சரவுகளும் தவிர்க்கப்படும்**

'மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை' என்று கூறுவார்கள். எங்கள் வட்டுக்கோட்டை பயிற்சி நிலையம் அமைந்தது அப்படி ஒரு சேவையால் என்பது எனது நம்பிக்கை. எனக்கு கணித லெக்சரர் (Lecturer) ஆக இருந்த திரு. சிவதொண்டன் அப்படித்தான் கூறுவார் - யோகர்சுவாமி குருபூசையில் கலந்து பணியாற்றும்போது. நவீன சந்தை - நான் வட்டுக்கோட்டை வாசியாக இயங்கத் தொடங்கிய பொழுது அது இயங்காமல் முடங்கிக் கிடந்தது. வட்டுக்கோட்டையிலிருக்கும் துணைவிக் கிராமத்தில் எமது குடும்பக் கோயில் அமையப்பெற்றது. அதற்குப் பெரிய காரணம் எனது அப்பாவுக்கு தனது தாயிலிருந்த ஈடுபாடும் கடவுள் நம்பிக்கையும். அவர் அந்த இடத்தைக் காசு கொடுத்து வாங்கினார். அப்பாவின் தாயார் மாணிக்காச்சி கோயிலை அமைத்து நம்பிக்கையுடன் பராமரித்தார். 10 பிள்ளைகள் இருந்தும் அவர் அராலி வீட்டில் 87 வயது மட்டும் தனியாக வாழ்ந்தார். அவர் எனது ரோல் மொடல் (Role Model). ஆச்சி அராலியிருந்து நடந்து கோயிலுக்கு வருவார். எங்கள் குடும்பத்திற்கு அந்தக் கோயில் - சங்கரத்தை வைரவர் கோயில். துணைவியில் காளி கோயில் என்பார்கள். எனக்கு இரண்டும் சம்மதம் தான். துணைவி மக்களின் கோரிக்கைப்படி பாதைக்கும் அரசாங்க நிர்வாக கட்டடத்திற்கும் நாம் கோயில் வளவில் நிலம் கொடுத்தோம். சட்டப்படி அது வழங்கப்பட்டது. நோக்கப்படி அது பங்களிப்பு. அதாவது அங்கு பொது நிர்வாகத்தில் எமது பங்களிப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடு. கிருஷ்ண பரமாத்மா கீதை மூலம் எமக்கு சொன்னார். "மக்களும் நானே மன்னனும் நானே" என்று. உயர்ந்த நோக்கம் அங்குதான் எங்களைக் கொண்டு செல்லும். அதுதான் மனிதனின் நிஜமான குறிக்கோள். அல்டிமட் ரியாலிட்டி (Ultimate Reality) என்று கிறிஸ்தவர்கள் சொல்வார்கள். எம்முள் தேவரும்

இருக்கின்றார்கள். மிருகமும் இருக்கின்றது. இரண்டு சக்தியும் சமமாக இருக்கும் போது நாம் அடிப்படை மனிதர். தேவர் சக்தி கூடும்போது நாம் அந்த லட்சியக் குறிக்கோள் பக்கம் கிட்டப் போகின்றோம். மிருகக் குணம் / அசுரத்தனம் கூடும் போது நாம் அந்த லட்சியக் குறிக்கோளில் இருந்து தூரப் போகின்றோம்.

நானறிந்தவர்களில் பெரும்பாலானோர் கடவுள் சக்தியை நம்புகின்றவர்கள். நம்பிக்கை என்று ஒன்றிருந்தால் கடவுள் சக்தி இருக்கின்றது என்பதை அது உறுதிப்படுத்துகின்றது. பலர் அந்த சக்தியை உருவமாக சிலைகள் மூலம் வழிபடுகின்றார்கள். சிலர் அதே சக்தியை - சக்தியாக உணர்கின்றனர். ஒரே மனிதர் ஒரு நேரத்தில் உருவமாகவும் இன்னொரு நேரத்தில் அருவமாகவும் கடவுளைக் கருதலாம். சக்தி நிலையில் நாம் கடவுளுடன் ஒன்றுபடுகின்றோம். அதேபோலத்தான் மனிதருடனும், உருவமாகக் கடவுளைப் பார்க்கும் போது வேறு உருவங்கள் கண்ணுக்குத் தெரியக் கூடாது. அப்ப கடவுள் சக்தியை அந்த உருவம் மூலம் உணருவோம்.

நேற்று 11.05.2018 நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றேன். எமது வட்டுக்கோட்டை ட்ரெயினிங் சென்டர் (Traing Center) இல் வேலை செய்து வந்து சாப்பிட்ட களைப்பில் சோர்வாக இருந்தது. ஆனால் மனமோ முருகனிடம் செல்ல விரும்பியது. 5.45 அளவில் எழும்பி ஜெட்விங் ஹோட்டேல் (Jetwing Hotel') இலிருந்து புறப்பட்டேன். ஆலயத்தில் சுவாமி ஆலய உள்வீதி ஊர்வலம் வந்து கொண்டிருந்தார். பழனி முருகன் சந்நிதானத்துக்கு முன்னாலிருக்கும் அறைக்குள் சுவாமியை இறக்கிக் கொண்டு சென்றபோது அது அர்த்த ஜாம பூஜை என்று விளங்கிக் கொண்டேன். சிட்னி (Sydney)யில் விஷ்ணு கோயில் ஐயர் சொல்லித் தந்தார்.

போரின் போது நல்லூர் கோயிலின் நேரங்கள் ஊரின் நிலைப்பாட்டின் நிமிர்த்தம் மாற்றப்பட்டன என்றும் நல்லூரின் விதிமுறை இன்னும் போர்க்கால விதிமுறைகளை முற்றாக கைவிடவில்லை என்றும் முடிவு செய்தேன். நல்லூரில் உள்ள நிர்வாகம் என்னை வியப்பில் ஆழ்த்தும். நம்பிக்கையின் ஆழத்தையும் அறிவின் உயரத்தையும் நான் அங்கே உணருகின்றேன் அல்லது அவதானிக்கின்றேன்.

இன்று 12.5.2018 எனது தம்பி சிவசக்திவேல் நவரட்னம் பிறந்த தினம். கனடாவில் டொரன்டோ நகரில் வாழும் சிவாவிற்கு இங்கிருந்து

வோன் (Phone) பண்ணிக் கதைத்தேன். 1963இல் அவனைப் பெற்றெடுத்த போது அம்மா பட்ட கஷ்டங்களையும் எமது படிப்பிற்காக அம்மாவும் அப்பாவும் எடுத்த முயற்சிகளையும் செய்த ஒறுத்தல்களையும் நினைவு கூர்ந்தோம். தற்போது நான் தம்பி பிறந்த ஆஸ்பத்திரிக்கு முன்னால் அமைந்துள்ள ஜெட்விங் (Jetwing) ஹோட்டேலில் தங்கியிருக்கின்றேன். நான் கூறியவற்றைக் கேட்டு தம்பி சொன்னார் யாழ்ப்பாணத்தில் பல முன்னேற்றமான மாறுதல்கள் இருப்பதாக. நான் சொன்னேன் நான் யாழ்ப்பாணத்திலேயே இருந்திருந்தால் இப்படியான ஒரு அமைப்பில் தான் இந்த வயதில் (68) இருந்திருப்பேன் என்று நம்புகிறேன் என்று. அப்படி இருக்கும் ஒரு அமைப்பை உறுதிப்படுத்த வேண்டியது எனது கடமை என்று நான் கருதுகின்றேன். ஜெட்விங் தராதரம் உலக தராதரங்களுக்கு சமமாக உயர்ந்துள்ளது. எனக்கு நான் எனது தராதரங்கள் மூலம் ஜெட்விங்கின் பங்காளி என்ற உணர்வுண்டு. பணவசதி குறைந்தவர்களுடனும் எனக்கு அப்படி உண்டு. அப்படியான ஒரு ஊர்தான் துணைவி. வட்டுக்கோட்டை, யாழ்ப்பாண நகர வாசிகள் அளவிற்கு அவர்களிடம் வசதி இல்லை என்று கருதி நாம் அங்கு இருக்கும் எமது குடும்பக் கோயில் வளவில் ஒரு சிறு வீடு அமைத்தோம். நான் இலங்கையில் வடமாகாணத்திற்கு வரும்பொழுது அங்கு தங்கினேன். எனது கணவர் பரமும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை வந்து தங்கினார். எமது நண்பர்கள், உறவினர்கள் வேறு வேறு இடங்களுக்கு அல்லது நாடுகளுக்குச் சென்றார்கள். எனக்கு இங்கே வருவதில் கூடிய திருப்தி இருந்தது.

பலப்பல இடைஞ்சல்கள் வந்தன. முதலில் ரோசா மருதலிங்கம் கேட்டுத் தான் நாம் காணியில் பாதைக்கு பங்கு கொடுத்தோம். ரோசாவின் தகப்பனார் திரு.ஆறுமுகம் எனது மாமனாராகிய நல்லதம்பி சுப்பிரமணியம் என்பவரின் தலைமையில் வேலை பார்த்தார். ஆகவே ரோசா தைரியமாக என்னிடம் கிராமத்திற்கு உதவ பாதைக்குக் காணி கேட்டா. நானும் மனமுவந்து உடன்பட்டு எனது அம்மா, சகோதரர்களிடம் கேட்டேன். அவர்களும், முக்கிய மாக தம்பி சிவா ஒத்துழைத்தார்கள். பின்னர் போரினால் வந்த தாக்கத்தி லிருந்து மீள்வதற்கு அரசாங்கத்திற்கு ஊடாக பொதுக் கட்டடம் கட்ட திருமதி பொன்மலர் ராஜேஸ்வரன் தலைமையில் இடம் தேடுவதை அறிந்து அதற்கும் எமது கோயில் வளவில் பங்களித்தோம். கட்டடம் கட்டி அரசாங்க அதிபர் தலைமையில் திறக்கப்பட்டு துணைவி மாதர் சங்கத்திடம்

நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது அரசாங்க அதிபராக இருந்தவர். திரு.கணேஷன் அவர்கள் கோயிலுக்கு வந்து மரியாதை பண்ணிவிட்டு திறப்பு விழா நடத்தினார். நான் எனது அம்மாவின் மச்சான் முறையான திரு.மயில்வாகனம் ஸ்ரீகாந்தாவை நினைத்து கோயிலில் நன்றி சொன்னேன். இப்பொழுது எனது நம்பிக்கையின்படி அது அவரது ஆத்மாவிற்கும் அவரை நம்புபவர்களுக்கும் ஆத்ம பாதையில் போய் சேரும். அந்த ஆத்ம சக்தியை நாம் எல்லாரும் ஏதோ ஒரு விதத்தில் புரிந்து கொள்கின்றோம். எனது உணர்வுக்கு நான் கொடுக்கும் உருவம் மேற்கூறியபடி உள்ளது. உறவு உயர உயர அது ஒரு பொது அமைப்பை உருவாக்குகின்றது. உறவு உண்மையின் அடிப்படையில் இருக்குமளவில் சொந்தமாகிறது. உறவு பதிய பதிய அமைப்பு இல்லாமல் போகின்றது. விளைவை மையமாக வைத்து உருவாகும் உறவு நான் வேறு நீ வேறு என்ற நிலைக்கு கொண்டுவரும். அதிலும் உண்மையின் பாதையில் நாம் நடந்தால் இயற்கையின் சக்திகள் எமக்கு ஆதரவாக தாமே வந்து ஒன்று கூடிக் கொள்ளும். துணைவியிலிருந்த அரசாங்க அமைப்பு விளைவை மையமாகக் கொண்டது. அரசாங்கமோ எம்மைப் போன்ற தனியாரோ பணம் ஒதுக்கீடு செய்தால் அதை விரைவாக விளைவாக காட்ட முற்படுவார்கள் துணைவி மாதர் சங்கம். அப்படி ஒரு முறை எமது காணிக்கும் நாம் நன்கொடையாக மக்களுக்குக் கொடுத்த காணிக்கும் இடையில் முள்கம்பி வேலி போட்டார்கள். எனக்கு மனம் நொந்தது. எமது கோயில் வளவைச் சுற்றி முள்கம்பி வேலி போட்டோம். மேற்படி பாகப்பரிவினை செய்த ஒருவரும் எமது வளவிற்குள் அனுமதியின்றி நுழையமுடியாது என்று கட்டளை பிறப்பித்தேன். சட்டப்படி அது தனியார் வளவு. கோயிலில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு அது அந்த அளவுக்கு பொதுச் சொத்து. வேலியை இடையில் போட்டு பாகப் பிரிவினை என்னைக் கேட்காமல் செய்தவர்களுக்கு அது தனியார் கோயிலே. ஆகவேதான் அந்தக் கட்டளை. நாம் பின்னர் காசு சேர்த்து வேலிக்குப் பக்கத்தில் எங்கள் பக்கத்தில் சுவர் கட்டினோம். அது அப்போது அந்த அத்தியாயத்தின் உண்மையை அடிப்படையாக வைத்து எழுதிய முடிவுரை.

நேற்று 13.05.2018 அன்னையர் தினம். கணவரும் பிள்ளைகளும் வாழ்த்தினார்கள். கோயிலுக்குச் சென்றேன் ஜீவன், ராதா ஐயா, ஜீவனின் 12 வயது ஆண் பிள்ளைகள் தர்ஷன், தர்மிகன் இவர்கள் கோயிலில்

நின்றார்கள். ராதா ஐயர் பூஜை செய்தார். ரோசாவின் கணவர் கோயில் வாசலுக்கு நேரே அடுத்த வளவிலிருந்த ஆல மரத்தினடியில் கதிரை போட்டிருந்தார். கோயிலுக்கு வரவில்லை. முன்னர் காலை, மாலை வந்து கும்பிடுவார். நான் சில வேளைகளில் கமராவில் பார்த்து அவருடன் கும்பிடுவேன். அவரது மகள் விஜிதாவிற்கு அவரது மருமகனுடன் திருமணமாகி வெளிநாடு சென்றா. மகன் படிப்பதற்கு வெளிநாடு சென்றார் என்று கேள்விப்பட்டேன்.

நேற்று பூசை முடிந்த பின் சிறிது நேரம் மூலஸ்தானத்திலிருந்து தியானம் பண்ணினேன். பின்னர் அலுமாரிக்கு மேலிருந்த தூசியைத் துடைத்துக் கொண்டு பொது முறைகளை வளர்க்க வேண்டும் என்று யோசித்தேன். அப்போது விளக்கின் தீபத்தில் ஒரு பொறி எகிறி விழுந்தது. சந்தோஷமாக இருந்தது. விழுந்து கும்பிட்டு வைரவர் – காளிக்கு நன்றி கூறினேன்.

சந்தோஷத்திற்குக் காரணம் உண்டு. அம்மா ஸ்ரீகாந்தா மாமாவைப் பற்றிய அனுபவமொன்றை என்னுடன் பகிர்ந்திருந்தா. அதன்படி ஸ்ரீகாந்தா மாமாவிற்கு அரசாங்க அதிபர் (Government Agent) பதவி கிடைக்க வேண்டும் என்று அவரின் மனைவி நயினாதீவு அம்மன் கோயிலில் கும்பிடும் போது தனக்கு ஒரு அறிகுறி காட்டும்படி வேண்டினா. அப்போது கற்பூர ஆரத்தியிலிருந்து தீப்பொறி எகிறி விழுந்தது. மாமா அரசாங்க அதிபராகப் பதவி ஏற்று எமது குடும்ப அமைப்பை உயர்த்தினார். எனது அம்மா, அப்பா அவர்கள் மாமாவில் அதிகம் மதிப்பு வைத்திருந்தார்கள். அதனால்தான் நான் பொதுக் கட்டட திறப்பு விழா அன்று அவருக்கு நன்றி சொன்னேன் என்று நம்புகின்றேன். நேற்று அந்தப் தீப்பொறி எகிறி விழுந்ததை அறிவு மூலம் எனது பொதுத் தன்மையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள (Sharing) ஆசீர்வாதம் கிடைத்ததாக நம்புகின்றேன். துணைவி மக்களின் பிள்ளைகள் உயர் படிப்புகள் படித்து இயங்கவும் வெளிநாடு சென்று பல கலாசார மக்களுடன் உறவு கொள்ளவும் அந்த பொது அறிவு தேவை என்று நம்புகின்றேன். எமது அம்மா நேற்று அன்னையர் தினமன்று எனக்கு ஆசீர்வாதம் தந்தது அந்தப் பாடம் மூலம் தான். அதில் இன்னொரு உண்மை தெரிந்தது என்னவென்றால் சாதியைக் காரணம் காட்டி துணைவி மக்கள் தம்மை மற்ற கலாசாரங்களிலிருந்து விலத்திக்

கொண்டனர். ஆகவே தான் அந்த வேலி. ரோசாவின் கணவர் பொதுப் பாதையைப் பாவித்து பூசைக்கு வந்திருக்கலாம். கும்பிட வந்திருக்கலாம் திருப்பதி ஏழுமலையானைப் படியேறித் தரிசிக்கப் போகின்றவர் களுக்கு கூடிய அனுக்கிரகம் உண்டு. காரில் போகிரவர்களைவிட என்று சொல்வார்கள். நாம் அனுக்கிரகத்திற்காகச் செய்யும் ஒறுத்தல்கள் உருவத்தில் வேறுபடலாம். ஆனால் செய்யக் கூடியதாயிருந்தும் வசதியாக இல்லை என்று கோயிலுக்கு உள்ளே வராதவர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இல்லை என்று தான் நான் முடிவு செய்கின்றேன். தனி நலத்திற்கு கேட்டாலும் கடவுள் கொடுப்பா/கொடுப்பார். அந்த முழுமையான அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்பவர் களுக்கு பொது ஈடுபாடு வளரும். திரு.மருதலிங்கம் அந்த ஆழத்தில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதை தனது தற்போதைய நடத்தை மூலம் காட்டி பொதுக் கோயிலில் இருக்கும் கடவுளை தான் தூர நின்று தான் கும்பிட வேண்டும் என்ற நியதியைக் காட்டியுள்ளார். இதையே முன்னர் சாதி மூலம் வகுத்தார்கள். அப்ப சண்டை போட்டவர்கள் இப்ப அது அந்தக் காலத்திற்குச் சரியான வகுப்பு என்று தமது நடத்தை மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்கள். அதாவது பொது நலத்தில் ஈடுபடுபவர்கள் மூத்த சாதி. தனி நலத்தில் ஈடுபடுபவர்கள் இளைய சாதி. அப்படியிருக்க சம உரிமை கேட்பவர்கள் இரண்டுமல்லாத வேறு சாதி. இனம், மதம், சாதி இவற்றை அடிப்படையாக வைத்து ஒருவரது தராதரத்தை கூட்டவோ, குறைக்கவோ கூடாது என்று ஜனநாயக நாடுகளில் சட்டம் உண்டு. ஒஸ்ரேலியாவிலும் உண்டு. Racial Discrimination Act 1975 என்று அதற்கு பெயர். அதன் காரணம் பல கலாசாரங்களையும் ஒரே இடத்தில் ஒரே சட்ட மூலம் நிர்வகிக்க வேண்டுமானால் வெவ்வேறு கலாசாரங்கள் மூலம் ஒருவரில் மற்றவர் வைக்கும் நம்பிக்கையின் உருவமும் வேறாக இருக்கும் என்பதே. அப்படியான சூழ்நிலைகளில் சரி பிழை போட பொதுச் சட்டம் தேவை, ஆனால் அநேகமான குடிமக்களுக்கு சட்டம் என்ன என்பதே பல விஷயங்களில் தெரியாது. நம்பிக்கையின் வரையறுப்பிற்குள் விருப்பு, வெறுப்புக்கள் தெரிவிக்கப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் அவை நியாயமான சட்டத்தின் முடிவுகளுடன் இணையும்.

அப்படித்தான் எமது குடும்ப நடப்பு தேச வழமை என்ற யாழ்ப்பாண சட்டத்துடன் இணைந்தது. காரணம் எனது கணவரது மூத்த சகோதரரது

சிந்தனை எமது சிந்தனையுடன் சொத்து விஷயத்தில் இணைந்ததே. தமிழ் பெண்கள் கலியாணம் முடிக்கும்போது சீதனம் கொடுப்பது யாழ்ப்பாணத்து வழமைகளில் ஒன்று. அது தேச வழமை சட்டப்படியும் அங்கீகாரம் பெற்றது. சீதனம் கொடுக்கும். வழக்கத்தைப் பற்றி எனக்கு எமது குடும்பம் மூலம் தெரியும். தெரியாமலிருந்தது என்னவென்றால் தேச வழமையின் சமத்துவம். தேச வழமைப்படி ஆணும் பெண்ணும் சம பதவி உள்ளவர்கள். ஆணுக்கு பெற்றார் படிப்பு வசதியைக் கொடுத்து உழைக்கும் வழியை காட்டினர். அதற்கு சமமாக பெண்ணிற்கு சீதனம் கொடுத்து அவரின் பிறந்த வீட்டு அனுபவத்தை முழுமையடையப் பண்ணுவார்கள். மகளாக முழுமையடையும் பெண் நல்ல தாயாகின்றா. கடவுளின் படைப்பில் ஏற்ற தாழ்வு இல்லை. கண்ணுக்கும் மூளைக்கும் தெரியும் குறைகளும் நிறைகளும் எமது மனதைப் பொறுத்தவை. தேடினால் குறையுடன் நிறையும் தெரியும். அவ்வளவிற்கு அற்புதமானது இந்தப் பிறவி.

எப்பொழுது சமநிலை எடுக்க வேண்டும் எப்பொழுது மூத்தோர் - இளையோர் என்று பதவி எடுக்க வேண்டும் என்பது ஒரு ஒழுங்கான அமைப்பிற்கு மிக முக்கியம். உண்மைப்படி ஒரு அமைப்பு தானாக அமையும். பொது நலத்திற்காக அதாவது அந்த உறவு சம்மந்தப்பட்ட எல்லாருடைய நலனுக்காக யார் ஒறுக்கின்றாரோ அவரே மூத்தவர். உண்மை யான அக்கறை உள்ளவர்கள் யோசிக்கத் தேவை இல்லை. அவர்கள் இயற்கையாக அப்படித்தான் நடப்பார்கள்.

எமது முன்னோர் அப்படி அமைத்த அமைப்புக்களை நாம் பின்பற்றும் போது நாம் அந்தப் பதவிகளில் இயங்கி அமைப்புடன் ஒன்றுபட முடியும்.

அதுவே தத்துவம் ஆகின்றது – நீ அதுவாகின்றாய் என்ற தத்துவம்.

# 3. காசா உரிமையா?

**கல்லைக் கண்டவன் கடவுளைக் காணான்**
**கடவுளைக் கண்டவன் கல்லைக் காணான்**

“இத்தகைய நிலையில் மனுதாரரின் செயற்பாடுகள் நீதிமன்றை உதாசீனம் செய்வதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வழக்கில் சம்பந்தப் பட்ட ஆவணங்களை எதிர் மனுதாரர்களுக்கு மன்றின் அறிவித்தல் இன்றி அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு சட்டத்தரணி இன்றையதினம் மன்றுக்கு சமூகமளிக்கவில்லை. குறித்த மனுதாரர் தரப்பு சட்டத்தரணியை சட்டவரப்பிற்குள் நின்று செயற்படுமாறு மன்று மனுதாரர் ஊடாக அறிவுறுத்துகின்றது.” மாவட்ட நீதிபதி மாண்புமிக்க திரு.க.அரியநாயகம் மல்லாகம் நீதிமன்றில் 26.01.2012 அன்று கொடுத்த கட்டளை

26 ஜனவரி (January) மாதம் ஒஸ்ரேலிய நாள். பிரித்தானியா (Britain) விலிருந்து கப்பலில் ஒஸ்ரேலியா என்று இன்று நாம் அழைக்கும் இடத்திற்கு மக்கள் வந்த நாள். ஒஸ்ரேலியாவில் பெரும்பான்மையானோர் கொண்டாடும் நாள். ஆதிவாசிகளில் சிலர் அந்நாளை துக்கதினமாகக் கொண்டாடுவர். என்னைப் பொறுத்தவரை அந்த நாள் நன்றி கூறும் (Thanksgiving); நாள். எனது தேவை; எனது கணவரது தேவை; பொருளாதார சுதந்திரம்; அதை நாம் இந்த நாட்டில் பூரணமாக அனுபவிக் கின்றோம். உழைப்பதால் மாத்திரமல்ல. எமக்கு எந்த சமுதாயம் மூலம் உழைக்கும் தன்மை அந்த உயரத்தில் வந்ததோ அந்த சமுதாயத்தில் சுதந்திரமான வாழ்க்கை அந்த தராதரத்தில் அமைந்துள்ளது. அதை எமது மூன்று பிள்ளைகளுக்கும் வசதிப்படுத்தி உள்ளோம் - அவர்களது கல்வி மூலம். நாம் வந்த வழியும் அவர்கள் வழியும் கல்வி மூலம் ஒன்று கூடுகின்றது.

26-01-2012இல் நான் துணைவியில் இருந்தேன். அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் எமது குடும்ப வழக்கு கேட்கப்பட வேண்டிய நாள். ஆகவே அந்த சுதந்திர சக்தியை வழிபட்டேன். அந்த சுதந்திரம் எனக்கு மிக முக்கியமானது. மனஅமைதியைத் தரும் அமிர்தம். அதை அனுப விப்பதற்கு நான் மற்றவர்களுக்குப் பட்டகடனை அடைக்க வேண்டும். மற்றவர்கள் எனக்கு பட்ட கடனை அடைக்கவும் வழிவிட வேண்டும். அப்பொழுது தான் நாம் ஒரு குடும்பம், சமூகம்.

மற்றவர்களுக்கு விளங்காவிட்டாலும் எனது நோக்கத்தின் அடிப்படை அந்த சுதந்திரம் தான். அது விலை மதிப்பற்றது.

எனது கணவரது அண்ணர் திரு.சுப்பிரமணியம் யோகநாதனின் மரணச் சொத்து வழக்குதான் அன்று நீதிமன்றிற்கு வந்தது. எமக்கு எதிர்தரப்பு வக்கீல் திரு.யோகேந்திரா வழக்குப் பத்திரத்தில் ஒரு சிறுபகுதியை மட்டும் அனுப்பியிருந்தார். அதில் ஒன்று தாம் பதிந்த வழக்குப் பத்திரங்களின்படி நீதிமன்றம் வழக்கு அடிப்படை விபரங்களைப் பிரசுரித்து யாராவது மறுப்புத் தெரிவிப்பதென்றால் 26.01.2012 என்று குறித்த திகதி அன்றோ அதற்கு முதலோ மறுப்புப் பத்திரத்தையும் அதை ஆதரிக்கும் சத்தியக் கூற்றையும் பதிவு செய்யும்படி இருந்த நீதிமன்ற நிர்வாகப் பத்திரம். மற்றது எனது கணவரும் நானும் சொத்தை சமமாகப் பிரிப்பதற்கு உடன்படுவதாகக் கூறும் பத்திரம். எங்களை அதில் கையெழுத்திட்டு அனுப்புமாறு கோரியிருந்தார். குடும்பத்திற்குள் சண்டை இவ்விடயத்தில் பிடித்தால் விஷயம் நீண்டகாலம் இழுத்தடிக்கும் என்றார். அவரது கடிதம் 06 டிசம்பர் (December) 2011 திகதியிடப்பட்டிருந்தது. நாம் அதற்கு 15 டிசம்பர் (December) திகதியிட்டு மறுமொழி அனுப்பினோம். டிசம்பர் 30 2011 அன்று சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்டு சத்தியக் கூற்றைத் தயார் பண்ணி மேற்கூறிய பத்திரங்கள் / கடிதங்களை அணைத்தோம். எமது வழக்கறிஞர் திரு. நடராஜா அவர்கள் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். முதல் நாள் கூறினார் டெலிவோனில், என்னை வந்து தாங்கள் தயாரித்த சத்தியக்கூற்றில் கையெழுத்திடுமாறு, நான் மறுத்து விட்டேன். எமது சத்தியக்கூற்றில் ஏதோ தவறு இருப்பதாக நீதிமன்ற நிர்வாகம் கூறியதாகக் கூறினார். நான் அவருடன் கதைத்த இடம் எமது கோயில் வளவில் நாம் கட்டிய வீட்டு விறாந்தை. கோயில்

மூலஸ்தானத்தைப் பார்த்துக் கொண்டே கதைத்தேன். பின்னர் விளங்கியது அந்த சக்தியின் மகிமை. அது எனது மூளையை உண்மை யிலிருந்து ஆடாமல், அசையாமல் பார்த்துக் கொண்டது.

வழக்கறிஞர் தாம் இலேசாக வெல்லுவதற்கு நாம் கொடுத்த சத்தியக் கூற்றைத் தள்ளி வைத்துவிட்டு தாம் தமது பாணியில் சத்தியக்கூற்றைத் தயாரித்தார். உண்மையை சட்டத்தின் வரையறுப்பிற்குள் எழுதத் தெரியாதவர்களுக்கு அப்படியான பாதை தேவைப்படலாம். நாம் ஓரளவு சட்டம் தெரிந்தவர்கள். அப்படியான எமது கூற்றை வழக்கறிஞர்கள் மாற்றுவது பெரும் பிழை. சட்டத்தின் வலு உண்மையின் வலுவைவிடக் கூடியதாக இருந்தால் மக்கள் நீதிமன்றிற்கு இளையவர்கள். சாதி பாஷை யில் கூறுவதென்றால் நீதிமன்றம் உயர்சாதி மக்கள் தாழ்ந்த சாதி. நான் மல்லாகம் நீதிமன்றில் பொதுவாக தாழ்ந்த சாதியாகவே நடத்தப்பட்டேன். 26.01.2012 அன்று சமமாக நடத்தப்பட்டேன். இதற்கு அந்த நீதிபதி மாண்புமிக்க திரு.க.அரியநாயகம் நிர்வாகத்தில் உயர்ந்து நின்றது காரணம் என உணர்ந்தேன்.

கிருஷ்ண பரமாத்மா கீதையின் மூலம் எம்முடன் பகிர்ந்த ஞானம் “மக்களும் நானே மன்னனும் நானே” என்பது. உண்மையான பொது சேவை செய்பவர்களும் இருபக்கமும் தாமாக வந்து முழுமையடை கின்றார்கள். மக்களும் தாமே என்று செயற்படும் அதிகாரிகள் அப்படித் தான் முழுமை அடைகின்றார்கள். நீதிபதி திரு.க.அரியநாயகம் ரிடையர் (Retire) பண்ணியபின் எனக்கு அங்கு குறைந்த பதவியே கொடுக்கப் பட்டது.

ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அடிப்படை தாமாக, சுயமாக இயங்க அமைக்கப்பட்ட ஸ்தாபனங்கள/இன்ஸ்டிடுயஷன்கள் (Institutions) சம அந்தஸ்து உள்ளவை என்பதே. அப்படியான சம அந்தஸ்து உள்ள ஸ்தாபனங்களின் செயற்பாடுகளில்/நிர்வாகத்தில் வெளி ஒருவரோ, வேறு ஸ்தாபனமோ தலையிட உரிமை இல்லை. அதன்படி நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் அரசாங்கமோ அரசாங்கத்தின் முடிவுகளில் நீதி மன்றமோ நேரடியாகத் தலையிட முடியாது. இதை டொக்ட்ரின் ஒவ் செப்பரேஷன் ஒவ் பௌவஸ் (Doctorine of Separation of Powers) என்று கூறுவார்கள்.

யாழ்ப்பாண கலாசார சட்டமான (Customary Law) தேசவழமையிலும் அந்த விதிமுறைக்கு முக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆணும் பெண்ணும் சமமென்றும் தாய்வழி சொத்து மகளுக்கும் தந்தைவழி சொத்து மகனுக்கும் முதலுரிமையாகச் செல்லவேண்டும் என்பதுதான் தேசவழமையின் அடிப்படை. மகனோ மகளோ இல்லாத இடத்தில்தான் ஒன்றாக்கி சமமாகப் பங்கிடலாம். பெண் பிள்ளைகள் செய்யும் தொழிலை, அதன் பெறுமதியை ஆண்களுக்குக் கணிப்பது கஷ்டம் என்றபடியால் இந்த வகுப்பு இருந்திருக்கலாம். சமமாக இருந்தால் இடைவெளி தேவை. அப்படித்தான் வித்தியாசமான திறமைகள் தடைப்படாமல் வளர முடியும். இந்து சமயத்தில் பெண்ணுக்கு சமஉரிமை சக்தி வழிபாட்டின் மூலம் காட்டப்படுகின்றது. எவரொருவர் செய்யும் வேலைக்கும், தியாகத்திற்கும் வெளியில் தெரியும் பலனை (காசு, பதவி) பெறவில்லையோ அவர் சக்தியாக அதை உள்ளடக்கியுள்ளார். அப்படியான ஒருவரைக் குறைந்த வராக நடத்தாமல் இருக்கவே அந்த இடைவெளியும் சம அந்தஸ்தும்.

இந்த வழக்கின் முதல் பதிவு 31.05.2011 அன்று நடந்தது. அதன்படி திருமதி சக்திதேவி மகாதேவன் (செல்வி சுப்பிரமணியம்), கலட்டி ஒழுங்கை, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை, மனுதாரர், சுப்பிர மணியம் தர்மலிங்கன் 25/1A, சுபோதாராம வீதி, தெகிவளை 1ஆம் எதிர் மனுதாரர், சரஸ்வதி சபாரத்தினம் (செல்வி சுப்பிரமணியம்) 37, ஓல்ட் வீல்ட் வீதி செவன் ஹில்ஸ், NSW 2147 ஒஸ்ரேலியா, 2ஆம் எதிர்மனுதாரர், சுப்பிரமணியம் பரமசிவம் 906/56 கார் ஸ்ரீட் கூஜி NSW 2034 ஒஸ்ரேலியா, 3ஆம் எதிர்மனுதாரர்.

அத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைப்படி ரூபா 16,249,254.10 வெளிநாட்டு வங்கியிலும் ரூபா 883,739.88 இலங்கை வங்கிகளிலும் மொத்தமாக ரூபா 17,132,993.98 சொத்தும் ரூபா 675,000 லயபிலிட்டீஸ் (Liabilities) / கொடுக்குமதியும் காட்டப்பட்டன.


| <u>கொடுக்குமதியின் விபரம்</u> | ரூபா |
|---|---|
| T. சபாநாதனுக்கு கடன் | 450,000 |
| செத்தவீட்டு செலவு | 25,000 |
| வக்கீலுக்கு முதல் பணம் | 200,000 |
| | 675,000 |

மேற்கூறப்பட்ட பெட்டிஷன் (Petition) விண்ணப்பத்தின்படி மரபுரிமை சான்றிதழ்கள் (Certificates of Heirship) கோரப்பட்டன. நிர்வாகம் கேட்கவில்லை.

நான் ஒரு ச்சாட்டட் எக்கௌண்டண்ட் (Charted Accountant). அதன் விதிமுறைகளின்படி ரூபா 675,000 கொடுக்குமதிக்கு அனுமதி கேட்கும் ஒரு அட்டவணை நிர்வாகம் கோருகின்றது. இதை நான் எனது - பக்க சட்டத்தரணிகளுக்கு எவ்வளவோ எடுத்துக்காட்டியும் அவர்கள் அதற்குக் கவனம் செலுத்தவில்லை. கொமன்சென்ஸ் (Common Sense) பாவித்தால் எந்த மரபுரிமையாளர் இந்தக் கடனைக் கொடுக்கப் போகின்றார்? மனுதாரர் தனது பங்கில்தான் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் நிர்வாக உரிமை நீதிமன்றத்தால் கொடுக்கப்பட வேண்டும். எமது மறுப்பில் நாம் நிர்வாகம் கேட்டோம். மல்லாகம் நீதிமன்றம் நீதிபதி திரு.ஜெ.கஜநிதிபாலன் தலைமையில் எமது எதிர்ப்பைத் தள்ளி வைத்து விட்டு மனுதாரர் கேட்டபடி மரபுரிமை சான்றிதழ் வழங்க அனுமதி கொடுத்தது. அது சட்டத்திற்கு முரணான ஒரு தீர்ப்பு. முளையிலேயே அந்த முரண்பாட்டை சரிப்படுத்தியிருக்க வேண்டும். ரெஜிஸ்ரார் (Registrar) மட்டத்திலேயே இதைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அதாவது மரபுரிமை சான்றிதழ் மட்டும் கோரும் விண்ணப்பத்தில் கொடுக்குமதி களை கழிக்க முடியாது /கூடாது. கொடுக்குமதிக் கழிக்கும் விண்ணப்பம் நிர்வாகம் கேட்கின்றது. இது இரண்டையும் ஒரே விண்ணப்பத்தில் கேட்பது வேண்டாம், வேண்டாம் என்று கூறிக்கொண்டு கையை நீட்டுவது போல், விண்ணப்பம் பாட் இன் லோ (Bad in Law) / சட்டப்படி பழுதானது. ஆனால் யாழ்ப்பாண நீதிமன்றில் மாண்புமிக்க நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உட்பட இதைக் கவனிக்கவில்லை. காரணம் மக்களது பங்களிப்பிற்கு அவர்கள் மரியாதை கொடுக்கவில்லை. நீதிவழுவினார்கள் உண்மையின் சந்நிதானத்தில்.

இன்று மே 18 2018. முள்ளிவாய்க்காலில் போரினால் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் நாள். 2009இல் அந்த இறப்பு நடந்தது. அப்போதும் நான் இலங்கையில் இருந்தேன். கொண்டு வரப்பட்டேன் என்றுதான் கூற வேண்டும். மே 04ஆம் திகதி எனது உறவினராகிய சித்ரா சண்முகராஜா ஶ்ரீகாந்தாவின் பிறந்ததினம். காலையில் அலுமாரி திறக்கும் போது

யோகர்சுவாமியின் சிஷ்யரான ஹவாயை (Hawaii) சேர்ந்த சுப்ரமணிய சுவாமியின் படம் கீழே விழுந்தது மனதிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஏனென்றால் அவரும் ஒரு பலே டான்சர் (Ballet Dancer) சித்ராவும் நாட்டியம் படிப்பிப்பவ. வழக்கம்போல சித்ராவிற்கு விஷ் (Wish) பண்ண வோன் (Phone) பண்ணினேன். ஒரு பதிலும் இருக்கவில்லை. மனம் பதைபதைத்தது. கடவுளைக் கும்பிட்டேன். சித்ரா எனக்கு பலவிதங்களில் உறவு. சித்ராவின் அம்மாவும் எனது அம்மாவும் ஒரே வீட்டில் பர்மாவில் வளர்ந்தார்கள். அந்த வீடு எனது பூட்டனார் அம்பலவாணர் முருகேசுப் பிள்ளை அமைத்த குடும்ப வீடு. அவருக்குப்பின் அவரது மூத்தமகன் துரைப்பிள்ளை அந்த குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். சித்ராவின் அம்மா பத்மா துரைப்பிள்ளையின் மூத்த மகள் துரைப்பிள்ளையின் அக்கா எனது அம்மாவின் அம்மா. எனது பாட்டி. அப்ப அம்மாவும் பத்மா ஆண்டியும் (Pathma Aunty) மச்சாள் முறை. அது ஒரு உறவு. துரைப்பிள்ளை பர்மாவிலிருந்து யாழ். மாவட்டத்தில் வட்டுக்கோட்டை டிஸ்ரிக்ட் (District)இல் உள்ள அராலியில் வசித்த யோகம்மா விஸ்வலிங் கத்தை மணம் முடித்தார்.



அம்பலவாணர் முருகேசபிள்ளை பர்மா - தர்ம உடையார் , அராலி குடும்பங்கள்

யோகம்மா எனது அப்பாவின் அக்கா ரத்தினம் எனது அப்பாவின் தங்கச்சி இரு பெண் பிள்ளைகளுக்குமிடையில் அப்பா ஒன்பதாவது பிள்ளை. ஆகவே நவரத்தினம் என்று பெயர். அப்பாவின் வழியில் பத்மா ஆண்டி எனது மச்சாள். ஆனால் நாம் உறவு கொண்டாடியது ஆண்டி (Aunty) - நீஸ் (Niece) என்ற உறவில், சித்ராவுடன் அப்பா வழி உறவு இரண்டாவது. பின்னர் சித்ரா மயில்வாகனம் ஸ்ரீகாந்தாவின் மகன் யோகியை திருமணம் செய்தபொழுது அது மூன்றாவது உறவு – அம்மா வழி.

மேலும் நான் சித்ராவின் தகப்பனார் பவளக்கால் சண்முகராஜாவின் அப்பாவின் இரண்டாவது மனைவி மூலம் சண்முகராஜாவின் தங்கை யாகிய பவளிக்கு வேலை மூலம் பழகிய சின்னத்துரை அப்பு அவர் களின் மூத்தமகன் மனோகருக்குக் கலியாணம் பேசினேன். அப்பு நல்லவர் அகங்காரம் இல்லாதவர் என்னை மதித்தவர்களில் அவர் உச்சத்தில் உயர்ந்து நிற்கின்றார். பவளிக்கு கல்யாண வயது தாண்டும் தருணம். சண்முகராஜா அங்கிள் (Uncle)இன் மகள்மார் ப்ரியாவும் சித்ராவும் மணம்முடிக்க பொருந்தி இருந்தது. என்னவென்று தெரியவில்லை பவளிக்கும் கல்யாணம் செய்ய என்னால் இயலுமானவற்றை செய்ய முடிந்தேன். அப்புவின் மூலம் மனோகரனுக்கு சமூகத்திற்கு ஒத்துவராத பழக்கங்கள் அதாவது குடி, பெண்ணாசை கொண்ட சகவாசங்கள் இல்லையென்று தெரிந்து கொண்டேன். தனியார் நிறுவனத்தில் காசாளராக வேலை செய்துகொண்டு இருந்தார். காசில் வலு கவனம். குடுக்கவும் மாட்டார்; எடுக்கவும் மாட்டார். பவனிக்கும் நான் உதவிசெய்து பெட்டா (Pettah)வில் ஒரு கடையில் டைப்பிஸ்டாக வேலை கிடைத்தது. மனோகரன் அங்கு சென்று பவளியைப் பார்த்து தகப்பனிடம் சம்மதம் சொன்னார். பவளி என்னிடம் சொன்னார்: “நீ இரண்டாவது மகனை கல்யாணம் முடியேன்” என்று. பவளியை நான் சம உறவாகக் கருதிய படியாலும் எனது மனதில் வேறு ஒருவரும் அந்த பதவிக்கு இல்லாத தாலும் நான் ஓம் என்று சொன்னேன். அப்படித்தான் எனது முதல் கல்யாணம் அமைந்தது. இரண்டாவது மகன் பெயர் வீட்டில் ஸ்ரீதரன் ஒவிஷலாக (Official) சிவஜோதி. அது அவரது தாயாரின் தந்தை பெயர். அவர் பாட்டனார் சிவஜோதி முனீஸ்வரம் அம்மன் பக்தர். சிவஜோதியை நான் திருமணம் செய்தபோது அமைந்தது – நாலாவது உறவு சித்ராவுடன்.

பின் சித்ராவின் டடி (Daddy) சண்முகராஜா அவர்களுடன் பிறந்த சகோதரன் பத்மநாதன் அண்ணாவின் ஒரே பிள்ளையான மாலினிக்கு சிவஜோதியின் கடைசித்தம்பி பாலாவை என் மூலம் பேசினார்கள். அப்புவிற்கு 4 ஆண்பிள்ளைகள் 3ஆவது மகன் ஜெயசீலன் வேலை யில்லாமல் இருந்தார். பிள்ளையாரில் ஆழ்ந்த நம்பிக்கை கொண் டிருந்தார். அவருக்கு நான் வேலை செய்த நியூ ஒலிம்பியா தியட்டரில் (New Olympia Theatre) வயர்மன் (Fireman) ஆக பயிற்சிக்கு வசதிப்படுத்தி வேலை எடுக்க ஆதரவு கொடுத்தேன். அவர் அந்த வேலையில் ஓய்வுபெறும் மட்டும் நல்ல பெயருடன் ஈடுபட்டார். மாத்தளை பெண்ணை அப்பு பேசிச்செய்து அவர்களுக்குப் பிறந்த 2 பெண் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்துள்ளார். சில வருடங்களுக்கு முன்னால் நான் கொழும்பு வந்திருந்தபோது நியூ ஒலிம்பியா தியட்டர் உரிமையாளர் ஹுசாம் காதர் ஆதரவுடன் என்னை வந்து சந்தித்து வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். அப்பொழுது நான் இரண்டாம் கல்யாணத்தின் மூலம் திருமதி பரமசிவம், பிள்ளையார் மூலம் வந்த உறவு முழுமையானதை சின்னத்துரை ஜெயசீலன் உறுதிப்படுத்தினார்.

இப்படியான உறவுகள் மூலம் நான் சித்ராவின் உறவையும் வலுப் படுத்தினேன். பதட்டம் 04 மே 2009இல் அதையும் அடிப்படையாகக் கொண்டது. பரமசிவத்தை நான் சந்தித்தது சித்ரா யோகி மூலம் தான். இப்பொழுது விளங்குகின்றது; அது எந்த அடிப்படையில் வந்தது என்று. அப்புவின் சக்தி வட்டத்தில் இருந்து வெளியேறியதும் அந்தப் படலம் முடிவுற்றது. அதன்பின் பாவ புண்ணியங்கள்தான் எங்களுடன் வரும். அது மன அமைதியைக் கொடுக்கும். மறுபிறவியின் அடிப்படையில் அப்படியே என்று எனது இந்த வாழ்க்கை மூலம் தெரிந்து கொண்டேன். அதற்குப் பிறகு அந்த வாழ்க்கையில் நாமும் சரி பிழை போடக்கூடாது. மற்றவர்கள் காலம் கடந்து போட்டதை எடுக்கவும் கூடாது. 04 மே 2009 மீண்டும் சித்ராவின் நம்பருக்கு போன் பண்ணினேன். அவவின் குரலைக் கேட்டு ஒரு பிரச்சனையும் இல்லை ஒன்று தெரிந்ததும் மனம் நிம்மதி அடைந்தது. அன்று பகல் பரத்தின் மூத்த அண்ணன் பரமநாதனின் மகன் செந்தில்நாதன் போன் பண்ணினார். அவரும் சித்ராவும் ப்ரிஸ்பன் (Brisbane)இல் குடியிருக்கின்றார்கள். தகப்பன் தவறி விட்டார் என்று அழுதார். அப்ப விளங்கியது ஏன் சுப்பிரமணிய

சுவாமிகள் படத்தில் அந்த சிறு தாக்கம் வந்தது என்று. நான் 2003 இல் போரின் இருபக்கத்தினருக்கும் ஏற்பட்ட தற்காலிக சமாதான நேரம் மிலிட்டன்ட்ஸ் (Militants) பக்கம் நிர்வாகம் அமைக்க மனித வளம் தேவை என்று ஸ்ரீகாந்தா மாமாவின் மகளும் யோகர்சுவாமி பக்தையுமாகிய மாலி அக்கா கேட்டு யு.என்.டி.பி. (U.N.D.P/United Nations Development Program) மூலம் வன்னி சென்றேன். அப்ப அங்கிருந்த இன்னொரு யோகர்சுவாமி பக்தை என்னிடம் சுப்பிரமணிய சுவாமிகள் படத்தைத் தந்து ஆசீர்வதித்தார். நானும் சுவாமியின் அந்தப் படத்தைக் கிளிநொச்சிக்கு கொண்டு போய் தங்கிய இடத்தில் வைத்து வணங்கினேன். கிளிநொச்சி யோகர்சுவாமி வேலைக்காக சென்று வாழ்ந்த இடம். அப்பொழுது செந்திலின் அப்பா செந்திலின் தம்பி லிங்கத்துடன் தங்கியிருந்தார். வவுனியாவில் லிங்கம் மூத்த அண்ணாவின் சகோதரி சரஸ்வதி சபாநாதனின் ஈடுபாட்டால் சேர்வே ஒவிஸ்ல் (Survey Office) பியன் (Peon) ஆக வேலை பார்த்தார். 2006ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று அமைதியான இயற்கை மரணம் எய்தினார். அந்தக் குடும்பத்தில் அப்புமாதிரி என்னைப் போற்றியவர் லிங்கம் ஒருவர் தான். பிழையைக் கண்டித்தால் பிறகு என்றாலும் ஏற்று மன்னிப்புக் கேட்பார். அவரும் வவுனியாவில் இருந்த தேடிவந்த பிள்ளையாருக்கு சேவை செய்தார். சங்கரத்தை துணைவியில் இருந்து எமது குடும்பக் கோயிலுக்கு விளக்கு வைக்க அவர் தான் ஒரு குடும்பத்தை ஒழுங்கு செய்தார்.

அண்மையில் திரு.அம்பிகைபாகன் அவர்கள் டெலிபோன் (Telephone) செய்தார் - கன காலத்திற்கு பிறகு. அவருக்கு 90 வயதாகப் போகின்றது. உடல் பிரச்சனைகள் இருந்தாலும் மூளை நன்றாக வேலை செய்தது. அவர் சொன்னார் இரண்டு குடும்பங்கள் தனக்கு மறக்க முடியாதவை. ஒன்று எமது இன்னொன்று ரண்முத்துகள குடும்பம். மிக மகிழ்ச்சியாக இருந்தது. அது உண்மையான கூற்று. உண்மை இரு பகுதியினருக்கும் மன அமைதியைத் தரும்.

# 4. வட்டுக்கோட்டை உறவுகள்



லிங்கம் 18 ஜுலை 2006இல் காலமானார்.

வவுனியாவில் லிங்கத்துடனிருந்த செந்திலின் அப்பா பரமநாதனை நான் செத்தவீடு முடிந்ததும் வட்டுக்கோட்டைக்குக் கூட்டிக் கொண்டு சென்று அவரது சகோதரர் யோகநாதனுடன் கதைத்துவிட்டு கிளிநொச்சியில் வன்னேரிக்குளத்திலிருந்த யோகர்சுவாமி முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டேன். 2008/2009இல் போர் வலுப்படுத்தப்பட்டபோது அந்த இல்லத்தில் இருந்தவர்கள் இடம்பெயர்ந்தார்கள். பரமநாதன் அண்ணையும் அந்த 52 பேரில் ஒருவர். அப்ப கிளிநொச்சி G.A ஆக இருந்த திரு. வேதநாயகத்தை எமக்கு பரத்தின் கசின் (Cousin) பாலா மூலம் தெரியும். அவரிடம் வன்னியில் இருந்து செட்டிக்குளம் வருபவர்களின் பெயர்களைப் பார்த்து பரமநாதனும் இருக்கின்றாரா என்று பார்த்து சொல்லச் சொன்னோம். ஒரு லிஸ்ட் (list)இல் இருக்கின்றது என்று செந்தில் அறிந்து அறிவித்தார். அவரை பப்பைமடு முகாமில் வைத்திருப்பதாகவும் கூறினார். நான் முகாமிற்கு டெலிவோன் (Telephone) பண்ணினேன். அது கத்தோலிக்க கன்னியாஸ்த்திரிகளது (Catholic Nuns) பொறுப்பில் இருந்தது. அவர்கள் பரமநாதனது விபரங்கள் கூறினார்கள். ஆனால் நேரடியாகக் கதைக்க விடவில்லை. வவுனியாவிலிருந்த பராவும் அவரது கணவர் ஈசனும் அடிக்கடி போய் பார்த்துக் கொண்டார்கள். அந்த அத்தியாயத்தின் முடிவில் பரமநாதன் 04 மே (May) 2009 அன்று இறந்தார். இயக்கமோ, அரசாங் கமோ எனது நிர்வாகப் பங்களிப்பை ஏற்றுக்கொண்டதாகத் தெரிய வில்லை. இரு பகுதியும் சண்டை பிடிப்பதாகத் தானிருந்தது. ஆனால் 2003இல் நான் செய்த வேலையின் பலன் 2009இல் சுப்பிரமணிய சுவாமி மூலம் தெரிந்தது. மேலும் 2006இல் வன்னேரிக்குள இல்லத் திலும் சுப்பிரமணிய சுவாமியை வணங்கியதை அங்கு சென்றபோது

அறிந்து கொண்டேன். அவர் பரமநாதனை அனாதையாக இறக்கவிட வில்லை. நம்புபவர்களுக்கு கடவுள் சக்தி அவர்களது நம்பிக்கையின் உருவம் மூலம் ஆதரவு தரும் என்று இதன்மூலமும் அறிந்து கொண் டேன். அனுபவம் மூலம் வந்த ஞானம் உணர்வாக வேரூண்டி உள்ளது. இப்ப சித்திராவும் செந்தில் குடும்பமும் கூடிய கிட்டிய உறவு போல இருப்பதற்கு சுவாமியின் ஆசீர்வாதமும் ஒரு பெரிய காரணம் என்று தெரிந்து கொண்டேன்.

ஆனால் செந்தில் எங்களுடன் முறையான அமைப்பையும் காட்டுவ தில்லை. உண்மையான அமைப்பையும் காட்டுவதில்லை. காணும் இடத்தில் பரத்துடன் பாசத்தைக் காட்டுவார். என்னுடன் மரியாதையைக் காட்டுவார். செந்திலின் மகன் டொக்டர் (Doctor) ஆக பாஸ் (Pass) பண்ணி யதும் எங்களது வீட்டிற்கு வந்து ஆசீர்வாதம் பெற்றார். நாங்கள் மனம் வைத்திருக்காவிட்டால் தான் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டார் என்று பெற்றார்கள் சொல்லியதாகக் கூறி கண்கலங்கினார். நாம் ஆசீர்வதித்தோம். பரம் ஒன்று கூறினார். அதாவது எத்தனையோ தரம் செந்தில் சிட்னி (Sydney) வந்தும் எங்களுடைய வீட்டிற்கு வருவதுமில்லை. வோன் (Phone) பண்ணிக் கதைப்பதுமில்லை என்று. அதற்குப் பிறகும் செந்தில் அந்த அமைப்பை உண்மைப்படி சரிப்படுத்தவில்லை. அவரது மகள் கணேஷபாலனும் கேட்ட ஆசீர்வாதத்தில் சம்பிரதாயத்தையும் சேர்த்திருந்தார்.

நேற்று (20.05.2018) எமது குடும்ப கோயிலுக்குப் போய் நன்றி கூறி விடை பெற்றுவிட்டு, கொட்டுடை முருகமூர்த்தி கோயிலுக்குப் போனேன். அதுவே எனது முதல் வரவு பக்கத்திலிருந்தும் அதுவரை அமைய வில்லை. வட்டுக்கோட்டையைச் சார்ந்த எத்தனையோ ஒஸ்ரேலியா (Australia) வாழ் தமிழர்கள் முருகமூர்த்தி கோயிலுக்குப் போவார்கள். எமது கோயிலுக்கு வரமாட்டார்கள். அவர்கள் நடத்தைப்படி மக்கள் சேவையும் மகேசன் சேவையும் வேறுவேறு. எனக்கு நேற்றுத்தான் அழைப்பு வந்தது. பரத்தின் உறவினரான திலகவதி முதல்நாள் கூறினார் கொட்டுடை முருகமூர்த்தி கோயிலில் 19.05.2018 அன்று கொடியேற்றம் என்று. தான் அதற்குப் போனதால் எனது டெலிபோன் கோல் (Telephone Call)ஐ மிஸ் (Miss) பண்ணியதாகக் கூறினார். மேலும் பரத்தின்

பெரியம்மாவின் மகன் பாலதேவனை மனைவியுடனும் மனைவியின் சகோதரியுடனும் கோயிலில் கண்டு கதைத்ததாகவும் கூறினார்.

நான் நேற்று (20.05.2018) முருகமூர்த்தி கோயிலில் நுழையும் பொழுது ஐயர் உபயம் செய்பவர்களுடன் இருந்து மந்திரங்கள் கூறும்போது - குடும்பம் நலமாக இருக்கவேண்டும், பிள்ளைகள் நலமாக இருக்க வேண்டும், பேரப்பிள்ளைகள் நலமாக இருக்க வேண்டும் என்றார். அது முருகனிடமிருந்து எனக்கு வந்த ஆசியாக நான் எடுத்துக் கொண்டேன். முருகனுக்கு நன்றி கூறினேன்.

உபயம் செய்தவர்கள் பாலதேவனும் அவரது மனைவியும். அவர்கள் முதலில் நியூஸிலண்ட் (New Zealand) செல்லும்போது ஒஸ்ரேலியா (Australia)வில், நியூ ஸவுத் வேல்ஸ் (New South Wales) என்ற ஸ்டேட்டில் (State) இருக்கும் எமது வீட்டில் தங்கிச் சென்றார்கள். பின்னர் ஒருமுறை நாம் வீடு மாறியும் அந்த வீட்டிற்கும் (நாம் இப்பொழுது வாழும் வீடு) வந்தார்கள் – ஒரு விஸிட் (Visit) ஆக. அவர்களது மகன் முருக பக்தன் என்றும் கூறினார்கள். சில வருடங்களுக்குப் பிறகு மகனுக்கு கலியாணம் செய்து வைத்தார்கள். ஆனால் ஒன்றுவிட்ட தம்பியாக உரிமை அவர்கள் எடுத்த எனது கணவருக்கோ அவரது மனைவியும் முருக பக்தையுமான எனக்கோ அழைப்பு வைக்கவில்லை. செந்தில் தனக்கு இன்விடேஷன் (Invitation) இருந்ததாகச் சொன்னார். எனது கணவருக்கு கோபம். எனக்கு, அமைப்பை அவர்கள் குலைத்ததையிட்டு வருத்தம். ஏனென்றால் அதன் அர்த்தம் நாம் ஏமாற்றப்பட்டோம் என்பதே. குடும்ப அமைப்பில் செந்தில் எமக்கு ஜூனியர் (Junior) / இளையவர். இந்த அழைப்பால் செந்தில் எமக்கு (Senior) மூத்தவர் ஆக்கப்பட்டார். அப்ப பாலதேவனுக்கு எங்களது உறவு தேவைப்பட்டது. இப்ப செந்திலின் கொண்டாட்டம் தேவைப்படுகின்றது. செந்திலும் என்றும் இளையவர் போல கொண்டாடுவார். சிட்னி முருகன் கோயிலுக்கும் ப்ரிஸ்பன் (Brisbane)இல் இருந்து ப்ளேன் (Plane) பிடித்து வருவார். அதே மாதிரி உறவினர் கூப்பிட்டால் எமக்கு இன்விடேஷன் (Invitation) இருக்கா என்று கேட்டறியாமல் தாம் போவார். நாம் ஏமாளிகள் என்ற எண்ணம் போலும்.

இப்படியான குழப்பங்கள் இந்தக் குடும்பத்தில் எனக்குப் பழகிவிட்டது. ஆகவே பாலதேவன் விஷயத்தில் அது நினைவில் இருக்கவில்லை - பரம் நினைப்பூட்ட மட்டும். கொழும்பில் நான் இந்தமுறை வந்தபொழுது அவர்கள் கொழும்பில் நின்றுகூட என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை. நான் பாலதேவனின் அண்ணன் பாலகிருஷ்ணன் (பாலா) வீட்டில் வழக்கம்போல தங்கினேன். அவர்கள் வாடகைக்கு வீடு எடுத்து தங்கினார்கள் – பாலா விற்கே தூரத்து உறவுபோல. அவர்கள் குடும்பத்தில் பாலாதான் பரத்துடனும் மற்ற சகோதரர்களுடனும் அவர்களது பிள்ளைகளுடனும் நெருக்கமான உறவு கொண்டாடினார். பாலா இறந்த பின்னும் நான் அவர் இன்னும் அந்த வீட்டில் இருக்கின்றார் என்று கருதி அங்கு தங்குவேன். பாலாவின் மனைவி அருந்ததியும் சந்தோஷமாகப் பராமரிப்பா. செய்கை மூலம் நான் பாலதேவனைவிட பாலகிருஷ்ணனாகிய பாலாவிற்குக் கிட்டிய உறவா கினேன். பாலா தனது இரண்டு பிள்ளைகளது கலியாணத்திற்கும் எங்களை முறையாக அழைத்து மரியாதை பண்ணினார். அருந்ததியும் பார்த்துப் பார்த்து உரிமை உடையவர்களது சடங்குகளில் எனக்கும் பங்களித்தா. கண்ணகி அம்மன் கோயிலில் சென்று கலியாண விஷயங்கள் பற்றி கும்பிடும்போது என்னையும் கூட்டிக்கொண்டு போவா. எனது கடவுள் நம்பிக்கையின் ஆழத்தை அவர்கள் – முக்கியமாக அருந்ததி – மதித்தார்கள்.

பாலதேவனை நேற்று பார்த்தபோது பரத்தின் மூத்த இரண்டாவது அண்ணரும், செந்திலின் அப்பா பரமநாதன் அண்ணைக்கு இளைய வருமான தர்மலிங்கத்தைப் பார்ப்பது போல இருந்தது. அவரும் தனது மகன் வேணுவின் கலியாணத்திற்கு எங்களைக் கூப்பிடவில்லை.

அவருக்கு இளையவரும் பரத்திற்கு மூத்த அண்ணருமான யோகநாதன் இறந்து மரணச் சொத்து பராமரிக்கும் அதிகாரம் யாருக்கு என்ற விஷயத்தில் பரத்திற்கும், அக்காமாருக்கும் கருத்து வேறுபாடு இருந்ததே அதற்குக் காரணம் என்று எடுத்துக் கொண்டோம். இரு சகோதரிகளும் இறந்த யோகநாதனுக்கும் தர்மலிங்கத்திற்கும் இடைப்பட்டவர்கள். யோகநாதன் ஒரு முறை செந்தில் ஒஸ்ரேலியாவிலிருந்து வட்டுக்கோட்டை போனபோது கேட்டாராம் “ப்ளேன் (Plane) தண்ணீலையா ஓடுது” என்று. அப்படியான சிக்கனக் குணம் படைத்த அவரது சேமிப்பை அவருக்கு மரியாதை பண்ணும் ஒருவர்தான் பாதுகாப்பார். அப்படி அவர் ஒருவரையுமே

சுட்டிக்காட்டவில்லை. பரம் ஒருவர்தான் உயிருடன் இருந்த சகோதரர்களில் யோகநாதனுக்கு இளையவர். மற்ற எல்லாரும் மூத்தவர்கள். சகோதரிகள் சீதனம் பெற்று தத்தம் குடும்பங்களை நடத்தினார்கள். அதேபோல்தான் தர்மலிங்கமும். அவருக்கும் கலியாணத்தை முன்னிட்டு தகப்பன் வீடு கட்ட வளவு கொடுத்திருந்தார். அதுவும் சீதனம் மாதிரித்தான். கடைசி மட்டும் பெற்றாரின் சொத்தில் பங்கெடுக்காமல், பொறுப்புகளில் பங்கெடுப்பவர்கள் – பங்காளிகள். அவர்களுக்கே முதுசம். பரமும், யோகநாதனும் தர்மலிங்கம் மூத்தவராக இருந்தும் அவர் வீடு கட்ட தமது வளங்களில் பங்களித்தார்கள். அப்படி அவர்கள் தகப்பனின் இடத்தை எடுத்தார்கள். தகப்பனின் கண்டிப்பு யோகநாதனில் இருந்தது. பரமசிவத்தில் இருக்கவில்லை. பரம் சித்திரா பௌர்ணமி அன்று தனக்கு என்னைப்போல ஒரு மனைவி கிடைக்க வேண்டும் என்று அழுதார் 1983ஆம் ஆண்டு. அவரது உண்மை யான தாய் என்னைக் காட்டினார். நான் ஏற்கனவே மணம் முடித்து மூன்று பிள்ளைகளுக்குத் தாய். அடுத்த பிறவியிலாவது நான் தனக்கு மனைவியாக வரவேண்டும் என்று பரம் சொன்னார். எனக்கு எதுவிதமான அபிப்பிராயமும் இருக்கவில்லை. பரத்தின் கல்வியையும் சுயமுயற்சியையும் நான் மதித்தேன். ஒரு கல்யாணத்திலேயே கஷ்டப்பட்ட எனக்கு வேறு கலியாணம் பற்றிய யோசனையே இருக்கவில்லை. ஆனால் உண்மை சக்திகள் எனக்கு முதல் கல்யாணத்திலிருந்த கஷ்டங்களை மேலும் மேலும் பார்க்கப் பண்ணின. அந்த உண்மை எமது அறிவுக்கும் அப்பால் பட்டு தானாக இயங்கும் என்பதை இப்படியான வெளிப்பாடுகள் மூலம் விளங்கிக் கொண்டேன். நான் அதற்கு முதல் பரத்திற்கு எமது சொந்தக் காரருக்குள் கலியாணம் பேசி எனது அப்பாவும் சாதகம் பார்த்து பரத்தின் சகோதரர்களுடன் போய்க் கதைத்தார். ஆனால் அவர்கள் ஒருவரும் ஈடுபாடு காட்டவில்லை. யோகநாதன் பிரமச்சாரி, சகோதரிகளுக்கு ஈடுபாடு இருக்கவில்லை. செயல் மூலம் நான்தான் அந்த அக்கறை காட்டினேன்.

அதனால்தான் போலும் அந்தத் தாயின் சக்தி இந்த தாய் மூலம் வெளிப் பட்டது. அந்த முடிச்சு எப்படிப் பிழையாக இருக்கமுடியும்? அதைப் பிழை என்று பரத்தின் சகோதரர்களோ உறவினர்களோ கூறவில்லை. எனது சகோதரியும் கிட்டிய உறவினர்கள் சிலரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை, நான் ஏற்றுக்கொண்டேன்.

ஏனென்றால் அவர்கள் போட்டது எமது கலாசாரத்தில் ஒரு பெரிய அமைப்பில். எனது பெற்றார் அங்கீகரித்தனர். என்னைப் பொறுத்தவரை அது அவர்கள் எனது உண்மையான அமைப்பிற்குக் கொடுத்த அங்கீகாரம். முறைகள் ஓரளவுக்குத்தான் எம்முடன் வரும். உண்மைதான் நிரந்தரமானது. கல்யாணம் செய்து முறைப்படி வாழ்ந்து உண்மைக்குள் வாழ்ந்த எனக்கு முறைப்படி வாழ்ந்த ஒருவருக்குமே கடன் இருக்கவில்லை. ஆகவே அது வேறு, இது வேறு என்று விலகினேன். எனது இரண்டு கல்யாணங்களுமே நான் விளைவுகளால் உந்தப்படாததால் பேசிச் செய்தவையே. வெளியே பெற்றார் பேசியும், உள்ளே விரும்பி முடித்தவர்களாகின்றார்கள். அப்படித் தான் பரத்தின் இரு சகோதரிகளும் மல்லாகம் நீதிமன்றத்தில் தங்களுக்கு சீதனம் தரவில்லை என்று சத்தியப் பிரமாணம் எடுத்துச் சொல்லி அது விளைவை விரும்பி தமது கணவர்மார் செய்த கலியாணம் என்று வெளிப் படுத்தினார்கள். அதுவும் திருமதி. சபாநாதன் தான் தனது சகோதரங்களுக்கு அம்மாவாக இருந்தவ என்று மொழிந்து தகப்பன் சீதனம் தரவில்லை டொனேஷன் (Donation) / நன்கொடை தான் தந்தவர் என்று கூறினா. அமைப்பிற்குள் போட்டு எடுத்தால் அது சீதனம் அல்லது முதுசம். பிரிந்து போகும்போது கொடுக்கப்பட்டால் அல்லது பிரிந்துபோக வேண்டிய நோக்கத் திற்காகக் கொடுக்கப்பட்டால் அது சீதனம். நின்று கடைசிமட்டும் பொறுப்பு ஏற்பவர்களுக்குக் கிடைக்கும் சொத்து முதுசம். அதை அப்படி ஏற்றுக் கொள்பவர்களுக்கு அந்த முறைகளை அமைத்தவர்களதும் மதித்தவர் களதும் ஆசீர்வாதம் கிடைக்கின்றது. எப்ப நாங்கள் சகோதரிகளது பிள்ளை களை எமது முயற்சிகளாலும், வளத்தாலும் ஒஸ்ரேலியா எடுப்பித்தோமோ அப்ப அவர்கள் – முறைப்படி எமது இளையவர்கள். செந்திலின் அப்பாவும் அப்படியே.

ஆனால் சகோதரிகளோ தாம்தான் சகோதரர்களை பராமரித்தததாக மேலும் மேலும் விளைவுகளை / பலன்களை எதிர்பார்த்தார்கள் ஆண் சகோதரர்களிடமிருந்து. அது அவர்களது தகப்பனார் உருவாக்கி காப்பாற்றிய அமைப்பையே குலைக்கின்றது. இதில் கூடிய குழப்பம் உண்டாக்கியவ சரஸ்வதி. பரம் எனக்குக் கூறியவற்றிலிருந்து சக்திதேவியைவிட சரஸ்வதியை கூடுதலாக மதித்ததை அறிந்து கொண்டேன். ஏற்றுக் கொண்டேன். ஆனால் அவவுடன் நேரடியாகப் பழகத் தொடங்கியதும் ஏமாற்றம் அடைந்தேன்.

எவர் கிடைக்கும் பலனைப் பொதுநலத்திற்காக ஒதுக்கின்றார்களோ, அவர்கள் இயற்கையாக தம்மை உயர்த்திக் கொள்கின்றார்கள். அவர்கள் அமைப்புப்படி இயங்குவதை விரும்புவார்கள். விளைவுப்படி இயங்கு வதைவிட சீதனம் கொடுக்கும் ஒருவர் ஒரு அமைப்பை உறுதிப்படுத்து கின்றார். கொடுக்கப்படுவதை சீதனமாக ஏற்றுக்கொள்பவரும் அப்படியே. சகோதரிகள் இருவரும் தமக்கு சீதனம் தரப்படவில்லை என்று நீதிமன்றத்தில் கூறி தமக்கு அமைப்பைவிட பலனில் கூட ஈடுபாடு என்று உறுதிப்படுத்தினார்கள். யாருக்கு பலனைவிட அமைப்புக் கூட முக்கியமாக இருக்கின்றதோ, அவரே உறவில் மூத்தவர். தர்மலிங்கம் சரஸ்வதியுடன் ஒத்துப் போனார். அவர்களது கலியாணங்கள் மாற்று சடங்குகள். அதே நேரம் சரஸ்வதிக்காகத்தான் தான் அந்த மாற்றுச் சடங்குக்கு உடன்பட்டதாக தர்மலிங்கம் சொன்னார். அதெல்லாம் தகப்பனது அமைப்பை குறை கூறுவதாக உள்ளது. அமைப்பு உயர உயர சக்தி உருவாகின்றது.

ஒரு பெண்ணை சக்தி என்று மதிப்பது, அவ தான் செய்த வேலைக்குப் பலன்எடுக்காமல்குறையும்காணாமல்இருக்கின்றாஎன்பதாலேயே. பலனை ஒறுக்கும் பொழுது அது அமைப்பாகின்றது. அமைப்பை மதிக்கும்பொழுது அது சக்தியாகினறது. ஆகவேதான் பெண்ணை சக்தியாக மதித்து, வழிபட்டு சமத்துவத்தைக் கடைப்பிடிக்கின்றோம். என்னைப் பொறுத்தவரை தமிழர் கூட்டணி தேசிய அரசாங்கத்தில் அப்படியான ஒரு சக்தியாக இருந்ததால் தான் 1977இல், 2015இல் பாளிமன்ட் (Parliament) இல் சமத்துவ எதிர்க் கட்சியாக நிலைநாட்டப்பட்டது. அதற்கு அப்படியான ஒவ்வொருவரும் கூட்டணி சேரவேண்டும் – மனத்தளவில். நான் அப்படி 2015இல் சேர்ந்த தால் கடவுளின் பாதையில் வரும் முடிவுகளை, தீர்மானங்களை, கட்டளைகளைப் புரிந்து, மதிக்கக்கூடியதாக இருக்கின்றது.

சீதனம் பெற்றுக்கொண்ட பெண்ணிற்கு பிறந்த வீட்டிற்கு முடிவுரை எழுதவேண்டிய கடமை உண்டு. இதை க்ளோஷர் (Closure) என்று இங்லிஷ் (English) இல் சொல்வார்கள். அது மறு பிறவி எடுப்பது போல. அப்ப பாவ புண்ணியங்களைத்தான் எடுத்துச் செல்வோம். அடுத்த வாழ்க்கைக்கு. சீதனம் பெறாதவர்கள் தொடர்ந்தும் அந்த அமைப்பில் இயங்கலாம். சீதனம் பெற்றவர்கள் புது அமைப்பில் இடமெடுக்க அவர்களுக்கு அந்த சீதனம் தன்னம்பிக்கையைக் கொடுக்கும். எவ்வளவு சீதனம் என்று கணிக்கக்

கூடாது. அது எமது புண்ணியத்தைக் குறிக்கும் அடையாளம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அதுபோல ஒரு வேலை ஸ்தலத்திலிருந்து இன்னொன்றிற்குப் போகும்போது. இரு சகோதரிகளும் மீண்டும் மீண்டும் ஆண் சகோதரர்களது உதவி நாடி, பேரம்பேசி எடுத்து – தாம் புண்ணிய சக்திகள் இல்லை என்றே வெளிப்படுத்தினார்கள். பலனை தேவைக்கு மேலாக எடுப்பவர்கள் அமைப்பை ஒழுங்கீனப்படுத்துகின்றார்கள். சக்தியை இழக்கின்றார்கள். பரம் இரு தலைமுறைக்கும் இடைப்பட்டவர். இளைய தலைமுறைக்கு மூத்தவர் / உதாரணமானவர் என்று கூறலாம். அப்படி யிருந்தும் சகோதரிகளது பிள்ளைகள் அவரளவிற்குப் படிக்காததும், சுயமுயற்சியில் ஒஸ்ரேலியா வராததும் அந்த ஒழுங்கீன காரணத்தால் என்பது எனது கணிப்பு.

நாம் இப்போது ஒஸ்ரேலியன் தமிழ் மனெஜ்மன்ட் சேவிஸ் (Australian Tamil Management Service) மூலம் வட்டுக்கோட்டைச் சந்தியில் - நவீன சந்தையில் - இருக்கும் பயிற்சி நிலையத்தில் ஒப்பசுனிட்டி ஷொப் (OpportunityShop) நடத்துவது அந்த சக்தி பரிமாறலுக்காகத்தான். ஒஸ்ரேலிய கலாசாரத்துடன் மனம் இணைய அங்கே நாம் விற்கும் பொருட்கள் ஒரு ஊடகமாக அமையும். பின் ஒஸ்ரேலியா வருபவர்களுக்கு முன்னரேயே இப்படியான ஒரு பங்களிப்பு இருக்கும். பெரும்பான்மை வட்டுக்கோட்டை வாசிகளுக்கு ஒஸ்ரேலியா வரும் சந்தர்ப்பம் கிடைக்காது. இவை பெரும் பாலும் பாவிக்கப்பட்ட பொருட்களே. ஒரு குடும்பத்தில் ஒருவர் பாவித்து மற்றவர்களுக்கு கொடுப்பது போல, ஒரே சமுதாயத்தில் இதுவும் ஒரு பரிமாறல்.

ஒஸ்ரேலியாவிலிருந்து நாம் அதற்காகக் கொடுக்கும் விலை, அனுப்பும் செலவு, நாம் அதிலிருந்து எடுத்த பலனை விடக் கூடுதலாக இருப்பதால் அது ஒரு சேவை சக்தியைக் குறிப்பிடுகின்றது. மற்ற பக்கத்தில் நாம் இலங்கையில் அதற்காக செலவிட்ட தொகைக்கு சிறிதென்றாலும் கூடவாக விற்கும்பொழுது அது ஒரு வியாபார அமைப்பை உருவாக்குகின்றது. நல்ல சேல்ஸ் (Sales) இருக்கும் நாட்களில் எனக்கு உற்சாகமாக இருக்கும். ஒஸ்ரேலியா முயற்சி களை நான் தனித்தனியாக நினைவு கொள்வதில்லை. அந்த “சேவை சக்தியை” மட்டும் எனக்குள் வைத்து பொருட்கள் தந்தவர்களுக்கு நன்றி சொல்லுவேன். ஒருத்தரும் இல்லாவிட்டால் / தோன்றாவிட்டால் என்னை

நான் மெச்சிக் கொள்வேன். அப்பத்தான் கொடுப்பதும் நான் – எடுப்பதும் நானாக வரமுடியும். கிருஷ்ண பரமாத்மா இதற்காகத்தான் "பலனைப் பார்க்காதே கடமையைச் செய்" என்று கூறியதாக நான் நம்புகின்றேன். அது முழுமையாக ஒரு வழி. இரண்டும் நாமே என்றால் ஒன்றிற்கு மற்றது பயப்படாது / ஆசைப்படாது.

பாலதேவனை கொட்டுடை முருகமூர்த்தி கோயிலில் பார்த்தபோது பரத்தின் அண்ணர் முறையான தர்மலிங்கத்தைப் பார்ப்பது போலிருந்தது. அவரும் தனது மகன் வேணுவின் கலியாணத்திற்கு எங்களைக் கூப்பிட வில்லை. யோகநாதன் இறந்து மரணச் சொத்து விஷயமாக சகோதரி களுக்கும் பரத்திற்கும் கருத்து வேறுபாடு இருந்ததே அதற்குக் காரணம் என்று நாம் எடுத்துக் கொண்டோம். கலியாணம் நடந்தது என்று பரத்தின் எஞ்சினியர் (Engineer) நண்பர் ஒருவர் கூறித்தான் எமக்குத் தெரிந்தது. அன்று பரம் மிகவும் மனக்கஷ்டப்பட்டார். சித்தப்பா, சித்தப்பா என்று உருகிக் கதைத்த வேணு, இப்படிச் செய்வார் என்று அவர் கனவிலும் எதிர்பார்க்க வில்லை. வேணுவும் ஒரு எஞ்சினியர். படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் ஒருவர் எஞ்சினியர் ஆக முடியாது. சிந்தனை உயராவிட்டால் அவர் மெக்கானிக் (Mechanic) தான். அதுவும் அனுபவம் இல்லாவிட்டால் மெக்கானிக்கை விட சக்தி குறைந்தவராகின்றார்.

பரம் குடும்ப அமைப்பில் மட்டுமல்லாது, வேலை அமைப்பிலும் வேணுவிற்கு மூத்தவராக இன்றுவரை வாழ்ந்து வருகின்றார். ஆனால் வேணுவிற்கோ உடனடியாகக் கிடைக்கும் விளைவுகள் முக்கியமாகி விட்டன. அப்படியான செந்திலுடனும் அவர் கூட்டணி சேர்ந்து கொண்டார். செந்திலின் மகன் கணேஷபாலன் சில வருடங்களுக்கு முன், வேணுவின் கலியாணத்திற்குப் பின் எயாபோர்ட் (Airport) இலிருந்து எமக்கு வோன் பண்ணினார். தான் எங்களைப் பார்க்க வரமுடியுமா என்று கேட்டார். ஓம் என்றேன். வந்தார். தாம் டொக்டர் (Doctor) ஆக க்ரஜுவேட் (Graduate) பண்ணிவிட்டேன் எமது ஆசீர்வாதம் வேண்டும் என்றார். எங்களால்தான் டொக்டர் ஆக வந்தார் என்று கண்கலங்கிக் கூறிக் காலில் விழுந்து ஆசீர்வாதம் கேட்டார். நாமும் வழங்கினோம்.

# 5. சமூகமும் நாமும்

**பற்றை குடும்ப உறவிலிருந்து நீக்க நாம் படும் வேதனை சமூக உறவின் அத்திபாரமாகின்றது**

1989ஆம் ஆண்டு ஜூன் (June) 21 அன்று எமது மகள் உமாவின் ஸ்கூல் (School)இல் உமாவும் கலந்துகொண்ட இசைக் கச்சேரிக்குப் போய் விட்டு, திரும்பும்பொழுது பரமும் எமது இளைய மகள் காயத்ரியும் காரால் அடிபட்டுப் பலத்த காயப்பட்டார்கள். நானும், உமாவும் பின்னால் வந்து அந்தக் கோரக் காட்சியைப் பார்த்தோம். காயத்ரிக்கு முன் பற்கள் கொட்டிண்டு, மூக்குடைந்து, காலும் உடைந்து, தாடை கீழே இறங்கியது. பரத்திற்குக் தலையிலும் முதுகிலும் பலத்த காயங்கள். முதுகெலும்பு 5 – 6ஆம் பகுதிகளில் தாக்கப்பட்டது. முழங்கால் தாக்கப்பட்டது. அடிபட்ட வுடன் என்னை அறியாமல் அம்மனைக் கும்பிட்டேன், கூப்பிட்டேன். பரம் குளிருது என்று முனகினார். எனது மேல் சட்டையைக் கழற்றி அவருக்குப் போர்த்திவிட்டு நான் வெஸ்ட் (Vest) உடன் நின்றேன். June 21 எமக்கு பகல் அதி குறுகிய நாள். குளிர் கூடிய நாள். அம்புலன்ஸ் (Ambulance) வந்து அருகிலிருந்த ப்ரின்ஸ் ஓவ் வேல்ஸ் (Prince of Wales) ஹொஸ்பிட்டல் (Hospital)க்கு எடுத்துச் சென்றார்கள். காயத்ரி சிறுவர் பகுதிக்கும் பரம் பெரியவர் பகுதிக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர். நான் இரண்டு ஆஸ்பத்திரிக்கும் ஓடி ஓடிப் போனேன். பரத்திற்கு ஸ்பிளீன் (Spleen) சிதைபட்டிருக்கின்றதாகவும் தலையிலும் பலத்த சேதம் என்றார்கள். காயத்ரியின் முகம் சத்திரசிகிச்சைக்குப் பிறகு வித்தியாசமாக இருக்கும் என்றார்கள். நான் என்னை அழக்கூட விடவில்லை. கடவுளைக் கும்பிட்டு இரண்டு பேருடனும் எனது சக்தியைப் பகிர்ந்தேன். இதற்கிடையில் உமாவின் பள்ளிக்கூட ஆசிரியர் வீட்டிற்குப் போய் மகன் ப்ரதீப்பைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். பரத்திற்கு ஒபரேஷன் (Operation) செய்ய உள்ளே கொண்டு போனார்கள். உமாவையும், ப்ரதீப்பையும் காயத்ரியுடன் விட்டுவிட்டு நான் பரத்தின் ஒப்பரேஷன் தியட்டர் (Operation Theatre) க்கு

வெளியில் நின்றேன். விஷ்ணு பகவானை வேண்டிக் கும்பிட்டேன். ஆத்மா மூலம் கும்பிடுவது அது என்று நம்புகின்றேன். ஒப்பரேஷன் முடிந்ததும் சேஜன் (Surgeon) சொன்னார் உள்ளுக்குள்ளே அதிக தாக்கம், ஆனால் உறுப்புகள் தாக்கப்படவில்லை என்று. ஒப்பரேஷனுக்குக் கொண்டுபோன பொழுது கூறினார்கள் உயிருக்கும் ஆபத்து என்று. சேஜன் இப்படிக் கூறியதும் எனக்கு அவர் கடவுளாகத் தெரிந்தார். அப்ப நான் சாய்பாபா பக்தை அல்ல. அவர் ஒரு ஞானி என்று நினைத்தேன். பல வருடங்களுக்குப் பிறகு எனக்கு யூனிவர்ஸிட்டி ஒவ் நியூ ஸெளத் வேல்ஸ் (University of New South Wales) இல் தர்ம சோதனை வந்தபொழுது உறவினரான வரா அக்கா (பார்வதி அக்காவின் அக்கா) தந்த சாய்பாபா சுவாமியின் படத்தில் 05.11.1998 அன்று குங்குமம் தோன்றி ஒரு ஆதரவைத் தெரிவித்த பிறகு ஹவட் மேர்வட் (Howard Murphet) என்ற வெள்ளைக்கார ஒஸ்ரேலியன் (White Australian) எழுதிய மான் ஒவ் மிரக்கிஸ் (Man of Miracles) என்ற சுவாமியைப் பற்றிய புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது மேல் சொன்ன சேஜனின் உருவம் மனத்தில் வந்தது. அதற்கு முதல் பரம் ஒப்பரேஷன் தியட்டருக்குப் போன காட்சி நினைவுக்கு வந்தது. உடனேயே பரத்துக்கு போன் பண்ணினேன். அவர் சுகமாக இருக்கின்றார் என்றதும்தான் அறிவு வேலை செய்யத் தொடங்கியது. அந்தப் புத்தகத்தில் சுவாமி ஒரு அம்மையாருக்கு முருகனாகக் காட்சி கொடுத்து அவவை சேவைக்காக மீட்டதாக எழுதியிருந்தது. அதை வாசித்த பொழுதுதான் இந்த மனக்காட்சி பரத்தைப் பற்றி தெரிந்தது. அந்தக் கஷ்டமான அனுபவம் எம்மை சேவைக்கு தயார் பண்ண என்று எடுத்துக் கொண்டேன். இந்தப் புத்தகத்தை வாசித்த பொழுது அந்த சேஜனின் உருவம் சாய்பாபாவைப் போல இருந்தது. அப்ப எனக்கு, எனது நம்பிக்கைக்கு சாய்பாபா ஒரு உருவமாக இருக்கவில்லை. பின்னர்தான் அந்த உருவ ஒற்றுமை மனக்கண்ணில் தெரிந்தது. இரவிரவாக ஒபரேஷன் நடந்து பரத்தை ரிக்கவரி (Recovery) அறைக்குக் கொண்டு போன பிறகு நான் அங்கிருந்த டீ ரூம் (Tea Room)க்கு சென்றேன். அங்கு ஒரு கனிவான மாது இருந்தா. என்ன நடந்தது என்று கேட்டா. “ஓ” என்று அழுதேன். பரத்துக்கும் காயத்ரிக்கும் மாறி மாறி சிகிச்சைகள். பரத்தைப் ப்ரின்ஸ் ஹென்ரி (Prince Henry) ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு கெஞ்சிக் கூத்தாடி ஆண்கள் வார்ட் (Ward) இல் முதல்

ராத்திரி பரத்துக்குப் பக்கத்திலேயே இருந்தேன். 7 கிழமை பரம் ஆடாமல் அசையாமல் படுத்திருக்க வேண்டி இருந்தது முதுகெலும்பு பொருந்த. முதல் இரவிற்குப் பிறகு காயத்ரியுடன் இரவில் தங்கினேன். அவ பல்லும் இல்லாமல் காலும் பெரிய ப்ளாஸ்டரில் போட்டு தூக்கிக் கட்டப்பட்ட நிலையிலிருந்தா. நோகுது நோகுது என்று அழுவா. விடிந்ததும் அவக்கு வேண்டியதைச் செய்து விட்டு வீட்டிற்கு போய் குளித்துவிட்டு பரத்தைப் பார்க்கப் போவேன். மத்தியானமளவில் வேலைக்குப் போவேன். டப்பூ ஒஸ்ரேலியா (Tappoo Australia) என்ற இடம்; பெரிய சம்பளம் இல்லை. ஆனால் காசு தேவை. அப்படியான ஒரு சூழ்நிலையில் தான் நான் யோசித்தேன். செந்திலுடன் பரத்தை டெலிபோனில் கதைக்க வைக்க. அவர்களும் கதைத்தார்கள். செந்தில் அப்ப கொழும்பில் வேலைக்காகக் தங்கியிருந்தார். அவரது மனைவி இன்பாவும் பாலா வீட்டிற்குப் பக்கத்திலிருந்த (Survey) ஒவ்விஸ் (Office)இல் வேலை பார்த்துக் கொண்டிருந்த 6 – 7 மாத கர்ப்பிணி. அந்தப் பிள்ளைதான் கணேஷபாலன்.

நான் செந்திலை எனக்கு உதவிக்குத் தேவை என்று எடுப்பித்தேன். அப்படியான ஒரு உன்னதமான அமைப்பில் வந்தவர் செந்தில். தர்மலிங்கம், அவர் மகன் வேணு அவர்களுடன் கூட்டணி சேர்ந்து எம்மை அவமதித்தார். முன்னின்று வேணுவின் கலியாணத்தை நடத்தி வைத்தார். அவருக்கு பாலமுத்துசிங்கம் என்ற வட்டுக்கோட்டை எஞ்சினியர் ஒருவர் துணைபோனார். எப்பையாவது தற்செயலாகப் பார்த்தால் மரியாதை செய்வார் செந்தில். அது எப்படி உறவாகமுடியும்? உறவு என்பது ஒரு பதவிப்படி நடப்பது. அதன் முக்கியத்துவம் முழு அமைப்பின் அடிப்படையில் தான் இருக்கும். இல்லாவிட்டால் அது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் உள்ள ஒரு தொடர்பு. அவ்வளவுதான்.

செந்தில் பரத்திற்கு நேர மூத்தவரான கணேஷனில் அதிகம் விருப்பம் வைத்திருந்தார். அதனால்தான் அவரது பெயரை மகனுக்கு வைத்தார். பாலன் செந்திலின் தம்பி. அவரும் சுகயீனத்தால் இறந்தார். இருவரது பெயரையும் சேர்த்துத்தான் கணேஷபாலன் என்ற பெயர் வந்தது. ஆனால் செந்திலுக்கு விளங்காதது, அவர் அறியாதது என்னவென்றால் பரத்தை அவர் குறைத்துக் காட்டும் பொழுது குடும்ப அமைப்பின்படி கணேஷனை இன்னும் குறைக்கின்றார். அது மூலம் அந்த முழுக் குடும்பத்திற்கும்

தலைவனான எனது மாமனாரின் அமைப்பையும் பதவியையும் குறைத்தார். எமது விருப்பு, வெறுப்புகள் மூலம் ஒரு உயர்ந்த அமைப்பை உருவாக்க முடியாது. நம்முடைய பலன்களை ஒறுக்க உயர்ந்த அமைப்பு தானாக உருவாகும். மனம் போன போக்கில் நடக்காமல் அறிவால் எமது செய்கைகளைக் கட்டுப்படுத்தவே சட்டங்களும், பொதுமுறைகளும் உள்ளன. முறைகள் இருக்கின்றதென்றால், அமைப்பும், பதவிகளும் உள்ளன.

பலனைக் கொடுப்பவர் உயர் பதவியிலும் பலனைப் பெறுபவர் இளைய பதவியிலும் உள்ளனர். பலன் பெற்றவர் உணர்வு பூர்வமாக நன்றியாக நடந்தால் அந்த அனுபவம் பூரணமாகி இருபக்க சிந்தனையையும் ஒன்றாக்கி உயர்த்துகின்றது. காசு கொடுத்தால் – நன்றிக்குப் பதிலாக, அது குறைந்த நிலையில் கொடுத்தவர், எடுத்தவர் என்று பிரித்தே விளைவைக் காட்டும். ஒரு பக்கம் இருப்பவருக்கு மறுபக்க பார்வை இருக்காது. அது தான் வியாபாரத்தின் அமைப்பு. சம பதவி எடுத்து எதிர்த்து நிற்க வேண்டும். எமது சுதந்திர விளைவுகளை நாமே வெளிப்படுத்த வேண்டும். அதை பப்ளிக் ஸேவிஸ் (Public Service) இல் பிஸ்னஸ் யூனிட் (Business Unit) அமைப்பு என்று குறிப்பிடுவார்கள். நான் இங்கு ஒஸ்ரேலியாவில் அதில் நிபுணத்துவம் பெற்றேன். எனது சேவை அடிப்படைப் பலமாக இருந்ததால் இன்னொரு அமைப்பைக் கற்றுக்கொள்வது இலகுவாக இருந்தது. விளைவை முன்னுக்கு வைக்கும் உறவினர்களுடன் சமநிலை எடுத்து தூரம் போக முடிந்தது. ஒன்று பரம்பரை என்றால் மற்றது பரந்த உலகம். ஒன்றில் உண்மையாக இருப்பவர்க்கு மற்றதை இயற்கையாக இயக்க முடியும்.

அதன்படி நாம் அமைப்பில் போட்ட ஈடுபாட்டை சமநிலைக்கு சரித்து விளைவைக் காட்டினால் ஒருவர் மற்றவருக்கு தூர இருப்பார். இங்கிருந்து பார்ப்பவருக்கு மற்றவர் தூர இருப்பார். அங்கிருந்து பார்ப்பவருக்கு இங்கிருப் பவர் தூரவாகத் தெரிவார். ஈக்வள் ஒப்பர்ச்சுனிட்டி (Equal Opportunity) / சமத்துவ அமைப்பு கொள்கையின் அடிப்படை அதுதான். மூத்தவர்களில் இளையவர்களுக்கோ, இளையவர்களில் மூத்தவருக்கோ நம்பிக்கை குறைந்து, இல்லாத நிலைக்கு வரும்போது உண்மையான உறவைக் காப்பாற்ற இந்த ஜனநாயக அமைப்பு பயன்படும். அப்படியான உண்மை

யான பங்களிப்புக்கள்தான் அப்படியான அமைப்புக்களுக்கு பாரம்பரிய மதிப்பீட்டைக் (Heritage Value) கொடுக்கின்றன.

செந்திலைப் போலத்தான் பரத்தின் சகோதரிகளது பிள்ளைகளும் நன்றியின்மையைக் காட்டினார்கள். தூர நின்று பொய்மையின் விளைவைப் பார்க்கும்போது அது ஒரு பாடமாக அமைகின்றது. கிட்ட இருக்க நாமும் சேர்ந்து நடந்து எமது ஸ்தானத்தின் விளைவை வெளிப்படுத்த தவறுகின்றோம். இதனால்தான் 50% இற்கு கிட்ட நம்பிக்கை குறையும்போது எதிராளியாகின்றோம். பாளிமன்ட் (Parliament)இல் எதிர்க்கட்சிக்கு அப்படித்தான் சம உரிமை கிடைக்கின்றது.

இன்று (06.06.2018) சிட்னி முருகன் கோயில் யூ ட்யூப் (Youtube) இல் செந்திலைப் பார்த்ததாகக் கூறி சிநேகிதி ஒருவர் அறிவித்தார். எனக்கு முன்னரே டொக்டர் ரவி (Dr. Ravi) அந்த கிளிப் (Clip) அனுப்பியிருந்தார். நானும் பார்த்து, அனுபவித்துப் பரவசமானேன். ஆட்களைக் குறிப்பாகக் கவனிக்கவில்லை. பூசையும் மேளதாளங்களும் பரவசமான அனுபவத் தைக் கொடுத்தன. இன்று சிநேகிதி கூறியதால் போட்டுப் பார்த்தபோது, செந்தில் இம்முறையும் வந்திருந்தது தெரிந்தது. நல்லூர் முருகனிடம் போவதற்கு எனக்கும் எப்பொழுதும் ஒரு உந்தல் உண்டு. ஆனால் சில வேளைகளில் வேறு முக்கியமான உந்தல்கள் இருக்கும் பொழுது மனதால் கும்பிடும் ஆழ்ந்த நம்பிக்கை எனக்குண்டு.

அந்த சிட்னி முருகன் க்ளிப்பில் (Cilp) டொக்டர் ரவி விமர்சனம் செய்த மாதுவிடம் தேங்காய் சிதற உடைப்பதைப் பற்றிக் கேட்க, அந்த மாதுவும் அது எமது மலங்களை அகற்றி தூய்மையைக் காட்டுவதைக் குறிக்கும் என்றார். எனது அறிவுடன் அது கிட்டத்தட்ட ஒத்திருந்தது. எனது அறிவின்படி பொய்யான நிலையற்ற உடலை உடைத்து / நொறுக்கி / ஒறுத்து உள்ளிருக்கும் உண்மையை / ஆன்மாவை இறைவனிடம் காட்டுகின்றோம். முக்கியமாக தேர்த்திருவிழா அன்று தேங்காய் சிதற உடைப்பது ஆன்மா உடம்பை வென்றது என்பதற்காகவே. ஒவ்வொரு உறவிலிருக்கும் ஆன்ம சக்திதான் அந்த உறவிற்கு பரம்பரை பரம்பரையாக உயிர்கொடுக்கும் வேர். எமது உண்மையைச் சரி,பிழை பார்க்காமல் கடவுளிடம் வெளிப்படுத்தும்போது அதற்குப் பிறகு அது தனிப்பட்ட எமது காரியமல்ல.

நாம் பெரும்பாலானோர் கடவுளிடம் சொல்லி குறைப்பட்டுவிட்டு பின்னர் எமது மனம் போன போக்கிற்கு முதலுரிமை கொடுக்கின்றோம். அது அந்த விஷயத்தின் தராதரத்தைக் குறைக்கும். எஸ்கலேட்டிங் த கொன்விலிக்ட் (Escalating the Conflict) என்று இங்கு ஒஸ்ரேலியாவில் ஒரு விஷயத்தை மேலமைப்பிற்குக் கொண்டு போவதைக் குறிப்பார்கள். ஒரு குடும்ப விஷயம் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் நாம் அதன் விளைவை நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து எமது விருப்பு வெறுப்புகள் மூலம் முடிவெடுப்பது அந்த நீதிமன்றத்திற்கு நாம் மரியாதை பண்ணவில்லை என்று உறுதிப்படுத்துகின்றது. யாழ்ப்பாணத்தில் அது சகஜமாக நடப்பதை அவதானித்து மனம் கஷ்டப்பட்டது.

பரத்தின் அண்ணர் யோகநாதனின் மரணச் சொத்து விஷயத்தில் சகோதரிகள் ஒன்று கூடி பரத்திடமிருந்து விபரங்களை மறைத்தனர். நான் செப்டெம்பர் (September) 2010இல் வட்டுக்கோட்டை பரம்பரை வீட்டில் போய்த் தங்கியிருந்த போது சக்திதேவியின் கணவர், ஸ்ரீயின் தகப்பன் மகாதேவன், யோகநாதன் தன்னை நம்பவில்லை, சபாநாதன் (சரஸ்வதியின் கணவர்) உடன் பாங்க் விஷயம் பகிர்ந்தார் என்று கண் கலங்கினார். அப்ப நான் சொன்னேன் – சபாநாதனுக்கு இருக்கும் உரிமை உங்களுக்கும் இருக்கு என்று. யோகநாதனுக்கு மரியாதை பண்ணும் நோக்கத்துடன் அவரது டொக்யூமன்ட்ஸ் (Documents) ஐ பார்க்கக் கேட்டேன். உடனேயே சக்திதேவி அது அக்கா (சரஸ்வதி) சொல்லித்தான் பெட்டி திறக்க முடியும் என்றா. என்னை அக்காவுடன் போனில் கதைக்கச் சொன்னா. பின்னர் பரம் போன் பண்ணினபோது , அவர் சக்திதேவியிடம் தனக்கிருக்கும் எல்லா உரிமையும் எனக்கும் இருக்கு என்று கூறினார். டொக்யூமன்ட்ஸ் (Documents) ஐ என்னைப் பார்க்கவிடும்படி சொன்னார்.

அடுத்த நாள் பரம் எனக்கு வோன் (Phone) பண்ணியபோது சொன்னார் தனக்கு அக்கா (சரஸ்வதி) சிட்னியில் வோன் பண்ணி தன்னுடன்; வட்டுக்கோட்டைக்கு வந்து இந்த விஷயத்தைச் செயற்படுத்துமாறு கேட்டா என்றும், ஆனால் காசு எவ்வளவு எங்கே இருந்தது என்று சொல்லவே இல்லை என்றும் சொன்னார். அப்ப எங்களுக்கு அது ஒரு பெரிய விஷயமாக இருக்கவில்லை. லிங்கம், மூத்தண்ணை (லிங்கத்தின் அப்பா) இறந்த பொழுது செந்தில் கேட்டு உதவினேன். அதிகாரிகளுடன் கதைக்கத்

தேவையான அளவு மட்டும் விபரங்களை செந்திலிடம் கேட்டு அறிந்து கொண்டேன். என்னைப் பொறுத்தவரை இதில் செந்திலுக்குப் பதிலாக பரம் இருந்தார். விஷயம் நீதிமன்றத்திற்கு வந்து அதிலிருக்கும் சத்தியக்கூற்றைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டோம் பரத்துடன் வோன் பண்ணிக் கேட்ட ஆத்தை (சரஸ்வதி)க்கு எவ்வளவு காசு எங்கே இருக்கின்றது என்று தெரிந்திருந்தது. ஆனால் பரத்திடம் அவ அதைப் பற்றி ஒரு சொல்கூட சொல்லவில்லை. காரணம் அவரை ஏமாற்றுவதே அவவின் நோக்கம் என முடிவு செய்தோம். எல்லாருடனும் அவ அப்படித் தான் என்றால் - லிங்கம், மூத்தண்ணர். விஷயங்களில் ஒரு கொஞ்ச மென்றாலும் பொறுப்பெடுத்திருப்பா. உண்மையில் அவர்கள் விஷ யத்தில் மூத்தண்ணை மகனான செந்திலுக்குத்தான் உதவி கூடத் தேவைப்பட்டது. அந்த தருணங்களில் அவவுடைய நிழல்கூட அந்தப் பக்கங்களில் விழவில்லை. நான் வவுனியாவுக்கும், கொழும்புக்கும் வட்டுக்கோட்டையும், கிளிநொச்சியில் வன்னேரிக்குளத்திற்கும் சென்று அவர்களது வாழ்க்கை அமைப்பை மேம்படுத்த உதவினேன்.

என்னைப் பொறுத்தவரை நாம் சிவபுராணம் படித்து ஈமைக் கிரிகைகள் செய்யும் பொழுது ஓதுவது அதற்கே. எமது ஆன்மா மூலம் அவர்களது ஆன்மாவுடன் ஒன்றுபட்டு இறந்தவரது வாழ்க்கையை உண்மையான பொதுநிலைக்கு உயர்த்துகின்றோம். சிவன் உடலை மறக்கப் பண்ணி ஆன்மாவை வெளிப்படுத்த உதவுகின்றார். ஒவ்வொரு அனுபவத்தையும் முழுமையாக்கும் பொழுது நாமும் அதிலுள்ள ஆன்ம சக்தியை உணருகின்றோம். அடுத்த அனுபவத்தில் பிறவி எடுக்கின்றோம்.

# 6. பொது முறைகள்

பொது அமைப்பிற்குள் இருக்கும் ஒவ்வொரு அறைக்கும் பதவி பெயருண்டு.
அறைகளுக்கிடையே உள்ள பாதையே உறவு.
அந்தப் பாதையை இயக்கும் சக்தி உறவு முழுமையடைந்த சொந்தம்

இன்று (09.06.2018) நாம் எமது வட்டுக்கோட்டை ஒப் ஷொப் (Op shop) க்கு பொருள்கள் அனுப்புவதற்காக ட்ரைகோ (Trico) பெட்டி வாங்க ஹோம் புஷ் (Home Bush) என்ற பகுதிக்குச் சென்றோம். எமது கூஜி வீட்டிலிருந்து ஒரு மணித்தியாலத்திற்கு மேல் பயணிக்க வேண்டும். அங்கு வட்டுக்கோட்டையில் திருமணம் முடித்த குடும்பத்தைச் சார்ந்த லிங்கத்தின் பிரமிட் (Pyramid) கடையில் தான் நாம் அந்தப் பெட்டிகளை வாங்குவது வழக்கம். எனக்கு அந்தக்கடை விடாமுயற்சியால் முன்னுக்குக் கொண்டு வந்தவர்களில் முக்கியமாக லிங்கத்தில் மதிப்புண்டு. அவரது மருமகன் ஜெகனையும் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்தவரென்று பிடிக்கும். போகுமுதல் போனமுறை புத்தகங்கள் - முக்கியமாக சிறுவர் புத்தகங்கள் கொண்டு வந்த ரவி (பத்மா ஆண்டியின் மகன்) க்கு வோன் பண்ணி நன்றி சொல்லிக் கதைத்துவிட்டு வெளிக்கிட்டோம். போகும் வழியில் ஓரிடத்தில் வேணு (Venu) என்று ஒரு பலகையில் பெயர் தெரிந்த மாதிரி இருந்தது. வேணு பரத்தின் அண்ணர் தர்மலிங்கத்தின் மகன். அவர்தான் எமக்கு மரியாதை பண்ணாமல் சிட்னியில் கலியாணம் செய்தவர். அவருக்கு இந்தக் கலியாணம் பேசிப் பொருந்தியிருந்தபோது நாங்கள் கொழும்பில் நின்றோம். எமக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. பாலா வீட்டில் வழக்கம்போல தங்கி நின்றோம். பரம் தமையனுடன் கதைக்க வோன் பண்ணினார். அவர் வீட்டில் இல்லையென்று திருமதி தர்மலிங்கம் சொல்லி நாங்கள் வட்டுக்கோட்டை போகின்றோம் என்று அறிந்து தமது வீட்டைப் போய் பார்த்துவிட்டு வரும்படி கேட்டா. இவரும் ஓம் பட்டார். எனக்கு பெரிய ஆர்வமில்லாவிட்டாலும் இவர் ஓம் பட்டதால் நானும் போனேன். இயலுமான அளவிற்குத் தூசைத் தட்டி விட்டு சுவாமி சாய்பாபா

படங்களை – பெரும்பாலும் கலண்டரில் வெட்டிய படங்கள் எடுத்தோம். ஒன்றிற்குப் பின்னால் தர்மலிங்கத்தின் ஒரு ஒவிஸ் க்ரூப் போட்டோ (Office Group Photo) பாதி இருந்தது. சக்திதேவியின் வீட்டிற்கு முன்னாலிருந்தும் அவர்கள் அந்த வீட்டைப் பராமரிக்கவில்லை. வேறு ஒரு சொந்தக்காரர் - பாலு – தான் பராமரித்தார். கொழும்பு திரும்பி வந்ததும் பாலா குண்டைத் தூக்கிப் போட்டார் - வேணுவிற்கு கலியாணம் பொருந்திருப்பதாகவும் எழுத்துக்கு தம்மை தர்மலிங்கம் கூப்பிட்டதாகவும் பாலா சொன்னார். பரம் தர்மலிங்கத்திற்கு வோன் பண்ணி ஏன் தனக்கு சொல்லவில்லை என்று கேட்டதற்கு தம்பி (வேணு) ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று சொன்னதாகச் சொன்னார். அவர் சிங்கப்பூரிலிருந்து வந்ததும் அவருடன் கதைக்கச் சொன்னார். பரம் கலங்கிவிட்டார். அன்று ராத்திரி ஒரே "ஏன் அப்படிச் செய்தார்? என்ற சிந்தனை தான். நான் தர்மலிங்கத்தின் படத்தை பாலாவிடம் குடுத்து அவரைப் பார்க்கும்போது குடுக்கச் சொன்னேன். சாய்பாபா சுவாமியின் படங்களை சிட்னி கொண்டுவந்து வ்றேம் (Frame) போட்டு பூசை அறையில் வைத்துக் கும்பிட்டேன்.

இன்று அந்த "Venu" பெயர் தெரிந்தபோது சட்டென்று வேணுவை இன்று சந்திப்பம்போல என்ற சிந்தனை வந்து போயிற்று. பல வருடங்களாகியும் வேணுவை இங்க சிட்னியில் கண்டதுமில்லை, அவரைப் பற்றி வட்டுக்கோட்டை பிள்ளைகள் கதைத்ததும் இல்லை. ஆனால் சுவாமியின் இந்தமாதிரி செய்திகள் எனக்கு அப்பப்ப வந்து என்னை ஆசீர்வதிக்கும். 05 நவம்பர் 1998 அன்று சுவாமியின் படத்தில் குங்குமம் வந்தது. அதுதான் இந்த அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் செய்திகளின் தொடக்கம். இரண்டு தேவை - ஒன்று நம்பிக்கை. மற்றது தேடல்.

லிங்கத்தின் பிரமிட் கடைக்குப் போனோம். பரம் எனக்கு முதல் பின் கதவை நோக்கிப் போனார். பெட்டிகளைப் பற்றி சொல்ல. நான் கீழே நின்று மரக்கறிகளைப் பார்த்து தெரிந்தேன். அந்தப் பக்கம் போக தொடங்கியபோது பரத்துடன் ஒருவர் கதைப்பது தெரிந்தது. பின்னால் பரத்தின் தூர உறவினர் மாதிரி ஒருவர் பரத்துடன் கதைத்தது தெரிந்தது. அங்கு தெரிந்தவர்கள் பலருடன் நாங்கள் உரையாடுவது வழக்கம். ஆனால் புதுசாக இருந்தது பரம் - "நீர் தள்ளிப் போய்விட்டீர்" என்று சொல்லி பரம் அங்கால போனது. அப்ப பட்டது அது வேணு என்று. இதைத்தான் பொடி லங்வேஜ் (Body

Language) என்று சொல்வோம். என்ன மாதிரி – பிடிக்குமா பிடிக்காதா என்று மௌனமாகத் தெரியப்படுத்துவது. பரத்திற்குப் பிடிக்காது என்று இருப்பவர்களை விரல் விட்டு எண்ணலாம். வேணு அதில் முதலில் நின்றார். அவரிடமிருந்து பரத்திற்கு உயர்ந்த ஒழுங்கு என்ற எதிர்பார்ப்பு இருந்தது. நான் வேணுவாக இருக்கும் என்று நினைத்தும் அவரது பக்கமே பார்க்கவில்லை. அந்த இடத்தில் பொது சமுதாயத்தில் எங்கள் அந்தஸ்து வேணுவினதைவிட எவ்வளவோ உயர்ந்தது. அதை எடுத்து எமது அலுவலை முடித்தோம். வீட்டுக்குத் திரும்பும்போது பரம் சொன்னார் வேணு தன்னைப் பார்த்து "என்னைத் தெரியுதா" என்று கேட்டதாக. தான் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. அப்ப வேணு "சித்தப்பா நான் உங்களை மறக்கேல்ல" என்று வேணு சொன்னாராம். அதற்கு தான் சொன்னாராம் "எப்பவோ நீர் தள்ளிப் போய்விட்டீர் என்று அத்தாட்சி இருக்கு" என்று சொன்ன தாக பரம் சொன்னார். பரத்தின் மனதில் இருந்த அமைதி வெளியில் தெரிந்தது. தெய்வம் நின்று சந்தர்ப்பத்திற்கு வழிவகுத்துள்ளார். எனக்கோ வேணுவிலிருந்த கொஞ்ச நஞ்ச மரியாதை இன்னும் கீழே போனது / இல்லாமல் போனது. அவருக்கு கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை. இத்தனை வருஷமாக கலியாணத்திற்குப் பிறகு போன் கூட பண்ணாதவர் – சித்தப்பாவை மறக்கவில்லை என்று சொல்வதை பெரிய காரியம் என்று எப்படி நினைக்கமுடியும்? அந்த விதத்தில் செந்தில் கண்ட இடத்தில் காலைத் தொட்டுக் கும்பிடுவார், இல்லாவிட்டால் அமைதியாக வந்து நிற்பார்.

இளையவர்கள் விளைவால் இயக்கப்படுவது சகஜம்தான். ஆனால் எமது வாழ்க்கைத் தராதரம் உயர உயர விளைவுகளைவிட அமைப்பு முக்கியமாகின்றது. பலனைத் தாமே ஒறுப்பவர்கள் இயற்கையான அமைப்பை உருவாக்குகின்றார்கள். அப்படித்தான் குடும்ப, சமூக அமைப்புக்கள் உருவாகின்றன. அமைப்புக்குள்ளால் கொடுக்கல், வாங்கல்களை போட்டு எடுப்பதே அதற்கு ஒரு நகையென்ற அழகைக் கொடுக்கின்றது. நேரடியாக காசு / விளைவு பரிமாறல் இருந்தால் அது தங்கம் மாதிரி. நகையின் வடிவு இருக்காது. வேணுவின் "சித்தப்பா நான் உங்களை மறக்கவில்லை" என்ற கூற்றும் அப்படியே. அது ஒரு படித்த பிள்ளைக்கு வடிவில்லை. அவருக்கே உள்ளுக்குள் முரண்பாடுகள் வருவதற்குக் காரணமாக இருக்கும்.

அமைப்பின் மூலம் விளைவை எடுக்கும்போது அந்த அமைப்பை உருவாக்கின, மேம்படுத்திய, பங்களித்துக் கொண்டிருக்கும் எல்லாரது ஆசீர்வாதமும் கிடைக்கின்றது. அதுதான் பொது அமைப்பும் அதன் மகிமையும்.

வேணு அவரது கலியாணத்தின் போது குடும்பத் தலைவனாகப் பதவி எடுத்தார் – இயக்கம் எடுத்தது போல. தகப்பனார் தனது ஸ்தானத்தை விட்டுக் கொடுத்துவிட்டார். அதற்குப் பிறகு எப்படி அந்த அமைப்பு வேலை செய்யும்? ஒவ்வொரு குடும்பத்திற்கும், அதற்குள் ஒவ்வொரு உறவுக்கும் தனி அமைப்பு, உண்மை மூலம் உண்டு.

அது வெளியே தெரியும் அமைப்பை விட பதிந்ததாக இருந்தால் அறிவு மூலம் அதை உயர்த்தலாம். அதற்குத்தான் முறைகளும், சட்டங் களும் உள்ளன. ஒரு விஷயத்தை எஸ்கலேட் (Escalate) பண்ணுவது / உயர்த்துவது அதற்காகத் தான். உயர்த்தும் படித்தட்டுதான் சட்டம். விஷ யத்தை எங்கள் வசதிக்காக கீழே இழுத்து கூடிய பலனைக் காட்டுவது அமைப்புக்களைக் குலைக்கும். இயக்கங்கள் சிலவேலைகளில், சில விஷ யங்களில் அப்படிச் செய்ததும் எமது தமிழ் சமுதாயத்தின் உண்மையான அமைப்பைக் குலைத்தன. பரத்தின் தலைமுறைக்கும் வேணுவின் தலைமுறைக்கும் இடையில் அமைப்பு தாழ்ந்ததற்கு அதுவும் ஒரு காரணம். பெரிய காரணம் குடும்பத் தலைவர்கள் அமைப்பைவிட விளைவால் உந்தப்பட்டதே. சீதனம் டொனேஷன் ஆக்கப்பட்டது. முதுசம் தானமாக்கப்பட்டது. அதற்குப் பிறகு நாம் எமது முன்னோரது பதவிகளைக் காட்டி உரிமை கொண்டாட முடியாது. கொண்டாடினால் அது பொய். அவர்களது சாபத்தையே கொண்டுவரும். பரத்தின் குடும்ப அமைப்பின்படி பெண் பிள்ளைகள் தான் இப்படிச் செய்தார்கள்.

மூத்தவர் பரமநாதன் அண்ணை. செந்திலின் அப்பா. அதற்குப் பின் கமலாதேவி. அவர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் தம்பி வைத்தியனாதனை மணமுடித்து மலேஷியாவில் குடியேறினார். பரத்திற்கு இரண்டு வயதாக இருந்தபொழுது தாய் இறந்து விட்டா. அதற்குப் பிறகு உள்வேலைகளில் பலவற்றை சரஸ்வதி செய்தா. உயர்ந்த பொறுப்பை எடுத்தது தகப்பன். தர்மலிங்கம் சரஸ்வதிக்கும் கமலாதேவிக்கும் இடைப்பட்டவர். அவருக்கும் சரஸ்வதிக்கும் அராலியைச் சேர்ந்த தர்மரட்ணம் பிள்ளைகளுடன்

மாற்றுச் சடங்கு நடந்தது. தர்மரட்ணம் எங்களுக்கு தூரத்து உறவு. நாம் அந்த அமைப்புகளை மதித்துப் பராமரிக்கும்போது அதன் கீழ்வரும் எல்லோருடனும் உறவினராகின்றோம்.

அப்படித்தான் ஒருமுறை, தர்மரட்ணத்தின் இளையமகன் குஞ்சுமணி (ராஜராஜேஸ்வரன்) தகப்பனுக்கு திதி செய்ய மெல்பன் (Melboune) இல் இருக்கும் சிவா – விஷ்ணு கோயிலுக்கு வந்திருந்தார். அப்ப நானும் மகன் ப்ரதீப் (Pradeep) பேரப்பிள்ளைகளுடன் அங்கு சென்றிருந்தேன். ப்ரதீப் வீடு வேண்ட யோசித்து அதற்காக எமது கூஜீ வீட்டை மேலும் அடமானம் வைத்து பாங்க்கில் கடன் கேட்டிருந்தோம். கோயிலுக்கு வரும் வழியில் பாங்கிலிருந்து வோன் வந்தது. எமது வீட்டில் மேல் கவியட், (Caveat) யூனிவஸிட்டி (University) போட்டிருப்பதாக. நான் யூனிவஸிட்டிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருந்தேன். தர்மத்தின் பாதையில். அவர்கள் பரிஸ்டர் (Barrister) பிடித்தார்கள். அந்தக் காசை என்னிடம் கேட்டு கோட்டில் (Court) முடிவு எடுத்தார்கள். அது எல்லாம் தமது அதிகார பலத்தைக் காட்டவே. ஆனால் வீட்டில் கை வைக்குமளவிற்கு தம்மைத் தாழ்த்துவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

குஞ்சுமணி தகப்பனுக்கு செய்த திதியின் சக்தியில் அந்த அமைப்பை கைப்பிடித்த எனக்கும் ப்ரதீப்புக்கும் பங்கு வந்திருக்க வேண்டும். நான் அந்த சிவா – விஷ்ணு கோயிலில் மனம் திறந்து கேட்டேன். சிட்னி வந்து ஆனவற்றை செய்து கவியட் (Caveat) ஐ அகற்றி லோன் (Loan) பெற்றேன். அமைப்புகள் உயர உயர அவை தெய்வீக சக்தி ஆகின்றன. அப்படித்தான் அராலி சக்தி அன்று எனக்கு ஆசீர்வாதம் தந்தது. குஞ்சுமணியும் அதற்கு ஊடகமாக வந்தார். மனமுவந்த பிரசாதத்தைப் பகிர்ந்தார். ருசிக்கு உணவை சாப்பிடுவது மிருகக் குணம். அதே உணவை கடவுளுக்குப் படைத்து உட்கொள்ளும்போது அது உயர்த்தப்பட்ட எல்லா சக்திகளையும் எங்களுக்குள் கொண்டு வருகின்றது. தேவாரமாக இருந்தால் கூட அந்த உயர்ந்த அமைப்பிற்குள்ளாகப் போய் வராவிட்டால் அது வெறும் சத்தம் தான். அமைப்புத்தான் அந்த சத்தத்தை இசையாக்கி தேவாரமாக்கின்றது. வேணு விஷயத்தில் அவர் குடும்ப விளைவுகளை நேரடியாக எடுத்தார். அவரும் அதில் லீட் ரோல் (Lead Role) எடுத்த செந்தில், பாலமுத்துசிங்கம், வேணு மணமுடித்த டொக்டர் பிள்ளை, அவவின் பெற்றார் எல்லாரும் விளைவால்

உந்தப்பட்டவர்கள் - அதாவது சாப்பாட்டை ருசிக்காக சாப்பிடுகின்றவர்கள் என்று காட்டிவிட்டார்கள். அப்படியானவர்கள் எங்களைப் போன்றவர்களை அதாவது அமைப்பை முன்னுக்குப் போடுகிறவர்களை நினைவில் வைத்திருந்தால் அவர்களுக்கு விளைவுகளை அனுபவிக்க இயலாமல் போகும். கிட்ட கிட்ட வைத்தால் மூளைக் குழப்பம்தான் வரும்.

ஒவ்வொருவருக்கும் அவரவரது உண்மைப்படி உள்ளமைப்பு இயற்கையாக உண்டு. அந்த அமைப்பின் அதிபதி அதிலிருக்கும் உண்மை – காலத்தாலும் இடப்பெயர்ச்சியாலும் மாறாத உண்மை. எந்த இடத்தில் எந்தக் காலத்தில் அது உண்மை சக்தியாக உயர்த்தப்பட்டதோ அந்தப் பாதைதான் அந்தக் கடவுளின் உருவத்தைக் கொடுக்கும். சுதந்திர சக்தியும் அப்படியே.

சுதந்திர போராளிகள் என்று தம்மைக் கூறிக்கொண்டு விளைவை முன்னுக்குப் போடுகின்றவர்கள் தம்மையும் ஏமாற்றி மற்றவர்களையும் ஏமாற்றுகின்றார்கள். உண்மையான சுதந்திர போராளிகளில் ஒறுத்தல் குணம் முன்னுக்கும், விளைவைக் காட்டும் குணம் பின்னுக்கும் நிற்கும்.

வட்டுக்கோட்டை தீர்மானம் 1976 அப்படியான ஒரு அமைப்பையே வெளிப்படுத்தியது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டும் ஜனநாயகத்தின் அமைப்பில் இயங்க முடியாமல் போயும் வெளியாரிடம் முக்கியமாக இந்தியாவிடம் நேரடியான விளைவுகளைப் பெறாததே அந்தப் பாதையில் சென்றவர்களுக்கு 1977ஆம் ஆண்டு தேசிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைமைப் பதவியைக் கொடுத்து சுதந்திர தன்மையை உறுதிப்படுத்தியது. அத்துடன் சமமான ஜனநாயக அமைப்பையும் உறுதிப்படுத்தியது.

புது அமைப்புகள் ஜனநாயகத்தின்படி சீரோ (Zero) நிர்வாக அதிகாரத்தில் இருந்து தொடங்க வேண்டும். அதற்காகவே இரண்டாவது கூடுதலான வாக்குகள் தேர்தலில் எடுப்பவர்கள் சம எதிராளிகளாக உயர்த்தப்படு கின்றார்கள். அந்த சம எதிர்ப்புடன் உள்ள அமைப்பு உண்மையை வெளிப்படுத்தும். விளைவு நிலையில் ஒரு பக்கத்தில் நிற்பவருக்கு மறுபக்கம் தெரியாது. அதையே மற்ற மாதிரி சொன்னால் மறுபக்கம் தெரியாதவர்கள் உண்மையின் சந்நிதானத்தில் சம அந்தஸ்துள்ளவர்கள். அவர்கள் மறுபக்கத்தினர் படைத்த / உருவாக்கிய விளைவை எடுத்தால் அது திருட்டு, ஏமாற்றல். தமது சுதந்திர விளைவு களைப் பாதுகாக்க

மட்டுமே அவர்கள் மறுபக்கத்தினரைத் தாக்கலாம். அதற்கு மேலே தாக்கினால் அது ஆக்கிரமிப்பு. 2009இல் பயங்கரவாதத்தை அழிக்க போர் செய்ததாக இலங்கை அரசாங்கம் கூறுகிறது. அது இனப் படுகொலை / ஜெனொஸைட் (Genocide) என்று வடக்கின் முதலமைச்சர் திரு.விக்னேஸ்வரன் கூறுகின்றார். இரண்டும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் சரியாக இருக்க முடியாது. எமது பக்கம் தன்னைச் சார்ந்தவர் களையும் அகற்றியது - முக்கியமாக மக்கள் பிரதிநிதிகளை. எத்தனை மக்கள் அப்பிரதிநிதிகளை தெரிவு செய்தார்களோ அத்தனை மக்களும் கொல்லப்பட்டார்கள் எமது பக்க ஆயுதப் போராளிகளால். அதைவிடக் கூடிய தொகையை மற்ற பக்கம் அழித்திருந்தால்தான் அந்த இடத்தில் அந்தக் காலப்பகுதியில் ஜெனோஸைட் நடந்தது என்று முடிவு கூறலாம்.

யோகநாதனின் மரணச்சொத்தை அந்த / இந்த குடும்பத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு லெவல் (Level),ல் பார்த்தார்கள். எனக்கும் பரத்திற்குமே தொடக்கத்தில் பார்வை வித்தியாசமாக இருந்தது. சக்திதேவி “ட்ரங்க் (Trunk) பெட்டியை திறக்க விடமாட்டன்” என்றதும் அவவை நான் மனதில் தூர வைத்தேன். யோகநாதன் உயிருடன் இருந்தபோதே ஒருமுறை அவர் என்னிடம் வேணுவின் அப்பா தர்மலிங்கம் பற்றி கூறும் போது சக்திதேவி குறுக்கிட்டு ஏதோ சொல்லத் தொடங்கியதும்” அவவும் நானும் கதைக்கக்குள்ள நீ வாய்போடாத, உள்ளுக்குப் போ” என்றார். சக்திதேவியும் உள்ளுக்குப் போய்விட்டா. அதிலிருந்து தெரிந்தது வயதில் இளையவரான யோகநாதன் நடத்தையால் குடும்ப அமைப்பில் மூத்தவர் என்று. அதுதான் உண்மையின் அமைப்பு. இந்த விஷயத்தை என்னுடன் கதைத்து, ஆறுதல் பெற்றார். அதன்படி நான் அவருக்கு சக்திதேவியைவிட எவ்வளவோ கிட்டிய உறவு என்ற அமைப்பை அந்தப் பரம்பரை வீட்டில் உறுதிப்படுத்தினார். தர்மலிங்கமும் இவருக்கு மனம் நோகுமாறு நடந்துள்ளார் என்று புரிந்து கொண்டேன்.

அப்படியான சக்திதேவியை அவர்களது அக்கா மரணச் சொத்து அதிகாரியாக நியமித்தா – நீதிமன்றில். அது கள்ளக் கூட்டணி. தர்மலிங்கமும் அதற்குத் துணைபோனார். யோகநாதன் அவரைப் பற்றி கணித்தது உண்மை என்று உறுதிப்படுத்தினார்.

அந்த முறை ஒருநாள் நான் வட்டுக்கோட்டை பரம்பரை வீட்டு படலையடியில் வந்தபொழுது எதிர்ப்புறம் இருந்து திருமதி ராமையா வந்தார்கள். அவருக்கு 8 பொம்பிளைப் பிள்ளைகளென்றும் மிக ஏழையாக இருந்தும் சுயதொழிலால் எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்ததாகக் கூறினார்கள். அவ எங்களது வைரவர் – காளி கோயிலுக்கு வருவா. அம்மாவைத் தெரியும். ஆடிப்பூரத்திலன்று நான் சாப்பிடவேண்டும் என்று போட்டுத் தருவா. நானும் சாப்பிடுவேன்.

அன்று திருமதி ராமையாவைக் கண்டதும் வாசலில் நின்று சிறிதுநேரம் கதைத்தேன். பின் உள்ளுக்கு வரும்படி கூப்பிட்டேன். விறாந்தையிலிருந்து கதைக்க சக்திதேவி, மகாதேவன் அவர்களும் வந்திருந்து கதைத்தார்கள். நான் யோகநாதன் வழக்கமாக அமர்ந்திருக்கும் ஈஸிச்சேர் (Easy Chair) இல் அமர்ந்திருந்தேன். அப்ப இருந்தாட்போல திருமதி ராமையா கேட்டா எனது சாப்பாடு வசதிகள் எப்படி என்று? நான் சக்திதேவியைப் பார்த்து அவர்களுடன் என்றேன். திருமதி ராமையா "அவவுக்கு சமைக்கத் தெரியுமா?" என்று கேட்டா. நான் என்னத்தைச் சொல்வது,? திருப்பியும் கேட்டா. அப்ப எனக்கு காளி ஆச்சிதான் திருமதி ராமையா மூலமும், யோகநாதனின் ஆத்மா என் மூலமும் அந்த உண்மையை வெளிப் படுத்தியது போல இருந்தது. அதாவது சக்திதேவி யோகநாதனுக்காக சமைக்கவில்லை. மூன்று நேரமும் அவர் சாப்பாட்டை வெளியிலிருந்தே எடுப்பித்தார் என்பதுதான் உண்மை. அப்படியான சக்திதேவி எப்படி அவரது மரணச் சொத்தை நிர்வகிக்கலாம்?

நீதிமன்றில் அவர்கள் நிர்வாகம் தேவையில்லை என்று மனுப் போட்டார்கள். மற்றும் சமமாக உயிருடனுள்ள சகோதரங்கள் பகிர மரபுரிமை சான்றிதழ் கோரினார்கள். நாம் எதிர்த்தும் மல்லாம் நீதிமன்றம் அவர்களது கோரிக்கையை வழங்கியது. ஆனால் என்னைப் பொருத்தவரை அது சட்டப்படியுமல்ல தர்மப்படியுமல்ல. தர்மப்படி எவர் யோகநாதனை தனக்கு மூத்தவராக மனதில் கொள்கின்றாரோ அவர்தான் யோகநாதனின் வாரிசு. அது அவருக்கு இளையவர்களாக இருக்க வேண்டும். பதவியில். அவர் உயிருடன் இருக்கும்போது அவரில் குறை கண்ட – பதவியில் / வயதில் இளையவர்கள் அப்படியான வாரிசாக இருக்க முடியாது. அப்படி ஒருவரும் இல்லாத இடத்தில் மூத்த பதவியில்/வயதில்

இருந்தவர்கள் அதைப் பொறுப்பெடுக்க வேண்டும். அந்தச் சொத்தின் மூலம் குணாதிசயத்தில் அவரது வாரிசை / வாரிசுகளைக் கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டும். அமைத்துக் கொடுக்க வேண்டும். அது யோகநாதன் விஷயத்தில் கொஞ்சம் கடினம். ஏனென்றால் அவர் சராசரி மனிதனுக்கு மேலாக தன்னை ஒறுத்து வாழ்ந்தவர்.

நான் அங்கு வட்டுக்கோட்டையில் நின்றபோது இங்கே சிட்னியில் (Sydney) யில் சரஸ்வதி வோன் பண்ணி பரத்தைக் கூப்பிட்டது, அவ தனக்குத்தானே அந்தக் குடும்பத் தலைவியென்று முடிசூட்டிக் கொண்டதால் என்று நான் முடிவு செய்தேன். சகோதரங்களின் செத்த வீட்டுக்குப் போய் மரியாதை பண்ணவில்லை. யோகநாதனின் அந்திரட்டிக்குக் கூடப் போகவில்லை - வட்டுக்கோட்டைக்கு. நாங்கள் நினைவுமலர் வெளியிட்டோம். சில இளைய தலைமுறையினர் பார்த்து அது பிடித்தது என்றனர். செந்திலைவிட வேறு ஒரு இளைய தலைமுறையினரும் தமது அனுபவங்களைப் பகிரவில்லை. ஆனால் 2011 இரண்டாம் மாதமளவில் சரஸ்வதியின் மகன் இலங்கையின் வடமாகாணத்திலிருந்து டெலிபோன் பண்ணினார். வெளிக்கிட முதல் பரத்துடன் வோனில் கதைத்தபோது பரம் அவருக்கு சொன்னார் எல்லா விபரங்களையும் அறிந்து தனக்கு அறிவிக்கும்படி. பரம், லிங்கத்தின் விஷயத்தில் நான் தர்மப்படி நடந்ததைக் கூறக் கேட்டேன். அப்ப யோகர் என்ன செய்தனான் என்று கேட்க அங்கிருந்த விலை உயர்ந்த ரேடியோ செட்டை லிங்கத்திற்கும் அவரது தகப்பனுக்கும் ஆதரவாக இருந்த சேவே டிப்பாட்மன்ட் (Survey Department) சக ஊழியர்களுக்கும் பொதுப் பாவனைக்குக் கொடுத்ததாக பரம் சொன்னதைக் கேட்டேன். யோகரின் சிந்தனை எனக்குத் தெரியாது. ஆனால் யோகர் ஊரிலிருந்து வோன் பண்ணியபொழுது நான்தான் வோனை எடுத்தேன். அப்ப யோகர் சொன்னார் தர்மலிங்கம் தனது அம்மாவுக்கும் சித்திக்கும் தனது பங்கை (யோகநாதனின் சொத்தில்) எழுதித் தந்துவிட்டார். குஞ்சுமாமாவும் (பரம்) எழுதித் தந்தால் பாங்கிலிருந்து காசை எடுக்கலாம் என்று. பரம் முடியாதென்றார். பின்னர் சிங்கப்பூரிலிருந்த வேணுவிற்கு வோன் பண்ணிக் கேட்டார். அவரது அப்பா எழுதிக் குடுத்தது உண்மையா என்று? வேணு ஓம் என்றார். யோகர் சொல்லியிருந்தார் யோகநாதனுடன் தனது குடும்பம் வைத்திருந்த ஜொய்ன்ட் அக்கௌண்ட் (Joint Account) இலிருந்து யோகநாதன் ரூபா 4 $\frac{1}{2}$ லட்சம் எடுத்திருக்கின்றார். அது தமக்கு

திருப்பித் தரவேண்டும் என்று. அதையும் பரத்திடம் கூறினேன். யோகர் சொன்னார் தான் சக்திதேவியின் கணவர் மகாதேவனுடனும் கதைத்த தாகவும் அவரும் தானுமாக செந்திலுக்கும் ஒரு பங்கு குடுக்கலாம் என்று முடிவு செய்ததாக. இதைத்தான் சிறு பிள்ளைத்தனம் என்பது. தனக்கு என்ன விளைவு வரும் என்பதையே பார்க்கும்.

செந்திலுக்கும் யோகருக்குமிடையே வயதால் செந்தில் மூத்தவர். எனது மாமனாரின் மூத்த ஆண் பிள்ளையின் மூத்த மகன், செந்திலின் தகப்பன், பொறுப்பு எடுக்கவில்லை. ஆனால் நாம் எடுத்தோம். செந்தில் எங்களை முறைப்படி மரியாதை பண்ணுமட்டும் எமது குடும்பப் பதவியில் அவருக்கு பங்குண்டு. ஆனால் தாயின் இல்லாத பதவியை தான் போட்டுக் கொண்டு வந்த யோகருக்கு எமது உழைத்து எடுத்த பதவிகூட தெரிய வில்லை. எல்லாவற்றையும் தானே செய்தார் – ஏதோ தான்தான் யோகநாதனின் மகன்போல. யோகரை நாம் ஒஸ்ரேலியா எடுப்பித்தபொழுது யோகரின் தகப்பன் சபாநாதன் அப்படித்தான் எழுதியிருந்தார் – அதாவது முற்பிறவி தொடர்பால் யோகர் பரமசிவத்தின் மகன் என்று. அதாவது பரம் என்னை மணமுடித்து எனது பிள்ளைகளுக்கு தகப்பனாக இருந்தும் அவருக்கு பிள்ளைகள் இல்லாத மாதிரி.

அமைப்பினுள் இருந்து கதைக்காதவர்களது உண்மை இப்படித்தான் கேட்க ஒருவரும் இல்லையென்றால் வெளிப்படுத்தப்படும். பொது முறைகள், சட்டங்கள் எமது நடத்தையையும், பேச்சையும் சிந்தனையையும் ஒழுங்குபகுத்த. ஆனால் விளைவால் / பலனால் உந்தப்பட்டவர்களுக்கு அது முக்கியமில்லை.

எமது திருமணம் சட்டப்படி நடந்தது. பரத்தின் குடும்பம் எந்தவிதத்திலும் அதை எதிர்க்கவில்லை. சரஸ்வதி மூன்று பிள்ளைகளுக்குப் பொறுப்பு பெரிய விஷயம் என்றா. அப்படியிருந்தும் அவவது பிள்ளையை ஒஸ்ரேலியா வர வசதிப்படுத்துகின்றோம் என்றால் எமது அமைப்பு எவ்வளவு பரந்ததாக இருக்க வேண்டும் என்று அவ யோசித்திருப்பா - உண்மையான அக்கறை தம்பியில் இருந்திருந்தால்.

# 7. சட்டமா தர்மமா?

**ஊருக்கு ஊர் சட்டம் வேறு.**
**உலகத்திற்கு பொது - உண்மையின் தர்மமே**

ஒஸ்ரேலியாவிற்கு சரஸ்வதியும் புருஷனும் கூட வந்தார்கள். எயர்போட்டில் (Airport) என்னிடம் சொன்னார் சபாநாதன் என்னால்தான் தங்களுக்கு வீசா (Visa) சரிவந்ததாக. சரஸ்வதி ஒன்றும் சொல்லவில்லை. ஒருமுறை தான்தான் தாயாக சகோதரங்களைப் பராமரித்ததாகக் கூற பரம் சொன்னார் – தகப்பன்தான் தனக்கு அந்த இடத்தை எடுத்தவரென்று. பின்னர் ஒரு நாள் வட்டுக்கோட்டையில் சக்திதேவி என்னிடம் தான்தான் பரத்துக்கு தாயாக இருந்ததாகவும் தகப்பனுக்கு சுகமில்லாமல் இருந்தபொழுது தான்தான் அவரைப் பராமரித்ததாகவும் சொன்னா. நான் ஒன்றும் சொல்லவில்லை. தகப்பனுக்கு முன்னால் இவர்கள் இப்படி சொல்லியிருக்க மாட்டார்கள். அதற்குரிய அமைப்பு வேறு. ஆனால் எமது குடும்பத்தில் நான் ஒரு நல்ல பொறுப்பு எனது பதவிக்கும் அதிகமாகவே எடுத்தனான். ஆகவே, எனக்கு அதில் உள்ளுணர்வு ஆழமாக உண்டு. அதுவே உண்மையின் நியதி. நாம் செய்யும் ஒவ்வொன்றுக்கும் வெளியிலிருந்து விளைவு வராவிட்டாலும் உள்ளுக்குள் சக்தி வளரும். நல்லதோ கூடாததோ அப்படித்தான் நடக்கும் என்பது எனது கண்டுபிடிப்பு. நாங்கள் யோசிக்காமல் கதைத்தால் அந்த சக்தியின் வெளிப்பாடுதான் தெரியும். நீதிமன்றத்தில் சகோதரிகள் தமக்கு சமபங்கு வேண்டுமென்றும் நிர்வாகம் தேவையில்லை என்றும் மனுப்போட்டார்கள். நாம் அதற்கு மறுப்பு தெரிவித்து தேசவழமைப்படி சீதனம் கொடுக்கப்பட்டவர்களுக்கு முதுசத்தில் பங்கில்லை, அத்துடன் நிர்வாகம் வேண்டும் என்றும் வாதாடினோம். இரு சகோதரிகளும் தமக்கு தகப்பன் சொத்து எழுதியவர். ஆனால் அது டொனேஷன் (Donation) / கொடை, சீதனம் அல்ல என்றார்கள். சக்திதேவி இறந்தவர் கொஞ்சம் காசும் நகையும் கலியாணத்தின் போது தந்ததாக

சாட்சி சொன்னா. சரஸ்வதி தான்தான் இறந்தவரைப் பராமரித்ததாகவும், தகப்பன் தனக்கு சீதனம் தரவில்லை என்றும் சொன்னா.

சீதனமா டொனேஷனா என்பது கொடுப்பவர் மனதில் ஒரு நோக்கத் திலும் பெறுபவர் மனதில் இன்னொரு நோக்கத்திலும் இருக்கலாம். சீதனம், முதுசம் ஒரு அமைப்பிற்குள்ளால் போட்டெடுக்கப்படும். அந்த அமைப்பின் மெருகும் அந்த பரிமாறலில் உண்டு. தகப்பன் மனமுவந்து,மரியாதை பண்ணி தந்ததென்றால் அது மரியாதைக்குரிய பரிமாறல். இல்லாவிட்டால் மகள்மாரின் குறைபாடுகளைச் சரிப்படுத்தி அவர்களது பெறுமதியை கலியாணச் சந்தையில் கூட்டிக் காட்டும் மேக் அப் (Makeup). இரு சகோதரி களும் தமக்கு மேக் அப் போடப்பட்டது என்று வெளிப்படுத்தினார்கள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அவர்களது பக்க வழக்கறிஞர் - நான் அவர்களது சொத்தை சூறையாடப் பார்க்கின்றேன் என்ற மாதிரி வாதாடி னார். நான் குடும்பம் இல்லை என்றார். நீதிபதி கஜநிதிபாலனும் மௌனமாக ஏற்றுக்கொண்டார். அவர்கள் கேட்பதை வழங்குவதாக கட்டளை இட்டார். சில உறவினர்கள் நீதிமன்றிற்குப் போனது வீண் என்றார்கள். ஆனால் இருபக்கத்துடனும் கதைத்துத் தீர்மானம் பண்ண ஒருத்தரும் முன்வர வில்லை. ஆனால் அதில் அற்புதம் என்னவென்றால் எனக்கு அங்கு நீதியை நிலைநாட்ட சந்தர்ப்பம் வந்தது. நான் சாட்சி கூறிவிட்டு சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கியதும் எனது பதவி சாட்சி-பதவி அல்ல. பொது மக்களது பதவி. பொதுமக்கள் சட்டத்தைப் பாவிக்கும் விதத்திற்கு நான் முன்னுதாரணம். அதன்படி எதிர்த்தரப்பு வக்கீல் திரு. யோகேந்திரா சட்டத்தின் வரம்பை மீறி நான் குடும்பமல்ல என்று திருப்பித் திருப்பி என்னை சாட்சிக் கூண்டிலிருக்கும்போது குற்றம் சாட்டினார். நீதிபதி கஜநிதிபாலனும் அதை அனுமதித்து நீதி வழுவினார். கோவலன் விற்ற சிலம்பு அரசியினுடையது என்று குற்றம் சாட்டிய பாண்டிய மன்னன், கண்ணகியால் உண்மையை அறிந்து உயிர் நீத்தார். அன்று நான் அங்கு கண்ணகியாகி நீதிபதிக்குப் பதிலாக இரண்டு வழக்கறிஞர்களையும் கண்டித்தேன். முதலில் எமது பக்க வழக்கறிஞர் திரு. கனகசிங்கத்தைப் பார்த்துச் சொன்னேன். 'ஐ ஆம் மோஸ்ட் டிஸப்பொய்ன்டட் வித் யூ' (I am most disappointed with you) என்று. அதாவது எனது எதிர்பார்ப்பின்படி

அவர் நடக்கவில்லை என்று. அப்பொழுது, கனகசிங்கத்திற்குப் பக்கத்தில் நின்ற திரு. யோகேந்திரா எமது பக்கம் திரும்பினார். அவரைப் பார்த்து நான் சொன்னேன். "ஆஸ் வோ யூ;; (As For You) உமக்கு நான் சொல்வது என்னவென்றால் – "நான் ஒரு விலைமாது அல்ல" என்று கூறிவிட்டு நீதிமன்றின் பிற்பகுதிக்குச் செல்லத் தொடங்கினேன். வழக்கறிஞர் சட்டத்தின் வரையறுப்பிற்குள் நின்று கதைக்க வேண்டும். மக்கள் உண்மையின் வரையறுப்பிற்குள் நின்று கதைக்க வேண்டும். உண்மையை சட்டம் மறைக்க சட்டத்திற்கு உரிமையில்லை. பாண்டிய மன்னன் அன்று அந்தச் சிலம்பு உண்மையிலேயே அரசியினுடையதா என்று ஆராயவில்லை. மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி இன்று பொய்யான வாரிசை உண்மையான வாரிசு என்று நிலைநாட்ட வசதிப்படுத்தி நீதி வழுவினார். வாரிசுகள் நாம் முழுமையடைந்துள்ளோம் என்று உறுதிப்படுத்துபவர்கள். நாம் பிறந்த பிறப்பிற்கு அர்த்தம் கொடுப்பவர்கள். அறிந்தோ அறியாமலோ அவர்கள் மனங்கள் ஒன்றாக செயற்படும். ஒருவரை மற்றவர் ஊக்குவிப்பார். அப்படி வாரிசுகள் உருவாகுமாறு வாழ்பவர்கள் பிறவிப் பலனை அடைந்தவர்கள். எமது பலவீனங்களை வெளிப்படுத்தாமல் மனோபலத்தை வெளிப்படுத்தி இளையவர்களுக்கு உதாரணமாக வாழும்பொழுது நாம் நல்ல வாரிசுகளை உருவாக்குகின்றோம். எமக்கு கிட்ட வாழ்பவர்களுக்கு அப்படி வருவதற்கு சந்தர்ப்பம் கூடுதலாக உண்டு. அப்படி எமது குடும்பத்தில் ஒருவர் இருந்தால் அதற்கு சட்டத்தில் பல வேளை அங்கீகாரம் இருக்காது. ஆனால் அப்படி இருந்தும் அதை மறைக்க, மறுக்க உதவிய நீதிபதி கஜநிதிபாலன் சட்ட நீதிமன்றத்தில் குற்றவாளியாகினார்.

26.01.2012 அன்று எமது எதிர்மனு முதல் தடவையாக மல்லாகம் நீதிமன்றிற்கு விசாரணைக்கு வருவதாக எமது வழக்கறிஞர் கூறினார். சட்டப்படி நாம் எதிர்க்கும் பொழுது அத்துடன் சத்தியக்கூற்றும் இணைக்க வேண்டும். இந்த விஷயத்தை நீதிமன்றிற்குக் கொண்டு செல்ல சகோதரிகள் – முக்கியமாக சரஸ்வதி முடிவெடுத்த போது அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.யோகேந்திரா எம்முடன் ஏற்கனவே தொடர்பு கொண்டு நானும் அவரைப் போய் சந்தித்தேன் – அவரது கொழும்பு வீட்டில் மரியாதையாகக் கதைத்தார். சரஸ்வதி, தனது தமையன் தர்மலிங்கத்திற்கு பவர் ஒவ்

அட்டார்னி (Power of Attorney) கொடுக்க தயார் பண்ணி வைத்திருந்த பத்திரத்தைக் காட்டினார். ஆனால் தர்மலிங்கம் மனுப்போடவில்லை. ஏற்கனவே பரம் போன் பண்ணி நாங்கள் ஆண் பிள்ளைகள் இவ்விஷயத்தை முன் நின்று நடத்த வேண்டிய கடமை உண்டு என்று கூற, தர்மலிங்கம் சரஸ்வதியும், கணவரும் தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகக் கூறினார். என்ன விபரங்கள் அந்த பத்திரங்களிலிருப்பதாகத் தனக்குத் தெரியாது என்றார். லோயர் (Lawyer) சம்பந்தப்பட்டது என்றார். அவர் மூத்தவராக இருந்தும் நிச்சயமாக மனித வள, பண வள நிர்வாகங்களில் யோகநாதன் அவரை, தர்மலிங்கத்தை, தனக்கு மூத்தவராகக் கொள்ளவில்லை. யோகநாதனைப் பொறுத்தவரை தர்மலிங்கம்தான் தன்னிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அது குடும்பத்தில் பெரும்பாலும் நானறிந்தவரை எல்லாருக்கும் தெரிந்திருந்தது. அப்படி இல்லாவிட்டாலும் தர்மலிங்கம் எல்லாருக்கும் மூத்தவரென்ற முறையில் பொறுப்பெடுத்திருக்க வேண்டும். அவர் சரஸ்வதியிடம் அதை விட்டுவிட்டார். அவவது கைப்பொம்மை போல. நான் எனது தம்பியிடம் கூட அப்படி கண் மூடித்தனமாக கையெழுத்துப் போடச் சொல்லமாட்டேன். அவன் படித்திருப்ப தால் அவனை வாசித்து அறிந்து அதன்படி கையெழுத்துப் போடச் சொல்லுவேன். அதனால் தான் நான் நீதிமன்றத்தின் உண்மையான வாரிசு. எனக்கு விருப்பமான விளைவுகளை வரவழைப்பதற்கும் விருப்ப மில்லாத விளைவுகளைத் தடுப்பதற்காக மட்டுமே நான் நீதிமன்றத்தைப் பாவித்திருந்தால் அதன் வாரிசாக முடியாது. பரம் தனது தமையனது வாரிசு என்று நிலைநாட்டுவதற்காக நான் பொது நீதிமன்ற அமைப்புகளை சிந்தனையிலும் குலைக்க மாட்டேன்.

26.01.2012 அன்று அந்த நீதிமன்றத்தில் நடந்ததன் ட்ரான்ஸ்ரிப்ட் (Transcript) பின்வருமாறு குறித்துள்ளது :

‘இவ்வழக்கில் 16.01.2012இல் நகர்த்தற்பத்திரம் 5ம், 6ம் எதிர் மனுதார் சார்பில் பதிலி, பிராது, AA1, AA4, BB1, BB2, CC3 ஆவணங்கள் அணைத்து கோவையிடும் ஆவணங்கள் அணைத்து கோவையிடு மாறு கோரப்பட்டிருந்தது. குறித்த ஆவணங்களை மன்று பரிசீலனைக்குட் படுத்திய நிலையில் சட்டத்தரணி நியமனத்தில் இடப்பட்ட கையொப்பம்,

அதாவது 5ஆம் எதிர்மனுதார் சுப்பிரமணியம் பரமசிவம, 6ஆம் எதிர்மனுதார் கஜலக்சுமி பரமசிவம் எனக் கையொப்பமிடப்பட்ட நிலையில், பிராதை அவதானித்த நிலையில், குறித்த 5ஆம் எதிர்மனுதார் என்று சொல்லப்படுகின்ற சுப்பிரமணியம் பரமசிவம் அவுஸ்திரேலியாவில் இருந்து கையொப்பமிடப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு, நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. அது பற்றி சிரேஸ்ட சட்டத்தரணியிடம் வினவியபோது குறித்த பரமசிவம் 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கைக்கு வந்து 02ஆம் திகதி ஜனவரி மாதம் 2012ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளிக்கிட்டதாகவும் தெரிவிக்கின்றார். ஆனால் குறித்த அற்றோனித் தத்துவப் பத்திரத்தில் குறித்த பரமசிவம் கஜலட்சுமி 12ஆம் திகதி ஜனவரி மாதம் 2012ஆம் ஆண்டு கையொப்பமிட்டுக் காணப்படுகின்றது. எனவே குறித்த அற்றோனித் தத்துவப்பத்திரம் வலிதுடைமையானதா? என்ற கேள்வி மன்றுக்கு எழுகின்றது. இந்நிலை யில் குறித்த 5ஆம் எதிர்மனுதார் தற்போது நாட்டில் இல்லை என்றும், அவர் அவுஸ்திரேலியாவில் நிற்பதாகவும் 6ஆம் எதிர்மனுதார் மன்றுக்கு தெரிவிக்கின்றார். எனவே புதிய பதிலி அணைக்க மன்று அறிவுறுத்துகின்றது. 5ஆம் எதிர்மனுதார் தொடர்பில் புதிய சட்டத்தரணி நியமனம் தாக்கம் செய்ய மன்று அறிவுறுத்தும் அதேவேளை, பத்திரிகைப் பிரசுரம் அணைக்க தவணையிடப்பட்டுள்ளது. அதற்கு மாறாக பிராது ஒன்று அணைக்கப்பட்டுள்ளது. மரண சாதனம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பத்திரிகைப் பிரசுரம் செய்த பின்னர் ஆட்சேபணையிருப்பின் அதனை அணைக்கவேண்டும்என 5ஆம், 6ஆம்எதிர்மனுதாரர்களுக்குமன்றுசுட்டிக் காட்டுகின்றது. இத்தகைய நிலையில் மனுதாரின் செயற்பாடுகள் நீதிமன்றை உதாசீனம் செய்வதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வழக்கில் ; சம்பந்தப்பட்ட ஆவணங்களை எதிர்மனுதார்களுக்கு மன்றின் அறிவுறுத்தல் இன்றி அனுப்பப்பட்டுள்ளது. மனுதார் தரப்புச் சட்டத்தரணி இன்றைய தினம் மன்றுக்குச் சமூகமளிக்கவில்லை. குறித்த மனுதார் தரப்புச் சட்டத்தரணியை சட்டவரப்பிற்குள் நின்று செயற்படுமாறு மன்று மனுதார் ஊடாக அறிவுறுத்துகின்றது.'

கவனமாக அவதானித்தால் அந்த கட்டளைச் சட்டத்தின் வரையறுப்பிற்கு அப்பாற்பட்டது என்று விளங்கும். பரம் அந்த பத்திரத்தை ஜனவரி 01, 2012 அன்று ஸைன் (Sign) பண்ணினார். அடுத்த நாள் அவர் சிட்னிக்கு (Sydney) புறப்பட்டார். நான்தான் அதை டைப் (Type) பண்ணினேன். மனோகரன் (பரத்தின் சிநேகிதர்) எப்படி டைப்பண்ணவேண்டும் என்று இன்னொரு பத்திரமூலம் காட்டித்தந்தார். எனது கையெழுத்து அதில் தேவை இருக்கவில்லை. அதைப் பதியவே எனது சத்தியக்கூற்று தேவைப்பட்டது. அது 12ஆம் திகதி ஜனவரி மாதம் 2012. அந்த உண்மை எப்படி சட்டப்படி வலிதுடையதாக இல்லாமல் போகலாம்? அந்த பவர் ஓவ் அட்டர்னி கடைசிமட்டும் மாற்றப்படவில்லை. 16.01.2012 இற்குப் பிறகு ஒருத்தரும் அதைப் பற்றிக் கேட்கவுமில்லை.

இரண்டாவது குற்றம் – எமது மறுப்பு பிழை என்றது. நாம் ஏற்கனவே பிரசுரம் செய்யப்பட்ட பத்திரிகையை பார்த்து அதன் பிறகு தான் சத்தியக் கூற்றால் உறுதிப்படுத்தப்பட்ட எதிர்மனுவை தாக்கல் செய்தோம். எமது சத்தியக்கூற்றை வாசித்திருந்தால் நீதிபதிக்கு அது விளங்கியிருக்கும். அதைவிட முக்கியமாக நீதிமன்ற நிர்வாகம் குறித்த நாட்களில் தனது கடமைகளில் ஒன்றான பத்திரிகை பிரசுரத்தை நிறைவேற்றியதா என்று கவனித்து இருந்தாலும் அந்தக் குற்றம் நீதிமன்றிற்கு உரியது என்று தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த நீதிபதி எமது சத்தியக்கூற்றில் இருந்த விபரத்தை பாவித்து தனது அதிகாரத்தை எதிர்தரப்பு வக்கீலின் மீது பாவித்தார். பொது நிர்வாக முறைப்படி நீதிமன்றம் எமக்கு அறிவித் திருக்க வேண்டும். யோகேந்திரா சட்டவிரோதமாக அதைச் செய்ததாக எனது மூளை சொல்லவில்லை. அவர் தர்மத்திற்கு மாறாக செய்தது என்னவென்றால் நீதிமன்றில் பதிந்த மனுப்பத்திரங்களை முழுமையாக எமக்கு அனுப்பாமல் சமமாக பங்குபிரிக்கவும், சக்திதேவியின் மனு விற்கு நாம் சம்மதம் தெரிவிப்பதாகவும் கையெழுத்திட ஒரு பத்திரம் அனுப்பியதே. நாமும் அதில் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருந்தால் எந்த சக்திதேவியை "நீ இதில் வாய் போடாத, உள்ளுக்குப் போ" என்று யோகநாதன் சொன்ன வாக்கை அர்த்தமில்லாமல் பண்ணியிருப்போம். மேலும் பின்னர் தான் தெரியும் சரஸ்வதியின் புருஷன் சபாநாதனுக்கு ரூபா

450,000 கொடுக்குமதி. மகாதேவனுக்கு தகனச் செலவின் பெயரில் ரூபா 25,000 கொடுக்குமதி, யோகேந்திராவிற்கு ரூபா 200,000 கொடுக்குமதி எல்லாவற்றிற்கும் நாமும் “ஓம்” பட்டிருப்போம் என்று. ஆனால் விபரங்கள் எமக்கு அப்ப தெரியப்படுத்தவில்லை. ஏற்கனவே சரஸ்வதி பார்க்லேஸ் வெல்த் (Barclays Wealth) என்ற இங்கிலாந்து வங்கியுடன் தொடர்பு கொண்டதையோ அவர்கள் எழுதிய பதிலையோ எமக்கு ஒருவரும் காட்டவில்லை. அவையெல்லாம் இறந்தவர் சமுதாயத்தின் ஒழுங்குக்கு போட்ட பங்களிப்பை அவமரியாதை செய்த செயல்கள்.

ஒரு விஷயத்தை சட்டமூலம் உயர்த்தும் பொழுது மற்றவர்களும் அதில் மனதால் என்றாலும் பங்கு கொள்ளக்கூடியதாக உள்ளது. அப்படி ஒழுங்கானவர்கள் இறந்தவரது மனதுடன் ஒன்றுபடும் பொழுது அந்த விஷயம் உயர்ந்து பரந்து முன்னோரின் சக்தியையும் தூர இருப்பவர்களது சக்தியையும் அணைக்க உதவுகின்றது. ஒரு நீதிபதி அதிகாரத்தைக் கையில் எடுக்கும்போது அந்த பதவியை உருவாக்கிய, மேம்படுத்திய, மதிக்கின்ற எல்லாரது சக்திக்கும் அதன் வரையறுப்புகளுக்கும் உள்ளே நின்றால்தான் அந்த சக்திகளின் ஆசி வரும். அந்த சக்திகளை அவமதித்தால் அவற்றின் சாபம் வரும்.

டொனேஷன் என்று தகப்பன் கொடுத்த சொத்தை கூறிய சகோதரிகள் சீதனத்தின் மகிமையைத் தள்ளி வைத்து தமது வேலைக்குக் கூலியாக்கினார்கள். அந்த அமைப்பில் அவர்கள் செய்த வேலையின் பெறுமதியை விட கூடப் பெற்றிருந்தால் அவர்கள் கடனாளிகளாகின்றார்கள். சீதனம், முதுசம் என்ற அந்தஸ்துக்களால் போட்டு எடுக்கும்போது அது பொதுவாகி பங்களிப்பாகின்றது. சட்டத்தைக் கைப்பிடிப்பவர்களது மனங்கள் ஒன்று படுவதுபோல சீதனம் கொடுத்தவர்கள், பெற்றவர்களது மனங்கள் ஒன்று படும். டொனேஷன் தனிப்பட்டவரின் விருப்பப்படி, அல்லது பயத்தினால் வழங்கப்படுவது. அதற்கு இந்த சீதனத்திற்கு இருக்கும் மகிமை இல்லை. அது மாதிரித்தான் நிர்வாக அதிகாரமும். தனிப்பட்ட, அல்லது சின்னக் கூட்டத்தின் விருப்பு வெறுப்புகள், ஆசை, பயங்கள், ஆர்வம், பந்தம் இவற்றால் மட்டுமே இயக்கப்படும் அதிகாரம் அளவுக்கு மிஞ்சி பலனை / சம்பளத்தை எடுப்பவர்களை யாருடையதைப் பெறுகின்றார்களோ அவர்களுக்கு கடனாளியாக்குகின்றது.

06.09.2012 அன்று நீதிபதி திரு. கஜநிதிபாலன் மனுதாரர்கள் சார்பிலான வழக்கெழுவினாக்கள் தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு நிரைப்படுத்தினார் :

1. 5ஆம், 6ஆம் எதிர் மனுதாரர்களால் ஆட்சேபனைக் கூற்றுடன் கோவையிடப்பட்ட சத்தியக்கடதாசி சட்டப்படி செல்லுபடியாகுமா?

2. இல்லையென்றால் 5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனைச் சத்தியக்கூற்று நிராகரிக்கப்பட வேண்டுமா"

இந்தக் கேள்விகளை அங்கீகரித்ததன் மூலம் 16.01.2012 அன்று நீதிபதி திரு. அரியநாயகத்தை, அவர் மனுதார் வழக்கறிஞரை கண்டித்ததை, இந்த நீதிபதி அவமதித்து அந்த உட்கட்டளையைத் தள்ளி வைத்தார். ஒரு நீதிபதியின் கட்டளையை இன்னொரு நீதிபதி தனிப்பட்ட முறையில் உதாசீனம் செய்ய உரிமை இல்லை. எப்ப எமது சத்தியக்கூற்று வழக்கறி ஞரையே கடுமையாகக் கண்டிக்க பாவிக்கப்பட்டதோ அப்பவே அது சட்டத்தின் அமைப்பில் ஒரு பகுதியாகியது. அதை இடித்தார் நீதிபதி திரு. கஜநிதிபாலன்.

08.11.2012 அன்று இதுபற்றி வழங்கிய கட்டளையில் நீதிபதி திரு. கஜநிதிபாலன் பின்வருமாறு கூறுகின்றார்.

1. "5ஆம், 6ஆம் எதிர் மனுதாரர்களால் ஆட்சேபனைக்கூற்றுடன் கோவையிடப்பட்ட சத்தியக்கடதாசி செல்லுபடியாகுமா?

………….

இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் வழக்கேடு ஒன்றில் கோப்பிடப்பட்ட அதாவது 5ஆம், 6ஆம் மனுதார்கள் சார்பில் ஆட்சேபனை மனுவினை ஆதரிக்க அணைக்கப்பட்ட சத்தியக்கூற்றை திருத்துவதை திருப்பவும் குறித்த 5ஆம், 6ஆம் எதிர் மனுதார்களுக்கு வழங்க முடியுமா? என்பதாகும்.

இவ்விடயத்தினை ஆராய்ந்தபோது குறித்த சத்தியக்கூற்று வழக்கேட்டில் ஒரு பகுதியாக உள்ளது. இவ்வாறு இருக்கையில், சட்ட நிலை தொடர்பில் நோக்கின், குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் பிரிவு

46 (2) வருமாறு "நீதிமன்றத்தில் பிணக்கு இருப்பின் பிராதை திருப்பி வழங்குகின்ற அல்லது நிராகரிக்கின்ற அதிகாரத்தை வழங்கியுள்ளது."

அதே நேரத்தில் பிரிவு 93 உபபிரிவு 01, 02, 03, 04 பிராதை திருத்தும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. பிரிவு 114 (3) விளக்கத்தின் போது காண்பிக்கப்படும் ஆவணங்கள் எண்பிக்கப்படாத அல்லது ஒப்புக் கொள்ளப்படாத எல்லா ஆவணங்களையும் திருப்பிக் கொடுக்க அதிகாரம் வழங்கியுள்ளது. பிரிவுகள் 437, 438, 439, 440 என்பது சத்தியக்கூற்றின் வலிதான, வலிதாக தன்மைகளை தெரிவிக்கின்றன. ஆனால் வழக்கு நடைபெறுகின்ற காலப்பகுதியில் வழக்கேட்டில் கோவையிடப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஆவணங் களை திருப்பி வழங்கும் அளவுக்கு அதிகாரம் மன்றுக்கு வழங்கப்பட வில்லை என மன்று கருதுகிறது.

எனவே 5ஆம், 6ஆம் எதிர்மனுதார்கள் சார்பில் தோன்றிய சட்டத்தரணியின் கோரிக்கையை மன்று நிராகரித்து கட்டளை வழங்கு கிறது"

பொதுமக்களது பாஷையில் சொன்னால் எமது சத்தியக்கூற்றில் என்ன பிழை என்று கூறாமலேயே, அது பிழையென்று நீதிபதி கூறுகிறார். அதேநேரம் வழக்கு தொடங்கிய பிறகு அடிப்படை ஆவணங்களை மாற்றக்கூடாது என்ற சட்டத்தை நிலைநாட்டுகிறார். அந்தக் கட்டளையில் அர்த்தமுண்டு கருத்தில் மாற்றம் இருந்தால். எழுத்துப் பிழை, முறை வித்தியாசம் இருந்தால் அது முதலிலேயே திருத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கட்டத்திலிருந்து அதில் அடிப்படை (Fundamental) மட்டத்தில் எழுத்துப் பிழைகள். டெக்னிக்கல் (Technical) பிழைகள் திருத்தப்பட வேண்டும். எப்பொழுது நீதிபதி அதிலிருக்கும் விடயத்தைப் பாவித்து நிர்வாகம் செய்தாரோ - அப்பொழுதே அது அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் ஆகின்றது. அதே பதவியில் இருந்து பிறகொருவர் அதை அந்த விஷயத்தில் தள்ளி வைக்க அவருக்கு உரிமை இல்லை. எமது சத்தியக்கூற்றை பாவித்ததன் மூலம் – நீதிபதி திரு. அரியநாயகம் அவர்கள் அதை அங்கீகரித்தார். அதை மீற மனுதாரர் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் போட்டிருக்க வேண்டும். உண்மையின் வழி அதுதான்.

அதேநேரம் அந்த மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மனுதாரர்களது ஆவணங்களைத் திருத்த நீதிபதி சந்தர்ப்பம் கொடுத்தாரா என்றும் பார்க்கவேண்டிய கடமை பிறகு வந்த நீதிபதிக்கு இருந்தது. அதுதான் ஜனநாயகத்தின் சமசந்தர்ப்ப / ஈக்வள் ஒப்பச்சுனிட்டி (Equal opportunity) கொள்கையின் சட்டம் / நியதி.

இவ்விஷயத்தில் 31.05.2011 அன்று நீதிபதி கூறியது,

"வடக்கு கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ்மொழியில் இயங்குவதால், அணைக்கப்படும் ஆவணங்கள் பிரதானமாக தமிழில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். தேவைப் படும் பட்சத்தில் தமிழ்மொழிக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பினும்கூட தமிழில் அணைக்கப்படுவதே சட்டத்தின் ஏற்பாடாகக் கொள்ளப்படுவதால் இந்த வழக்கில் அணைக்கப்பட்ட மனுவில் சொத்து விபரங்கள் இல்லாதிருப்பதாலும் மனுவிற்கு ஆதார மான சத்தியக்கூற்று தமிழில் இல்லாதிருப்பதாலும் இந்த வழக்கை முன்னெடுப்பதற்கு ஏற்ற கட்டளையை ஆக்குவது சாத்தியப்படாது என்று மன்று கருதுகின்றது. மேலும் ஆங்கில மொழியிலான சத்தியக்கூற்றை அவதானித்த நிலையில் சத்தியக்கூற்றை நிறைவேற்றியவரான மனுதார் கலட்டி வீதி, தென்மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவராகக் காணப் படுகின்றார். சத்தியக்கூற்றானது வட்டுக்கோட்டை தென்மேற்கைச் சேர்ந்த தம்பிராசா சிவலிங்கம் என்ற சமாதான நீதவானால் நிறைவேற்றப்பட் டுள்ளது. ஆனால் நிறைவேற்றப்பட்ட இடம் யாழ்ப்பாணம் என்று ஆங்கிலத் தில் இடப்பட்டுள்ளது. ஆகவே சத்தியக்கூற்று நிறைவேற்றியவரின் இருப்பிடம் தொடர்பில் சத்தியக்கூற்று, நிறைவேற்றப்பட்ட இடம் தொடர்பிலும் சத்தியக் கூற்றின் வலிதுடமை கேள்விக்குட்படுத்தக்கூடிய தாகக் காணப்படுகின்றது. இத்தகைய குறைபாடுகள் கொண்டு மனு, சத்தியக் கூற்றை உரிய முறையில் திருத்தி மன்றிட மன்று மனுதாரைப் பணிக்கின்றது"

எமது சத்தியக்கூற்றைக் காரணம் சொல்லாமல் தள்ளிவைத்த நீதிபதி மேற்பட்ட இந்த உரிமையை எமக்கும் சம அடிப்படையில் தர மறுத்து நீதி வழுவினார். ஜனநாயகத்தில் மேலதிக வாக்கு மூலம் (Majority

Vote) முடிவு எடுக்கப்படுகின்றது. விளைவால் உந்தப்படுபவர்களுக்கு ஜனநாயகம் ஏற்றவழி. முறையாக பின்பற்றினால் ஜனநாயகம் மூலம் மக்களது பங்களிப்பு மட்டத்தில் அரசாங்கம் சுயநிர்வாகம் நடக்கும். ஆனால் தனிமனித ஆட்சியை அத்துடன் இணைத்தால் ஒழுங்கீனம் தான் தலைதூக்கும்.

ஒரு விதத்தில் எல்.டி.டி.ஈ (LTTE) தலைவர் பிரபாகரன் அப்படியான ஒரு அமைப்பின் மூலம்தான் இயங்கினார். சிந்தனையால்கூட அதை அங்கீகரித்தவர்கள் ஜனநாயகத்தில் தாம் போட்ட பங்களிப்பை பலகீனப்படுத்து கின்றார்கள். அது உயர்ந்த மட்டத்தில் உண்மை வெளிப்படுத்த நடக்கும் பொழுது சமுதாயத்தை அவர்கள் உயர்த்துகின்றார்கள். இழந்த ஜனநாயக பங்களிப்பு ஒறுத்தலாகின்றது. அதை உறுதிப்படுத்துவது இழப்பிற்கு முன் இருந்த பலன்களைவிட இழந்த பின் இருக்கும் பலன்கள் குறைவாக இருப்பதே.

இந்து தெய்வமாகிய முருகன் அப்படித்தான், தான் போட்டியில் வென்றும் மாம்பழம் அண்ணராகிய பிள்ளையாருக்கு கொடுத்ததற்காக பெற்றாரிடமிருந்து வந்த பலன்களைத் துறந்து கோவணத்துடன் பழனிமலையில் ஆட்சி செய்தார். பிள்ளையார் பரம்பரை வழியென்றால் முருகன் நவீன ஜனநாயக வழி. பிள்ளையார் நம்பிக்கையால் இருந்த இடத்தைவிட்டு வெளிக்கிடாமல் பெற்றாரை வணங்கி வென்றார். முருகன் தானே உழைத்து தனது உலகத்தை சீரோ பேஸ் (Zero Base) இலிருந்து அதாவது பூஜ்யத்திலிருந்து உழைத்து வெற்றியைத் தாமே சூட்டினார். அதுதான் ஜனநாயகத்தின் வழி. எல்லாரும் தாமே கணிக்கக்கூடிய விளைவுகளைக் கொண்டு தமக்குத் தேவையான அளவிற்கு தன்னாட்சி செலுத்துவதே ஜனநாயகம். ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் ஜனநாயகம் மூலமும் தனி அரசன் ஆட்சி மூலமும் அதாவது ஆட்டோக்ரஸி (Autocracy) மூலமும் முடிவு எடுப்பது ஒழுங்கீனத்தில்தான் முடியும்.

நீதிபதி அரியநாயகம் தனியாட்சி வழியில் நடந்து கட்டளையிட்டார். இளைய நீதிபதி கஜநிதிபாலன் வழக்கறிஞர்களுடன் சிநேகிதர் மாதிரி நடந்தார். ஆகவே நீதிமன்றில் யாருக்கு அவர் முக்கியத்துவம் கூடக் காட்டினாரோ அந்த வழக்கறிஞர் நீதிபதியானார். அது எமது எதிராளியின்

வழக்கறிஞர் திரு. யோகேந்திரா. இந்த அட்டிட்யூட்ஸ் (Attitudes) மாதிரிகள் இயற்கையான சூழ்நிலையில் வெளிப்படுத்தப்படும். ஆகவேதான் யோகேந்திரா அந்த மல்லாகம் கோட்டில் நீதிபதியாக்கப்பட்டார். நீதிபதி திரு. அரியநாயகம் பொது நிர்வாகத்தில் எடுத்த முடிவுகளை இளைய நீதிபதி கஜநிதிபாலன் தள்ளிவைத்தார். அதன்மூலம் மூத்த நீதிபதியின் ஆசீர்வாதத்தை இழந்தார். அதேநேரம் ஜனநாயக அமைப்புப்படி அவர் எமது பக்கத்தை சுயமாக வெளிப்படுத்தல் செய்வதைத் தடுத்தார். ஒவ்வொரு படியிலும் முடிவைக் கூறினார். நீதிமன்றத்தில் நான் சாட்சி கூறி பொதுப் பகுதியில் வழக்கறிஞர்களுக்கு சமமாக என்னைப் பற்றிய கூற்று ‘‘நான் விலைமாது இல்லை” என்றதே. அதாவது உங்கள் பார்வைக்கு நான் காசிற்காக கலியாணம் முடித்தனான் என்று வெளிப்படுத்தினீர்கள். எனது பார்வைப்படி நான் உண்மையான மனைவி என்பதே அதன் அர்த்தம். அப்படிக் கேட்டுவிட்டு நான் நீதிமன்றின் பின்பக்கம் நோக்கி நடந்தேன். அப்பொழுது எமது முதல் வழக்கறிஞர் திரு. நடராஜா என்னை நீதிபதி அழைப்பதாகக் கூறியது காதில் விழுந்தது. திரும்பிப் போய் சாட்சிக் கூண்டடியில் சப்பாத்தைக் கழற்றிவிட்டு நின்றேன். ஆனால் சாட்சிக் கூண்டில் ஏறவில்லை. ஒருத்தரும் ஏறச்சொல்லி என்னைக் கேட்கவுமில்லை. அப்ப நீதிபதி என்னைப் பார்த்து கடுமையாக எனக்குப் பட்ட குரலில் கேட்டார் “இது என்ன இடம்”, என்று. எனக்கு ஏதோ பிழைவிட்டேன் அவரைப் பொறுத்தமட்டில் என்று விளங்கியது. என்னவென்று மூளைக்குத் தெரியவில்லை. சாட்சிக் கூண்டிலிருந்தபோது “ஓம்” என்று சொல்லாமல் “ஆமாம்” என்று சொன்னது நினைவில் வந்தது. எனது அம்மா இந்தியாத் தமிழ் கதைப்பா. அவ பேமா (Burma) வில் பிறந்து வளர்ந்தவ. கலியாணம் முடித்து இலங்கை வந்தா. அத்துடன் அன்று காலை தியானத்தில் சுவாமி சத்திய சாய்பாபா காட்சி தந்தார். அவர் இந்தியர் என்றபடியாலும் அப்படி உச்சரித்திருக்கலாம் என்று பலதும் மூளைக்கு வந்தன. அப்ப நீதிபதி சொன்னார் “இது நீதிமன்றம் சந்தில கதைக்கிற மாதிரி கதைக்கக்கூடாது எண்டு தெரியாதா” படிச்ச எண்டு சொல்லி நிர்வாக அதிகாரம் கேட்டிட்டு இப்ப அதுக்குரிய தகுதி இல்ல எண்டு காட்டியாச்சு. சொல்லுல சொல்றத்தவிட நடத்தேல்ல காட்டுறது முக்கியம்.” நான் உள்ளுக்குள் சுருண்டேன். வெளியில் ஒன்றும் கூறாமல் நின்றேன். அருகே இருந்த தெரியாத வயதுக்கு

மூத்தவராகத் தெரிந்த ஒரு வழக்கறிஞர் தனது வாயில் கையை வைத்து மௌனமாக இருக்குமாறு வழிகாட்டினார். அது அவர்களதும் நீதிமன்றம்- அங்கும் நீதிபதி அவசரப்பட்டு நீதி வழுவினார். நான் சாட்சிக் கூண்டில் நின்று சொல்வதையோ அல்லது நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கும் தரவுகளை வைத்தோ மட்டுமே அவர் என்னைவிட பதவியில் உயர்ந்தவர். நான் அந்த வரையறுப்பிற்கு வெளியே நிற்கும் போது என்னைக் கண்டிக்கும் உரிமை அவருக்கில்லை. அங்கு நான் பொதுமகள் - பப்ளிக் (Public) இல் ஒருவ. என்னால் கண்டிக்கப்பட்டவர்கள் எதிர்க்கவில்லை. நான் அதில் கண்ணகியாகினேன். நீதிபதிக்கு நொந்ததால் உண்மை வேலை செய்திருக்கின்றது என்பது தெரிந்தது. அதாவது அவர்தான் நீதிபதியாக நிர்வாகம் பண்ணாமல் மக்களில் ஒருவராக நடந்தார். அதுதான் அவருக்கு சீதனத்தை டொனேஷன் என்று ஏற்றுக் கொள்கிற பார்வை இருந்தது. அந்த இடத்தில் பெரும்பான்மை மக்களுக்கு வித்தியாசம் தெரியாது. நீதிபதியின் உயர்பார்வைக்கு அது சீதனம் என்பது தெரிந்திருக்கும். மக்களில் மக்களாக அதாவது எனக்குக் கூறினாரே - சந்தியில கதைக்கின்றமாதிரி என்று — அப்படியானவர்களுக்கு அது பண்டமாற்று. நாம் எந்தப் பதவியை எடுக்கிறோமோ அந்தப் பதவிப்படிதான் எமது இயற்கையான பேச்சு இருக்கும்.

இதனால்தான் மேலதிக வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டதும் அந்த மட்டத்திலிருந்து இன்னும் கீழே இறங்காமலிருக்க இரண்டாவதாக வந்த கட்சி எதிர்க்கட்சியாக சம அந்தஸ்துக்கு உயர்த்தப்படுகின்றது. உண்மையில் இளையவர்கள் அப்படி இருக்கும்போது, அவர்கள் தமது புத்தியைப் பாவித்து அந்த இடைவெளியை நிரப்பி சம அந்தஸ்தைப் பெற்றால் உண்மை சக்திகள் அதற்குரிய அங்கீகாரத்தை வெளிப்படுத்தும். 1977ஆம் ஆண்டிலும் 2015ஆம் ஆண்டிலும் அப்படித்தான் தமிழ் கூட்டணி இலங்கை தேசிய பாராளுமன்றத்தில் சம அந்தஸ்தைப் பெற்றது. பெரும்பான்மை சிங்கள மக்களும் சிறுபான்மையரும் மனம் ஒத்து வாழ்ந்திருக்காவிட்டால் இது நடந்திருக்காது.

# 8. வெளி உருவமும் உள் சக்தியும்

பெரும்பான்மை வெளி அமைப்பிற்கு.
உண்மைதான் கருவிலிருந்து இயக்கும் சக்தி -
அது ஒரே ஒருவராக இருந்தாலும் கூட

ஜனநாயக முறையில் டீம் (Team) அமைப்பு வரும்போது அதில் ஒவ்வொருவரும் வேறு கோணங்களில் பார்ப்பதை உண்மை என்று எடுத்து அங்கீகரிக்கப்படும். அதையே ப்ரொஜக்ட் (Project) அடிப்படை என்று கொள்வோம். அதில் தொடக்கமும், முடிவும் தெளிவாக சுதந்திரமாகத் தெரியும். அந்த அமைப்பின் ஒவ்வொரு அங்கமும் தனது விளைவை சுதந்திரமாகக் கணித்து வெளிப்படுத்தும். அதற்கு ஒருவரை மற்றவர் நிர்வாகம் பண்ணக்கூடாது. விளைவுகளை ஒன்று கூட்டினால் அதன் மதிப்பைத் தானாக யாரும் கணித்துக் கொள்ளலாம்.

அப்படியான விளைவுகளை ஒப்ஜெக்டிவ் (Objective) ஆகப் பார்க்கலாம். அதாவது இன்னொருத்தரது அபிப்பிராயம் இல்லாமல், நமாச்சு விளைவாச்சு. இது 50% க்கு மேலாக இருக்கும் ஒரு ஸிஸ்டம் (System) / விதிமுறை ஜனநாயக முறை என்று தகுதி பெறுகின்றது. அப்படியில்லாமல் 50%க்கு குறைவாக சுதந்திர வெளிப்பாடுகள் இருந்தால் அந்த வழிமுறைகள் ஜனநாயகத்தின் அங்கீகாரம் இல்லாதவை.

ஒரே இடத்தில் ஒரே காலகட்டத்தில் பொதுவழிமுறைகள் 50%க்கு மேலானவர்கள் கடைப்பிடித்தால் அவர்கள் மனம் ஒன்றுபட்டு வாழ்வார்கள். அது ஒரு குடும்பமாக இருக்கலாம். சமுதாயமாக இருக்கலாம். தேசமாக இருக்கலாம். இல்லாவிட்டால் அப்படி இருக்குமாறு பிரிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒழுங்கீனம்தான் தலைதூக்கும்.

துணைவியில் எனக்கு பெரும்பான்மை கலாசாரத்துடன் இணைய முடியவில்லை. இணைந்திருந்தால் நான் யாழ்ப்பாணக் கலாசாரத்தில்

இருந்து விடுபட்டிருப்பேன். அது நான் யாழ்ப்பாணத்திற்கு செய்யும் துரோகமாகும். எந்த சமுதாயம் எமக்கு ஆதரவு தந்ததோ, ஊக்குவித்ததோ அந்த சமுதாயத்தில் எமது வாரிசுகளை உருவாக்குவது எமது அடிப்படை கடமை. துணைவியிலிருக்கும் எமது கோயில் வளவு சட்ட பூர்வமான அமைப்புடன் இயங்குவது தான் நான் துணைவிக்குச் செய்யக்கூடிய உயர்ந்த சேவை. இன்றும் எமது மகள் உமா கூறினா தமக்கு - 3 பிள்ளைகளுக்கும் நாம் கொடுத்த பெரிய சொத்து படிப்பும் அதனால் எப்படி சுதந்திரமாக வாழ்வது என்ற வழிமுறையும். அதைத்தான் பரமும் தனது தகப்பனைப் பற்றியும் கருதியதால்தான் அவருக்கு இந்த படிப்பில் ஈடுபட்ட பிள்ளைகள் அமைந்தார்கள். குடும்பத்தில் 50% மானோருக்கென்றாலும் ஒரே கலாசாரத்தில் பங்களிப்பில்லாவிட்டால் சுதந்திரம் எடுக்கும் அந்தக் குடும்பம் பிரிந்தே தீரும். அது மேல்மட்டத்தில் பிரிந்தால் ஒருவரிடமிருந்து மற்றவர் இடைவெளி விட்டு நிற்கவேண்டும். நிற்கும் – சம அந்தஸ்த்துடன். இல்லாவிட்டால் குழப்பம்தான். மேல்மட்டத்தில் இருப்பதற்கு பலன்களை ஒறுத்திருக்க வேண்டும். அல்லது மேலிருப்பவருக்கு மனமுவந்து மரியாதை செலுத்தி இருக்கவேண்டும். பரத்தின் மருமக்கள் வசதிகள் வந்ததும் சுதந்திரம் என்று கட்டின்மையை தழுவினார்கள். அது இயக்கம் காட்டிக் கொடுத்த வழி.

மல்லாகம் நீதிமன்றில் சட்டத்தின் மூலம் அதிகாரம் செய்தவர்கள் சட்டத்தை உண்மையாக தத்தம் பதவிகள் மூலம் கடைப்பிடித்திருந்தால் கட்டளைகளில் ஒழுங்கீனம் இருந்திருக்காது.

மனுதார் நிர்வாகம் தேவையில்லை மரபுரிமை சான்றிதழ் மட்டுமே வேண்டும் என்றார்கள். அவர்களது பக்க வழக்கறிஞர் எமது வீட்டிற்கு டெலிவோன் பண்ணியபொழுது பரம் வேலையிலிருந்தார். என்னிடம் வழக்கறிஞர் எனது கணவருக்கும் ஒரு சிறு பங்குண்டு என்றார். சமபங்கு என்று சொல்லவில்லை. பரம் வேலை முடிந்து வீட்டிற்கு வந்ததும் சொன்ன பொழுது சொன்னார் “தேசவழமைப்படிதான் அது பங்கிடப்படவேண்டும்” என்று. பரத்திற்கு மேலெழுந்தவாரியாகத் தான் தேசவழமையைப் பற்றித் தெரியும். எனக்கும் அறிவுமூலம் அப்படித்தான். அப்ப எங்கிருந்து அப்படி வந்தது. அதுதான் உண்மை. அது எம்முள் இருந்து நாம் யோசிக்கா

விட்டாலும் தன்னை சேர்த்துக் கொள்ளும் - அதை நாம் கூடிய சக்தியால் புதைத்தால் ஒழிய. பரம் தகப்பனின், யோகநாதனின், வழிமுறையில் சகோதரிமார்களுக்கு உதவி செய்தார். மூத்த சகோதரன் தர்மலிங்கத்திற்கும் காசு உதவி செய்தார். அதற்குப் பிறகு அவர்கள் அமைப்பில் பரத்திற்கு சமமே ஒழிய மூப்பில்லை. பணத்தை உண்மையான தேவைக்கு மேலால் பெற்றவர்கள் பரத்திற்கு இளையவரானார்கள். அவர்கள் நன்றியைக் காட்டித்தான் அந்த உறவை முழுமைப்படுத்த முடியும். மூன்று சகோதரங்களும் அப்படி செய்யவில்லை. ஆனால் தேசவழமையில் நாம் போட்ட உண்மையான பங்களிப்பு உயிரெடுத்து வந்து தன்னை வெளிப்படுத்தியது. ஆகவேதான் தேசவழமைப்படி என்ற கட்டளை வந்தது. நானும் திரு. யோகேந்திராவுக்கு வோனில் அதை அறிவித்தேன். அவரும் சரியென்றார். இது நடந்தது ஏப்ரில் (April) 2011 இல். 27.05.2011 அன்று சமர்ப்பித்த மனுவில் தேச வழமைப்படி என்ற கூற்று இருக்கவில்லை. பின்வரும் கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டன.

“4. மனுதாரின் அறிவின்படி மரணித்தவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வங்கிகளில் உள்ள கணக்குகளில் பணத்தை தன் வரவில் வைத்துள்ளார்.

5. அட்டவணையில் குறிப்பிட்ட மரணித்தவரின் சொத்தை செலவு களுக்கும் பொறுப்புக்களுக்கும் நீங்கலாக பின்வரும் பங்குகளாக மரபுரிமை யானவர்களுக்குப் பிரிக்கப்பட வேண்டும்.

சுப்பிரமணியம் தர்மலிங்கம் (சகோதரன்)

- 1ம் எதிர்வாதி – $\frac{1}{4}$ பங்கு

சரஸ்வதி சபாநாதன் (செல்வி சுப்பிரமணியம்)

- 2ம் எதிர்வாதி – $\frac{1}{4}$ பங்கு

சக்திதேவி மகாதேவன் (செல்வி சுப்பிரமணியம்) – மேற்கூறப்பட்ட மனுதார் - $\frac{1}{4}$ பங்கு.

சுப்பிரமணியம் பரமசிவம் (சகோதரன்)

- 3ம் எதிர்வாதி – $\frac{1}{4}$ பங்கு

6. மனுதார் கனம் மன்றை மரணித்தவரின் சகோதரியும் அவரின் சொத்துக்கு ஒரு மரபுரிமையாளர் என்ற வகையிலும் மரபுரிமை சான்றிதழ் களை ஒவ்வொரு மேற்கூறிய மரபுரிமையாளர்களுக்கும் வழங்குமாறு விண்ணப்பிக்கின்றார்.

7. மனுதாரின் விண்ணப்பத்தை பிறர் எதிர்ப்பதற்கு காரணங்கள் ஏதும் இல்லை என விளக்குகின்றார்.

ஆகையினால் மனுதார், கனம் மன்றை பிரார்த்திப்பது,

அ) பத்திரிகைகளின் பிரசுரிக்க வேண்டிய அறிவித்தல்களையும்,

ஆ) மரபுரிமைச் சான்றிதழ்களை மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மரபுரிமை யாளருக்கும் வழங்கும் படியும்

இ) வழக்குச் செலவுகளும்

ஈ) மன்றுக்கு நீதியாகப்படும் பிற நிவாரணங்களுக்கும் கனம் மன்றை பிரார்த்திக்கின்றார்."

அந்த மனுவில் தேசவழமையைப் பற்றியோ அதன் அடிப்படையைப் பற்றியோ ஒன்றும் இல்லை.

அதைவிட பாரதூரமான பிழை/ முரண்பாடு 5ஆம் பந்தியில் குறிப் பிடப்பட்ட "செலவுகளுக்கும் பொறுப்புக்களுக்கும் நீங்கலாக" என்ற கூற்று. கொள்கை மட்டத்தில் யோசித்தால் நிர்வாகம் வேண்டாம் என்று கூறும் மனுதொர்தான் "செலவுகளுக்கும் பொறுப்புக்களுக்கும்" பொறுப்பு. அவர் மற்றைய பங்காளிகளுடன் தனிப்பட்ட முறையில் அதைப் பகிரலாம். எப்பொழுது அது மன்றின் முன்வைக்கப்பட்டதோ அது மன்றால் சட்டப்படி கணிக்கப்படுகின்றது. ஆகவே "நிர்வாகம் வேண்டாம்" என்ற கோரிக்கை யுடன் அது முரண்படுகின்றது. எமது வழக்கறிஞர்களுக்குச் சொன்னோம். ஆனால் அதற்கு அவர்கள் ஒருவருமே, முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அந்த அடிப்படைப் பிரச்சினையை நீதிபதிகள்கூட (திரு. இளஞ்செழியன் உட்பட) கருத்தில் கொள்ளவில்லை. அடுத்த கட்டத்தில் இதை எப்படி செயற்படுத்த முடியும் என்று கேள்வி எழுகின்றது. எந்த வங்கியிலிருந்து "செலவுகளையும் பொறுப்புக்களையும் கழித்து எடுக்கலாம்? அப்படிக்

கழிக்க வங்கிகளுக்கு சட்டப்படி உரிமை இல்லை. கழித்தால் அவர்கள் நிர்வாகியாகின்றார்கள். உண்மையான நிர்வாகியை நீதிமன்றத்தில் அவமதித்தார்கள். அது விலத்தப்பட்டதும் இந்த கோளாருதான் மிஞ்சி யுள்ளது. அதாவது மேல்மட்ட நாகரிகம் அங்கு மறைக்கப்பட்டு மறக்கப் பட்டது.

ஒவ்வொரு அமைப்பிலும் வெளியே நாம் காட்டும் அமைப்பை விட உண்மையான அமைப்பு உருவாகிறது. அதனுடன் ஒத்துப்போனால் உள் அமைதி நிலவும். முரணாக நடந்தால் அது குழப்பத்தைக் கொடுக்கும்.

நான் யாழ்ப்பாண, இலங்கை, ஒஸ்ரேலியா பொது நிறுவனங்களில் நல்ல பதவி பெற்று உயர்ந்திருந்ததற்கு அத்தாட்டிசியை எனது பாடசாலையும் வேலைஸ்தலங்களும் தந்தன. அதேபோல வட்டுக்கோட்டையில் இந்தக் குடும்பத்தில் பரம்தான் பொதுசபையில் உயர் பதவி எடுத்தார். அவர் ஜவ்னா கொலிஜ் (Jaffna College)இல் பெஸ்ட் ஸையன்ஸ் ஸ்டுடன்ட் (Best Science Student) என்ற பரிசை 1968ஆம் ஆண்டு பெற்று தகப்பனை மகிழ்வித்து, பெருமைப்படுத்தினார். மேலும் எம்மூலம் இரு சகோதரிகளது பிள்ளைகளும் ஒஸ்ரேலியா வந்தனர். அவர்களது தகுதியால் அல்ல. அப்படியிருக்க சக்திதேவி எப்படி நிர்வாகியாக முடியும்?

இந்தக் கேள்வி பரத்தின் சொந்தக்காரர் ஒருவரும் கேட்கவில்லை. அதிமுக்கியமாக தான்தான் யோகநாதனை பராமரித்தவ என்று சாட்சி சொன்ன சரஸ்வதி அந்த பதவியை ஏன் சக்திதேவியிடம் விட்டவ என்ற கேள்வி நீதிபதிக்கு எழுந்திருக்க வேண்டும். சக்திதேவி, தான் யோக நாதனை பராமரித்ததாக ஓரிடத்திலும் கூறவில்லை. ஆகவே குடும்ப அமைப்பில் ஏன் சரஸ்வதியை பெற்றார் ஸ்தானத்தில் வைத்து மனுதாரராகப் போடவில்லை?

குடும்பத்திற்குள் பதவியை கணிக்கும் அடிப்படையும் நீதிமன்றம் கணிக்கும் அடிப்படையும் வித்தியாசப்பட இடமுண்டு. குடும்பத்திற்குள் நீதி குடும்பத்தின் பொது ஒழுங்குப்படி வழங்கப்பட வேண்டும். நீதிமன்றத்தில் நீதிமன்றத்தின் பொது ஒழுங்குப்படி நீதி வழங்கப்பட வேண்டும். இரண்டும் சில குடும்பங்களில் மட்டுமே ஒன்றாக இருக்கும்.

“நிர்வாகம் வேண்டாம்” என்றதுமே, ஏன் வேண்டாம் என்ற கேள்வி எழுந்திருக்க வேண்டும். எழுந்திருக்கும் ஒழுங்கான நீதிமன்றத்தில்.

சக்திதேவி வட்டுக்கோட்டையில் வசித்தவ. ஆகவே நேரடியாக நீதிமன்றிற்கு வருவது வசதி என்று யோசித்திருக்கலாம். ஆனால் நிர்வாகம் தேவையில்லை என்றால் மரபுரிமைப் பங்கு மாத்திரம் நிர்ணயிக்க வென்றால் அது வழக்கறிஞர் சட்டமூலம் வாதாடிப் பெறவேண்டும். ஒரு சாட்சியும் தேவையில்லை. மரபுரிமையாளர்களா இல்லையா என்று கோட் தீர்மானிக்க சொல்வதைவிட நீதிமன்றத்தின் விதிமுறைகள்படி மனுதாரர் கூறுவதற்கு சம்மதிக்கிறவர்கள் தமது சம்மதத்தை தெரிவித்து அதை மனுதார் மனுவுடன் அணைத்திருக்க வேண்டும். அப்படி செய்யாத சரஸ்வதிக்கு மல்லாகம் நீதிமன்றம் மரியாதை பண்ணியது. முறையாக எதிர்த்த எம்மை குறைத்துக் காட்டினார் நீதிபதி. நிர்வாகம் வேண்டாம் என்றவர்கள் தாம் பராமரித்ததை சொல்ல வேண்டிய காரணம் என்ன? அதுதான் தர்மத்தின் அற்புதம். சக்திதேவியின் அமைப்பிற்கு ஒப்புதல் கொடுத்த சரஸ்வதி, அதன்மூலம் சக்திதேவி தன்னைவிட சகோதரர்களை – முக்கியமாக யோகநாதனை பராமரித்தா என்று அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தினா. அதற்குப் பிறகு சாட்சி சொன்னது தான்தான் பராமரித்தா என்று. சூரபத்மன் வெவ்வேறு உருவங்களில் முருகனைப் பயமுறுத்தப் பார்த்த மாதிரி. நீதிபதியும் அந்தப் பக்கம் சேர்ந்தார். பெட்டைக் கோழி கூவி விடியாதென்று சொல்வது இதற்காகத் தான். கூவுவது சாவலின் இயற்கைத் தொழில்.

ஆணுக்கு வெளி வேலையும் – முக்கியமாக உழைத்து காசு கொண்டு வரவேண்டிய வேலை – பெண்ணுக்கு வீட்டுக்குள் வேலை என்றால் ஒரு பகுதியினர் மற்ற பகுதியினரிடமிருந்து தள்ளி நிற்க வேண்டும். தகப்பன் இறந்தபிறகு பொது பராமரிப்பை ஏற்றுக் கொண்டவர்கள்தான் இந்தக் குடும்பத்தினர் சாவல்கள். அது உருவத்தில் பேட்டுக் கோழிபோலத் தெரிந்தாலும் அது குணத்தால், தொழிலால் சாவலே. சரஸ்வதியோ, சக்திதேவியோ அப்படியல்ல. இருவரும் பேட்டுக் கோழிகளே. அவர்களது மகன்மாரைக் கூட தம்பியின் பராமரிப்பில் ஒஸ்ரேலியா அனுப்பினார்கள். அவர்கள் கூவி எப்படி அந்தக் குடும்பம் விடியும்? சரஸ்வதி சட்டத்தின்

வரையறுப்பிற்குள் வரவில்லை சம்மதம் தெரிவிக்க. ஆனால் நாங்கள் சட்டத்தின் வரையறுப்பிற்குள் நின்று எதிர்த்தோம். எமது எதிர்ப்பை தள்ளிய நீதிபதிக்கும் நீதிமன்றத்திற்கும் அதன்பிறகு உண்மை எதற்கு? — அதை உறுதிப்படுத்த சாட்சி எதற்கு? எதிர்ப்பை தள்ளி வைத்தாலும் எதிர்ப்பு இருந்த உண்மையை தள்ளி வைக்க முடியவில்லையே?

ஆகவே சரஸ்வதி எதிர்ப்பில்லாத ஒரு மனுவுக்கு சாதகமாக சாட்சி சொல்ல வந்தா. கூறியதில் சில முக்கிய கூற்றுக்கள்.

“மரணித்த சுப்பிரமணியம் யோகநாதன் கடைசியாக நைஜீரியாவில் வேலை செய்தார். நைஜீரியாவில் வேலை செய்யும் பொழுது அவர் வேலைக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொண்டார். அந்த சம்பளம் அனைத்தும் பார்க்கிலேஸ் பாங்கில் போடப்பட்டது. பார்க்கிலேஸ் பாங்கில் சுப்பிரமணியம் யோகநாதன் அவருடைய கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று ஒரு கடிதமூலம் கேட்டேன். அந்தக் கடிதத்திற்கு மறுமொழி வந்தது. அந்தக் கடிதத்தில் அவர்கள் எவ்வளவு பணம் இருக்கிறதென்று சுட்டிக்காட்டி இருந்தார்கள். அந்தக் கடிதங்களை நான் முறையே குறிப்பிட்டு இந்த விண்ணப்பத்ததில் அணைத்து இருக்கிறேன். பார்க்கிலேஸ் பாங்க் எழுதிய கடிதத்தை பீ என்று குறிப்பிட்டு இந்த தங்கச்சி செய்த விண்ணப்பத்தில் அணைத்து இருக்கிறேன்”

அங்கு தான் ஒழிக்கப்பட்ட உண்மை எட்டிப் பார்த்தது:

i. பாக்லேஸ் பாங்கிற்கு சரஸ்வதி எழுதினா, ஆனால் மல்லாகம் கோட்டிற்கு அவ முன்னுக்கு வராமல் மறைந்திருந்து வேலை செய்தா. காரணம் என்ன? எமக்கு முன்னால் வர பயமா? அல்லது மல்லாகம் நீதிமன்றம் அவவின் கணிப்புப்படி பார்க்லேஸ் பாங்கைவிட தரம் குறைந்ததா?

ii. அம்மாவாக இருந்தால்கூட அந்தக் குடும்ப அமைப்பில் வெளி அதிகாரிகளுடன் அவ தொடர்பு கொண்டது ஒரு பொய்யான வெளிப் படுத்தல் அல்லவா? அம்மா இறந்த பிறகு ஒரு பெண்பிள்ளை அந்த சூழ்நிலையில் அம்மாவாகினால், அப்பா இறந்த பிறகு ஒரு ஆண்மகன் தானே அப்பாவின் இடத்தை எடுக்க உரிமை உண்டு? அப்படியானால்

தர்மலிங்கம் அல்லவா பார்க்லேஸ் பாங்கிற்கு எழுதியிருக்க வேண்டும்? அவர் ஆண்பிள்ளை என்றதால் மாத்திரம் இல்லை, அவர் உயிருடனிருக்கும் எல்லா சகோதரர்களுக்கும் மூத்தவர். வெள்ளைக்காரரை குறைசொல்லியே அந்தக் குணாதிசயங்களை தம்முள் வளர்த்துக் கொண்ட சிங்கள தேசியவாதிகள் மாதிரியும், சிங்களவரை குறை சொல்லியே அந்தக் குணங்களை தம்முள் வளர்த்த, வளர்த்துக் கொண்டிருக்கும் தமிழ்த்தலைவர்களும் (தற்போதைய வடமாகாண முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் முதற்கொண்டு) – அப்படியே. என்னைக் குறைகூறியே சரஸ்வதி அந்தக் குறைகளை தன்னுள் வளர்த்துக் கொண்டா. சட்டத்திற்கு முன்னால் பொது நிர்வாகத்தில் முறை தவறியவ அவ. நானில்லை.

பாங்கில் உள்ள பணம் யோகநாதன் உழைத்து எடுத்ததென்றால் அவருக்கு தகப்பன் எழுதிய சொத்திற்கு என்ன நடந்தது? அந்தக் காணியில் தற்போது ஜவ்னா கொலிஜ் (Jaffna College) டெக்னிக்கல் இன்ஸிடிடூட் (Technical Institute) அமைந்துள்ளது. அதற்கு அவர்கள் யோகநாதனுக்கு காசு கொடுத்து விலைக்கு வாங்கினார்கள். அந்தக் காசைப் பற்றி ஏன் கதைக்கவில்லை? அதன் பெறுமதி பதவியால் பார்க்லேஸ் பாங்கில் இருந்த தேடிய தேட்டத்தை விட உயர்ந்தது. அது முதுசம். அது மூத்தவரின் பிள்ளைகளில் ஒருவரை யோகநாதன் பராமரிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் கொடுக்கப்பட்டது என்று பரம் கூறினார். அது எனக்குச் சரியாகப் பட்டது. அப்படி அல்லாவிட்டால் எல்லாப் பிள்ளைகளுக்கும் சொத்தைச் சரிசமமாகப் பிரிக்கவேண்டியது பெற்றாரின் கடமை. தாயாகப் பொறுப்பெடுக்கப் போகும் பெண்ணின் சான்றிதழ்தான் சீதனம். டொனேஷன் என்று கூறுபவர்கள் அந்தப் பெண்ணின் தாய்மைத் தகுதியைத்தான் குறைக்கிறார்கள். அந்த தாழ்வை சரஸ்வதி பின்வருமாறு வெளிப்படுத்தினா: 05.09.2013

கே : இறந்தவர் எங்கே தொழில் செய்தார்?

ப : சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் இரசாயனவியலாளராக இருந்தார்.

கே : எப்பொழுது இருந்து வேலை செய்தார்?

ப : 67ஆம் ஆண்டில் இருந்து வேலை செய்தார்.

கே : எப்பொழுது உங்களின் தகப்பன் இறந்தார்?

ப : 72ஆம் ஆண்டு

கே : உங்களின் தகப்பன் இறக்கும்வரை தகப்பனுடன் தான் தம்பி இருந்தாரா?

ப : ஆம்

கே : உங்களுக்கு எத்தனையாம் ஆண்டு திருமணம் நடந்தது?

ப : 68ஆம் ஆண்டு திருமணம் முடித்து வெளியில் போய்விட்டு திரும்ப வந்து தகப்பனாருடன் இருந்தேன்.

கே : யோகநாதன் திருமணம் செய்தவரா?

ப : இல்லை

கே : உங்களின் தம்பி இரசாயனவியலாளராக வேலை செய்தார். தகப்பனுடன் இருக்கும் காலத்தில் அவரின் பணம் எல்லாம் தகப்பனிடம் கொடுத்தார் என்றால் சரியா?

ப : ஆம். செலவுக்கு எடுத்து விட்டு மிகுதியைக் கொடுப்பார்.

.............................................................

இந்தக் கூற்றின் மூலம் யோகநாதன் தனது சம்பளத்தை அப்பவே பொதுச் சொத்தாக சேமித்து தகப்பனிடம் கொடுத்தார் என்றது உறுதிப்படுத்தப் பட்டது. கலியாணம் முடிக்காத பிள்ளைகளின் வழமை அப்படித்தான் இருந்தது. ஆகவே தகப்பன் இறந்த பிறகு அக்காமாருடன் இருந்தும் யோகநாதன் அவர்களிடம் கொடுக்கவில்லை. தானே சேமிப்பில் வைத் திருந்தார். ஆகவே அவர் ஒரு சகோதரங்களையும் நிர்வகிக்கச் சொல்லி நியமிக்கவில்லை என்பதே உண்மையான நிலைப்பாடு. அவர் சுயநிர்வாகத்தை மேற்கொண்டார் – சுதந்திர மனிதராக. அந்த வழிமுறை யில் தனது வாரிசு பரம் என்பதை நடமுறையிலும் பேச்சிலும் வெளிப்படுத் தினார் – முக்கியமாக தனது வேலைப் பிரச்சினைகளைப் பற்றி கதைத்தும் பரத்துடன் கூட்டணி சேர்ந்து தர்மலிங்கத்திற்கு வீடுகட்ட உதவியும், மருமக்கள் ஒஸ்ரேலியா எடுப்பிக்க ஆதரவு காட்டியும் இந்த அமைப்பை வெளிப்படுத்தினார்.

சரஸ்வதி தான் பின்னோக்கி சென்றதை பின்வருமாறு வெளிப்படுத்தினா.

கே : நீங்கள் எப்பொழுது திருமணம் செய்தீர்கள்?

ப : 68ஆம் ஆண்டு

கே : திருமணம் பேசிச் செய்ததா?

ப : ஆம்

கே : கணவர் என்ன தொழில் செய்தார்?

ப : நிலவளவையாளர்

கே : உங்கள் கணவர் உறவினரா?

ப : இல்லை

கே : சீதனம் கேட்டாரா?

ப : இல்லை. நாங்கள் மாற்றுத் திருமணம் செய்தது. அதனால் சீதனம் கேட்கவில்லை.

கே : நான் சொல்கின்றேன், உங்களின் திருமணம் பேசி, சீதனம் பேசித்தான் செய்தது.

ப : சீதனம் கொடுக்கவில்லை.

கே : உங்களின் தகப்பன் சீதனம் தரவில்லையா?

ப : எனக்கு முதலே நன்கொடையாக எழுதித் தந்துவிட்டார்.

..............................................................

முதலில் தான் திருப்பி பிறந்த வீட்டிற்கு வந்ததாக சரஸ்வதி கூறினா. பின்னர் நன்கொடைதான் தகப்பன் தனக்கு தந்தவர் என்றா. சீதனத்திற்குத் தான் பிறந்தக வாழ்க்கையை முழுமையாக்கும் சக்தி உண்டு. அதற்காகத் தான் தகப்பன் பெண் பிள்ளைகளுக்கு வீட்டுடன் சேர்ந்த வளவு கொடுத்தார். ஆண் பிள்ளைகளுக்கு பொறுப்பிற்காக விலை குறைந்த காணிகளை கொடுத்தார். பொறுப்பு கொடுக்காத பிள்ளைகளுக்கு ஆகலும் குறைந்த மதிப்புள்ள தோட்டக்காணியை எழுதினார். அதன் மூலம் தமது குடும்பத்தின்

அமைப்பின் வியூகத்தை வெளிப்படுத்தினார். தனக்கு தந்தது நன்கொடை என்றா சரஸ்வதி. எமது வழக்கறிஞர் கூறி எமக்குத் தெரியும் இலங்கைச் சட்டத்தில் இருக்கிறது – நன்கொடை பெற்றவர் நன்றியில்லாமல் நடந்தால் கொடுத்தவர் அந்த கொடையை திருப்பப் பெறலாம் என்று. சரஸ்வதி தகப்பன் தன்னை பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தியதென்றும் கூறுவா. இப்ப சீதனம் தரவில்லையென்றால் அவர் கடமை செய்யவில்லை என்று தானே அர்த்தம்? சீதனம் என்றால் அந்த கலாசாரத்தின் ஆசீர்வாதத்துடன் வரும். சரஸ்வதியை மணமுடிக்க முன்வந்த சபாநாதன் அவவைவிட கூடப்படித்தவர். ஆகவே முறைப்படி சீதனம் கொடுக்கப்பட்டது. அதே நேரம் மாற்றுச்சடங்கு செய்யப்பட்ட தர்மலிங்கத்திற்கு வீடு அமைக்க பரம்பரை வீட்டிற்கு அண்மையில் வளவு கொடுக்கப்பட்டது. அதில் வீடுகட்ட பரமும் யோகநாதனும் தம்பிகளாயிருந்தும் தங்கள் வளங்களை பகிர்ந்தனர். அவையெல்லாம் முதுசம்.

ஆனால் நீதிபதி கண்மூடித்தனமாக சமபங்கிற்கு கட்டளையிட்டார் – தர்மத்திலிருந்து வழுகி. அப்பீலுக்கு போனபொழுது ஒருமுறை நீதிபதி திரு. இளஞ்செழியன்கூட சொன்னார் சீதனமோ, டொனேஷனோ எல்லா சொத்தையும் ஒன்றாக்கி பின் சமமாகப் பகிரலாம் என்று. அதை மல்லாகம் நீதிமன்றத்தைச் சார்ந்த ஒருவரும் கூறியிருந்தார். எனக்கு அது தர்மமான அமைப்பாகப்பட்டது – குடும்பத்தில் உட்பிரிவுகள் வந்ததால். ஆனால் நீதிபதி திரு. இளஞ்செழியன் தனது தர்மக்கூற்றை தானே குலைத்தார் – “புங்குடுதீவில் ஒரு வீட்டக் குடுத்துப்போட்டு சீதனம் குடுத்ததாகச் சொல்லாமல்?” என்று சொல்லி. அதனால்தானோ அவருக்கும் தர்மப்படி தனது பதவி மூலம் மல்லாகம் கட்டளையை தள்ளிவைக்க முடியவில்லை. ஆனால் உண்மை எமது கூற்றை நிலைநாட்டியது — எப்படியென்றால் சொத்தை வெளிநாட்டுச் சொத்து, இலங்கைச் சொத்து என்று பிரித்து. அதன்படி நாம் – குடும்பம் இல்லை என்று தள்ளி வைக்கப்பட்ட நாம் – கடன் கொடுத்தவர்களாகவும், அதன் பலனை அனுபவித்தவர்கள், அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் கடனாளிகளாகவும் ஆக்கப்படுகிறோம். சரஸ்வதி மட்டுமல்ல சக்திதேவியும் எம்மை — முக்கியமாக என்னை தள்ளி வைத்தா.

இவர்களுக்குத் தெரியாத உண்மை என்னவென்றால் தாமே வெல்ல விரும்பி உண்மையை கக்கியது. அந்த உண்மை எந்த இடத்தில் அதற்கு உயர்பதவி கொடுக்கப்படுமோ அந்த இடத்திற்குப் போய் தன்னை போற்றிய வர்களுக்காக தன்னை வெளிப்படுத்தும். அப்படித்தான் 1976ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அதற்கு உரியவர்களது அமைப்பான இலங்கை பாராளுமன்றத்தில் தமிழ்கட்சிக்கு சம பதவி அந்த அமைப்பில் உருவாகியது. பின்னர் 2009 இல் உலகளவில் இலங்கையர் - சிங்களவர் உட்பட - ஜனநாயக அமைப்பில் போட்ட பங்களிப்பின்படி 2015இல் மீண்டும் அந்தப் பதவி தேசிய மட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது – தமிழ் கூட்டணி மூலம். ஆயுதம் தாங்கிய போராளிகள் அந்த பங்களிப்பை மதித்து தலைவணங்கியிருக்காவிட்டால், அவர்களது ஆட்சி தலையோங்கி நிற்கும் பொழுது உயர்ந்த, பரந்த அளவில் ஜனநாயகத்திற்காக போராடிய வர்கள் சக்தி அந்த இடத்தில் தலைதூக்காது. முதலாவது கட்டத்தில் - அதாவது ப்ரைமறி லெவல் (Primary Level) இல் இயங்குபவர்கள் தமது வட்டாரத்தை விட்டு வெளியே வந்து ஆயுதம் பாவிக்கும் பொழுது அவர்கள் பயங்கரவாதிகளாகிறார்கள். அதேபோல, அரசாங்க ஆயுத போராளிகள் விதிமுறைகளை மீறும்போது பயங்கரவாதிகளாகிறார்கள். அவர்களது வட்டாரம் அரசாங்க விதிமுறைகள். மேலதிகாரி சொன்னால் அது விதிமுறைக்கு அப்பாற்பட்டதென்றால் மேலதிகாரிதான் பயங்கரவாதி.

**உண்மையின் ஒரு பக்கத்தை ஒருவர் முறைப்படி நம்பிக்கையுடன் வெளிப்படுத்தினால் அதன் மறு பக்கமாக உண்மை நிச்சயம். அவருக்கோ அவரை நம்புகிறவர்களுக்கோ தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் தேவையான உருவத்தில் மலரும்.**

# 9. நீதிபதியின் சட்டம்

**சட்டம் ஒன்றென்றாலும் நீதிபதியின் வாயும்
எமது வயிறும் வேறு வேறு**

ஒரு நீதிமன்ற அமைப்பில் மனுதார்தான் வழக்கறிஞரது அதிகாரி. அதுவும் இந்த விஷயத்தில் "நிர்வாகம் தேவையில்லை" என்று கோரிய மனுதார் அதன்மூலம் உள்ளமைப்பின்படி அவரவர் தன்தன் பதவியை எடுத்தார்கள் என்று உறுதி மொழிகிறார். ஒரு முழுமை அடைந்த அமைப்பு அப்படித்தான் இயங்கும்.

சக்திதேவி மட்டுமே மே (May) மாதம் 2011இல் பதியப்பட்ட மனுவில் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். அந்த மனு தமிழில் இருந்தது. அதனுடன் அணைக்கப்பட்ட சத்தியக்கூற்று இங்லிஷ் (English) இல் இருந்தது. அதில் திரு. டி. சபாநாதன் (சரஸ்வரியின் புருஷன்) இற்கு யோகநாதன்கடனாளிஎன்று காட்டப்பட்டுள்ளார். அத்துடன்மகாதேவன்செத்த வீட்டுச் செலவுகளுக்கு கடன் கொடுத்ததால் அவரும் அதில் யோகநாதனை கடனாளி என்று காட்டியுள்ளார். அவர்கள் பக்க வழக்கறிஞருக்குக் கூட யோகநாதன் கடனாளி என்று அந்த சத்தியக்கூற்றில் கூறப்பட்டுள்ளது. அதை அடிப்படை பிழை என்று கூறலாம். இல்லாவிட்டால் ஏமாற்று வித்தை என்று கூறலாம். உண்மை என்ன செய்யும்? அவர்களது சத்தியக் கூற்றிலிருந்த உண்மைக்கு முன்னால் எமது சத்தியக் கூற்றிலிருந்த உண்மையை அவர்களது அளவுகோலைப் பாவித்து அளந்தது. அதன்படி யோகநாதனின் ஆசீர்வாதத்துடன், ஒத்துழைப்புடன் நாம் மற்ற சகோதரர் களுக்கு செய்தவை யோகநாதன் சொல்லி — தனக்காக செய்யச் சொல்லி நாம் செய்ததாகிறது. அது பொது வேலை. இது பொது சொத்து. பொது வேலைக்கு காசு கேட்பவருக்கு தர்மப்படி பொது சொத்தில் பங்கில்லை. அநேகமானோர் உண்மை தங்களுடன் வருவதையும் உண்மைக் குரியவர் தேடும்பொழுது அது தன்னை அவரது அமைப்பின் மூலம்

வெளிப்படுத்துகிறது என்பதையும் கவனிப்பதில்லை. எனக்கும் முன்னர் இது திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் எனது கஷ்டமான அனுபவங்கள் மூலம் இப்ப தெரியும். கஷ்டத்திலும் உண்மையை விடாதவர்களுக்கு உண்மை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். அதுதான் அமைதி, பேரின்பம், ஆத்ம திருப்தியின் ஊற்று.

அதன்படிதான் இந்த வழக்கில் நாம் எமக்குத் தேவையான நிறைவைப் பெற்றுக் கொண்டோம்.

அந்த வழியில் நீதிபதி திரு. க. அரியநாயகம் சட்ட நிர்வாகத்தின் பொது ஊடகமானார். அவர் 31.05.2011 அன்று கூறினார். “இன்றைய தினம் மனுதார் சார்பில் சட்டத்தரணி நியமனம், மனு,சத்தியக்கூற்று என்பவற்றை அணைத்து, இந்த வழக்கைக் கூப்பிடுமாறு கோரியதற்கு அமைய திறந்த மன்றில் கூப்பிட்டபோது அணைக்கப்பட்ட மனு தமிழிலும் ஆங்கிலத்திலும் காணப்படுகின்றது. ஆனால் மனு சட்டத்தின் ஏற்பாட்டிற்கு அமைய இறந்தவரின் சொத்துக்கள் தொடர்பான விபரத்தை உள்ளடக்கியதாகக் காணப்படவில்லை. அதேவேளை ஆங்கிலத்திலான மனு சொத்து விபரங்கள் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. மனுவிற்கு ஆதாரமான சத்தியக்கூற்று தமிழில் அணைக்கப்படவில்லை. ஆனால் ஆங்கிலத்திலான மனு தொடர்பில் சத்தியக்கூற்று ஒன்று அணைக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ்மொழியில் இயங்குவதால், அணைக்கப்படும் ஆவணங்கள் பிரதானமாக தமிழில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். தேவைப்படும் பட்சத்தில் தமிழ்மொழிக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பினும்கூட தமிழில் அணைக்கப்படுவதே சட்டத்தின் ஏற்பாடாகக் கொள்ளப்படுவதால் இந்த வழக்கில் அணைக்கப்பட்ட மனுவில் சொத்து விபரங்கள் இல்லாதிருப்பதாலும் இந்த வழக்கை முன்னெடுப்பதற்கு ஏற்ற கட்டளையை ஆக்குவது சாத்தியப்படாது என்று மன்று கருதுகின்றது”

..............................................................

கனம் நீதிபதி கூறிய நியாயம் - நிர்வாகப்படி சரியாக இருந்தது. அவருக்குத் தெரிந்ததோ தெரியாது சக்திதேவிக்கு அப்படியான கூற்றை

ஆங்கிலத்தில் எழுத இயற்கையாக வராது என்று. உண்மை அதுதான். அது எமக்குத் தெரியும். பொது நியதியை காட்டி அதன்மூலம் தனிப்பட்ட உண்மையை நிலைநாட்டினார் கனம் நீதிபதி. அதேநேரம் ஏன் தமிழ் மனுவில் சொத்து விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது. உண்மைப்படி அது எமக்கு மனுதார் தரவில்லை. பரத்தின் கஷ்டத்தைப் பார்த்து நான்தான் கூறினேன் வழக்கறிஞர் மூலம் என்ன செய்வது என்று. அதாவது இந்த விஷயத்தை சட்டத்தை மதித்து அதன் அமைப்பிற்கு கொண்டு வந்தது எனது சக்தி. நான் சட்டத்தை எப்பொழுதும் மதித்து நடந்ததால் உண்மையாக சட்டத்தையும் பொது கொள்கை களையும் மதிக்கும், மரியாதை பண்ணும் எவருடனும் எனக்கு மனது ஒத்துப்போகும். ஆகவே எனக்கு அந்த நீதிமன்றின் அமைப்பும் நீதிபதியின் முறைகளும் தெரியாவிட்டாலும் அடிப்படையில் அந்தக் கட்டளை எனது உண்மையின் பரிசு என்று எடுத்துக் கொள்கிறேன். அந்த உண்மை சாதாரண வட்டுக்கோட்டை பாஷையில் சொல்வதென்றால் (1) மனுதார் சொத்து விபரங்களை பொதுமக்களிடமிருந்து மறைத்தனர். (2) எம்மிடமும் மறைக்கும் நோக்கம் கொண்டனர். (3) சத்தியக்கூற்று வழக்கறிஞருடைய அறிவுக்கூற்று. (4) அதன்படி கழிவுகள் கழித்து சத்தியக் கூற்றின் பெயரில் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உண்மையின் விளைவுகள் 01.06.2011 அன்று மேலும் வெளிப்படுத்தப்பட்டன. நீதிபதியின் கட்டளை மூலம் :

............ விண்ணப்பம் செய்தவர் இறந்த சுப்பிரமணியம் யோகநாதனின் சகோதரியான சக்திதேவி மகாதேவன் என்று கூறப்படு கின்றது. ஏனைய எதிர்மனுதார்களாகக் குறிப்பிடப்பட்டவர்கள் இறந்தவரின் சகோதரர்கள் என்று மனு, சத்தியக்கூற்றின் மூலம் அறியமுடிகின்றது. மனுதார் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஒருவர். அவரது கணவர் தற்போது உயிருடன் இருக்கின்றார் என்றும் தற்போது நீதிமன்றில் இருக்கின்றார் என்றும் சட்டத்தரணி கூறுகின்றார். நீதிமன்றில் சட்ட நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் கணவரின் எழுத்து மூல சம்மதம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சட்டம் வலியுறுத்துகின்றது. இந்த வழக்கைப் பொறுத்த

வரையில் மனுதாரின் இறந்த சகோதரனின் மரணச் சொத்துக்கள் தொடர்பில் இறந்தவரின் ஏனைய சகோதரர்களையும் கட்சிக்காரர்களாகச் சேர்த்து தாக்கல் செய்யப்பட வழக்கில் மனுதார் கணவரின் சம்மதத்தைப் பெறாது கணவரை ஒரு கட்சிக்காரராக சேர்க்காது மேற்படி விண்ணப்பம் அமைந்திருப்பது தெரிகின்றது.

இறந்தவரின் மரணச் சொத்துக்கள் தொடர்பில் அவரது சகோதரர்கள் என்ற ரீதியில் மனுதார்கள், எதிர்மனுதார்களும் இந்தச் சொத்துக் களுக்கு மரபுரிமை சான்றிதழ் கோரி நிற்கும் நிலையில் சட்ட ஏற்பாட்டிற்கு அமையவும் சட்டம் வலியுறுத்தும் நிலைப்பாட்டிற்கு அமையவும் மனுதாரரான சக்திதேவி மகாதேவன் தனது கணவரை ஒரு கட்சிக்காரராகச் சேர்த்து முகப்பை திருத்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படும் அதேவேளை, மனுவிலும் சத்தியக்கூற்றிலும் 1ஆம், 2ஆம், 3ஆம் எதிராளிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தன்மையைப் பொறுத்த வரையில் அவர்களை எதிராளிகளாகக் குறிப்பிடாது எதிர்மனுதார்கள் என்று வெளிப்படுத்த வேண்டும் என்பதால் மேற்படி குறைபாடுகளை திருத்தியமைக்க மன்று அறிவுறுத்துகின்றது”

..........................................................

நானறிந்தவரையில் யாழ்ப்பாண மணவழி உரிமையும் மரபுரிமை யும் சட்டத்தின் (Jaffna Matrimonial Rights & Inheritance Ordinance) உட்பிரிவு 6 படி மணமான பெண்ணிற்கு தனது பக்க வழிவந்த சொத்துக்களை பராமரிப்பதற்கு கணவனது சம்மதம் தேவையில்லை. ஆனால் உண்மைப்படி சக்திதேவியோ சரஸ்வதியோ அப்படியானவர்கள் அல்ல. ஆகவே மேற் கூறப்பட்ட கட்டளை, உண்மைப்படி வழங்கப்பட்டது. வழக்கறிஞரும் அதை எதிர்க்கவில்லை.

அதேநேரம் வழக்கறிஞர் தானறிந்தவரை பரமசிவம் இந்த மனுவை எதிர்க்கும் சாத்தியம் உண்டு என்று கூறவில்லை, மன்றுக்கு மறைத்தார். சக்திதேவியும் அப்படியே. ஆனால் தேசவழமைப்படி அன்று பரம் வழக்கறிஞருக்கு கூறியது அந்த நீதிபதியின் கூற்றில் உள்ளடக்கப்பட்டு நீதிமன்றத்தில் மதிக்கப்பட்டது. அது உண்மையின் வெளிப்பாடு.

26.01.2012 அன்று நான் எமது குடும்ப வைரவர் – காளி கோயிலிருந்து நீதிமன்றம் சென்றேன். ஏற்கனவே எமது வழக்கறிஞர் திரு. நடராஜா போன் பண்ணி சத்தியக்கூற்றை வேறுமாதிரி எனது கையொப்பத்தின் கீழ் தரும்படி கேட்டும் நான் மறுத்தேன். என்னுடன் பரத்தின் உறவினரான ராணி கார்த்திகேசன் சின்னத்தம்பியும் தங்கியிருந்தா. ராணி என்னிடம் சொன்னா தனக்கு நீதிமன்றின் செயற்பாடு பார்க்க விருப்பம். ஆனால் என்னுடன் வந்தால் ஆச்சன் (சக்திதேவி) கோவிப்பாவோ தெரியாது என்று. நான் சொன்னேன் ‘‘அது உங்கட விருப்பம். என்னைப் பொறுத்தமட்டில் நீங்கள் அவர்களுடன் வந்தாலும் நான் உங்களுடன் கோவிக்க மாட்டேன்’’ என்று. ராணி வந்தா. வழக்கு தொடங்கமுதல் ஆச்சனுடன் கதைத்தா. பின்னர் என்னுடனிருந்தா. பரத்தின் சத்தியக்கூற்று நாம் நிர்வாகம் கோரிய மனுவையும் சக்திதேவியின் மனுவை எதிர்த்ததையும் ஆதரவாக சமர்ப்பிக்கப்பட்டது. அதில் யோகேந்திரா எமக்கு நேரடியாக சம்மதம் கேட்டு எழுதிய கடிதத்தை அணைத்திருந்தோம். எமக்கு அது நீதிபதி பூகம்பமாக வெடிக்க காரணமாக இருக்குமென்று அப்ப தெரியவில்லை. எமது பாணியில் என்ன நடந்தது என்றும், நாம் மனுதார் கேட்டதை மறுத்தோம் என்பதையும் அதன்மூலம் நீதிமன்றின் பொது அறிவில் பதித்தோம். எல்லாரும் ஒத்து செய்வதாக நினைத்திருந்தவர்களுக்கு அது ஒரு விழிப்பைக் கொடுத்திருக்கும்.

அன்று 26.01, ஒஸ்ரேலியா தினம். நான் கோயிலடியில் மனமுருகி ஒஸ்ரேலியாவிடம் ஆசீர்வாதம் பெற்று நீதிமன்றிற்கு சென்றேன். அது எனக்கு ஒரு பழக்கமுறை. அப்பொழுது தெரியாது அது எந்த விதத்தில் எனக்கு ஆதரவு தரும் என்று. ஆனால் அனுபவ மூலம் தெரியும் பெரியவர் களது ஆசீர்வாதம் இருக்கும்போது எமது செயற்பாடுகள் கூடிய சக்தியை உருவாக்கும் என்று. யாழ்ப்பாணத்திற்கு சிட்னி (Sydney) நிர்வாகத்தில் மூத்த இடம் என்பது எனது அறிவிற்கு தெரியும். அதேபோல் நான் மனமுவந்து மல்லாகம் நீதிமன்றிற்கு மரியாதை செலுத்தும்பொழுது நான் உண்மையாக சிட்னி நீதிமன்றங்களுக்குள் போட்ட பங்களிப்பு சக்தியாக மல்லாகம் நீதிமன்றில் உண்மையாக பங்களித்தவர்களுடன் சேர்ந்து கொள்ளும்.

அதை உறுதிப்படுத்துமாறு இருந்தன கனம் நீதிபதி திரு. க. அரியநாயகத்தின் கட்டளைகள். இது கூடுவிட்டு கூடு பாய்வது போல. அவர் முன்கூறியவாறு அட்டனித் (Attorney) தத்துவப்பத்திரம் விஷயத்தில் பரமசிவம் ஒஸ்ரேலியாவிலிருக்கையில் அது இங்கிருந்து நான் பதிவு செய்த திகதியை (12 ஜனவரி) பரம் கையொப்பமிட்ட (01 ஜனவரி) திகதி என்று தவறுதலாக குறிப்பிட்டார். ஆனால் அதைத் தள்ளி வைத்தாலும் கூட 6ஆம் எதிர்மனுதார் என்றமுறையில் எனக்கு அங்கு பதவி இருந்தது. வழக்கறிஞர்களும் அந்தக் கட்டளைப்படி இன்னொரு பத்திரம் பதிவு செய்வில்லை / கேட்கவுமில்லை. அதேநேரம் நீதிபதி மகாதேவனிடம் கேட்டார் அவர்கள் எமக்கு பத்திரங்கள் அனுப்பினார்களா என்று. அதற்கு மகாதேவன் அவர்களது வழக்கறிஞர் அனுப்பியிருக்கலாம் என்றார். அப்ப கனம் நீதிபதி கூறினார் வழக்கறிஞர் அனுப்பினால் மகாதேவன் அனுப்பியதாகும் என்று. ஆனால் மகாதேவன் பக்கம் அன்று யோகேந்திரா வந்திருக்கவில்லை. கிருஷ்ணவேணி என்ற வழக்கறிஞர் நேரம் தாமதித்து வந்தார். கனம் நீதிபதி ''வழக்கறிஞர்கள் இந்த நீதிமன்றத்திற்கு வெளியே நீதிமன்றம் நடத்துவதை நான் ஏற்க மாட்டேன்" என்றார். அவரின் கூற்று பின்வருமாறு பதியப்பட்டது. "இத்தகைய நிலையில் மனுதாரின் செயற்பாடுகள் நீதிமன்றை உதாசீனம் செய்வதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை எதிர்மனுதார்களுக்கு மன்றின் அறிவுறுத்தல் இன்றி அனுப்பப்பட்டுள்ளது. மனுதார் தரப்புச் சட்டத்தரணி இன்றைய தினம் மன்றுக்குச் சமூகமளிக்கவில்லை. குறித்த மனுதார் தரப்புச் சட்டத்தரணியை சட்டவரப்பிற்குள் நின்று செயற்படுமாறு மன்று மனுதார் ஊடாக அறிவுறுத்துகிறது."

..............................................................

இந்த நிர்வாக ஆயுதம் நீதிபதிக்குப் போய் சேர்ந்த அமைப்பு - எமது ஒஸ்ரேலியன் பாணியில் அமைந்த சத்தியக்கூற்று.

# 10. இரட்டைச் சட்டம்

**இரண்டு நாடுகளில் குடியிருக்கலாம்**
**ஆளும் அதிகாரம் எடுத்தால் ஒரு நாடுதான் வெளிப்படுத்தலாம்**
**பொது ஆக்கினால் அது ஐ.நா. போல உயர்ந்து தனித் தோற்றமில்லாமலிருக்கும்**
**இதுதான் என்று உருவம் காட்ட முடியாது**

சில காலமாக ஒஸ்ரேலியாவிலும் இலங்கையிலும் டுவல் ஸிட்டிஸனஷிப் (Dual Citizenship) அதாவது இரட்டை குடி உரிமை சட்டம் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியிலிருந்து இறக்கப்பட்டனர். அந்தச் சட்டத்தின்படி இரு நாட்டு விசுவாசமுள்ளவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்க முடியாது. மேலும் இலங்கையிலும் போர் சம்பந்தமான விடயங்களை வெளிநாட்டு நீதிபதிகள் (Foreign Judges) முன் விசாரணைக்கு கொண்டுவருவதை இலங்கை அரசாங்கம் எதிர்க்கிறது. கொள்கைகள் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும் இடம், காலம் இவற்றின்படி மாற்றங்கள் இருக்கும். முரண்பாடுகளும் இருக்கலாம். சில மட்டங்களில். ஆகவேதான் அந்தச் சட்டம். எமக்கும் கடந்த பிறவிகள் நினைவிலிருந்தால் மூளைக்குழப்பம் வர இடமுண்டு. உண்மைக்கு - இடம், காலம் கடந்து சுயமாக செயற்படும் சக்தி உண்டு. என்னைப் பொறுத்தவரை அதுவே ஆன்ம தத்துவம். நாம் பாவ, புண்ணியங்களை மட்டுமே மறுபிறவிக்கு எடுத்துச் செல்கிறோம் என்ற தத்துவமும் அதுதான். ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டில் குடியேறும்பொழுதும் நாம் அப்படித்தான் செய்யவேண்டும் - நாம் இன்னொரு கலாசாரத்திற்குள் போகிறோம் என்றால். முன்னைய கலாசாரத்தை எமது மூத்தோராக்கி ஆசீர்வாதத்தைக் கொண்டு செல்ல வேண்டும் அது போலத்தான் திருமணமும், வேலை அமைப்புகளும். முதுசம், சீதனம் இரண்டும் அப்படித்தான் தேடிய தேட்டத்தின் மூத்த சொத்துக்களாகின்றன. புதுக்கலாசாரத்திற்குள் திருமணம் முடித்து போகும்

பெண் பிறந்த கலாசாரத்தின் ஆசியைப் பெற சீதனம் உதவும். டொனேஷன் (Donation) பாரம்பரிய ஒழுங்கற்றது. அதற்கு பதவியின் மரியாதை இல்லை. உடனடி விளைவிற்காக கொடுப்பது. அது உண்மையானதென்றால் பாரம்பரியத்திற்குப் பதிலாக நீளப்பரவும் சக்தியாகும். அதையே க்ளோபல் (Global) என்பார்கள். அதுதான் ஜனநாயகத்தின் முதல்படி.

இந்து சமயத்தில் பிள்ளையாருக்கும், முருகனுக்கும் மாம்பழப் பரிசிற் காக போட்டி வைக்கப்பட்டது. அதில் பிள்ளையார் பாரம்பரிய வழியில் பெற்றார் தான் உலகம் என்று அவர்களை வலம் வந்து பரிசை பெற்றார். முருகன் அந்தக் காலப்படி எல்லாருக்கும் தெரியும்படி உலகத்தை சுற்றி வந்து தானே வென்றதாக தான் கருதுவதாக வெளிப்படுத்தி வேறாக அரசாட்சி செய்தார். பெற்றாரின் செல்வங்களை ஒறுத்து சுய ஆட்சி செலுத்தினார். ஒருமுறை துணைவியில் விளையாட்டுப்போட்டிற்கு அரச சார்பாக வந்த ஒரு தமிழர் கூறினார் - தமிழர் சுயஆட்சி கோரி முருகன் மாதிரி கோவணத்துடன் நிற்கிறார்கள் என்று. லண்டனிலிருந்து வந்திருந்த அவர் அரச சார்பாக தான் பிள்ளையார் வழி என்று நினைக்கிறார் என்று நான் முடிவுசெய்தேன். நான் அந்த விஷயத்தில் முருகன் வழி. இருநாட்டு முறைகளுக்கும் பொதுவான பரந்த வழி. பாரம்பரியத்திலிருந்து சக்தியை மட்டும் அங்கும் இங்கும் கொண்டு செல்வேன். முருகனைப் போல சாதாரண மக்களின் கண்ணுக்குத் தெரியும் விளைவு மூலம் தற்போதைய பதவியை கணிப்பேன். இந்த வழியில் ட்ரான்ஸ்பேரன்ஸி (Transparency) / வெளிப்படுத்தல் முக்கியம் - விளைவையும் சரி அளவிடும் முறையையும் சரி. கோவணத்தில் நின்ற முருகனைப் பார்த்து அந்த லண்டன் தமிழன் பயந்திருக்கலாம். அவருக்கு அலங்கார முருகனான நல்லூர்க் கந்தன் மனதில் இருக்கவில்லை என்று உறுதிப்படுத்தினார். அதாவது பரம்பரை செல்வங்களைத் துறந்து மறுபிறவி எடுப்பதுபோல பழனிமலைக்குச் சென்ற முருகன் தனது தேடிய தேட்டம் மூலம் அலங்காரக் கந்தனாக யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆட்சி செய்கிறார். உலகளவில் சிந்திக்கும் மக்களுக்கு முருகன்வழி. பரம்பரை வழியை நாடும் மக்களுக்கு பிள்ளை யார் வழி. இரண்டிற்கும் இலங்கையில் இடமுண்டு என்பது எனது தீர்மானம். அதேநேரம் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து பாரம்பரிய பாதை மூலம் உரிமை கோரினால் அது கோணல் வழி. பலனில் பற்று

இருந்தால் அப்படித்தான் நடக்கும். குடும்பமாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் அவற்றின் உண்மையான அமைப்பிற்குள் செயற்பட்டால் இயற்கையான அமைதி நிலவும். அமைப்பின் உயரத்தை எழுப்புவோம் உள் நிர்வாகத்தில் மூத்தோர். அவர்களை மதித்து மரியாதை பண்ணும் மட்டும்தான் இளையோருக்கு அந்த சக்தி வேலை செய்யும்.

பரத்தின் குடும்பத்தில் அது பரத்தின் அப்பா / பப்பா. அதன்பிறகு யோகநாதன். எப்பொழுது சகோதரிகள் சீதனம் பெற்றார்களோ அப்பொழுது அவர்கள் வேறு குடும்பத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் சகோதரங்களில் தங்கியிருந்து, கணவன்மாரை வீட்டு மாப்பிள்ளைகளாக்கினார்கள். அந்த பரம்பரை வீட்டில் யோகநாதனுக்கு இருந்த மரியாதையும் பயமும் தகப்பன் இறந்த பின் வேறொருவருக்கும் இருக்கவில்லை. அவரும் அதை அறிவார். ஆனால் உண்மை என்ன வழியை வகுத்தது?

சட்டப்படி மல்லாகம் நீதிமன்றம் என்ன செய்தது? அது தன்னைப் பற்றி என்ன உண்மையை வெளிப்படுத்தியது? உண்மையை வெளிக்கொண்டு வந்தது எந்த சக்தி? 06.09.2012 அன்று நீதிபதி திரு. ஜெ. கஜநிதிபாலன் தலைமையில் ‘‘ஏற்புக்கள்’’ தலையங்கத்தின் கீழ் 6வது வசனம் :

[இறந்தவர் தேசவழமை சட்டத்தின்கீழ் உட்பட்டவர் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது.]

அப்படியானால் தகப்பன் அவருக்குக் கொடுத்த சொத்தின் விபரம் எங்கே? மேலும் தேசவழமை சட்டத்தின்படி திருமணம் முடிக்காத பிள்ளைகள் பெண்பிள்ளையென்றால் சகோதரிகள் பெற்றாருக்குப் பின் வாரிசுகள். ஆண் பிள்ளைகளென்றால் அவர்களுக்குப் பின் ஆண் சகோதரங்கள் வாரிசு. அதுதான் தேசவழமை ஒழுங்கு. யோகேந்திரா பரத்திற்கு எழுதிய 06.12.2011 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு பரம் 15.12.2011 அன்று எழுதிய பதிலில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

Thesawalamai Law :

The basis used by you in preparing the ‘consent motion’ does not seem to be Thesawalamai. As you would recall, my wife communicated to you from the very first day you contacted her in this regard, that I

sought my brother’s assets to be shared on the basis of Thesawalamai. You said that they were. I draw your attention in this regard to Section 7 of Thesawalamai Regulation 18 of 1806, 5 of 1869 which states:

‘So long as the parents live, the sons may not claim anything whatsoever; on the contrary, they are bound to bring into the common estate (and there to let remain) all that they have gained or earned during the whole time of their bachelorship, excepting wrought gold and silver ornaments for their bodies which have been worn by them, and which have either been acquired by themselves or given to them by their parents, and that until the parents die, even if the sons have married and quitted the paternal roof.

So that when the parents die, the sons then first inherit the property left by their parents, which is called modesium, or hereditary property; and if any of the sons die without leaving children or grandchildren, their property devolves in the like manner as is said with respect to the daughters' property, which devolves to the women as long as there are any. The property of the sons, therefore, devolves to the men, and in failure of them to the women; and although the parents do not leave anything, the sons are nevertheless bound to pay the debts contracted by their parents, and although the sons have not at the time the means of paying such debts they nevertheless remain at all times accountable for the same; which usage is a hard measure though according to the laws of the country.’

…………………………………………………………………………………

இதை கருத்துடன் வாசிப்பவருக்கு சகோதரிகளுக்கு முதுசத்தில் பங்கில்லை என்று தெட்டத்தெளிவாக விளங்கும். அதனால்தான் சரஸ்வதி பார்க்லேஸ் வங்கியில் போடப்பட்ட காசு யோகானந்தன் உழைத்த சம்பளம் என்றா. அப்ப தகப்பன் கொடுத்ததும், இலங்கையில் அவர் உழைத்த காசும் எந்த வகை என்று கூறவில்லை. குறுக்கு விசாரணையின்போது சரஸ்வதி வெளிப்படுத்தியது :

கே : நீங்கள் பார்க்லேஸ் பாங்கில் இறந்தவரின் பெயரில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று விசாரித்தீரா?

ப : ஆம்

கே : நீங்கள் இது பற்றி எல்லா சகோதரங்களுக்கும் அறிவித்தீரா?

ப : ஆம்

கே : பரமசிவத்திற்கு அறிவித்தீரா?

ப : ஆம். அறிவித்தேன். கொஞ்ச காலத்திற்குப் பிறகு கதைக்கும் பொழுது சொன்னேன்.

கே : எங்கே அறிவித்தீர்?

ப : அவுஸ்ரேலியாவில் இருக்கும் பொழுது அறிவித்தேன்.

கே : பரமசிவம் சார்பில் கூறுகிறேன். இவரின் கணக்கு மிகுதி விசாரித்ததைப் பரமசிவத்திற்கு கூறி இருக்கவில்லை என்றும், அவருக்கு மறைக்கப்பட்டன என்று.

ப : இல்லை நான் கூறினேன்.

கே : யோகானந்தன் என்ற உங்களின் மகன் பார்க்லேஸ் பாங்கில் உள்ள பரமசிவத்தின் பணம் தனக்கு வரவேண்டும் என்று கேட்டு இருந்தாரா?

ப : இல்லை

கே : பரமசிவத்தின் பங்கு தனக்குத்தான் என உங்கள் மகன் கேட்டு கடிதம் எழுதினாரா?

ப : இல்லை

..........................................................................................

யோகானந்தா பரத்தின் முழுப்பங்கையும் சகோதரிமாருக்கு எழுதித்தரச் சொல்லிக் கேட்டார். தர்மலிங்கம் அப்படி தந்ததாக சொன்னார். பரம் மாட்டேன் என்றார். இதெல்லாம் சரஸ்வதிக்கு தெரிந்திருக்கும். ஒரு நாளும் அவ பார்க்லேஸ் பாங்க பணத்தைப் பற்றி பரத்துக்குச் சொல்லவில்லை. யோகானந்தாவும் சொல்லவில்லை.

அதேநேரம் – நான் ஆவணி 2011ல் பத்திரங்கள் கேட்டு வட்டுக்கோட்டை பொலிஸில் பதிந்திருந்தேன். தாமதித்து விட்டு சக்திதேவியும் மகாதேவனும் பொலிஸ் ஸ்டேஷன் (Police Station) வந்து எமக்குரிய ஒன்றும் தங்களிடமில்லை என்று கூறினார்கள். நீதிமன்ற பத்திரங்களில் இருந்து எமது வழக்கறிஞர் மூலம்தான் விபரங்கள் அறிந்தோம். சரஸ்வதி பொய்ச்சாட்சி சொன்னா. நீதிமன்றை அவமதித்தா. மேலும் சக்திதேவி தனது சாட்சியில் சீதனம் கொடுக்கப்பட்டதா என்ற கேள்விக்கு பின்வரும் உண்மையை வெளியிட்டா.

“ஒன்றும் கொடுக்கவில்லை. சந்தோஷமாக திருமணம் செய்து வைத்தார்கள். இறந்தவர் நகையும், காசும் தந்தார். இறந்த யோகநாதன் எனக்கு திருமணத்திற்கு நகைகள் செய்து தந்தார். அவருடைய பொறுப்பில் தான் திருமணம் நடந்தது”

அது சீதனமில்லாமல் என்ன? தேச வழமைப்படியா அல்லது பொது சட்டம் / கொமன் லோ (Common Law) படியா விசாரணை நடக்கிறது என்ற கேள்விக்கு பதிலென்ன? தேசவழமைப்படி என்பது ஏற்கனவே மனுதாரர்கள் நீதிமன்றத்தில் கூறிவிட்டார்கள். இல்லாவிட்டால் சீதனமா டொனேஷனா என்ற கேள்விமூலம் விசாரணை நடத்துவதும் அதற்காக சாட்சி சேர்ப்பதும் நீதிமன்றின் வளத்தை வீணடிப்பதாகிறது. மேற்கூறியவாறு 06.09.2012 அன்று “இறந்தவர் தேசவழமைச் சட்டத்தின் கீழ் உட்பட்டவர் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுது” என்று நீதிபதி திரு. கஜநிதிபாலன் மொழிந்தார்.

அதேநேரம் அதே நீதிபதி “மனுதாரர்கள் சார்பிலான வழக்கெழு வினாக்கள்” என்ற தலையங்கத்தின் கீழ் பின்வரும் கேள்விகளை மொழிந்தார்.

1. 5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்களால் ஆட்சேபனைக் கூற்றுடன் கோவையிடப்பட்ட சத்தியக் கடதாசி சட்டப்படி செல்லுபடியாகுமா?

2. இல்லையென்றால் 5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்களின் சத்தியக்கூற்று நிராகரிக்கப்பட வேண்டுமா?

இதில் என்ன அடிப்படையில் எமது சத்தியக்கூற்று நிராகரிக்கப்பட வேண்டும் என்று சட்டப்பிரிவின்படி கூறப்படவில்லை. அப்படியென்றால் அது சட்டத்தரணிக்கும் நீதிபதிக்கும் உள்ள பொதுவான அன்டஸ்டாடிங் (Understanding) / விளக்கம் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட எமக்கும் (5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்கள்) எமது பங்களிப்பிற்கும் அங்கு இடமில்லை.

சட்டம், பொது முறை எமது மனங்களை ஒன்றாக்கும். அப்படி ஒரு கோவை இருந்தால்தான் அந்த அமைப்பிற்கு ஒரு தனி அங்கீகாரம் உண்டு. அந்த முறைகள் இடத்திற்கிடம் மாறுபடலாம். ஒரே இடத்தில் காலத்துக்குக் காலம் மாறுபடலாம். ஒரு குழந்தை பிறக்கும் பொழுது பெற்றார் அந்தக் குழந்தையை பராமரிக்க வேண்டும். அந்தக் குழந்தையை பராமரிக்க வேண்டும் என்பது இயற்கையையும் அறிவையும் சேர்த்து வரும் கடமை. மிருகம் தான் மனிதரின் அடிப்படை இயற்கை என்னவென்று காட்டும். அதன்படி தாய்க்கு அந்த குழந்தையை / குட்டியை / குஞ்சைப் பராமரிக்க இயற்கையான கடமையுண்டு. தாய்மாருக்குத் தெரியும் அதனுடன் சந்தோஷமும் உண்டு. கன்றுக்கு கொடுக்க பாலை மனிதரிடமிருந்து ஒழிக்கும் பசு அதைத்தான் வலியுறுத்துகிறது. அறிவு மூலம் தந்தைக்கும் அந்த கடமையையும் சந்தோஷத்தையும் மனித முறைகள் சட்டங்கள் காட்டித் தருகின்றன. இல்லாவிட்டால் எமது இயற்கையான, உண்மையான குணம் என்னவோ அந்த இனத்தையே நாம் சாருகிறோம்.

அந்த வரையறுப்பு – அதாவது எந்த இனம் என்ற வரையறுப்பிற்குள் நின்றால் அதிலிருந்து பலனெடுத்தால் எல்லாம் சரிதான். அதிலிருந்து வெளியே உள்ள பலன்களை எடுக்கும்போதுதான் பிரச்சினைகளும், குழப்பங்களும், பிரிவுகளும். இந்தக் கிழமை வட்டுக்கோட்டையில் எமது பயிற்சி நிலையத்திற்கு அருகிலிருக்கும் டியூட்டறி (Tutory) இல் படிப்பிக்கும் ஒரு மாஸ்டரை (Master) பாலியல் குற்றச்சாட்டு செலுத்தி வட்டுக்கோட்டை பொலிஸ் (Police) கைது செய்ததாக ரிபோட் (Report) வந்தது. தாக்கப்பட்ட பிள்ளைக்கு வயது 12. அந்தப் பிள்ளை கர்ப்பமாகித்தான் பெற்றாருக்கு பிரச்சனை தெரிய வந்தது. சட்டப்படியோ கலாசாரப்படியோ அந்த ஆண் அந்த பெண் பிள்ளையிடமிருந்து என்ன சந்தோஷம் பெறலாம் அதற்கு

என்ன கடமை செய்யப் பொறுப்புண்டு என்று இல்லாவிட்டால் அதிலென்ன பிழை? எனது பெற்றாரது காலத்தில் சிறுவயதில் பெண்கள் திருமணம் முடிப்பது நடந்த ஒன்று. ஆகவே 12 வயது இயற்கையான ஒரு தடை அல்ல. ஆசிரியர் என்ற மூத்த பதவியிலிருந்து செயற்படும்போது அந்த ஆசிரியருக்கு மாணவர்களைப் பாதுகாக்கும் கடமை / பொறுப்புண்டு. பலன் எந்தப் பதவி மூலம் பெறுகிறோமோ அந்தப் பதவிக்குள் பலன் எடுத்தால் அது நாகரிகம். அதற்கு அப்பால் எடுக்கும்போது நாம் சிற்றின்பத்தால் உந்தப்படும் மிருகங்களாகிறோம். ஒழுங்கீனம் கூடுகிறது. இலங்கையின் முன்னைய ஜனாதிபதி திரு. மகிந்த ராஜபகஷ கூறினாரென்று வெளியிடப்பட்டது பின்வருமாறு:

"ப்ராகரன் வடக்கு காட்டில் / ஜங்கிளில் (Jungle) அரசன், நான் தெற்கு காட்டில் அரசன் என்று". அதில் ஒருவரை ஒருவர் என்ன செய்தாலும் அது அவர்களுக்குள் உள்ள நியதிப்படி சரியாக இருக்கும். ஆனால் எங்கே பிழைத்ததென்றால் இரு பக்கத்தினரும் காட்டுக்கு வெளியே உள்ள நாகரிகமான அமைப்புக்களுக்கு தலைவர் என்ற பட்டத்தை எடுத்துக்கொள்ளும் பொழுது.

நேற்று அமெரிக்க ஜனாதிபதி திரு. டொனல்ட் ட்ரம்ப் (Donald Trump) யூ.என் (U.N.) மனித உரிமை கௌன்ஸிலில் இருந்து அமெரிக்கா விலகிட்டதாக மொழிந்தார். எனக்கு மனதில் வந்த கேள்வி என்னவென்றால் - அப்படியென்றால் இலங்கை அரசாங்கத்தை கண்டித்து போர் நடக்கும்போது இருந்த ஒழுங்கீனங்களை எதிர்த்து அமெரிக்கா அதே ஐக்கிய நாட்டு சபையில் எடுத்த தீர்மானத்தின் வலு என்ன என்பதே. அந்த நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்திற்கும் ஆயுத போராளிகளுக்கும் தேவைப்படாமலிருக்கலாம். ஆனால் உயர்ந்த நாகரிகத்தை பின்பற்றுபவர்களுக்கு தேவை அல்லவா?

# 11. கட்டளையா தீர்ப்பா?

**ஏன் என்ற வினாக்களுக்கு கிடைக்கும் விடைகளின் தொகுப்பே தீர்ப்பு என்ற மரியாதைக்குரியது.**

மேற்கூறப்பட்ட பாலியல் விஷயத்தில் / விவகாரத்தில் பாதிக்கப்பட் டோரைச் சார்ந்தவர்கள் வகுப்பு நடத்திய இடத்திலிருந்த தளபாடங்களை தீ வைத்து கொளுத்தியதாக தகவல் வந்தது. அது மூலம் பொலிஸா ரால், நீதிமன்றத்தால் வரும் பொதுத் தீர்வுகளின் சக்தியை தனிப்பட்ட திருப்திக்காக குறைக்கிறார்கள். யாழ்ப்பாண நீதிமன்றின் முன் இப்படியான ஆர்ப்பாட்டங்கள் மூலம் பொது ஒழுங்கைத்தான் பலவீனப்படுத்துகிறார்கள். அதற்கு எனக்குத் தெரிந்த காரணங்களில் முக்கியமானது - மேற்படிப்பு படித்து அதன்படி ஒழுகியவர்களது வாரிசுகள் அங்கே மிகவும் குறைந்ததுதான். எமது குடும்பமும் இதற்கு விதிவிலக்காக நடக்கவில்லை. தேசவழமை என்ற பெயரைச் சொல்லி தமது சொந்த விருப்புகளை பெற நீதிமன்றத்தை பாவித்துள்ளார்கள். நீதிமன்றமும் அதற்கு வசதிப்படுத்தி தேசவழமையை அவமதித்தது. தேசவழமைப்படி அளக்கப் போகிறோம் என்ற அதே நீதிபதி பின்வரும் வினாக்களை மனுதார் சார்பில் அங்கீகரிக்கிறார் :

1. 1ஆம், 2ஆம் வழக்கெழுவினாக்களுக்கு ஆம் என நீதிமன்றம் தீர்மானிக்குமாயின் மனுதாரரர்கள் கோரும் நிவாரணங்களுக்கு அருகதை அற்றவர்களா?
2. 1ஆம், 2ஆம் மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய மனுவானது குடியியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 541ஆம் பிரிவின் கீழ் காலம் சென்றவரின் மரபுரிமையாளருக்கான மரபுரிமைச் சான்றிதழ் கட்டளை ஒன்றை பிறப்பிக்கும் விண்ணப்பமா?
3. அப்படியானால் காலம் சென்றவரின் சொத்துக்களில் சக்திதேவி, மகாதேவன், சுப்பிரமணியம் தர்மலிங்கம், சரஸ்வதி சபாநாதன், சுப்பிரமணியம் பரமசிவம் ஆகியோர் சமபங்கு உரித்துடையவர்களா?

.................................................................................................

இந்த வழக்கில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று எவ்வளவு பங்கு யாருக்கு என்றது. மற்றது நிர்வாகம். சகோதரிகள் நிர்வாகம் தேவையில்லை என்றார்கள். நாம் தேவை என்றோம். அதற்கு பதில் குடியியல் நடவடிக்கைச் சட்டக் கோவைப்படி தேடவேண்டும். எவ்வளவு பங்கு என்பது தேசவழமை சட்டப்படி தேடவேண்டும். ஆகவே குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையில் மரபுரிமை பங்கைப் பற்றி விடை தேட முடியாது. ஆகவே சமபங்கு உரித்துடையவர்களா என்ற கேள்விக்கு எந்தச் சட்டத்திற்குள் பார்க்க வேண்டும் என்ற கேள்விக்கு நீதிபதி குடியியல் நடவடிக்கை சட்டக்கோவை என்ற பதிலை வழங்கியுள்ளார்.

எமது பக்க கேள்விகளை நீதிபதி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்கள் சார்பிலான வழக்கெழு வினாக்கள்

4. இறந்தவரிடம் இருந்து 2ஆம் மனுதாரராக குறிப்பிடப்பட்ட சக்திதேவி மகாதேவா 4ஆம் எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்ட சரஸ்வதி சபாநாதன் ஆகியோர் இவரின் சகோதரி என்ற முறையில் சீதனம் பெற்றிருந் தார்களா?

5. குறித்த வழக்கெழுவினாவுக்கு ஆம் என பதில் கிடைக்கப்பெற்றால் தேசவழமைச் சட்டத்தில் மரணித்தவரின் மரணச் சொத்தில் இருந்து உரிமை கோரும் உரித்தில் குறித்த சீதனம் பெற்ற நபர்கள் உரித்து அருகதை அற்றவர்களாக கவனிக்கப்பட வேண்டியவர்களா?

6. குறித்த வழக்கெழுவினாவிற்கு ஆம் என பதில் இருக்கப்படுமாயின் மனுதாரர்கள் கோரும் மரபுரிமைச் சான்றிதழ் பெற அவர்களுக்கு அருகதை உண்டா?

7. மேற்குறிப்பிடப்பட்ட வழக்கெழு வினாவிற்கு இல்லை என பதிலளித்தால் இவ் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டுமா?

எமது சத்தியக்கூற்றில் மேல் கூறியவாறு தேசவழமைச் சட்டத்தின் 7ஆம் உட்பிரிவின்படி "திருமணம் முடிக்காத ஆண்மகன் பெற்றாருக்குப் பின் இறக்கும்பொழுது அவரது ஆண் சகோதரங்களுக்குத்தான் செல்ல வேண்டும்"

எமது சத்தியக்கூற்றையும் அது சப்போட் (Support) பண்ணிய / ஆதரித்த ஆட்சேபணை மனுவையும் தள்ளுபடி செய்தால் மனுதாரை யார் எதிர்க்கிறார்கள்? எந்தச் சட்டம் மூலம் சமபங்கு கேட்கப்படுகிறது. அதை சட்ட அறிவுமூலம் நீதிபதி எப்படி வெளிப்படுத்தி உள்ளார்?

கடைசியாக பதியப்பட்ட திருத்திய மனு 23.11.2011 அன்று பதியப் பட்டுள்ளது. முதலாவதாக 31.05.2011 அன்று பதியப்பட்டுள்ளது. முதலாவது மனுவில் மரபுரிமை / சக்ஸெஷன் (Succession) எந்தச் சட்டத்தின் மூலம் கோரப்படுகிறது என்று குறிப்பிடவில்லை. சரஸ்வதி சபாநாதன் 21.10.2010 அன்று பார்க்லேஸ் வெல்த்திற்கு எழுதிய கடிதமும், அதற்கு அவர்கள் 01.12.2010, 07.01.2011 திகதிகளிடப்பட்ட பதில்களும் அணைக்கப்பட்டிருக்கவில்லை முதலாவது மனுவில். அவை 01.08.2011 அன்று பதியப்பட்ட திருத்திய மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் 01.06.2011 கொடுக்கப்பட்ட அனுமதி பின்வருமாறு :

'மன்று ஏற்கனவே வெளிப்படுத்திய நிலைப்பாட்டிற்கு அமைய திருத்தங்களை மேற்கொள்ள மனுதார் தரப்புச் சட்டத்தரணி தயார் என்று கூறுவதால் உரியமுறையில் முகப்பில் மனுதாரின் கணவரையும் கட்சிக்காரராக சேர்ப்பதற்கும் 1ஆம், 2ஆம், 3ஆம் எதிராளி என்று குறிப்பிட்டதை எதிர்மனுதார் என திருத்தி மாற்றுவதற்கும் மன்று பணிக்கின்றது'. அதற்குப் பிறகு திறந்த மன்றில் மக்கள் சாட்சியாக மனுதாருக்கு ஒரு மாற்றங்களுக்கும் அனுமதித்ததாக நீதிமன்ற ஏடு களில் அத்தாட்சி இல்லை. வழக்கு தொடங்கியவுடன் / அதற்குப்பின் ஆவணங்களில் மாற்றங்கள் கொண்டுவரவும் அதை ஏற்கவும் என்ன விதிமுறை மல்லாகம் நீதிமன்றத்தில் அந்தக் காலகட்டத்தில் இருந்தது? அது இரு தரப்பிற்கும் பொதுவாகப் பாவிக்கப்பட்டதா? என்று பார்ப்போம்.

04.10.2012 அன்று இந்த சட்டம் அனுமதிக்கப்படவில்லை என்று ஏடு உறுதிப்படுத்துகிறது. அந்த குறிப்பின்படி நீதிபதி திரு. அரியநாயகத்தின் முடிவுப்படி தேசவழமை சட்டம் உட்படுத்தப்பட்டுள்ளது.

16.12.2011 திகதியிடப்பட்ட கடிதத்தில் மனுதாரின் வழக்கறிஞர் ஒரு விபரங்கள் நிரப்பப்பட்ட கன்ஸெனட் மோஷன் (Consent Motion) / சம்மத அறிக்கை அனுப்பியிருந்தார். அதை நாம் வழக்கறிஞர் முன்

கையெழுத்திட்டால், தான் மற்ற மரபுரிமைக்காரர்களின் சம்மதப் பத்திரங்களுடன் நீதிமன்றிற்கு சமர்ப்பித்து மரபுரிமை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அப்படியென்றால் விரைவில் இந்த விஷ யத்தை முடிக்கலாம் என்று இல்லாவிட்டால் உட் சண்டைகள் பிடித்துக் கொண்டிருந்தால் அதிக காலத்திற்கு விஷயம் இழுபடும் என்றும் கூறினார். அதாவது யோகநாதன் விட்டுச் சென்ற சொத்து மரியாதைக்குரிய, தேசவழமையின் ஆசீர்வாதம் பெற்ற முதுசம் / ஹெரிட்டேஜ் (Heritage) இல்லை கைவிடப்பட்ட அனாதைப் பணம் என்று கூறுகிறார் என்று நாம் எடுத்துக் கொண்டோம். உழைத்தவர் அமைப்புக் கொடுக்காவிட்டாலும், மூத்தோர்கள் ஆசி இல்லாமலும் இருக்கும் சொத்துத்தான் அப்படி பிரிக்கப் படலாம். அப்படித்தான் யோகநாதனின் சடலம் கிணற்றில் இருந்து இறந்தார் என்று பின்வருமாறு மரணப் பதிவுப் புத்தகத்தில் பதிந்துள்ளது :

“கிணற்றுக்குள் தவறி விழுந்து நீரில் மூழ்கி சுவாசம் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் ஏற்பட்ட விபத்து மரணம்”

ஒரே வீட்டில் வசித்த மனுதாரருக்கு அவர் பிறத்தியே. அவர் கண் சிகிச்சை / ஒப்பரேஷன் (Operation)க்குப் பிறகு குளிக்கச் சென்றபோதுதான் இது நடந்தது. அவர்கள் - அதாவது சக்திதேவியும், மகாதேவனும் யோகநாதனுக்கு வயதில் மூத்தவர்கள். சக்திதேவி பொது விஷயங்களில் கலந்து நான் பார்க்கவில்லை. ஆனால் இந்த வழக்கிற்கு வந்தா. ஆனால் உண்மைக்கு, நடக்கும் விளைவுகளில் பங்குண்டு. தேடினால் கிடைக்கும். அதாவது அந்தக் குடும்பத்தில் பொதுவாக தகப்பனுக்குப் பின் பொறுப்பு எடுத்தவர்கள் யோகநாதனும், பரமசிவமுமே. அப்படியென்றால் உண்மை யின் அடிப்படையில் எப்படி மற்ற சகோதரர்களுக்கு முதுசத்தில் சமபங்கிருக்க முடியும்? சட்டப்படி தர்மலிங்கம் ஆண் சகோதரம் என்றபடியால் பங்குண்டு. முதுச நிலைக்கு உயர்த்துவது சடங்குகள் செய்வது போல. நான் மனுதாரர் வழக்கறிஞர் யோகேந்திராவின் கொழும்பு வீட்டில் அவரைப் பார்க்க சென்றபோது அவர், தான் வழிபடும் சிவலிங்க கோயிலைக் காட்டினார். சந்தோஷமாக இருந்தது. சிவபுராணத்தில் “வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க” என்று கூறப்பட்டதை அவர் தள்ளி வைத்து விட்டார். ஆகவேதான் குறுக்கு வழியில் முடிக்க வெளிக்கிட்டார். வேகத்தை

கெடுக்கும்பொழுது உண்மை வெளிப்படும். ஆசை வெளிப்படும் பொழுது வேகம் கூடும். ஒழுங்கீனம் தலை தூக்கும். படித்து பட்டம் பெற்ற அவர் அதே மாதிரி படித்து பட்டம் பெற்ற பரத்தையும் அவரது மனைவி என்னையும் மதிக்காமல் எமது சுதந்திரமான வழியை அடைத்து தனது வழிக்குக் கொண்டுவரப் பார்த்தார். வெகுகாலம் இழுபடுவது உண்மைதான். 2010இல் இறந்தார் யோகநாதன். 8 வருடங்கள் கழிந்தும் இன்னும் முடிவு இல்லை. ஆனால் என்ன அதற்குப் பதிலாக வந்தது? யோகநாதனது வாழ்க்கைக்கு மரியாதை. அதுதான் முதுசம். யோகநாதனிடமிருந்து படிக்கக் கூடியவர் பரமசிவம். மற்றவர்கள் மூத்தவர்கள். முதுசத்திற்கு இருக்கும் உயர்ந்த ஸ்தானம் அந்த மரியாதையால்தான் வருகிறது. பெற்றாரது விதிமுறைகளை மதிப்பவர்களுக்கு அந்த முதுசத்தில் பங்குண்டு. கலியாணம் முடிக்கும்போது விலகிச் செல்லும் பெண்களுக்கு கொடுக்கப்படும் சீதனமும் அப்படியான உயர் ஸ்தானம் பெற்றதுதான்.

தேசவழமையில் ஆணின் தொழிலும் பெண்ணின் தொழிலும் வேறுபட்டிருப்பதால் ஆண்வழிச் சொத்து ஆணுக்கும் பெண்வழிச் சொத்து பெண்ணிற்கும் செல்லும். எமது முன்னோர்கள் கண்டுபிடித்த உண்மைகளைத் தான் விதிமுறைகளாக நாம் அறிந்து கொள்கிறோம். நீதிமன்றத்திலும் அப்படியே. எமது ஆசைக்கு ஏற்றபடி நாம் விதிமுறைகளை மாற்றினாலும், தள்ளி வைத்தாலும் முன்னோரை அவமதிக்கின்றோம். ஒரு வெளிப்பாடு எமது உண்மை, பகுத்தறிவு, சிற்றறிவு மூன்றாலும் உந்தப்படலாம். சிற்றறிவு கேள்வியறிவு / ஹியஸே (Hearsay) என்று சொல்லப்படும். அதற்கு நிர்வாகத்தில் இடமில்லை. பகுத்தறிவு பொது விதிமுறையைப் பாவிக்கும்பொழுது பதிகிறது. உண்மை இவை இரண்டிற்கும் அப்பால் எமது இயற்கையாக எம்முடன், எமக்குள் இருக்கிறது. அறிவு பாவிக்கப்படாவிட்டால் வெளிவருவது உண்மை. ஆடாமல் அசையாமல் நாம் எமது உண்மையில் நின்றால் மற்றவரது உண்மையை தெரிந்து கொள்வோம்.

முதலாவது மனுவில் மனுதார் சக்திதேவி பின்வருமாறு கூறுகிறார் :

“மனுதாரின் விண்ணப்பத்தை பிறர் எதிர்ப்பதற்கு காரணங்கள் ஏதும் இல்லை” என விளக்குகிறார். சத்தியக் கூற்றிலும் இதை உறுதிப்படுத்துகிறார். 01.08.2011 பதிந்த திருத்திய மனுவில் இந்தக் கூற்று இருக்கவில்லை. அதற்குப் பதிலாக எம்மைப் பற்றி பின்வருமாறு பதித்தார்கள் :

“கணவனும் மனைவியுமாகிய 5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்கள் மேலே குறிப்பிட்ட இடத்தில் வசிப்பவர்களும், தேசவழமைச்சட்டத்திற்கு உட்பட்டவர்களுமாகும் என நாம் கூறுகிறோம்.

6ஆம் எதிர் மனுதார் ஏற்கனவே விவாகரத்து பெற்று மூன்று பிள்ளை களுக்கு தாயுமானவர், தற்பொழுது 5ஆம் எதிர்மனுதாரரை விவாகம் செய்துள்ளார்” இந்தக் கூற்று வெளிப்பட்டது 2011இல். நாம் சட்டப்படி திருமணம் செய்தது 02.02.1987இல். அதாவது இந்தக் கூற்றிற்கு 24 வருடங்களுக்கு முன். மேலும் மனுதார் கேட்டு நாம் அவர்களது ஒரே பிள்ளை சிறீதரனை ஒஸ்ரேலியா எடுப்பித்ததும் அதற்காக நான் 6ஆம் எதிர்மனுதார் - 3 பிள்ளைகளுக்குத் தாய் - ஒஸ்ரேலியன் ஹை கமிஷன் (Australian High Commission) உடன் நேரடியாக கதைத்துத்தான் அவர் எமது கிட்டிய உறவினர் என்ற அடிப்படையில் அவருக்கு ஒஸ்ரலியாவில் நிரந்தரமாக குடியேற வீசா (Visa) கிடைத்தது. அப்பவும் நான் அதே 3 பிள்ளைகளுக்குத் தாய். மேலும் சிறீதரனின் மனைவி சங்கீத்தா தனது தகப்பனை வரவழைக்க Visa மறுக்கப்பட்டு என்னிடம் கேட்டு நான் நேரில் கதைத்து - இங்கு சிட்னியில் - பின் கொழும்பில் எடுத்துக் கொடுத்தேன். அப்படியான என்னை பிறத்தி என்றால் என்ன நடக்கும்? நன்றியாக இருந்திருந்தால் கிடைக்கும் உயர்ந்த வளங்களைவிட குறைவாகவே இங்கு கிடைக்கும். எமக்கு அந்த மாதிரி நல்ல உதாரணமாக எம்மைக் கருதும் எத்தனையோ பிள்ளைகள் வந்தார்கள், வந்து கொண்டிருப்பார்கள்.

பல விதங்களில் அவர்களைச் சார்ந்தவர்களது கலாசாரத்தில் எமது கலியாணம் குறைந்த தராதரமுடையதாக இருக்கலாம். அது சரி எப்பவென்றால் ஆசையால் உந்தப்பட்ட திருமணமென்றால். அதில் உடலுறவு சம்பந்தமான இன்பங்கள் மட்டுமல்ல எல்லா சிற்றின்பங்களும் அடங்கும் - நா ருசிக்கு சாப்பிட ஆசையால் உந்தப்படும் உறவு உட்பட. சக்திதேவி, மகாதேவன் மட்டுமல்ல; சரஸ்வதி சபாநாதனும், பரம் யோகநாதன் சொத்து விஷயத்தில் தனது சொற்படி கேட்கவில்லை என்றதும் பரம் என்னை முடித்தது அவமானம் என்றா. இதற்கிடையில் அவவின் இரண்டு பிள்ளைகளையும் சரஸ்வதியையும், சபாநாதனையும் ஒஸ்ரேலியா எடுப்பித்தது நாம். எமது திருமணம் உண்மையும் பரந்த

அமைப்பும் கொண்டது. அது ஒஸ்ரேலிய மக்களது பொதுக் கலாசாரத்துடன் ஒத்துப் போகும்.

நிச்சயம் காசுக்காகவும் மற்றைய சிற்றின்பங்களுக்காகவும் பேசிச் செய்யும் கலியாணங்களைவிட உயர்ந்தது. உலக அளவில் பல்கலாசார மல்டி கள்சர் (Multi Culture) படி இயங்கும் சமுதாயங்களில் தாமாக இயங்க உதவும். ஆனால் இவர்கள் அவ்விஷயத்தில் தமது பிள்ளைகளுக்கு பண்பில் தாழ்ந்த முதுசத்தையே விட்டுச் செல்கிறார்கள்.

சிட்னி முருகன் கோயில் தேரிலன்று சரஸ்வதியின் தாலிக்கொடி துலைந்து அதேபோல இன்னொரு மாதின் தாலிக் கொடியும் துலைந்து ஒன்று திருப்ப கிடைத்தபோது சரஸ்வதியின் மகள் நனினா வாதாடி அது தனது தாயின் தாலிக்கொடி என்று எடுத்ததாகக் கேள்விப்பட்டோம். நான் நினைத்தேன் இரண்டு மனைவியருடன் தோற்றமளிக்கும் முருகன் நான் தனது குழந்தை என்று சரஸ்வதிக்கும் அவமாதிரி குறுகிய சிந்தனை கொண்டவர்களுக்கும் படிப்பித்த பாடம் என்று. 06.05.2016 அன்று திரு. சபாநாதன் காலமானார். அவரது நினைவு மலரில் முகப்பில் குடும்பத்தினர் என்று பிள்ளைகள் பெயர் போடப்பட்டது. ஆனால் தாயின் பெயரில்லை என்று வட்டுக்கோட்டையில் எனக்குக் கூறினார்கள். அதுதான் அவர்களின் முதுசக் குணம். சகோதரிகள் குடும்பத்தினரைக் கேட்டும் அவர்கள் நாம் யோகநாதனுக்காக வெளியிட்ட நினைவுமலருக்கு தங்களது கூற்றுக்களைத் தரவில்லை. செந்தில் (மூத்தண்ணை மகன்) மட்டும் தந்தார். இவையெல்லாம் சித்திரகுப்தன் உண்மை ஏட்டில் பதித்து அதன்படி நாம் இறக்கும்போது என்ன பாவ, புண்ணியங்கள் அந்த ஏட்டில் பதியப்படுகின்றனவோ அவற்றின் சுருக்கத்தை பலன்ஸ் ஷகூீட் (Balance Sheet) இல் காட்டுவார். அதையே சாஸ்திர நிபுணர்கள் சாதகமாகக் காட்டுவர். காலம், இடம்பெயரும் பொழுது அந்த பெயர்ச்சி நடக்கும்பொழுது என்ன பாவ புண்ணியம் உள்ளதோ அதுவே அடுத்த கட்டத்து சாதகமாகும். வட்டுக்கோட்டையிலிருந்து ஒஸ்ரேலியாவிற்கு குடிவந்தும் வட்டுக்கோட்டை கலாசாரத்தை முதுசமாக்காமல் விளைவுகள் நிலையில் வியாபாரம் பண்ணுபவர்கள் அங்குமில்லை, இங்குமில்லாமல் குழப்பமான வாழ்க்கை வாழ்வர். குடும்பங்கள் பரவிப் பெருக்கும்பொழுது முந்தியதை

முதுசமாக்கினால்தான் தற்காலத்தில் / ப்ரஸென்ட் (Present) இல் வாழ முடியும். நான் ஒரு சாட்டட் எக்கௌண்டன்ட் (Chartered Accountant) / பட்டயக் கணக்காளர். அதன்படி வருடாவருடம் நிறுவனத்தின் செயற்பாடு களை வரவு – செலவு என்றும் சொத்து கடன் என்றும் வகுத்து வரவு – செலவின் மிகுதியை சொத்து – கடனுடன் சேர்த்து எடுக்கப்படும் படமே ஐந்தொகை / பலன்ஸ் ஷீட் (Balance Sheet) அப்படித்தான் நாம் ஒரு அமைப்பிலிருந்து மறு அமைப்பிற்கு போகும்போது பழையதின் நெட் பலன்ஸ் (Net Balance) வரவு – செலவு மிகுதியை மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும். முதுசத்தைத் தேடிய தேட்டமாக்குவதும், சீதனத்தை டொனெஷன் ஆக்குவதும் மூளைக் குழப்பத்தில்தான் முடியும். கலியாணம் முடிக்காதவர்கள் பழைய அமைப்பிலேயே இருப்பதால் / இருந்தால் அவர்களது உழைத்த சொத்து நேரடியாக முதுசமென ப்ரமோட் (Promote) பண்ணப்படுகிறது / உயர்த்தப்படுகிறது. பரமசிவம் உட்பட எல்லா சகோதரங்களுமே வேறு கலாசாரத்திற்கு மாறினர்.

ஆனால் நானறிந்து பரமசிவம் ஒருவரே பழைய உறவுகளுக்கு பொறுப்பெடுத்தார், யோகநாதனுடன் சேர்ந்து / அவரின் ஆசீர்வாதத்துடன்.

நாம் எமது பிள்ளைகளுக்கு காசு வசதியைவிட உயர்ந்த அமைப்புகளில் சுயமாக இயங்க வசதிப்படுத்தினோம். பரத்தின் சகோதரிகளின் பிள்ளைகள் பெரிய வீடுகள் இளைய வயதில் வேண்டினார்கள். ஒஸ்ரேலியன் முதுசத்தில் அவர்களது பங்கு மிகக் குறைந்தது. எல்லாரும் பொது கலாசாரத்தில் வருவது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் வேறு கலாசாரங்களை குறை கூறும்போது அந்த வேறு கலாசாரத்தின் சாபத்தை தேடிக் கொள்கிறோம். பொது நம்பிக்கையின் வட்டத்திற்குள் மட்டுமே உண்மையான நிர்வாகம் நடத்தலாம். பொது அறிவுமூலம் நிர்வாகத்தை கடமையாக செய்யலாம். இரண்டும் இல்லாமல் சுயநலத்திற்காக குறை கூறினால் அதன் விளைவு கூறுபவர்க்கே திருப்பிவரும். திருப்புபவர் சித்திகுப்தன். எமது ஆத்மாவின் எழுத்தாளர்.

# 12. உண்மையா, பகுத்தறிவா, கேள்வி அறிவா?

உண்மை மனோ பலத்தையும் மன அமைதியையும் தரும்
பகுத்தறிவு உயர்ந்த பொது சிந்தனையைத் தரும்
சிற்றறிவு மூளையை சூதாடத் தூண்டும்

கேள்வியறிவு சிற்றறிவு. கேள்வியறிவு மூலம் சாட்சி சொல்வது குற்றம். அப்படியான குற்றம் நாம் செய்யாமலிருக்கவே சத்தியப்பிரமாணம் எடுக்கிறோம். உண்மையா, பகுத்தறிவா, கேள்வி அறிவா என்று தன்னை, தன் செயற்பாடுகளை ஆராய்ந்து பார்க்காதவருக்கு தெரிவதில்லை. நீதிபதி திரு. கஜநிதிபாலன் தனது இறுதி கட்டளையில் பின்வருமாறு கூறுகிறார்.

“ஐந்தாம் எதிர்மனுதாரரே இவ்வழக்கின் இறந்த சுப்பிரமணியம் யோகநாதனின் சகோதரர். இவர் முன்வைத்த ஆட்சேபனை இரண்டாம் நான்காம் எதிர்மனுதாரர்களின் சகோதரர்கள் என்றும், இவர்கள் சீதனம் ஏலவே பெற்றிருந்தார்கள் என்பதனால் இறந்த சுப்பிரமணியம் யோகநாதனின் சொத்திலிருந்து பங்கு பெற உரித்தற்றவர்கள் என்பதாகும். அவர்கள் தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியத்தினை மன்று பரிசீலனை செய்வதோடு, சாட்சியமளித்தவர் ஆறாம் எதிர்மனுதாரர். இவர் ஐந்தாம் எதிர்மனுதாருடைய மனைவி. இவர் அவுஸ்ரேலியாவில் வதிபவர். இவருக்கு சொத்துக்கள் பற்றிய விடயங்கள் ஐந்தாம் எதிர்மனுதாரரால் சொல்லக் கேட்ட தகவல்களின் அடிப்படையிலேயே சான்றுகளை முன் வைத்துள்ளார். இச்சான்று ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றாக அமைய முடியாது என்றும், சொல்லக் கேட்ட சான்றாக அமைவதோடு, ஐந்தாம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் சாட்சியமளித்திருக்கவில்லை”

.....................................................................................

இந்த முடிவின்படி நீதிபதி எனது சாட்சியை சொல்லக் கேட்ட தகவல்கள் என்கிறார். அதேவேளை எனது திருமணத்தைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார் அதே கட்டளையில் :

“ஐந்தாம் ஆறாம் எதிர்மனுதாரர்கள் சார்பில் ஆறாம் எதிர்மனுதாரர் கஜலட்சுமி பரமசிவம் சாட்சியளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் இறந்தவர் ஐந்தாம் எதிர்மனுதாரருடைய சகோதரர் என்றும், தான் அவரை இருபத்தாறு (26) வருடங்களுக்கு முன் திருமணம் செய்ததாகவும், இறந்தவர் சம்பந்தமாக தனது கணவர் சொல்லித்தான் தகவல்கள் தெரியும் என்றும் சாட்சியமளித்துள்ளார்”

நான் இது பற்றி சத்தியப் பிரமாணம் எடுத்த சாட்சியாக கூறியது :

“ஐந்தாம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து 26 வருடங்களுக்கு மேல் என்றபடியால் அவர்களுடைய குடும்ப விபரங்கள் நன்றாக எனக்குத் தெரியும்” மேலும், “ஐந்தாம் எதிர்மனுதாரரின் தகப்பனை நான் நேரடியாக அறியமாட்டேன். கணவர் சொல்லித் தெரியும். தகப்பனின் பரம்பரை வீடு இரண்டாம் மனுதாரருக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்டது. இறந்தவர் அதே வீட்டில் இருந்தவர். அவரும் உழைப்பை தகப்பனுக்குக் கொடுத்தவர். இறந்தவர் திருமணம் செய்யவில்லை. அவரும் தகப்பனுடன்தான் இருந்தவர். இறந்தவருடைய சம்பாத்தியம் தகப்பன் இருக்குமட்டும் அவர் தகப்பனுக்கு கொடுத்தவர். என்னுடைய கணவர் அப்போது பல்கலைக்கழகத்தில் கடைசி வருடத்தில் படித்துக் கொண்டிருந்தார். அதற்குரிய காசை அவர்தான் கொடுத்தார். இரண்டாம் மனுதாரர் திருமணம் செய்யும்போது என்னுடைய கணவர் சீதனமாக பணம் கொடுத்தவர். கணவர் சொல்லித்தான் நான் சொல்லுகிறேன். கணவர் எனக்கு அற்றோனித் தத்துவம் தந்திருக்கிறார். சுப்பிரமணியம் யோகநாதன் யாழ்ப்பாணத்திலிருக்கும்போது அவருடைய முழு உழைப்பையும் தகப்பனாருக்கு கொடுத்து வந்தார்”

எனது சாட்சியத்திலிருந்து அங்குமிங்கும் வெட்டி, கொத்தி, தனக்கேற்ற வற்றை போட்டு ஒரு படம் காட்டுகிறார், நீதிபதி திரு. கஜநிதிபாலன்.

26 வருடங்களாக பரமசிவத்தின் மனைவியாக உள்ளேன் என்பதை நிராகரிக்கவில்லை. ஆகவே ஏற்றுக் கொள்கிறார். எப்படி? எனது திருமண சான்றிதழ் கேட்டாரா? குடும்பத்தில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் அதை எதிர்க்கவில்லை, மறுக்கவில்லை. இதில் பிரச்சினை எங்கென்றால் தகப்பனாரது சொத்து எப்படிப் பிரிக்கப்பட்டது என்று. அதைத்தான் என் கணவர் கூறித்தான் தெரியும் என்ற உண்மை மூலம் தெரியப்படுத்தினேன். அதேநேரம் யோகநாதனை நான் நேராக, அனுபவமூலம் அறிந்தேன் என்பதை அவர் தனது அறிவுக்குள் கொண்டு வரவில்லை. கொண்டு வந்திருந்தால் அவர் நினைத்தபடி தீர்ப்பு வழங்கமுடியுமா?

நான் சாட்சி சொன்னது யோகநாதனின் சொத்து எந்தக் குடும்பத்திற்கு பொதுச் சொத்து என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்தவே. அதாவது அவரது சொத்து பெற்றாரது சொத்துடன் சேர்க்கப்பட்டதா அவரால் என்பதையே இது காட்டுகிறது. சக்திதேவி, சரஸ்வதி போல வேலைக்கு வெளியே போகாமல் உள்ளுக்குள் செய்யும் பெண்கள்தான் இன்றும் அங்கு கூடுதலாக இருக்கிறார்கள். இதுவும் இளைய சாதியைச் சார்ந்த குடும்பங்களில் வழக்கம். இல்லையென்று வேலைக்குப் போனாலும் வெளியே தெரியும் விளைவுகள் காட்டும் வேலைகளுக்கு அவர்கள் போவது மிகக் குறைவு. 2016ஆம் ஆண்டில் தாதிமார் - 250 பேர் மட்டில் வேலையிலிருந்து நிறுத்தப்படப் போகிறார்கள் என்று பயந்து துணைவியில் எமது வீட்டிற்குப் பக்கத்திலிருந்த ஜயந்தி என்பவர் வந்து கேட்டு அந்தக் குழுவில் தலைமை எடுத்தவர்களுடன் கொழும்பில் சுகாதார அமைச்சுடன் கதைத்து அந்த நிலைப்பாட்டை சரிப்படுத்தினேன். மாகாண அமைச்சரும் உதவவில்லை, முதலமைச்சரும் கேட்டும் செயற்படவில்லை. அந்தப் பெண்களுக்கு தமது உழைப்பால் வரும் சொத்தைப் பாதுகாக்க இப்படியான பரிமாறல்கள் உதவும். இல்லாவிட்டால் குடிகார கணவனின், உழைக்கும் ஆண் ஆதிக்கத்தின் கீழ்தான் அவர்கள் வாழவேண்டும். இல்லாவிட்டால் குறுக்கு வழியில் புரட்சி பண்ண வேண்டும் - ஆயுதங்கள் தாங்கிய இயக்கங்கள் போல. சுதந்திர தன்மையால் உந்தப்படும் நான் அந்த சுதந்திர தன்மைக்கு இயற்கையாகவே மரியாதை பண்ணுவேன். யோகநாதன் அப்படிப்பட்ட

ஒருவர். பரமசிவத்துடன் எனக்கு ஒத்துப் போன தன்மையே அந்த சுதந்திர தன்மை தான். பரம் தனது உழைப்பை சேமித்து ஒஸ்ரேலியாவிற்கு மேற்படிப்பிற்கு வந்தார். இங்கு சின்னச் சின்ன வேலைகள் செய்து தன்னைத்தானே பராமரித்தார். பின்னர் பபுவா நியூகினி (Papua New Guinea) என்ற நாட்டிற்கு உழைக்கச் சென்றார். அங்கிருந்து என்னுடைய ஊக்கத்தையும் சேர்த்துதான் ஒஸ்ரேலியாவிற்கு யூனிவஸிட்டி ஓவ் நியூ சௌத் வேல்ஸ் (University of New South Wales) இல் வேலை கிடைத்து ஒஸ்ரேலியா வந்தார் / வந்தோம். இது ஒன்றுக்குமே ஒரு சகோதரமும் உதவவில்லை. சரஸ்வதி முக்கியமாக அதற்கு ஊக்கம் கொடுக்கவுமில்லை. காணியை விற்று பண உதவி செய்யவுமில்லை. பரம்தான் அவவுக்கு வீட்டை பெருப்பிப்பதற்கு தனது உழைப்பில் கொடுத்தார். இதெல்லாம் பரத்தின் சத்தியக் கூற்றில் உண்டு. எனது சாட்சியை சொல்லக் கேட்ட அறிவு / ஹியஸே (Hearsay) என்று தள்ளிவைத்த அதே நீதிபதி பரத்தின் சத்தியக்கூற்றின் மூலம் உண்மை என்னவென்றதையாவது அறிந்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் என்னை சாட்சியாக ஏற்க மறுத்திருக்க வேண்டும். பின்னரென்றாலும் எனது சாட்சியத்திலிருந்து ஒரு துளியேனும் தனது தீர்மானத்தில் சேர்த்திருக்கக்கூடாது. நீதிமன்றில் வழக்கை கொண்டு வருபவர்களுக்கும் அதை எதிர்ப்பவர்களுக்கும் உண்மை சொல்ல வேண்டிய கடமை உண்டு. வழக்கறிஞர்களுக்கு அந்த உண்மைக்கு சட்டத்தின் வரையறுப்புகள் நியதி மூலம் பகுத்தறிவைப் பாவித்து தரவுகளை ஒப்படைக்க வேண்டிய கடமை உண்டு. அவர்கள் வழக்கறிஞர்களாக அனுமதிக்கப்படும்போது அந்த சத்தியப்பிரமாணத்தை எடுக்கிறார்கள். தங்களது ஆசைகளை வழக்குகள் மூலம் வெளிப்படுத்தி பணமும் பதவியும் சேர்த்துக் கொள்பவர்கள் தொழிலுக்குத் துரோகம் செய்கிறார்கள். நீதிபதி மக்களுக்கு உண்மையாகவும் சட்டத்திற்கு விசுவாசமாகவும் இருப்பதாக சத்தியப்பிரமாணம் எடுக்கிறார். அந்த நீதிபதி பொது மக்களுக்கு எமது உண்மையை மறுத்தார். அதற்கு சட்டத்தின் பெயரைப் பாவித்தார். எமது கூற்றுக்கள் உண்மையா? பொய்யா? என்று அவருக்கு தெரியாமலிருந்திருக்கலாம். ஆனால் மனுதார்களுக்கு, மற்றைய

சகோதரங்களது உண்மை தெரிந்திருக்க வேண்டும். தெரிந்தது. அதாவது அவர்களுக்கு எங்களைப் பிடிக்கவில்லை என்று. முன்னர் பிடித்ததா என்று அவர் ஆராயவில்லை. எதைச் சொன்னால் முன்னிருந்தே பிடிக்காத மாதிரி காட்டலாம் என்பது அவர்களது இரண்டாவது சத்தியக்கூற்றிலிருந்து தெரிந்திருக்கும்.

“6ஆம் எதிர்மனுதார் ஏற்கனவே விவாகரத்து பெற்று மூன்று பிள்ளைகளுக்கு தாயுமானவர். தற்பொழுது 5ஆம் எதிர்மனுதாரரை விவாகம் செய்துள்ளார்”

அதையே சக்திதேவி அவவின் மகனை நாம் ஒஸ்ரேலியா எடுப்பித்த பின் நான் வட்டுக்கோட்டையில் நின்றபோது சாமி அறையில் வைத்து காசு கேட்டபோது நான் மறுத்ததும் “எங்கட தம்பி சிவம் உங்கள கலியாணம் முடிப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை, ஆனால் பிறகு உங்கள ஒத்துக் கொண்டோம்” என்று சொன்னா. அதற்கு நான் சொன்னேன் “அது உங்கள்ட பிழை - ஏறென்றால் நேரத்திற்கு உங்களுக்குப் பிடித்த ஓராளை நீங்கள் தேர்ந்து கலியாணம் பண்ணி வைக்கேல்ல. எதுவாக இருந்தாலும் உங்கட பிள்ளையை ஒஸ்ரேலியா எடுப்பித்து நல்ல ஊதியம் எடுக்கிற வழியை வகுத்தது நாங்கள்தான்” என்று.

அதேபோல் சரஸ்வதியும் தமது அலுவலை முடித்துக்கொண்டு இந்தச் சொத்தை இரகசியமாக தன்பக்கம் இழுக்க பரத்தைக் கூப்பிட்டு அவர் மாட்டேன் என்றதும் கலியாணத்தை “அவமானம்” என்றா. இருவரது கூற்றும் அவர்களது “நன்றியின்மை” என்ற உண்மையை காட்டின. ஆனால் உறவுகளை நன்றி மூலம் முழுமைப்படுத்தாதவர்களுக்கு அது தெரியாது.

நீதிபதி கஜநிதிபாலன் பார்ப்பதற்கு இருதரப்பு சட்டத்தரணிகளையும்விட இளையவராக தோற்றமளித்தார். அப்படியானவருக்கு கடமை உணர்ச்சி வலுவாக இருக்க வேண்டும் நீதி வழங்க. தனக்குத் தெரிந்த உண்மையில் நிற்கவேண்டும். மிகுதிக்கு சட்ட அறிவைப் பாவித்து தனக்குத் தேவை

யான - கடமைப்படி தேவையான வியூகத்தைப் பார்க்க வேண்டும். சக்திதேவியின் கூற்று நம்பிக்கையின் அடிப்படையில் வந்ததா? அவரது கணவர் மகாதேவனது கூற்றும் அப்படியா? அவர்களின் இரண்டாவது சத்தியக்கூற்றில் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

"6ஆம் எதிர்மனுதார் ஏற்கனவே விவாகரத்து பெற்று மூன்று பிள்ளை களுக்கு தாயுமானவர். தற்பொழுது 5ஆம் எதிர்மனுதாரரை விவாகம் செய்துள்ளார்"

இது சொல்லக்கேட்ட சான்றா, பகுத்தறிவு மூலம் அறிந்த அறிவா அல்லது நம்பிக்கையின் கூற்றா? அவர்கள் ஒருவருமே எமது கலியாணத்தை நேரில் பார்க்கவில்லை. எம்மில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பது நாம் எதிர்மனுதாரரென்றதிலிருந்து தெரிகிறது. அவர்கள் சட்டப்படி நாம் திருமணமானவர்கள் என்றதை நீதிமன்றத்திற்கு அறிவிக்க எமது மரிஜ் செட்டிவிக்கட் (Marriage Certificate) பிரதியை சமர்ப்பிக்கவில்லை. எந்த 5ஆம் எதிர்மனுதாரர் தகப்பனின் சொத்து விஷயங்களைப் பற்றி எனக்குக் கூறினாரோ அதே 5ஆம் எதிர்மனுதாரர் கூறித்தான் அவர்களுக்கு எமது கலியாணத்தைப் பற்றி தெரிந்திருக்கும் என்பது இதில் அடங்கியுள்ள உண்மை. அதுவும் சொல்லக்கேட்ட செய்தி அல்லவா? ஆனால் அந்த சக்தியக்கூற்றை நீதிபதி தள்ளி வைக்கவில்லை. மேலும் திருத்திய மனுவில் வழக்கறிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

"5ஆம், 6ஆம் எதிர்மனுதாரர்கள் மேலே குறிப்பிட்ட இடத்தில் வசிப்பவர்களும் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்களுமாகும்.

6ஆம் எதிர்மனுதாரர் ஏற்கனவே விவாகரத்து பெற்று 3 பிள்ளைகளுக்கு தாயுமானவர். தற்பொழுது 5ஆம் எதிர்மனுதாரரை விவாகம் செய்துள்ளார்"

இந்த இரண்டு பந்திகளும் அப்படியே அவர்களது சத்தியக்கூற்றிலும் உள்ளன. ஒன்றில் அது வழக்கறிஞரது சத்தியமாக இருக்கவேண்டும், அல்லது மனுதாரர்களது சத்தியமாக இருக்க வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்கள் தமது பக்கத்தவரைப் பற்றி மட்டுமே நம்பிக்கை மூலம் ஒரு

கூற்றை வெளிப்படுத்தலாம். வட்டுக்கோட்டை தீர்மானம் அப்படியான ஒன்று. சிங்களவருக்கு என்ன நடந்தது என்பதை தமிழர் வெளியே நின்று பத்திர அத்தாட்சி மூலம் சமர்ப்பிக்கலாம். அதில் அந்த சமர்ப்பிக்கப்பட்ட செயல்தான் உண்மை. அதிலிருக்கும் விஷயங்களை அறிவால்தான் கணிக்கலாம். இது மாதிரித்தான் அந்த தகவலை மனுதார் சமர்ப்பித்தார்கள் என்பதுதான் பொது உண்மை. அது நடந்ததா என்பதற்கு பத்திரசாட்சி வேண்டும் அல்லது பொது நம்பிக்கை இருக்கவேண்டும். யார் என்னத்தைச் சொல்ல வேண்டும் என்ற நியதியை வரையறுத்து சட்டபூர்வமான அமைப்பை அந்த நீதிமன்றிற்குள் அனுமதிக்க வேண்டியது நீதிபதிகளதும் நீதிமன்ற நிர்வாகிகளதும் கடமை. சத்தியக் கூற்றும், மனுவும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டிருந்தால் அது அனுமதிக்கப்படலாம் இரண்டும் மனுதாரரால் சுயமாக தயாரிக்கப்பட்டிருந்தால். இவ் விஷயத்தில் அப்படி யான அம்சம் எனக்குத்தான் இருந்தது. அதை நீதிபதியின் பூரண ஒத்துழைப்புடன் வழக்கறிஞர் மறைத்தார் - மக்கள் முன்னால், நிர்வாகம் வேண்டாம் என்று மக்களுக்கு சொல்லிவிட்டு இரகசியமாக தாம் நிர்வாகம் செய்திருக்கிறார்கள். இந்த அவர்களது மனுவும், சத்தியக்கூற்றும் அதற்குச் சாட்சி. நிர்வாகம் தேவையில்லையென்றால் நான் எப்படியான கலியாண அமைப்பில் பரத்துடன் வாழ்கிறேன் என்பது நீதிமன்றிற்குத் தேவை இல்லாத விஷயம். இல்லாவிட்டால் நானும் மரபுரிமையாளராக இருக்க வேண்டும். சரஸ்வதிக்கும், சக்திதேவிக்கும் அவர்களது கணவர்மாரது சம்மதம் தேவைப்பட்டிருக்கலாம். நீதிபதி திரு. அரியநாயகம் அப்படித்தான் முதலாவது மனுவை திருப்பினார். மகாதேவனையும் தேசவழமைப்படி சேர்க்கச் சொன்னார். ஆனால் சரஸ்வதி பார்க்கலேஸ் பாங்கிற்கு கடிதம் எழுதியது அதே தேச வழமைக்கு மாறு என்று நீதிபதி சத்தியக்கூற்றை தள்ளி வைக்கவில்லை - திருத்தி அமைக்கவும் சொல்லவில்லை.

மத்ஸ் (Maths) இல் கல்குலஸ் (Calculus) என்ற பாடம் உள்ளது. அது அந்தப் பாடத்தின் மேற்படிப்பு. நான் மத்ஸ் பாடத்தில் டிஸ்டிங்ஷன் எடுத்தேன் 10ம் வகுப்பில். பின் எக்கௌன்டன்ஸி (Accountancy) படிக்கப் போனதால் மத்ஸ் அதற்கு மேலே படிக்கவில்லை. ஆனால் பரம் பிள்ளைகளுக்கு

படிப்பிக்கும் போது கேட்டுப் படித்திருக்கிறேன். அதன்படி ஸ்மோல் (Small) சேஞ்ச் (Change) மூலம் ஒரு அமைப்பின் தன்மையை கணிப்பர் என்பது எனது விளக்கம். அது மாதிரித்தான் பெரிய நிர்வாகத்தில் சிறு விதிமுறைகள் மூலம் அதன் தன்மையை / உண்மையை கணிக்கலாம். சத்தியக் கூற்றும் மனுவும் ஒரே அச்சில் இருந்தால் அது உண்மையும் பகுத்தறிவும் ஒரே உருவம் கொண்ட அமைப்பு. மனம் ஆன்மாவுடன் ஒன்றி வாழ்வது போல. நேற்று (23.06.2018) இன்டநஷனல் (International) /சர்வதேச யோகா நாள். நானும் உறவினர் ரவியும் யோகாவின் மகிமை பற்றி ஈமெயில் மூலம் கதைத்தோம். நான் காலையில் எனக்குத் தெரிந்த முறையில் தியானம் செய்வேன். அது மனதிற்கு இதமாக இருக்கும். அப்படித்தான் எனது உண்மைக்கு கிட்ட வாழப்பழகினேன். என்னைப் பொறுத்தவரையில் அதுதான் ஆன்மீக வாழ்வு. நீதிமன்றமும் தனது உண்மையின் அருகில் வாழ்ந்தால் தான் அது புண்ணிய ஸ்தலமாகும். அந்த நீதிமன்று வழங்கும் நீதி, உண்மைப்படி உள்ளுக்குள் நிம்மதியைக் கொடுக்கும். அதன் அறிவு அந்த உண்மையின் அமைப்பை அந்த இடத்தில் / நீதிமன்றில் அந்தக் காலக்கட்டத்தில் காட்ட உதவும். மனுதார், எதிர்மனுதார் விஷயத்தின் உண்மையை தமது பாஷையில் அமைக்க / கூறவேண்டும். அப்பத்தான் அந்த சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு அந்த விஷயத்தால் பலன் இருக்கும். சக்திதேவியும் சரஸ்வதியும், நானும் தான் கூண்டில் நேரடியாக சாட்சி சொன்னோம். சக்திதேவி கொடுத்த சத்தியக் கூற்றிற்கும், நேரடி சாட்சிக்கும் விஷயத்திலேயே வித்தியாசங்கள் இருந்தன. நேரடி சாட்சி மூலம் சக்திதேவி நீதிமன்றிற்கு தனது கையெழுத்துடன் கொடுக்கப்பட்ட சத்தியக்கூற்று "பொய்" என்று உறுதிப்படுத்தினார். பரமசிவம், யோகநாதனை பராமரித்தார் என்று நேரடி சாட்சியில் கூறினா. சத்தியக்கூற்றில் எனக்கு அது இரண்டாம் கலியாணம் என்று கூறி பரமசிவம் பிழை செய்தமாதிரி கூறுகிறா. சீதனம் தரவில்லை என்று நேரடி சாட்சியில் கூறினா. சத்தியக்கூற்றில் எல்லா சகோதரங்களும் தேசவழமைக்கு உட்பட்டவர்கள் என்று கூறி உள்ளா- ஏதோ அவ தேசவழமையில் தேர்ச்சி பெற்றவ மாதிரி. அதேபோல சரஸ்வதி ஏதோ தான் சர்வதேச நிர்வாகத்தில் தேர்ச்சி பெற்றவமாதிரி லண்டனில்

உள்ள பார்க்லேஸ் பாங்குக்கு கடிதம் எழுதியுள்ளா. அதன் தலையங்கம் “Request for withdrawal of savings accounts held by Mr. Subramaniam Yoganathan” அதாவது எப்படி யோகநாதனின் பெயரில் இருக்கும் காசை எடுப்பது என்று. நான்கு சகோதரங்களது பெயர்களையும் கூறியுள்ளா. கூறாதது என்னவென்றால் தான் உள்ளுக்குள் உறவை வியாபாரம் பண்ணி தான் தான் யோகநாதன் என்று - அதாவது அவரின் ஒரே அரச வாரிசு (புலிகள் தமிழரின் ஒரே பிரதிநிதிகள் என்று கூறியது போல) என்று நிர்வாகம் பண்ணுவா என்றும், அதற்காக இந்த பத்திரங்களை ஒழித்து மகன் யோகானந்தா மூலம் பரமசிவத்திடம் அவரின் பங்கை சகோதரிகளுக்கு எழுதித் தரும்படியும், தர்மலிங்கத்திடம் அப்படி வாங்கியதையும். தர்மலிங்கத்தின் மகன் வேணு, அப்படி தகப்பன் எழுதிக் கொடுத்ததாக உறுதிப்படுத்தினார். அதாவது சகோதரிகள் சீதனத்தை கள்ளமாக ஒழித்து பெற்றார்கள் என்பதுதான் உண்மை. ஆண் சகோதரர்களை எழுதித்தரும்படி கேட்டதை, தர்மலிங்கம் எழுதிக் கொடுத்ததை பரத்தின் சத்தியக்கூற்றில் வெளிப்படுத்தி உள்ளார். ஆனால் அது தள்ளிவைக்கப்பட்டது. கொழும்பு வழக்கறிஞர் இளம் நீதிபதியிடம் கேட்டதும். அதாவது அங்கு யோகேந்திராதான் நீதிபதி அவரது ஊடகம் திரு. கஜநிதிபாலன். ஜனநாயகத்தில் இளைய பதவியிலிருப்பவர் நீதியை தானே பெற்றுக்கொள்ள இடமுண்டு - ஏ.டி.எம். காட் (ATM Card) போட்டு பாங்கிலிருந்து எமது காசை எடுப்பது போல. அதை வஸிலிட்டி (Facility) / வசதி என்று சொல்வோம். ஆனால் அதற்கு நாம் முதலில் காசைப் போட்டிருக்க வேண்டும். இவ்விஷயத்தில் சட்ட அறிவில் அதாவது சத்தியக்கூற்று சம்பந்தப்பட்ட சட்ட அறிவில் வழக்கறிஞர் நீதிபதியைவிட கூடப் போட்டிருந்தால் வழக்கறிஞர் தன்னையே சுய நிர்வாகம் செய்கிறார். அதை வசதிப்படுத்த வேண்டியது நீதிபதியின் கடமை. அதேபோல் மனுதார், எதிர்மனுதார் வெளிப்படுத்தும் உண்மையும். அதில் பரத்தின் சத்தியக்கூற்றுதான் சுயமாக தயாரிக்கப்பட்டது. மனுதாரர்கள் வழக் கறிஞரது அறிவுக்கு கையெழுத்திட்டார்கள். அமைப்புத்தான் வழக்கறி ஞருக்குரியது. மனுதாரரது சத்தியக்கூற்றில் ஜுரட் க்ளோஸ் (Jurat

Clause) – அதாவது அந்த சத்தியக்கூற்று எங்கே, எப்பொழுது, யாருக்கு முன்னால் கையெழுத்திடப்பட்டது என்று காட்டும் பந்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“இதில் கொண்டிருப்பவைகளை வாசித்து இவர்களுக்கு விளங்கப்படுத்தி அவை சரியென ஏற்றுக்கொண்டு, வட்டுக்கோட்டையில் இருந்து 2011ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி என் முன்னிலையில் உறுதிப்படுத்தி கையொப்பம் வைத்தார்கள் என்று வெளிப்படுத்துகிறேன்” கையெழுத் திட்டவர்கள் செ. மகாதேவன், ம. சக்திதேவி. அதை உறுதிப்படுத்தியவர் சமாதான நீதவான்.

விளங்கப்படுத்தப்பட வேண்டியிருந்தால் அந்த சத்தியக்கூற்றை அவர்கள் தயார் செய்யவில்லை என்பது தெளிவாகிறது. அது சமாதான நீதவானும் அல்ல. வழக்கறிஞர் என்றால் அவருக்கு எப்படி இந்த தகவல்கள் கிடைத்தன என்ற உண்மையும் வழக்கறிஞரின் சத்தியக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு மனுதாரின் சத்தியக்கூற்றுடன் அணைக்கப்பட்டிருக்க வேண்டும். மகாதேவனும் சக்திதேவியும் கணவன் மனைவி என்றபடியால் ஒருவருக்காக மற்றவர் பொது நம்பிக்கை மூலம் உண்மையை, சத்தியத்தை வெளிப்படுத்தலாம். ஆனால் காசுக்காக வேலை செய்யும் வழக்கறிஞருக்கும் மனுதாருக்கும் அப்படி ஒரு உறவு இல்லை. ஆகையால் ஒருவரின் சத்தியம் மற்றவரின் அறிவாகலாமே ஒழிய சத்தியமாகாது. சத்தியம் அருவம். அதை அனுபவித்தவர்தான் அதற்கு உருவம் கொடுக்க முதலுரிமை உள்ளவர். நான் ஒஸ்ரேலியாவில் எனது வழக்குகளை நானே வாதாடுவேன். சட்டத்தின் விதிமுறைகளைக் கேட்டுப் படித்தேன் / படிப்பேன். மற்றப் பக்கம் அநேகமாக உயரிடமென்றபடியால் அவர்களது வழக்கறிஞர்கள் பெரியவர்களாக இருப்பர். அவர்கள் எனக்கு முறைகளைக் காட்டுவார்கள். ஏபிஸி (ABC – Australian Broadcasting Corporation) வக்கீல் சொன்னார் எனக்குத் தேவையானதெல்லாம் ஒரு ஸெட்டிவிக்கட் (Certificate) தான் என்று. அதில் பிரச்சனை என்னவென்றால் ஸெட்டிவிக்கட்டில் தங்கியிருக்கும் போது நானும் அவர்கள் போலாகிவிடுவேன். சட்டத்தை உண்மையாக

அனுபவிக்கும் பொழுதுதான் அதை அமைத்தவர்கள் எமக்குள் இருந்து வழிகாட்டுவார்கள். இல்லாவிட்டால் உண்மைக்கும் அறிவுக்கும் போராட்டம் வரலாம். எங்களது மூன்றாவது பிள்ளை காயத்ரி ஒரு வழக்கறிஞர். எந்த அளவிற்கு நான் அவ வழக்கறிஞராக சக்தியால் ஊக்குவித்தேனோ அந்த அளவிற்கு அவவின் சட்டஞானம் எனக்குத் தேவையானபொழுது எனக்குள்ளிருந்து வழிகாட்டும் / ஊக்குவிக்கும்.

இதைத்தான் கிருஷ்ணபரமாத்மா த்ரௌபதியிடம் கூறினார் - அவ இருதய வாசா என்று கூப்பிட்டதும் தான் உடனே வந்து அவக்கு எல்லையில்லா சேலையை வழங்கி அரச சபையில் அவ நிர்வாணமாக நிற்காமல் காப்பாற்றினார் என்று.

அதுதான் சத்தியத்தின் தன்மை. மனுதார் சத்தியக்கூற்று அப்படி ஒன்றா? கல்லைக் கண்டவன் கடவுளைக் காணமாட்டான் கடவுளைக் கண்டவன் கல்லைக் காணமாட்டான் என்பார்கள். கேள்வி அறிவு கல், உண்மை / சத்தியம் கடவுள். கேள்வி அறிவிற்கு சத்தியக் கூற்றிலோ நீதிமன்றிலோ இடமில்லை. பகுத்தறிவிற்கு மனுவில் இடமுண்டு, சத்தியக்கூற்றில் அல்ல. அப்ப எப்படி மனுவும் சத்தியக்கூற்றும் ஒரே அச்சில் வார்க்கப்பட முடியும்? ஒன்றில் மனுதார்கள் வழக்கறிஞர் அளவிற்கு சட்ட அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் வழக்கறிஞரது விஷய அறிவும் மனுதாரரது விஷய அறிவும் ஒரே மட்டத்தில் இருக்கவேண்டும். ஆனால் இங்கே வழக்கறிஞர் கொழும்பில் செல்வாக்கான பகுதியில் வாழ்பவர். மனுதார் வட்டுக்கோட்டையில் ஓரளவிற்கு செல்வாக்கான பகுதியில் வாழ்பவர்கள். ஆனால் கொழும்பும் வட்டுக்கோட்டையும் வாழ்க்கை அமைப்புகளில் ஒருவகையல்ல. மனுதார்களுக்கு எழுத்தறிவு போதா விட்டால் சத்தியக்கூற்றை வட்டுக்கோட்டைவாசி ஒருவர் மூலம் உருவம் கொடுத்திருக்க வேண்டும் - அது சமாதான நீதவானாகக்கூட இருக்கலாம். நானறிந்தவரை வழக்கறிஞர் யோகேந்திரா அராலியில் பிறந்து வளர்ந்தவர். ஆனால் அவர் கொழும்பிற்குப் போய் வாழத்தொடங்கி வெகு காலங்களாகிவிட்டன. மனுதாரர்களது முதல் சத்தியக்கூற்று

இங்க்ளிஷில் இருந்தது மூலம் அவர் தான்தான் அங்கே எல்லாமாக எடுத்து தானே கட்டளைகளையும் வழங்கினார் என்பது தெரிகிறது. இது கொழும்பிலும், ஒஸ்ரேலியாவிலும்கூட நடப்பதை அனுபவமூலம் தான் உணர்ந்திருக்கிறேன். எங்கே நீதிபதிகள் தமது பதவிப்படி இயங்க வில்லையோ அங்கே கெட்டிக்கார வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தை டேக் ஓவ (Tack Over) பண்ணுகிற சாத்தியக்கூறு அதிகம். அதைத்தான் 26.01.2012 அன்று நீதிபதி திரு. அரியநாயகம் கண்டித்து தடுத்தார். ஆனால் இளைய நீதிபதி திரு. கஜநிதிபாலன் அந்த மூத்தவரை தன்னுள் கொண்டு வந்து அவரது வாரிசாகத் தவறிவிட்டார். நான் காயத்ரியின் சட்டப் படிப்பிற்கு பங்களித்தமாதிரி சகோதரிகள் யோகநாதனின் உழைப்பிற்கு பங்களித்திருந்தால் ஆண் - சகோதரங்களைவிட - கூடுதலாக - நிச்சயமாக அவர்கள்தான் சொத்து பங்களிப்பை முன்னின்று நிர்ணயிக்க வேண்டும். சரஸ்வதி சாட்சிக் கூண்டில் சத்தியப்பிரமாணம் எடுத்து 05.09.2013 அன்று பின்வருமாறு மொழிந்தா :

"நான் திருமணம் முடித்தபோது எனக்கு எனது தகப்பனின் சீதனம் தரவில்லை. எனக்கு நன்கொடையாக வீடு திருமணமாவதற்கு முன்னர் தந்துவிட்டார். திருமணத்தின்போது சீதனம் என்று ஒன்றும் தரவில்லை. தாய் இறக்கும்பொழுது மரணித்தவருக்கு 10 வயது. அதன்பிறகு நான்தான் மூத்த சகோதரி என்றமுறையில் அவர்கள் எல்லோரையும் வளர்த்தேன். கௌரவ நீதிமன்றத்திற்கு கூறுகிறேன் தன்னுடைய சம்பளப்பணத்தை பெற்று பார்க்லேஸ் பாங்கில் போட்டார். நீதிமன்றில் நான் கேட்பது தம்பியின் சொத்தை நான்காகப் பிரித்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்."

# 13. ஒருவர் எப்ப உண்மையான அம்மாவாகிறார்?

பதவியை எடுப்பதாலோ பிடிப்பதாலோ ஒருவர் மூத்தவராக மாட்டார்
தன்னை ஒறுத்து பொது பலனில் போடுபவரே மூத்தவராகிறார்

சரஸ்வதிக்கு தான்தான் எல்லோரையும் பராமரித்தவ என்று பலனுக்காக சொல்வது வழக்கமாகிவிட்டது. பிறவிக்குணம் மாதிரி. சரஸ்வதி சமைத்திருக்கலாம், இளையவர்களை உடலளவில் பராமரித்திருக்கலாம். அது உண்மை என்றால் இந்த விஷயத்தில் அவ வட்டுக்கோட்டை வந்து யோகநாதனின் ஒப்பரேஷனுக்குப் பிறகு அவரை பராமரித்திருப்பா. அவரும் கிணற்றில் விழுந்திருக்கமாட்டார் - அநாதை போல. அந்தக் குடும்பத்தில் பெண்களது தொழிலும் ஆண்களது தொழிலும் வேறு வேறு. ஒன்றை மற்றது எடைபோடுவது பாலுக்கு சீனியில்லை என்பதா கஞ்சிக்கு உப்பில்லை என்பதா பெரிய பிரச்சனை என்று அளவிடுவது போல. ஒவ்வொன்றையும் அதனது அமைப்பில் வைத்துப் பார்ப்பது தான் உண்மையான பார்வை. சரஸ்வதி 14 வயதில் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தப்பட்டு பெண்களின் தொழிலில் முழுநேரமும் ஈடுபட்டா. அதற்குரிய மரியாதை அவவிற்கு அந்தக் குடும்பத்திலும் தூர உறவினர்களிடமிருந்தும் கிடைத்தது. அதே 14 வயதில் நான் பள்ளிக்கூடம் போய் முதலாம் பிள்ளையாக வந்து, வீட்டிலும் அக்காவுடனும் அப்பாவுடனும் சேர்ந்து அம்மாவுக்கு தம்பி பிறந்தபின் பராமரிக்க உதவினேன். அம்மா - அப்பாவிடமிருந்த சொத்தை - நகைகள் மட்டும் - அக்காவிற்கு சீதனமாகக் கொடுக்கக் கூறி நான் உழைத்துக் கட்டுவதாகக் கூறி கடனும் கலியாணச் செலவிற்கு எடுக்கச் சொன்னேன். எனக்கு எக்கௌண்டன்ஸி செய்ய முதலில் ரூபா 4,000 பணம் கட்ட வேண்டியிருந்தது. அதுதான் எனது முதுசம். சரஸ்வதிக்கு தகப்பன் வீடு எழுதியிருக்காவிட்டால் சபாநாதன் அவவை கலியாணம் செய்திருப்பார் என்பது ஐமிச்சமே. அவவைவிட கூடப் படித்த மாப்பிள்ளை வர வேண்டுமென்றால் சீதனம் இருக்க வேண்டும். அதுதான் முறையான அமைப்பு. எனது முதல் கலியாணத்தில் பெற்றாருக்கு இருந்த பிரச்சனை

அவர் என்னைவிட குறையப் படித்தது தான். சீதனமில்லாமல் படித்த மாப்பிள்ளை யாழ்ப்பாண இலங்கைத்தமிழ் சமுதாயத்தில் வருவது அபூர்வம். ஒருமுறை எனது தம்பி சொன்னான், நான் எஞ்ஜினியராக படிக்கப் போயிருந்தால் முதலிலேயே பரத்தை முடித்திருப்பேன் என்று. நான் சொன்னேன் இல்லை, அப்ப பேசிச் செய்ய நிச்சயம் பரத்தின் அப்பா சீதனம் எதிர்பார்த்திருப்பார். தானே விரும்பி பரம் செய்திருந்தால் தள்ளி வைக்கப்பட்டிருப்பார் தகப்பனின் தலைமையில். பரத்திற்கும் அப்ப பரந்த ரசனை இருக்கவில்லை. அப்பா சொல் தட்டாத பிள்ளை. அப்பா தெய்வமாகிய பின் பரம் அவரைப் போற்றியதால் நான் அமைந்தேன். தகப்பனை குறை கூறிய சரஸ்வதிக்கு எப்படி அவரது ஆசி கிட்டும்? தகப்பன் நிலையிலிருந்த யோகநாதனிடம் இருந்து எனக்கு ஆசி கிட்டியது. அவர் என்னுடம் தனக்கு காங்கேசன்துறை சிமெண்ட் வக்டரி (K.K.S. Cement Factory) யில் நடந்த பிரச்சனை பற்றியும், அந்த வழக்கைப் பற்றியும் நேரம் போவது தெரியாமல் கதைத்தார். திரு. கே. ஸி. நித்தியானந்தத்தின் கெட்டித்தனங்களை ரசித்துப் பகிர்வார். நான் சத்தியத்தின் வழியில் போகிறேன் என்றார். தனது வழக்கின்போது தனக்கு குடும்பத்திலிருந்து ஒருவரும் ஆதரவு தரவில்லை என்றார். அவரது கல்விக்கும் அதன்மூலம் வந்த வேலைக்கும் சரஸ்வதி பங்களித்திருந்தால் அவரது நோவில் அவ பங்கு கொண்டிருப்பா. நோவில் பங்குகொள்ள தேவையானது அக்கறை. அறிவு தேவையில்லை. ஆனால் பார்க்லேஸ் பாங்கிற்கு எமக்குச் சொல்லாமல் சரஸ்வதி கடிதம் எழுதி தனது உண்மையை வெளிப்படுத்தினா. அதாவது சுகத்தில் பங்கு வேண்டும் துக்கத்தில் அல்ல என்று. முதலில் கஷ்டப்பட்டு ஒறுப்பவருக்கே ஒரு உறவில் மூத்த பதவி. அது யோகநாதனுக்கும் அதற்குப் பிறகு பரமசிவத்திற்குமே இந்தக் குடும்பத்தில் தகப்பனின் பதவியும் அதற்குரிய முதுசச் சொத்தும். திருப்பத்திருப்ப நான் பராமரித்தவ என்று சரஸ்வதி கூறுவது அவ செய்த தொழிலின் மூலம். ஒவ்வொரு முறையும் காசு அதற்கான பலனாக வரும்பொழுது அந்த தொழில் வந்த பாதையின் அமைப்பில் இடம்பெற தவறுகிறா. பலனை ஒறுக்க அமைப்பாகிறது. அமைப்பை ஒறுக்க சக்தியா கிறது. அதனால்தான் பெண்ணுக்கு குறைந்த பதவி கிடைக்கும்போது அவ அதனை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும்பொழுது சக்தியாகிறா. எந்த இளையவர்களும், சிறுபான்மையோரும் அப்படியே. ஆனால் உறவில் மற்றவருக்கு சமமாகவோ கூடுதலாகவோ அக்கறை கொண்டிருக்க

வேண்டும். அத்துடன் / அல்லது – அன்ட் / ஓ (And / Or) தொழில் செய்திருக்க வேண்டும் உயர்பதவியிலிருந்து. அப்படி சரஸ்வதி செய்திருந்தால் பரம் 1989ல் பெரும் விபத்தில் காயப்பட்டிருந்தபொழுது பதைபதைத்து டெலிபோன் பண்ணி கதைத்திருப்பா. எனது அம்மா அப்ப இந்தியாவிலிருந்து கதைத்தா. அதேபோல யோகநாதனின் தேவைப்படி பராமரிக்க போயிருப்பா. அவவை இயக்கிய சக்தி தகப்பனது. அவரை தள்ளிவைத்தால் அந்த சக்தி வர பாதை இல்லை. உண்மையாக இருந்தால் அவவின் மனதில் அந்த சக்தி தன்னை உரிய இடத்தில் உரிய நேரத்தில் வெளிப்படுத்தும்.

மனுதாரரது சத்தியக்கூற்றும் பொய். சரஸ்வதியின் சாட்சியும் பொய். பராமரித்தது சில விஷயங்களில். அது நடந்தது. அதற்குரிய கூலியோ பதவியோ பெற்ற பின் அதைப் பாவித்தால் அது பதவித் துர்ப்பிரயோகம். அதை வசதிப்படுத்துகிற நீதிமன்றம் நீதி வழுவுகிறது. ஆசைக்கு வேகம் கூட. இவர்களின் ஊடகமாக வந்த நீதிபதி திரு. கஜநிதிபாலன் பின்வருமாறு கூறுகிறார் அவரது கடைசிக் கட்டளையில் :

“மனுதார் தரப்பில் இரண்டாம் மனுதாரர் மன்றில் சாட்சியம் அளித்து சாட்சியம் முடிவுறுத்தப்பட்டது. அவர் தனது சாட்சியத்தில் ‘.................. தனது தகப்பனார் 1972ஆம் ஆண்டில் இறந்தார் என்றும், அவர் தனக்கு சொத்துக்களை எழுதித் தந்ததாகவும், சீதனம் எதுவும் வழங்கப்படவில்லை. யோகநாதன் நைஜீரியாக்குப் போய் சம்பளம் பெற்று பார்க்லிஸ் வங்கிக்கு சம்பளத்தையும் அனுப்பியிருந்தார் என்றும், இளைப்பாறி வட்டுக்கோட்டையில் வசித்து வந்தார் என்றும், தன்னுடைய அக்கா சரஸ்வதி பரமசிவம் யோகநாதனை இறக்கும் வரை பார்த்தார் என்றும் சாட்சியமளித்திருந்தார்.”

சக்திதேவியின் சாட்சி பின்வருமாறு பதியப்பட்டுள்ளது, “எனது தகப்பனார் 1972ஆம் ஆண்டு இறந்துவிட்டார். தந்தையார் மரணமடைய முன்னே எனக்கு அவர் சொத்துக்களை எழுதியிருந்தார். எனக்கு சீதனம் ஒன்றும் தரவில்லை. தந்தையார் உயிருடன் இருக்கும் போது பங்கிட்டு கொடுத்துவிட்டார். எனது தந்தையார் இறந்த பின் இறந்த யோகநாதன் நைஜீரியாவிற்கு வேலைக்குப் போய்விட்டார். நைஜீரியாவில் வேலை பார்த்து சம்பளம் பெற்றிருந்தார். நைஜீரியாவில் வேலை செய்யும்போது பார்க்லிஸ் பாங்கிற்கு சம்பளத்தை அனுப்பியிருந்தார். அதன்பிறகு அங்கிருந்து இளைப்பாறி வட்டுக்கோட்டைக்கு வந்தார். வட்டுக்கோட்டைக்கு வந்து

என்னுடைய வீட்டில் இருந்தார். ஒருநாள் காணாமல் போய்விட்டார். அவர் குளிக்கப்போய் காணவில்லை. கிணற்றுக்குள் விழுந்து இறந்துவிட்டார். எனக்கு சரஸ்வதி அக்கா முறையானவ. அதன்பிறகு என்னுடைய அக்கா சரஸ்வதியும், பரமசிவமும் யோகநாதனை இறக்கும்வரை பார்த்துக் கொண்டிருந்தார். சுப்பிரமணியம் பரமசிவம் யோகநாதன் இறந்த பின்னர் அவுஸ்ரேலியாவிற்குப் போய்விட்டார்''

சாட்சிக்கும் முடிவுக்கும் இடையில் பின்வரும் கூற்றுக்கள் ஒழிக்கப்பட்டன அல்லது மாற்றப்பட்டன.

1. ஒருநாள் காணாமல் போய்விட்டார். அவர் குளிக்கப் போய் காண வில்லை. கிணற்றுக்குள் விழுந்து இறந்து விட்டார்.
2. அதற்கு பிறகு என்னுடைய அக்கா சரஸ்வதியும், பரமசிவமும் யோகநாதனை இறக்கும்வரை பார்த்துக் கொண்டிருந்தார்.

...............................................................................

கிணற்றுக்குள் விழுந்து இறந்தாரென்றால் பராமரிப்பு காணாது அல்லது இல்லை என்றுதானே அர்த்தம். நீதிபதியின் அறிவில் சொத்துப் பிரச்சினைக்கும் கிணற்றுக்குள் விழுந்ததற்கும் தொடர்புண்டா என்ற கேள்வி எழ வேண்டாமோ? மல்லாகம் நீதிமன்ற நீதவானும் மரண விசாரணைக்காரருமான திரு. நன்னியர் தம்பிமுத்தன் அனுமதி பெற்றுத்தான் யோகநாதனின் உடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்ற சாட்சி மரண சான்றிதழில் கூறப்பட்டுள்ளது. சக்திதேவியின் சாட்சியத்தின்படி சரஸ்வதி, சக்திதேவி, பரமசிவம், மூவரும் மரணம் சம்பவித்தபொழுது அங்கிருந்தனர். ஆனால் நீதிபதி கஜநிதிபாலனின் முடிவுப்படி - பரமசிவம் அங்கிருக்கவில்லை. சரஸ்வதியின் கணவரின் பெயரும் சபாநாதனில்லாமல் பரமசிவமாகிவிட்டது. அப்படியான நீதிபதி எமது சார்பில் பரம் கொடுத்த சத்தியக்கூற்றை தள்ளி வைத்தார். நான் சொன்ன சாட்சியை சொல்லக் கேட்ட தகவல் என்று அவமதித்தார். 04.10.2012 அன்று நீதிபதி பின்வருமாறு பதிகிறார் :

"5ஆம், 6ஆம் எதிர்மனுதார் சார்பில் தோன்றும் சட்டத்தரணி பின்வருமாறு மன்றுக்குச் சமர்ப்பிக்கிறார்.

இவ்வழக்கில் மனுதாரின்………….

இன்றைய தினம் குறித்த வழக்கெழுவினாவை சட்ட வழக்கெழு வினாவாகக் கொண்டு குறித்த வழக்கெழுவினா பற்றியதான எழுத்து மூல சமர்ப்பணம் 1ஆம், 2ஆம் மனுதார் சார்பிலாக மன்றில் அணைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் குறித்த வழக்கெழுவினாவை பரிசீலித்தபோது சத்தியக்கூற்றின் சத்தியப்பிரமாணப் பகுதியிலேயே (Jurat Clause) குறித்த வழக்கெழு வினாவிற்கு ஆம் என்ற பதிலைத் தவிர வேறு எந்த பதிலும் வழங்கமுடியாத நிலை உள்ளது.

மேலும் 5ஆம் 6ஆம் எதிர்மனுதார்கள் சார்பில் அணைக்கப்பட்டுள்ள சத்தியக்கூற்றில் குறைபாடுகள் காணும் இடத்தில் அதனை திருத்தி அணைப்பதற்கு 5ஆம், 6ஆம் எதிர்மனுதார்கள் சார்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஆட்சேபித்து மன்றின் நேரத்தை வீணடிப்பதுடன், ஒருமுக தன்மைகளைப் பெறவும் மனுதார் தரப்புச் சட்டத்தரணி முனைகிறார் என்பதை கௌரவ மன்றின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், குறித்த ஆட்சேபனைக்கூற்றை முற்றாக நிராகரித்து இது தொடர்பாக உரிய கட்டளை ஆக்குமாறு மன்றினை வேண்டுகிறேன்.

1ஆம், 2ஆம் மனுதார் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி பின்வருமாறு மன்றுக்குச் சமர்ப்பிக்கிறார். 5ஆம், 6ஆம் எதிர்மனுதார்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்திற்கு 1ஆம், 2ஆம் மனுதார் சார்பில் முழுமையாக ஆட்சேபனை தெரிவிக்கிறேன்"

04.10.2012 அன்று திரு. யோகேந்திரா சமர்ப்பித்த சமர்ப்பணத்தில் எமது சார்பான சத்தியக் கூற்றைப் பற்றி சுட்டிக் காட்டியது பின்வருமாறு :

[5 (i) 5ஆம் எதிர்மனுதாரின் சத்தியக்கடதாசியில் சட்டவியலாளர் அல்லது சமாதான நீதவானோ ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடப்பட வில்லை, என்பதுடன் மற்றும் சட்டவியலாளரோ அல்லது சமாதான நீதவானோ தன்னுடைய கையொப்பத்தையும் உறுதிப்படுத்தப்பட்ட திகதியையும் இடத்தினையும், இலட்சனையும் அச்சத்தியக்கடதாசியில் 5ம் மனுதார் கையொப்பமிட்ட நேரத்தில் பதியவில்லை அல்லது

அச்சத்தியக்கடதாசி கொண்டிருக்கவில்லை. …………………. 5ஆம் எதிர்மனுதாரரினால் செய்யப்பட்ட சத்தியக் கடதாசி முற்றுமுழுதாக ஆரம்பத்திலேயே (in limine) நிராகரிக்கப்பட வேண்டும்.]

பரத்தின் அவிடவிட் (Affidavit) / சத்தியக்கூற்று Mr. P. Selvarajah – Justice of the Peace என்பவரால் 30.12.2011 அன்று அரியாலை மேற்கில் கையெழுத்திடப்பட்டது என்று அவரது ஸ்டாம்ப் குறிக்கிறது. அவர் கையெழுத்து போட்டுள்ளார். அது மனுதார் சத்தியக்கூற்றில் உள்ள இலட்சணத்தைக் கொண்டிருக்கவில்லை, கொண்டிருக்க முடியாது. ஏனெனில் அது எமது வழக்கறிஞர்கள் தயார் பண்ணவில்லை. எமது சார்பான இரண்டு வழக்கறிஞர்களும் கேட்டும் நாம் மறுத்துவிட்டோம் அவர்கள் தயாரித்த சத்தியக்கூற்றில் கையொப்பமிட. 04.10.2012 அன்று பரமும் நீதிமன்றில் இருந்தார். நீதிபதி அவரிடம் கேட்கவில்லை. ஆனால் 26.01.2012 அன்று மூத்த நீதிபதி திரு. அரியநாயகம் என்னிடம் எப்ப "பரம் இலங்கை வந்தவர் எப்ப போனார்" என்று கேட்டு ஒரு பிழையும் சத்தியக் கூற்றில் கண்டதாகக் கூறவில்லை. அத்துடன் அதை மரியாதை பண்ணி எமக்கு சம்மதப் பத்திரத்தை அனுப்பி வைத்த யோகேந்திராவை கண்டித்தார்.

ஆனால் இதே வழக்கு மேல் நீதிமன்றத்திற்கு சென்றபோது சரஸ்வதியும் அவரது கணவரும் இங்கு ஒஸ்ரேலியாவில் கையெழுத்திட்ட பவர் ஒவ் அட்டணி (Power of Attorney) மல்லாகம் இலட்சனையை கொண்டிருக்கவில்லை. அம்சங்கம் வேறு விதத்தில் அமைக்கப்பட்டன. அதேபோல் நான் கொழும்பில் கையெழுத்திட்ட சத்தியக்கூற்றுகளும், யாழ் உயர் நீதிமன்றில் எமது பிரதிநிதி திரு. புஷ்பராசா ஜீவராசா கையெழுத்திட்ட சத்தியக்கூற்றும்.

மனுதார் சத்தியக்கூற்றில் கருத்துப்பிழை இருந்தது. முறைகள் காலத்திற்கேற்றவாறு மாற்றப்படாததை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக்கொண்டோம். ஆனால் இருப்பதையே இல்லை என்று தள்ளி வைக்கும் பொழுது அது எம்மை முட்டாள் பட்டம் கட்டுவதாகிறது. முன் கூறியவாறு மனுதாரின் சத்தியக்கூற்றும் மனுவும் பல தடவை திருத்த அனுமதி கொடுத்த நீதிமன்றிற்கு ஜூரட் க்ளோசை திருத்தக் கொடுக்க வேண்டிய கடமை இருந்தது. எமது சத்தியக்கூற்றில் நீதிமன்றம்

ஒரு கருத்துப்பிழையையும் காணவில்லை. மூத்த நீதிபதி அதைப் பயன்படுத்தி ஒழுங்காக இருக்கும்படி வழக்கறிஞர்களுக்குக் கூறினார். இளைய நீதிபதி வழக்கறிஞர்களில் தனக்குப் பிடித்தவரை வழக்கு நடத்த விட்டார். யாழ்ப்பாணத்திற்கே வெட்கம். அற்குள் அரசியல்வாதிகள் - முன்னைய தமிழ் நீதிபதி திரு. விக்னேஸ்வரன் உட்பட தனியாட்சிக்காக வாதாடுகிறார்கள். பாவம் வடமாகாண மக்கள். தட்டிக்கேட்க மேலிடம் இல்லாவிட்டால் பதவியில் இருப்பவர்கள் ராச்சியம் தானே? படித்தென்ன பிரயோசனம் கண்ணுக்கு குறைந்த பதவி உள்ளவர்கள் படிக்காதவர் போல தோன்றினால்?

ஆனால் உண்மை என்னை கைவிடவில்லை. யாழ் உயர்நீதிமன்றிற்கு நானே அப்பீல் போட்டேன். எமது வழக்கறிஞரும். சி. வி. விவேகானந்தன் என்ற வழக்கறிஞரும் இது தீர்ப்பில்லை கட்டளை இன்ட லொக்யூட்டரி ஓடர் (Inter Locutory order) என்றார்கள். இருவரது வீஸ் (Fees) உம் அதிகமாகப் பட்டதால் நானே அப்பீல் பத்திரங்களைத் தயாரித்து ஜீவராசாவை எமது பிரதிநிதியாக்கி பத்திரங்களைப் பதிவு செய்தோம். முதல் முறை எடுபட்ட பொழுது அந்த நீதிபதி யாழ் நீதிமன்ற அமைப்பிற்கேற்றவாறு பத்திரங்களை தயார் பண்ண கூறியதால் திரு. மணிவண்ணனை நியமித்தோம். எனது மனுவில் கட்டளையா தீர்ப்பா என்ற ஆராய்ச்சியை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அதற்கு யோகேந்திராவும் தவபாலனும் திரு. வேலுப்பிள்ளை தர்மரட்னத்திற்கு எதிராக கட்டளையா / தீர்ப்பா என்று நடாத்திய வழக்கை எடுத்துக் காட்டியிருந்தேன் - கேஸ் லோ (Case law) ஆக. அந்த ஆவணங்களை தயார் பண்ணும்பொழுது அதில் முன்னோடியான செட்டியாரும் செட்டியாரும் (Chettiar v Chettiar) பற்றிய வழக்கை பற்றிய விபரங்களையும் குறித்தேன். அப்பொழுது ஒரு மயிலிறகு சுவாமி அறையிலிருந்து எனது பேப்பரில் வந்திருந்தது. முருகனின் ஆசீர்வாதம் என்று எடுத்துக் கொண்டேன். செட்டியாரும் செட்டியாரும் வழக்கு ஸ்ரீ கதிரவேலாயுதன் சுவாமி கோயில் சம்பந்தப்பட்டது. உண்மையை அறிய ஆசீர்வாதம் கிடைத்தது. அந்த உண்மை என்னவென்றால் வடமாகாண நீதிமன்றங்களிலேயே முறையான நிர்வாகம் இல்லை என்பதே.

கட்டளை என்றால் முதலில் மேல் நீதிமன்றத்திடமிருந்து அனுமதி வேண்டும், அப்பீல் பண்ண. தீர்ப்பென்றால் நேரடியாக அப்பீல் பண்ணலாம். நான் கட்டளை என்ற அடிப்படையில் அனுமதி கோரினேன். அந்த பத்திரங்கள் தயார் பண்ண, மல்லாகம் நீதிமன்றில் வழங்கப்பட்ட முடிவின் பிரதி தேவைப்பட்டது.

07.11.2013 அன்று நான் மல்லாகம் கோட்டில் கூறியது அதன் பதிவில் கடைசியாக பின்வருமாறு குறிக்கப்பட்டது :

**"குறுக்கு விசாரணை :**

கே : உங்களுக்கு ஏன் பணம் தேவைப்படுகிறது.

ப : எனக்குரிய பணம் இல்லை. அவரின் முதுசம். தேசவழமைப்படி சேர வேண்டும். முதலாம் எதிர்மனுதாரருக்கு வீடுகட்ட இறந்தவரும் என்னுடைய கணவரும் காசு கொடுத்தார்கள். என்னுடைய கணவர் வேலை செய்யத் தொடங்கிய பிறகு சகோதரிகளுக்கு காசு கொடுத்தவர். பிள்ளைகளை அவுஸ்ரேலியா எடுத்து, படிப்பித்தார். சமபங்கு சட்டப்படி தந்தால் கவலையில்லை. தேசவழமைப்படி முதுசம் என்று சொல்லுகிறேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

இத்தருணத்தில் சாட்சியமளித்த சாட்சி மன்றின் சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கிய பிறகு மனுதாரருடைய சட்டத்தரணியோடு மிக கோபாவேசமாக பதிலளித்தமையை கண்டு நீதிமன்றம் எதிர்மனுதாரருடைய சட்டத்தரணி ஊடாக எச்சரிக்கை செய்தது"

மகாபாரதத்தில் தருமர் திரௌபதியை பணயம் வைத்து சூதாடினார். திரௌபதி பொது சபையில் கேட்டா – அவர் தர்மர் தன்னை இழந்த பிறகா, முன்னரா – திரௌபதியை பணயம் வைத்தார் என்று? அதற்கு மறுமொழி "பிறகு". அதற்குத் திரௌபதி / பாஞ்சாலி சொன்னா தர்மர் தன்னை இழந்தபின் அவருக்கு மனைவியை பணயம் வைக்கும் உரித்தில்லை என்று. காரணம் பாஞ்சாலி முறையாக அங்கீகரிக்கப்பட்ட மனைவி. அவவது அந்தப் பதவி - முறையாகத்தான் மற்ற உறவுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற விதிமுறைப்படி அமைந்தது. அது

போலத்தான் ஒரு நீதிமன்றத்திலும் நான் சாட்சிக்கூண்டில் ஏறி சாட்சி சொல்லும்போது சாட்சி என்ற பதவியின் வரையறைக்கு கட்டுப்பட வேண்டிய கடமை எனக்கிருந்தது. அதேபோல் அந்த பதவியின் பாது காப்பும் எனக்கிருக்க வேண்டும். மனைவி பொருள் அல்ல என்றா பாஞ்சாலி. அதேபோல சாட்சியை அணுக முறையான கேள்வி கேட்க வேண்டிய கடமை நீதிமன்றின் மற்றெல்லா உறவினர்களுக்கும் உண்டு. யோகேந்திரா நான் குடும்பமல்ல என்று திருப்பதித்திருப்பி கூண்டில் வைத்து என்னிடம் சொன்னார். அது ஏட்டில் பதிவு செய்யப்படவில்லை. அதுவே அவரது மந்திரமாகி விட்டது. நீதிபதி கண்டிக்கவில்லை. யாழ் மேல் நீதிமன்றில் திரு. யோகேந்திரா முதல்தரம் நான் மறுவிவாகம் செய்தவ என்று சொன்னபொழுதே நீதிபதி திரு. இளஞ்செழியன் “சட்டப்படி செய்த திருமணம் தானே” என்று கேட்டு அந்தப் பாதையை மூடினார். எப்ப நான் சாட்சிக் கூன்றிலிருந்து இறங்கினேனோ அப்ப நான் பொதுமக்களில் ஒருத்தி. நீதிபதிக்கும் சமமானவ. உண்மையாக நான் பொது இடத்தில் பிரச்சனை பண்ணியிருந்தால் அது அங்கிருந்த பொலிஸின் பிரச்சனை. நான் ஹான்ட் பாக் (Hand bag) ஐ கொண்டு போக விடமாட்டார்கள். பின்னுக்கு வைத்துவிட்டே செல்லவேண்டும். எனது வைல் (File) களை வழக்கறிஞர் மேசையில் வைக்க முடியாது என்றார்கள். நான் தூக்கி நிலத்தில் வைத்தேன். சாட்சிக் கூண்டிலிருக்கும் போது நீதிபதிக்கு உதவிய க்ளாக் (Clerk) கண்ணாடியை சட்டைக் கழுத்தில் செருக வேண்டாம் என்றார். நான் எடுத்து கையில் வைத்துக் கொண்டேன். கோபமா, தற்பாதுகாப்பா என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. வேறொருவர் என்னை முறையாகவோ, முறையில்லாமலோ கண்டிக்கவில்லை. நீதிபதி நான் ஒரு அநாதை போல் என்னை ஏசினார் - தெரு மாது என்ற கருத்தில் “இது என்ன இடம்” என்று என்னைக் கேட்டார். நான் அவரிடம் கேட்க வேண்டிய கேள்வி அது. அந்த பதவியை மதித்ததால் கேட்கவில்லை. எத்தனையோ முறையான நீதிபதிகள் அதில் பதவி எடுத்திருப்பார்கள். எத்தனையோ நல்ல வழக்கறிஞர்களுக்கு அந்தப் பதவியின் ஆதரவு வேண்டும். ஆனால் நீதிபதியோ என்னைத் தூற்றியது மட்டுமல்லாமல் பதிவில் ‘கோபாவேசம்’ என்று பதிந்திருக்கிறார். ஒரு உணர்ச்சியை செயலிலிருந்தே வெளியார் அளக்கலாம். நீதிமன்றில் என்ன வார்த்தை கூறினேன் அல்லது யாரையாவது அடித்தேனா என்ற

வெளிப்பாடுகளை மட்டும் தான் பதிய நீதிமன்ற நிர்வாகிகளுக்கு அனுமதி உண்டு. மற்றவர்களின் உணர்ச்சிகளையோ, உணர்வுகளையோ, சிந்தனைகளையோ அல்ல. சத்தியக்கூற்று மூலம் நாம்தான் அதை வெளிப்படுத்த நீதிமன்றத்தில் இடமுண்டு. பெரும்தவறு செய்தார் நீதிபதி கஜநிதிபாலன். அந்த இடத்தில் அதை நான் எதிர்த்திருக்காவிட்டால் உண்மையின் பிரகாரம் அந்த இடத்திற்கு சாபம் விழும். எமது உண்மைப்படி ஒவ்வொரு இடத்திலும், காலகட்டத்திலும் சக்திகள் சேர்க்கப்படுகின்றன. அவை நல்ல சக்தியாக இருக்கலாம் இல்லை தீய சக்திகளாகவும் இருக்கலாம். நான் உண்மை இல்லை என்றால் யோகேந்திராவினதும் நீதிபதியினதும் ஒழுங்கீனங்கள் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணாது. நான் உண்மையாக நல்ல மனைவி என்றபடியாலும் அந்தக் குடும்பத்தைப் பராமரித்தவ என்றபடியாலும் அவர்கள் எனக்குச் சொன்னது அவர்களுக்குச் சாபமாக திரும்பும். அந்த நீதிமன்றிற்கும் அது தீய சக்தியாகும் – ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்றது போல். அப்படித்தான் இங்கு யூனிவசிட்டி ஓவ் நியூ ஸௌத் வேல்ஸ் (University of New South Wales) இல் அவர்கள் என்னை வெளியாள் என்று குற்றஞ்சாட்சிய பின் வைஸ் ச்சான்ஸலர் (Vice Chancellor) பெரிய பிரச்சனைக்குள்ளாகி வேலையிழந்தார். நான் மாத்திரமல்ல காரணம். ஆனால் உண்மையாக பங்களித்தவர்கள் பெரும் காரணமாக வருவார்கள். “The last straw that broke the camel’s back” என்பார்கள். அதாவது ஒட்டகத்தின் முதுகை உடைத்த கடைசி வைக்கல். அந்த வைக்கலுக்குத்தான் அந்த சக்தியை பூரணமாக்கும் தன்மை இருந்தது. அப்படித்தான் மூதாதையர் முதுசமும்.

வெளியே தெரியும் பண பெறுமதி வைக்கலின் உருவம். அந்த மேலெழுந்த வாரியான நிலையில் பார்க்கும் / வாசிக்கும் ஒருவருக்கு முதுசத்திற்கும் தேடிய தேட்டத்திற்கும் அல்லது சூதாடி வந்த பணத்திற்கும் வித்தியாசம் தெரியாது. யோகநாதன் இறக்கும் காலகட்டத்தில் வை.எம்.எச்.ஏ. (Y.M.H.A) மூலம் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார். குணத்தினால் யார் அப்படியான மனப்பான்மையை வெளிப்படுத்துகிறார்களோ அவர்களே அவரது உண்மையான வாரிசு. அந்தக் குடும்பத்தில் அது நான் மட்டுமே. எனக்கு ஊடகமாக வந்தது அவரது உடன்பிறப்புக்களில் பரம் ஒருவர் மட்டுமே. ஆகவே தர்மப்படி பங்கிட்டால் அது எம்மையே

சார வேண்டும். இங்கு சிட்னியிலிருக்கும் வட்டுக்கோட்டை இளைஞர் அப்படித்தான் சொன்னார். அப்படி யோசனை உள்ளவர்களுக்கு வாழ்க்கை அடிப்படையில் சரியாகத்தான் இருக்கும். இன்னொருவரின் முதுசத்தை வெறும் வைக்கல் என்றால் அப்படியானவர்களுக்கு முதுசம் அமைக்கும் சக்தி இருக்காது. எந்த சக்தியால் உந்தப்படுகிறோம் என்பதுதான் ரூட் கோஸ் (Root Cause) – வெளிப்பாட்டின் ஆணி வேர்.

மகாபாரதப் போரில், கௌரவர் பக்கம் தோற்றுக் கொண்டு வருகையில், துரியோதனன் தாயிடம் சென்று அவவின் ஆசீர்வாதம் கேட்கிறான். காந்தாரி தனது புருஷனுக்கு கண் தெரியாது என்றதால் தனது கண்களையும் கட்டியிருந்தவ. சிவ பக்தை. அவவின் சக்தி மூலம் துரியோதனன் தனக்கு வெற்றி கிட்ட தனக்கு ஆசீர்வதிக்க வேண்டும் என்று கோருகிறான். காந்தாரி இறுதியில் துரியோதனனுக்கு கூறுகிறா அவனை குளித்து விட்டு நிர்வாணமாக தனது ஆசிபெற வரும்படி. துரியோதனன் அப்படியே சென்று குளித்துவிட்டு வருகிறான். நடக்கப்போவதை அறிந்த க்ருஷ்ணன் துரியோதனனை பகிடி பண்ணுகிறார். நிர்வாணமாக செல்வதை. துரியோதனன் துடைப் பகுதியை மறைத்து செல்கிறான். காந்தாரி கண்கட்டை அவிழ்த்து கண்ணை துறந்ததும் துரியோதனின் சரீரத்தில் அவர் கண்பட்ட இடங்களுக்கு சக்தி ஏறியது. மறைக்கப்பட்ட இடம் பாது காக்கப்படவில்லை. கடைசியில் பீமனின் சபதப்படி துடை பிளவுபட்டு துரியோதனன் உயிர் போகிறது. சக்தியின் வலிமையை குறைவாக எடை போடுபவர்களுக்கு இப்படித்தான் விதி அமையும்.

# 14. முதுசமா தேடிய தேட்டமா?

உழைத்து பலனெடுக்கும் அமைப்பின்
இடமோ காலமோ மாறியதும் சொத்து முதுசமாகிறது

அண்மையில் யாழ் தமிழர் ஒருவர் தனது மாமனார் மாமியாரின் சொத்துக்களைப் பங்கிடுவதைப் பற்றி விபரித்தார். நன்றாகப் படித்து பட்டம் பெற்றுள்ளார். ஆனால் பக்குவம் காணாது. அவரது உழைப்பை / தேடிய தேட்டத்தை கணிக்கும் உரிமை அவருக்குண்டு. ஆனால் இன்னொருவரது உழைப்பை எப்படி செலவு செய்யவேண்டும் என்று கணிக்கும் உரிமை அவருக்கில்லை. சீதனமாகக் கொடுத்திருந்தால் அதை வைத்து தேட்டத்தை தேடவேண்டியது மனைவியின் கடமை. அல்லது அப்படியே அதைப் போற்றி வைத்து அதன் உள்சக்தியை பெருக்கினால் அது அந்தக் குடும்பத்திற்கு நிரந்தர சக்தியாக பாதுகாக்கும் அதைப் பேணுவோருக்கு. அப்படித்தான் எமது அம்மா தனது தாத்தா ஏ.எம். பிள்ளையின் புண்ணியங்களைப் போற்றிக் கதைப்பா. அதுதான் அவவின் உண்மையான சீதனம். அது இன்றும் என் மூலம் எனது குடும்பத்தையும் காக்கிறது. டொனேஷன் சிற்றின்பம், சீதனம் பேரின்பம். சரஸ்வதி எனது அந்த உயர்ந்த குணத்தை அவமதித்து எனது கலியாணத்தைப் பகிரங்கமாக குறைந்த பதவியுள்ளதாக்கினா, தங்கை சக்திதேவியுடன் கூட்டணி சேர்ந்து கொண்டு. அவவின் மகள் யமுனாவை உறவினர் என்ற அடிப்படையில் நாம் ஸ்பொன்ஸர் (Sponsor) பண்ணினோம். இந்த வழக்கில் சக்திதேவியுடையது டிக்கட். நடத்தியது சரஸ்வதி. அது மாதிரி அந்த ஸ்பொன்ஸர் சக்தி என்னுடையது. டிக்கட் பரத்தினுடையது. அக்கறை/ ஆர்வம் யமுனாவின் சகோதரன் யோகருடையது. சக்தி இளைய பதவி உள்ளவரிடமென்றால் அது ஜனநாயகம். மூத்த பதவி உடையவரது என்றால் அது அரசன் ஆட்சி / ஆட்டோக்ரஸி (Autocracy). அதன் மூலம்

ஜமுனாவிற்கு அவ உழைக்கு மட்டும் Welfare / வெல்வ்யா (சமூகநல) காசு அரசாங்கம் கொடுத்தது. பின்னர் ஜமுனாவின் கலியாணப் பேச்சிலும் நான்தான் மற்ற பகுதி திரு. நாராயணசாமியுடன் பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்தினேன் - எமது பொது முதுசம் மூலம். ஆனால் அதை யெல்லாம் சரஸ்வதி மறந்தா. எங்களிடமிருந்து தகவல்களை ஒழித்தா. அண்மையில் அவவது இரண்டாவது மகள் நளினாவின் கணவருக்கு தமிழ் பாடசாலை நிர்வாகத்தில் பகிரங்கமான பிரச்சனை வந்து அவர் அதற்கு பழிவாங்க நடவடிக்கை எடுத்த விஷயம் கேள்விப்பட்டபோது இன்னொரு விஷயமும் கேள்விப்பட்டேன். ஜமுனா தனது தமையன் அந்த Welfare காசுகளை எடுத்துவிட்டு பின்தருவதாகக் கூறிவிட்டு பிறகு கேட்கையில் அதெல்லாம் அவவின் செலவுக்கு சரியென்று கூறினதாக. யோகர் ஓரளவுக்கு தனது உழைப்பில் சீவிப்பவர். ஆனால் பெற்றார்வழி உறவுகளுக்கு கடன்பட்டால் - அது தீய முதுசமாக அவரது நல்ல குணத்தைக் குறைப்படுத்தும். தாயுடன் சேர்ந்து எமது தேடிய தேட்டத்தைப் பாவித்து விட்டு எமது கலியாணத்தை குறைத்ததை வேடிக்கை பார்த்தவருக்கு அவரது தங்கை ஜமுனா மூலம் பதவி குறைக்கப்பட்டது. சரஸ்வதியின் மற்ற மகளுக்கு எனது மாமனார் கொடுத்த வீடு சீதனமாகக் கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் விற்றுவிட்டார்கள். இந்த வழக்கின் துவக்கத்தில் சகோதரங்கள் பாவிக்காத வளவை தனக்கு எழுதி அவர்களை யோகநாதன் சொத்தில் தனது பங்கை எடுத்துக் கொள்ளும்படி பரம் கடிதம் எழுதினார். ஆனால் ஒருவருமே பதில்கூட போடவில்லை. விற்கும்பொழுதும் ஒருவார்த்தை நாங்கள் வாங்கப் போகிறோமா என்று கேட்கவில்லை. "பரம்பரை" என்ற குணாதிசயத்தை அந்த சொத்து இழந்தது. ஆனால் எமது பங்கிற்கு நாம் அங்கு ஜவ்னா கொலிஜ் (Jaffna College) ற்கு முன்னால் வட்டுக்கோட்டைச் சந்தியில் அரசாங்கத்திடம் குத்தகைக்கு / வாடகைக்கு இடமெடுத்து பயிற்சி நிலையம் நடத்துகிறோம். இங்கிருந்து குடும்பங் களுக்கு பொருட்கள் அனுப்புவது போல நாம் அங்கு அனுப்பி அங்கிருப் பவர்களது தேவைக்கேற்ற மாதிரி அடிப்படை விலையில் விற்குறோம். இதில் எமக்கு காசளவில் நஷ்டம். ஆனால் உள்பெறுமதியில் அது முதுசம். எம்மை பெரியவர்களாக நம்புபவர்களுக்கு அது உழைக்கும் சந்தர்ப்

பத்தை வழங்கும். ஜவ்னா கொலிஜ் (Jaffna College) பிள்ளைகள் ஆசிரியர்கள் கூட வருவார்கள். மனதிற்கு திருப்தியாக இருக்கும்.

இதில் முக்கிய பாடம் என்னவென்றால் சொத்து வஸ்த்துவா சக்தியா என்பதே.

இதுவரையில் நாம் யோகநாதனின் சொத்தில் ஒரு சதம் கூட எடுக்கவில்லை. எங்களை நம்பாமல் வழக்கறிஞரிடம் போனவர்களுக்கு எங்கள் பங்கு எங்களுக்கு வர வசதி பண்ண வேண்டிய கடமை உண்டு - முக்கியமாக நிர்வாகம் வேண்டாம் என்றவர்களுக்கு. அதில்தான் யாழ்ப்பாண ஹை கோட் (Jaffna High Court) மூலம் உண்மை தனது அற்புதத்தை வெளிப்படுத்தியது – டி.என்.ஏ (TNA) சமபதவியுள்ள எதிர்க் கட்சியாக தேசிய அரசாங்கத்தில் இருப்பது போல. அங்கு முன்னைய ஜனாதிபதி திரு. மகிந்த ராஜபகஷ, மிஸ்ரஸ் (Mistress) / வைப்பாட்டி பதவி எடுத்துள்ளார். அது உண்மையான இலங்கையர் எல்லாராலும் வெளிப்படுத்தப்பட்ட விளைவு. முக்கியமாக ஜனநாயகத்தில் பங்களிப்பவர்கள் இலங்கையில் ஈடுபட்டதன் விளைவு.

# 15.சட்டத்தில் எது மூப்பு கொழும்பா யாழ்ப்பாணமா?

**உண்மையை சட்டம் மூலம் வெளிப்படுத்தும் ஒருவர் சட்ட பதவி இல்லாவிட்டால் நீதிபதியின் சம மறு பக்கமாவார். அவருக்கு மேலாக பதவி எடுப்பவர் தர்மத்திற்கு மாறாக நடந்து தர்மத்தை அவமதிக்கிறார்.**

யாழ்ப்பாண ஹைற கோட் (Jaffna High Court) இல் எமது அப்பீல் எடுபட்டு விசாரணை நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இருந்தாற்போல ஒருநாள் வழக்கறிஞர் திரு. பரதலிங்கம் கொழும்பிலிருந்து வந்திருந்தார். அவரை எமது கொழும்புக்காணி கேசில் ஏற்கனவே வாதாடிய வழக்கறிஞர் – திரு நேரு குணதிலக்க இறந்த பின் நியமித்தோம். அவர் சாதாரணமான மக்களாகிய எங்களுடன் நீதிமன்றில் கதைக்க மாட்டார். ஒருமுறை எமது இன்ஸ்ரக்டிங் லோயர் (Insructing Lawyer) மனோகரன் கூறியதன்படி இரண்டாவது வரிசையில் அந்தச் சின்ன அறையில் அமர்ந்திருந்தேன். வந்தார் பரதலிங்கம். அது அவரது கோட்டை மாதிரி பார்த்தார். மனோகர னிடம் ஏதோ சொன்னார். மனோகரன் என்னை பின் வரிசைக்குப் போகும்படி சைகை செய்தார். அப்படியானவர் யாழ்ப்பாண கோட்டில் பெரிதாக நட்பு காட்டுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அறையினுள் நுழைந்ததும் பரதலிங்கத்தின் மகனைப் பார்த்ததும் நானே கதைத்தேன். எமது கேஸ் 3ஆம் திகதி எடுபடும் என்றேன். அவரும் ஓம் என்றார். அது கொழும்பு கேஸ். பின்னர் நீதிபதி வந்ததும் வழக்கறிஞர்மார் கதைக்கும்போது பரதலிங்கம் குண்டைத் தூக்கிப் போட்டார் – தான் எமது எதிர்ப்பக்கத்திற்கு வாதாட வந்திருப்பதாக". ஒரு வார்த்தை என்னிடம் கதைக்கவில்லை. வீடு (சங்கர்தை துணைவி கோயிலடி) திரும்பியதும் மனோகரனுக்கு டெலிவோன் பண்ணினேன். அவருக்கு இதைப்பற்றி என்ன தெரியுமென்று கேட்க. அவர் தனக்கு ஒன்றும் தெரியாதென்றார். நான் சொன்னேன் பரதலிங்கத்தை நமது கொழும்பு வழக்கிலிருந்து

விலத்துமாறு. நானே நேரே பரதலிங்கத்திற்கும் கடிதம் எழுதினேன். சில நாட்களுக்குப் பிறகு மனோகரன் சிட்னியில் பரத்துக்கு டெலிவோன் பண்ணி தன்னை பரதலிங்கம் கூப்பிட்டு கதைத்ததாக கூறினார். பரம் அதற்கு மனோகரனை என்னுடன் நேரடியாக கதைக்கச் சொன்னார். மனோகரன் எனக்கு கடிதம் போட்டார். நான் மறுமொழி போட்டேன். அடுத்த தவணைக்கு முதல் மனோகரன் எமது கொழும்பு வழக்கிலிருந்து தன்னை முறையாக விலத்தினார். ஏற்றுக் கொண்டோம்.

இரண்டாம் தடவை பரதலிங்கம் யாழ்ப்பாண கேஸிற்கு வந்தபொழுது மகன் வரவில்லை. வேறு யாரோ வந்திருந்தனர். வழக்கறிஞர் தவபாலனும் வந்திருந்தார். எமது பக்கத்தில் பரமும் வந்திருந்தார். அன்று காலை எமது வழக்கறிஞர் மணிவண்ணன் டெலிவோன் பண்ணி வழக்கறிஞர் ஹர்த்தால் என்பதால் தான் நீதிமன்றிற்கு வரமாட்டாரென்றார். நான் சொன்னேன் நாங்கள் எமது கடமைப்படி போவோம் என்று. முன்னரும் நீதிபதி வரமாட்டாரென்று தெரிந்தாலும் நான் குறித்த நாளில் போவேன். அது எனது ஒழுக்கம். கோட்டில் பரதலிங்கம் குழுவைவிட வேறு சில வழக்கறிஞர்களும் வழக்காளிகளும் வந்திருந்தனர். கடைசியாக நீதிமன்ற அலுவலகர் எமது எதிர்க்கட்சி வழக்கறிஞர் குழுவை உள்ளறைக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் வெளியே வந்த சில நிமிடங்களில் நீதிபதி திரு. இளஞ்செழியன் அவர்களும் வெளியே வந்தார். நீதிபதி இருக்கையில் அமர்ந்தார். எமது கேஸ் கூப்பிடப்பட்டதும் பரதலிங்கம் எழுந்து தான் மனுதாரரையும் 1 வதிலிருந்து 4 வது எதிர்மனுதாரர்களையும் ரெப்ரெசன்ட் (Represent) பண்ணுவதாகவும் எமது வழக்கறிஞர் வராததால் அப்பீல் ஐ தள்ளி வைக்க கோர தனக்கு உரிமை இருப்பதாகவும் கூறினார். நீதிபதி இளஞ்செழியனும் முதலில் நாம் மற்றவர்களது நேரத்தை வீணடிக்கக் கூடாது என்பது போல் சொன்னார். நான் எழுந்து சொன்னேன். நான்தான் அந்த அப்பீல் தயாரித்தனான். ஆகவே நான் வாதாடத் தயார் என்று. மணிவண்ணன் எங்களிடம் தான் ஹர்த்தாலால்தான் வரவில்லை என்று கூறினார் என்றும் சொன்னேன். பரதலிங்கம் - ஏதோ தான்தான் நீதிபதிபோல சொன்னார் சாதாரண தொனியில் அதற்குரிய சில விதிமுறை களுண்டு - வழக்கறிஞர் நியமனத்தை தள்ளி வைக்க என்று. நீதிபதி

நல்ல மாதிரி என்னிடம் சொன்னார் அடுத்த தவணை திகதியை எமது வழக்கறிஞருக்கு அறிவிக்கும்படி.

அடுத்த தவணைக்கு கோட் கேட்டடியில் இருவர் நின்று நான் பாவாடை போட்டிருப்பதால் உள்ளே போக முடியாது என்றனர். நான் அங்கிருந்த செக்யூரிட்டி பொலிஸ் (Security Police)ஐ பார்த்தேன். அவர்கள் அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்றார்கள். கட்டளை இட்டவர்கள் சாதாரண உடையில் இருந்தனர். நான் அவர்களிடம் கேட்டேன் எப்படியான உடுப்பு சரியானது என்று? அவர்கள் சொன்னார்கள் பாவாடை சட்டை பிழையானவை என்று. ஏற்கனவே சாதாரண பாவாடை அணிந்திருந்த சிலர் வெளியே மரத்தடியில் நின்றார்கள். நான் சொன்னேன் நான் நீட்டுப் பாவாடை தானே உடுத்தியிருக்கிறேன் என்று. அவர்கள் சொன்னார்கள் பாவாடையுடன் உள்ளுக்குப் போகேலாது என்று, நான் சொன்னேன் நான் வழமையாக அப்படி எத்தனையோதரம் உள்ளுக்குப் போயிருக்கிறேன் என்று. அவர்கள் அசையவில்லை. அப்ப நான் கேட்டேன் நான் கால்சட்டை போட்டால் விடுவார்களா என்று? ஓம் என்றார்கள். சிறிது நேரத்தில் ஒருவர் உள்ளேயிருந்து வந்து முழங்காலடிக்கு நீட்டில் சட்டை போட்ட ஒரு பெண்ணை உள்ளே கூட்டிச் சென்றார். அப்ப நான் சொன்னேன் “அவ போனா நானும் போகலாம்தானே” என்று, அதற்கு அவர்கள் சொன்னார்கள் அவ கோட் அறைகளுக்குள் போகவில்லை. வழக்கறிஞருடன் கதைக்க மட்டுமே போகிறா என்று, நான் நின்றேன். பின் மணிவண்ணனுக்கு வோன் பண்ணி நான் திருப்பிப் போகப் போகிறேன் என்றேன். அதற்கு அவர் நான் கட்டாயம் வரவேண்டும் என்றார். நின்று அந்த நிர்வாகிகளுக்கு எப்படி விதிமுறைகளை அமுல்படுத்துவது என்று பாடம் எடுத்தேன் - அதாவது பொதுமக்களுக்கு தெரியும் வகையில் முன்னரே நோட்டீஸ் பெரிதாக ஒட்ட வேண்டும் என்று. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு யாருடனோ கதைத்துவிட்டு உள்ளே போகலாம் என்றார்கள். போனேன். முதல் வேலையாக ரெஜிஸ்ரா (Registrar) இடம் முறையிட்டேன். எந்தச் சட்டப்படி என்று கேட்டேன். அவ மேலிடத்து கட்டளை என்றா. அதன் பிறகு நான் அந்த நீதிமன்றிற்கு கால்சட்டையும் நீட்டு டொப் (Top) உம் போட்டேன். அங்கே சில ஊழியர் முதல்கொண்டு சட்டை அணிந்ததை அவதானித்தேன். நீதிமன்றத்திற்குள் மல்லாகத்தைவிட கூடிய ஒழுங்கு இருந்தது.

பின் நீதிமன்றில் பரதலிங்கம் தனது பங்கிற்கு கதைத்தார். மணிவண்ணன் எமது தரப்பு வாதத்தை சுருக்கமாகக் கூறினார். எனக்குப் பின்னர் நினைவு வந்தது நான் சமர்ப்பித்த முந்திய கேஸில் பரதலிங்கம் லோயராக யோகேந்திராவிற்கும், தவபாலனுக்கும் வெற்றி எடுத்துக் கொடுத்தார். ஆகவே தான் யோகேந்திரா அவரைக் கொண்டுவந்தார் என்று. இங்கேயும் சரி இலங்கையிலும் சரி நாம் எவ்வளவு தான் சரியென்றாலும் நீதிபதியுடன் எந்தப் பக்க வழக்கறிஞர் கூட சேர்கிறாரோ அவர்கள் பக்கம்தான் அநேகமாக தீர்ப்புக் கிடைக்குமென்று. அது ஜனநாயகமுமல்ல, தர்மமுமல்ல. ஆனால் அதுதான் நிஜம் – மக்களை விட பதவியிலுள்ளவர்க்ள தமது பதவிப்படி கடமை செய்யாவிட்டால் அவர்கள் யோசிக்கக்கூட தேவையில்லை. எப்ப கடமை முடிக்க முதல் பதவியின் வரையறுப்பிற்குள் இல்லாமல் வெளியே நின்று செயல்படுகிறார்களோ, அப்பவே இப்படியான தொத்து நோய்கள் பரவும். பதவிப்படி கடமை முடித்த பிறகு அப்பாலும் செய்யும்போது அது இயக்கும் சக்திக்கு பங்களிப்பாகிறது. அது நேரே இயற்கையான இயக்கும் சக்தியாகிறது. உறவின் பதவிக்கு அப்பால் செய்யும் பொழுது அது ஓனஷிப் பவர் (Ownership Power) ஆகிறது. நான் மல்லாகம் நீதிமன்றில் அந்த சக்தியைத்தான் சேர்த்தேன்.

பரதலிங்கம் எமது அப்பீல் மனு காலவரையறைக்குள் குடுக்கப்பட வில்லை என்றார். ஆனால் நீதிபதி திரு. இளஞ்செழியன் நான் ஜீவன் மூலம் பதிந்த அப்பீல் மனு காலவரைக்குள் பதியப்பட்டது என்றார். காலத்தை வைத்து சரி பிழை எப்படி தர்மப்படி போடுவது? மனுதார் முதலிலேயே அவர்களது மனுவை காலம் தாமதித்தே சமர்ப்பித்தனர். பின்னர் 07.11.2013 அன்று நான் சாட்சி சொன்னதுடன் விசாரணை முடிவுற்றது. 06.02.2014 அடுத்த தவணை. அன்று பரமும் வந்தார். புது கட்டிடத்தில் வழக்கு கேட்கப்பட்டது. 07-11 அன்று புண்பட்டும் நானும் சமூகமளித்தேன். நீதிபதி வருகிறார் என்றதும் எழுந்து நின்றேன் – மனதில் நீதி தேவனை நினைத்துக் கொண்டு வணங்கினேன். நான் எதிர்பார்த்த தோற்றம் திரு. கஜநிதிபாலனுடையது. வந்தவரோ நீதிபதி திரு. சி. சசதரன். நான் கூறியதற்கு மேலாக தான் சாட்சி சொல்ல ஒன்றுமில்லை என்று பரம் கூறினார். 24.04.2014க்கு தீர்ப்பு என்று குறிப்பிடப்பட்ட காலம் சென்றும்

தீர்ப்பு வராததால் நாம் ஜுடிஷல் சேவிஸ் கமிஷன் (Judicial Service Commission) க்கு கடிதம் போட்டோம்.

மல்லாகம் நீதிமன்ற குறிப்பேட்டின்படி 10.11.2014 அன்று பின்வரும் குறிப்பு உள்ளது.

“நீதிச்சேவை ஆணைக்குழு கௌரவ மாவட்ட நீதிபதி கெ. கஜநிதிபாலன் அவர்களை இவ்வழக்கில் தீர்ப்பு வழுங்குவதற்காக நியமித்து இது பற்றி அவருக்கு அறிவிக்கும்படியும் குறிப்பிட்டுள்ளார்கள்” இறுதியாக 26.02.2015 அன்று முடிவு வழங்கப்பட்டது. அன்றே மனுதார் தரப்பு வழக்கறிஞர் அத்தாட்சிப்படுத்திய பிரதிநிதிக்கு மனு போட்டார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எமது சட்டத்தரணியோ 09.03.2015 அன்று தான் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் அவர் என்னிடம் கூறினார். அது கட்டளை, தீர்ப்பு அல்ல என்று. அப்படியென்றால் 14 நாட்களுக்குள் லீவ் (Leave) / அனுமதி கேட்டு சிவில் அப்பலெட் கோட் (Civil Appellate Court) க்கு மனு போடவேண்டும். நான் சிட்னியில். திரு. கனகசிங்கம் இதில் ஈடுபாடு காட்டவில்லை. வேறு இருவருடன் தொடர்பு கொண்டேன். ஒருவர் திருமதி. பவானி என்ற ஞாபகம். அவ கூறினா திரு. கனகசிங்கத்தையே கேளுங்கோ என்று. மற்றவர் சி.வி.விவேகானந்தன். அவர் எக்கச்சக்கமான வீஸ் (Fees) கேட்டார். முதல் படிக்கே. வருவது வரட்டும் என்று நானே களத்தில் இறங்கினேன். மார்ச் 04ஆம் திகதி எமது துணைவி, வட்டுக்கோட்டை இணைப்பாளரான திரு. புஷ்பராசா ஜீவராசாவை எமது பிரதிநிதியாக நியமித்து பத்திரத்தை குரியர் (Courier) இல் அனுப்பி வைத்தோம். அதற்கிடையில் எனது ஒஸ்ரேலிய அனுபவப்படி அப்பீல் பண்ண என்ன தேவை என்று கணித்து நானே பத்திரங்களை தயார் பண்ணினேன். அந்த நாட்களில் எமது இரண்டாவது பேரப்பிள்ளை டெயா (Tehya) வுக்கு பள்ளிக்கூட விசேஷத்திற்காக நான் மெல்பன் (Melbourne) செல்ல வேண்டி இருந்தது. மகன் ப்ரதீப்பின் பிள்ளை. ப்ரதீப் வீட்டில் அவரது மாமன் மாமி ஜேர்மனி (Germany) யிலிருந்து வந்திருந்ததால் நான் மகள் காயத்ரி வீட்டில் தங்கினேன். காயத்ரி லோயர் (Lawyer). விதிமுறைகளில் மிகவும் கவனம்.

அந்த சக்தி எனக்கும் ஆதரவு தந்திருக்கும். நேரடியாக இவ்விஷயத்தை காயத்ரியுடன் நான் கதைக்கவில்லை. ஆனால் சக்தி நிலையில் எனக்கு தேவையானது ஊக்குவித்தது. சிட்னிக்கு வந்து மார்ச் 16ஆம் திகதி ஈமெய்ல் (email) மூலம் பத்திரங்களை ஜீவனுக்கு அனுப்பி அப்பீல் மனுவை பதிந்தோம். ஜீவனும் கவனமாகக் கேட்டு இந்த சேவையை செய்தார். யோகநாதன் இறந்த அன்று ஜீவன் பிரதேச சபையில் வேலைக்குச் சேர இன்டர்வியூ (Interview) சென்றிருந்தார். நான் டெலிவோன் பண்ணி கூறியதும் இன்டர்யூ முடிந்த உடனே வட்டுக்கோட்டை வீட்டிற்கு சென்று இயலுமான உதவிகளை பக்குவமாகச் செய்தார். கிணற்றில் இறங்கி உடலை மேலே எடுக்க உதவினார். பல மாதங்களுக்குப் பிறகு விக்கி என்ற ஒருவர் என்னை வட்டுக்கோட்டை தெல்லிப்பளை வீதியில் கண்டு "ஏன் நீங்க அவேட்ட விட்டனீங்க. என்னைக் கூப்பிட்டிருக்கலாமே" என்றார். எனக்கு என்ன சொல்கிறார் என்று விளங்கவில்லை. ஜீவன் துணைவி யைச் சார்ந்தவர். துணைவி மக்களில் பெரும்பாலானோர் கள்ளு சீவுவதை தொழிலாகக் கொண்டதால் நளவர் சாதி என்பர். 2018ல் உள்ளு ராட்சி தேர்தலில் ஜீவனின் மாமா நடேசு துணைவிப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நடேசு கள்ளு சீவுவதை தொழிலாகக் கொண்டவர். நானறிந்தவரை ஜீவன் போதைப் பொருட்கள் பாவிப்பதில்லை. மேலே குறிப்பிட்ட விக்கி வெள்ளாளர் என்று கேள்விப்பட்டுள்ளேன். அவர் எந்தநேரமும் குடித்திருப்பது போல் தோன்றும். உடுத்துவதும் கள்ளுச் சீவுவர்களது உடுப்பு போலத்தான். ஆனால் அதை தொழிலாகக் கொள்ள வில்லை. மதுபானத்தை தொடாத யோகநாதனுக்கு எப்படி உண்மைப்படி விக்கி சடங்கு செய்யமுடியும்? அது உண்மையின் அமைப்பல்ல. ஜீவன்தான் அந்தக் குடுப்பினையைப் பெற்றிருந்தார் - உண்மையின் அமைப்பு மூலம். அதனால் தான் அப்பீல் பத்திரங்கள் உரிய காலகட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

நீதிபதி திரு. இளஞ்செழியனும் "செட்டியாரும் செட்டியாரும்" வழக்கைப் பற்றி திரு. பரதலிங்கத்துடன் சம்பாஷித்தார். ஆவர் பரதலிங்கத்தின் தகப்பனார் திரு. தியாகலிங்கத்திற்கும் மரியாதை பண்ணி பரதலிங்கத் திற்கும் அங்கு வந்ததைப் பற்றி மெச்சி கதைத்தார். அந்த பகுதியின் முடிவு

எமக்கு சாதகமாக 28.09.2016 அன்று முடிவு கூறினார் - அப்பீல் பண்ண அனுமதி கொடுத்து. அதற்குப் பிறகு பரதலிங்கம் வரவில்லை. செட்டியார் VS செட்டியார் முருகன் கோயில் பற்றியது. முருகனே வந்து எனது வேலையை ஆசீர்வதித்ததாக நான் நம்புகிறேன்.

பெரும்பான்மையோர் கடவுளிடம் வேண்டுகிறோம். ஆனால் எப்படி கடவுள் சக்தி எமக்கு வேலை செய்தது என்று மிகச் சிலருக்குத்தான் தெரியும். மற்றவர்களுக்குத் தோல்வியாகப்படும் முடிவுகளும் நம்பிக்கை உள்ளோருக்கு உயர்மட்ட சந்தர்ப்பமாகப்படும். அப்படித்தான் "நான் ஒஸ்ரேலியன்" (Naan Australian) என்ற என்னுடைய புத்தகம் எனது நேரடி ஈடுபாடில்லாமல் ஒஸ்ரேலியன் நஷனல் லைப்ரரி (Australian National Library) இல் இருப்பிடம் எடுத்துள்ளது. கஷ்டம் விரும்புபவர்களை எனக்குத் தெரியாது. நிச்சயம் நான் விரும்புவதில்லை. ஆனால் நான் சரியென்று நினைத்து போகும் வழிகளில் கஷ்டம் வந்தபொழுது அதை நான் தவிர்க்கவுமில்லை. அதுதான் எனக்கு உயர்ந்த மட்டத்தில் சந்தர்ப்பங்களை தெரியப்படுத்தியது. எமக்கு நாமே நீதிபதி. வெளியே தெரியும் நீதிபதி எங்களை எப்படிக் கணிப்பது என்று மற்றவர்களுக்கு காட்டிக் கொடுக்கிறார்.

எமது ஒப்பசுனிட்டி ஷொப் (Opportunity Shop) இல் ஒரு பிள்ளை நான் பொது மேசையில் வைக்காத ஆனால் அவவுக்கு பிடித்த பொருட்களை "இங்காலே தள்ளுங்கோ" என்று சொன்னா. காரணம் அவ அதை பொருளாக மட்டும் பார்த்தது. எனக்கு அது சக்தியுடன் சேர்ந்து மனம் சம்பந்தப்பட்டது. டொனேஷன் - பொருள், சீதனம் - சக்தியுடன் சேர்ந்து மனம் சம்பந்தப்பட்டது. அதேபோல் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் அபிவிருத்தி சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள், பணத்தைப் போட்டு பதவி எடுப்பவர்களுக்கு அந்தப் பதவியும் பொருளே. அது இன்று வந்து நாளை போய்விடும். அதனுடன் வரும் சக்தியே நிலையானது. அது எம்மில் அக்கறை இருப்பவர்கள் மூலம் வரும் பொழுது எமக்கு நல்ல சக்தி. அக்கறை இல்லாதவர்கள் மூலம் வரும்பொழுது பிரிக்கும் சக்தி. நீதிபதி கஜநிதிபாலனின் முடிவு பெரும்பாலும் கேள்வி அறிவு மூலம் கொடுக்கப்பட்டது. அதாவது அவர் எனது சாட்சியை சொல்லக் கேட்ட சாட்சி என்று சொன்னது அவரின் அறிவைப் பற்றி, அதிலிருந்து வெளிப்பட்ட கட்டளைகளைப் பற்றி. நாம் சத்தியப் பிரமாணம்

எடுத்து சாட்சி சொல்லும் பொழுது எமது கடவுளை எம்முள் கொண்டு வருகிறோம். எமக்குள் இருக்கும் அறிவை அந்தக் கடவுள் நம்பிக்கை மூலம் போட்டு எடுக்கும் பொழுதுதான் அது உண்மையான சாட்சி. அந்த நம்பிக்கை ஒரு சமய சம்பந்தப்பட்டிருக்காவிட்டால் நாம் எமது உள்ளிருக்கும் உண்மையை வைத்து சொல்கிறோம். எமது கொழும்பு வழக்கைப் பற்றி கதைக்கும் போது எதிராளி எவ்வமேஷன் (Affirmation) / உறுதிப் படுத்தியவர், சத்தியப்பிரமாணம் எடுக்கவில்லை என்று கூறியபோது மனோகரன் கூறினார் பௌத்த மதத்தினர் / புடிஸ்ட்ஸ் (Buddhists) சத்தியப்பிரமாணம் சமயத்தை வைத்து எடுப்பதில்லை உறுதிப்பாடுதான் செய்வார்கள் என்று. அதற்குக் காரணம் அவர்கள் புத்த பகவானை உயர்ந்த மனிதராகப் பார்ப்பதாக இருக்கலாம்.

வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் தொழில் ரீதியாக சத்தியப் பிரமாணம் எடுக்கிறார்கள். அவர்கள் கடவுள் நம்பிக்கையைக் கொண்டு சத்தியப் பிரமாணம் எடுக்கலாம் அல்லது தமது குருவை மனதில் வைத்து உறுதிப்படுத்தலாம். அந்த மல்லாகம் நீதிமன்றில் அந்த குரு ஸ்தானத்தில் நீதிபதி திரு. அரியநாயகத்திற்கும் அவருக்குப் பிறகு வந்த இளைய நீதிபதி திரு. கஜநிதிபாலனின் மனதில் இடமிருந்தால்தான் அது அந்த நீதிமன்றின் முதுசத்திற்குள்ளால் போட்டெடுக்கப்பட்ட முடிவு. அப்படி மூத்த நீதிபதியில் நம்பிக்கை இல்லாவிட்டால் நேரடியாக சட்டத்திற்குள்ளால் போட்டெடுக்க வேண்டும். எமது வழக்கில் இரண்டும் நடக்கவில்லை.

# 16. நீதிபதியா அரசியல்வாதியா?

நம்பிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நீதியான அரசியல் நடத்தலாம். எல்லாரும் அறியும்படி சட்ட தீர்ப்பு வழங்க பொதுவான வெளி அறிவும் தேவை. ஒருவரது உண்மை மற்றவரது சட்டமாகும்போது மற்றவருக்கு நீதி வழங்க அறிவு தேவை.

மே (May) மாதம் யாழ். பல்கலைக்கழக உயர்பதவி தெரிவுகளைப் பற்றி குறைகூறி ஸ்றி லங்கா காடியன் (Sri Lanka Guardian) பத்திரிகையில் எழுதியிருந்தார்கள். அதிலும் இந்த மாதிரி குழப்பங்களை நான் காணு கிறேன். இது வடமாகாணத்தில் பெரும் பொதுப் பிரச்சினையாகி விட்டது. சுய ஆட்சி ஜனநாயக வழியிலா ஓட்டோக்ரஸி (Autocracy) அரசன் ஆட்சி வழியிலா பெற எங்களுக்கு உரித்துண்டு? ஜனநாயகப்படி என்றால் தான் அது மக்களாட்சி. இல்லாவிட்டால் மன்னராட்சி, மூத்தோர்களது வழியில் வரும் ஆட்சி மன்னராட்சி. அது சப்ஜெக்டிவ் (Subjective) / மனிதரைப் பொருத்தது. அந்த வழியில் மூத்தவர் இளையவர் என்ற பிரிவு /வகுப்பு உண்டு. இளையவர் வணங்கினால் மூத்தவர் அவரது நலனுக்கு பொறுப்பெடுக்க கடமைப்பட்டுள்ளார். அதற்கு மகாபாரதத்திலிருந்து நினைவுக்கு வரும் பாடம் – எப்படி பாஞ்சாலி அர்ஜுனனை போர் நடக்கை யில் காப்பாற்றினா என்பதே. கௌரவர் பக்கம் பலத்த இழப்புகள் வர துரியோதனன் பீஷ்மரிடம் குறை காண்கிறான். பீஷ்மர் கௌரவர்களுக்கு தளபதி. அடுத்த நாள் போரில் அர்ஜுனனை கொன்று வெல்வதாக பீஷ்மர் சபதம் செய்கிறார் / சத்தியப்பிரமாணம் எடுக்கிறார். அதை முறியடிக்க கிருஷ்ணர் பாஞ்சாலியிடம் கூறுகிறார் சத்தம் போடாமல் போய் பீஷ்மர் காலில் விழும்படி. அதற்காக அவவது பாதரட்சைகளை தானே வாங்கி வைத்துக் கொள்கிறார் பகவான். பாஞ்சாலி காலில் விழுந்ததும் தனது உண்மைப்படி பீஷ்மர் “சுமங்கலியாக நீடூழி வாழ்க” என்று ஆசீர்வதிக்

கின்றார். சபதம் கடமைப்படி அறிவால் உந்தப்பட்டது. ஆசீர்வாதம் உண்மைப்படி. அதுவும் பாஞ்சாலி விஷயத்தில் கொடிய அவமானம் நடந்தும் தனது பதவியால் ஒன்றும் செய்ய முடியாமல் தவித்த பீஷ்மருக்கு அந்த உண்மை பெரும் உதவியாக இருந்தது. அது சக்தி. நாம் யோசிக்க முதல் வேலை செய்யும். அதுதான் அரசனாட்சியின் பலம். இரண்டையும் – அதாவது மூத்தவரையும் இளையவரையும் சேர்த்து ஒரு முடிவுதான் எடுக்க முடியும். அந்த முடிவுதான் பொது சபைக்கு வரமுடியும். போரின்போது அர்ஜுனனோ மற்ற பாண்டவர்களோ பீஷ்மரிடம் ஆசி வேண்ட முடியாது. அவரவர் தத்தம் தலைவர்கள் மூலம் விளைவுகளை வெளிப்படுத்தலாம். அதேபோல் சர்வாதிகார வழியில் போகிறவர்கள். இந்தக்கிழமை முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரர் அவர்களைப் பற்றிய புத்தகம் “நீதியரசர் பேசுகிறார்” வெளியிட்டபோது பிரபாகரன் தமிழரின் தேசத் தலைவரா என்ற கேள்வி வாதாடப்பட்டது. திரு.விக்னேஸ்வரன் பிரபாகரன் எல்லா இயக்கங்களையும் ஒன்றுபடுத்தினார் என்றார். அதேபோல் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றார். திரு. விக்கினேஸ்வரன் ஜனநாயகத்தையும் சர்வாதிகாரத்தையும் ஒரே மாதிரி பார்க்கிறார். அப்படி இருக்க முடியாது. அது அது அதன் அமைப்பில் வைத்துத்தான் பார்க்க வேண்டும். தமிழர் சுய ஆட்சிக்கு ஜனநாயக வழியில் இரு தரப்புகள் நிச்சயம் வேண்டும் – போட்டியிலிருப்பது போல். சர்வாதிகாரத்தில் ஒரு பக்கம் மட்டுமே. ஜனநாயகம் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் சர்வாதிகாரத்தை போற்றலாமோ? நேற்று சுழிபுரத்தில் ஒரு ஆறு வயது பிள்ளையை 22 வயது ஆண் கற்பழித்து, கொலை செய்து கிணற்றிற்குள் போட்டதாக செய்தி வந்தது. அந்த சிறுமி பள்ளிக்கூட யுனிவோம் (Uniform) இல் போடப்பட்ட படமும் வந்தது. நெஞ்சை என்னவோ செய்தது. ஒரே இடத்தில் ஒரு காலகட்டத்தில் இப்படி கோர சம்பவங்கள் நடக்கும்பொழுது அதில் ஒரு பொது குணாதிசயம் இருக்கும் என்று நான் நம்புகிறேன். வித்யா கொலை வழக்கின்போது சில தாய்மார் நீதிமன்றத்தில் தமக்குள் சொன்னார்கள் “பெடியங்கள் இருந்தால் இப்படி நடக்காது” என்று. இது யாழ் நீதிமன்றத்தில் நடந்த சம்பாஷணை. அதில் ஒரு பெண் அந்த வழக்கில் கைது செய்யப்பட்டவரின் உறவு. மேற்படி கூறியவ தனது குடும்பத்தைப் பற்றி கதைத்தா. மகனுக்கு (இளைஞர்) சின்ன உத்தியோகமெல்லாம்

சரிவராது என்றா. ஆனால் பெரிய படிப்பு படித்ததாக தெரியவில்லை. எனக்கு பட்டது அந்தத் தாய்க்கு தன்னைவிட கூடப் படித்திருந்தால் அவர் பெரிய பட்டதாரி போன்று தோன்றலாம். நீதிமன்றத்தில் முறையாகப் பயிற்சி பெற்று சட்டத்தின் வரையறுப்பிற்குள் செயற்படும் சிங்கள பொலிஸை விட சண்டைக்காக பயிற்சி பெற்று துப்பாக்கியால் சிங்கள ஆமி (Army) யை எதிர்த்த “பெடியங்கள்” அந்த தாய்க்கு பெரிதாகப்பட்டது. திரு. விக்னேஸ்வரன் சமீபத்தில் அரசாங்க ஆமி, அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவது பற்றி கண்டனம் தெரிவித்தார். அது சரியே. அப்படியென்றால் அரசை எதிர்க்கவென்றே உருவாகின இயக்கங்கள் எப்படி மக்களது பணிகளில் ஈடுபடமுடியும்? அது இரண்டு தோணியில் கால் வைப்பதாகாதா? உண்மை, அறிவு இவை இரண்டையும் சேர்த்துத்தான் நாம் இயங்குகிறோம். அறிவால் உந்தப்படும்பொழுது அது பகுத்தறிவு என்றால் நிதானம் இருக்கும். உணர்ச்சி வசப்பட்டு வரும் அறிவு நம்பிக்கை என்ற வேருடன் வந்தால் அது இயற்கையான பகுத்தறிவைக் கொடுக்கும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் அது “சொல்லக் கேட்டது” மட்டுமே. எப்படி அரசாங்க ஆமி மக்களது வேலையை வடமாகாணத்தில் செய்வது பிழையோ, அதே போல அந்த ஆமியிடமிருந்து மக்களைக் காப்பாற்ற என்று பயிற்சி பெற்ற இயக்கங்கள் மக்களின் பொது வாழ்க்கையில் தலையிடுவதும் தவறு. அவரவருக்கு அவரவர் கடமை என்றுண்டு. நாம் எடுக்கும் பதவியாக இருக்கலாம், கொடுக்கப்பட்ட பதவியாக இருக்கலாம். சேவை என்றாலும் அந்த அமைப்பு மூலம் போய் செய்ய வேண்டும். அமைப்பை குலைத்து அல்ல. கள் சீவுகிறவர் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியரை மதித்தால் தான் அவருக்கு பரந்த சமூகத்தில் ஒழுங்காக இயங்கமுடியும். உடலால், அதன் உணர்ச்சிகளால் உந்தப்படுபவர்கள் உடலால் பாடுபட்டு உழைத்ததற்குள் வாழ்ந்தால் அதுவே அவர்களது கட்டுப்பாடு. ஆயுத சண்டை பிடிப்பவர்கள் அதன் விளைவால் உந்தப்படுபவர்கள் அந்த வேலை யில் மட்டுமே நிற்க வேண்டும். ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்படும் ஒருவர் சர்வாதிகாரியாக இயங்கியவரை அரசியலில் போற்றுவது பெரும் பிழை. போரிற்குப் பிறகு இலங்கை அரசாங்கம் அப்படித்தான் இங்கு ஒஸ்ரேலியாவிற்கும் ஹைய் கமிஷனர் (High Commissioner) ஆக போர்க்கால நேவி (Navy) கமாண்டரை (Commander) அனுப்பி

வைத்தது. அவருக்கு பாவம் பொது விஷயங்கள் மூலம் மக்களை ஒன்று கூட்டத் தெரியவில்லை. அதுபோலத்தான் ஆயுதம் தாங்கி போராடிய இயக்கங்களும். இங்கு அடிக்கடி சொல்வார்கள் “இயக்கம் முதலில் ஒழுங்காகத்தான் இருந்தார்கள், போகப்போகத்தான் குழப்பங்கள்” என்று. அதற்கு ஒரு பெரிய காரணம் – அவர்கள் பொதுமக்களது வரையறுப்பிற்குள் உள்ளிட்டது தான். அவர்களுக்கு அதற்குரிய பயிற்சியுமில்லை ஜனநாயக முதுசமுமில்லை. அந்த முதுசத்திற்கு உருவம் கொடுத்தவர்களை அழித்தார்கள். விளைவிற்காக முதுசத்தை அழிப்பது பலயீனத்தையே வளர்க்கும். சுழிபுரம் அப்படியில் – அழிக்கப்பட்ட மதிப்பிற்குரிய திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் வாழ்விடம். அவரை மதித்து அவர் கையாண்ட வழியைவிட எப்படி ஆயுதம் தாங்கி வன்முறையை மேற்கொண்டவர்கள் வழி அமைதியை கொண்டு வரமுடியும்? நமக்கென்ன வந்தது என்று சீவிக்காமல் கொஞ்சமென்றாலும் பிழைகளுக்கு மனம் வருந்தி பரிகாரம் செய்தால் அந்தப் பாவங்களைக் கழிக்கலாம். போர் குற்றங்களை தேர்தல் பிரசாரங்களில் சுழிபுரத்தில் பேசி நான் கேட்டிருக்கிறேன். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு எதிராக செயற்பட்டவர்களை ஆயுதம் தாங்கியவர்களுக்கு சப்போட் (Support) பண்ணுபவர்கள் அவரது சாபத்திற்குள்ளாகிறார்கள். பூமி சக்திகளை தேக்கி வைக்கும். பூமியை மதிப்பவர்கள் அந்த இடத்தை ஏமாற்ற மாட்டார்கள். மூத்த இளைய பதவி இருந்தால் மூத்தவரை இளையவர் மரியாதை பண்ணி ஒன்றாக வேண்டும் இளையவர் மூத்தவரை வதம் செய்த பிறகு அவர் எப்படி மூத்தவரின் தம்பியாகமுடியும்? அப்படிக் கூறி மக்களை ஏமாத்துபவர்கள் மக்களை கீழே இறக்குவர். பொய்யான எதிர்பார்ப்புக் களை கொடுத்து தமது பதவியை ஏற்றிக்கொள்வர். இது குடும்பங்களில் நடக்கும்பொழுது தீர்வு அங்கிருந்துதான் துவங்க வேண்டும். மேலிருந்து வருமென்று எதிர்பார்ப்பவர்களுக்கு ஏமாற்றமே.

எமது மூளை ஒழுங்காக இருந்தால்தான் மனதில் நிம்மதி உண்டு. உண்மை உயர்ந்த ஒழுக்கத்தைத் தரும். அடுத்தது பகுத்தறிவு. சமூக நலன் கருதுபவர் நீதிமன்றத்தில்கூட உண்மையை மேலோங்கி வைப்பார். நடந்தது மட்டும் உண்மை இல்லை. என்ன சக்தி நடத்தியது

என்பதே உண்மை. பிரச்சனை என்று ஒன்றிருந்தால் தீர்வும் அதற்குள் இருந்துதான் வரும். அதுதான் உண்மையின் அற்புத நியதி. வெற்றி தோல்வி நீதிமன்றத்தில் நீதிபதியிடம் வழக்கறிஞர்களிடமும் விட்டால் அவர்கள் எங்களில் பொது ஒருவரான நீதிபதியும் ஒவ்வொரு பக்கத்தின் உண்மை பிரதிநிதிகளாக வழக்கறிஞர்களும் இருந்தால் தான் கிடைக்கும் தீர்ப்பு உண்மை தீர்வின் வெளிப்பாடாகும். நீதிமன்றமே கோணலாக இருந்தால் தீர்ப்பு பிரச்சனையைக் கூட்டும்.

சொல்லக்கேட்ட அறிவு சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படாத மாதிரி கொப்பி அடித்த சொல்லக் கேட்ட சட்ட அறிவும் நீதிமன்றிற்கு கொண்டுவருவது ஏற்கப்படக்கூடாத ஒன்று. அந்த சட்டத்தில் நம்பிக்கை இருக்கவேண்டும். அந்த சட்டத்தை முன்னைய நீதிபதி எப்படிப் பாவித்தார் என்பது அவரின் மீது நம்பிக்கை வைத்தால் ஒழிய கேள்வி அறிவு / சிற்றறிவுதான். மனுதார் தரப்பு வழக்கறிஞர் பக்கம் பக்கமாக கேஸ் லோ (Case Law) சமர்ப்பித்தார். அதில் ஒன்று பூதத்தம்பியும் மற்றவர்களும் vs மயில்வாகனமும் மற்றவர்களும். யோகநாதனைப் போல ஆறுமுகம் கதிரன் என்பவர் பிள்ளை வாரிசு இல்லாது இறந்தார். ஆண் சகோதரர்களின் ஆண் பிள்ளைகளுக்கு மட்டுமா அல்லது பெண் சகோதரங்களின் பிள்ளைகளுக்கும் அவரது சொத்தில் பங்குண்டா என்ற கேள்விதான் இந்த வழக்கின் அடிப்படை. அதற்கு மாவட்ட நீதிபதி திரு. கமரன் பின்வருமாறு தீர்ப்புக் கூறுகிறார்.

Thesawalamai undoubtedly is the law governing inheritance in the Northern Province, but sub sections 5 and 7 of section 1 seem to me to be silent as to the succession of remote relations to each other. 5 and 7 deal only with the succession inter se of members of the same family, father and mother, brothers and sisters. I presume that when the Thesawalamai is silent the law of succession in the rest of Ceylon must be applied ; if so, then the first and second plaintiffs should get one third, the fourth defendant one-third and the first, second and third defendants one-third.

கேஸின் அமைப்பை பின்வருமாறு விளக்குகிறார் :

Where K dies intestate and without heirs in the descending or ascending line, and where there were children of K's uncles and aunts, the succession should be governed in the absence of any rule of the Thesawalamai, by the Roman-Dutch law which admits such children to the inheritance per stirpes.

அதாவது K என்பவர் உயில் எழுதாமல் (Intestate) / இன்டஸ்டேட் இறந்து அவருக்கு மரபுரிமையாளர்கள் இளையவர்களோ, மூத்தவர்களோ இல்லாவிடின் Kக்கு மருமக்கள் இருந்தால், தேசவழமைச் சட்டம் ஒரு விதிமுறையை குறிக்காவிட்டால் ரோமன் - டச் சட்டம் மூலம் அந்த மருமக்கள் மரபுரிமையாளர்கள் ஆக்கப்படுகிறார்கள். அதன்படி பங்கு ஸ்டபீஸ் (Stirpes) / பிரதிநிதித்துவ வழிமுறைப்படி அமையும். எமது கேஸில் ஸ்டபீஸ் வழிமுறை பாவித்தால் இறந்த யோகநாதனின் இறந்த சகோதரங் களின் பிள்ளைகளுக்கு அந்த இறந்த சகோதரரின் பங்கு சமமாக பிரிக்கப்பட வேண்டும். சக்ஸஷன் (Succession) / மரபு பங்கு சுக துக்கங்களில் பங்கு கொண்டவர்களுக்கு திட்டவட்டமாக வகுக்கப்படும். மற்றவர்களுக்கு அது பிரதிநிதித்துவப்படி சமபங்கு கொடுக்கப்படும். தலைமுறை தூர போகும்போது பங்கில் உட்பிரிவுகளிருக்கும்.

ஒருமுறை நான் சிட்னி விமான நிலையத்திற்கு டக்ஸி (Taxi)யில் போகும்போது அந்த ட்ரைவர் (Driver) கேட்டார் எமக்கு இங்கு குடும்பம் இருக்கா என்று. நான் எனது பக்க உறவினர்களது தொடர்பை விளக்கி யதும் அவர் அவர்களை வமிலி (Family) /சொந்தம் இல்லை ரெலடிவ்ஸ் (Relatives) / உறவினர் என்றார். இந்த வித்தியாசத்தைப் பற்றி நான் எத்தனையோ தரம் எனது பொது சம்பாஷணைகளில் வெளிப்படுத்தி யிருக்கிறேன். ஆனால் மற்றவர்கள் பெரிதாக அதை எடுத்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை. இவர் ஹொங்கொங் (Hongkong) இல் இருந்து இங்கு குடியேறிய சீன கலாசாரத்தவர். அவர் தெளிவாக வித்தியாசம் கண்டார். அது போலத்தான் மேற்கூறிய கேஸில் நீதிபதி திரு. கமரனும் Family (சொந்தம்) என்று தகப்பன், தாய், சகோதரர், சகோதரிகள் என்று குறிப்பிடுகிறார். அது மட்டுமல்ல தேசவழமை பிரிவுகள் 5உம், 7உம் இவர்களுக்குரியவை. மற்றவர்களுக்கு பொதுச்சட்டம் என்று குறிப்பிடுகிறார். வழக்கு கேட்கப்

பட்டதும் உட்பிரிவு 7 படி இல்லாவிட்டால் சீதனமா, டொனேஷனா என்ற கேள்வி மூலம் ஆராய நீதிமன்றத்திற்கு உரிமை இல்லை. அப்பீல் வழக்கு நடக்கும் பொழுது ஒரு கட்டத்தில் நீதிபதி திரு. இளஞ்செழியன் கூறினார் சீதனமோ, டொனேஷனோ எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு பின் சமமாக பிரிக்க வேண்டு என்று. அப்படித்தான் மல்லாகத்தைச் சார்ந்த ஒரு சட்ட நிபுணரும் கூறினார். ஆனால் கடைசி முடிவில் நீதிபதி திரு. இளஞ்செழியன் தடம் மாறினார். அதில் அவர் மனுதார் தரப்பு வக்கீல் கூறியபடி பின்வரும் சட்டத்தை தனது தீர்ப்பில் உள்ளடக்கி உள்ளார்.

"Section 30 of the Matrimonial Rights and Inheritance Ordinance No. 15 of 1876 as amended, states that except when otherwise expressly provided, if all those who succeed to the inheritance are equally near in degree to the intestate they take per capita and not per stirpes."

Matrimonial Rights and Inheritance Ordinance (Jaffna) - யாழ்ப்பாண மணவழி உரிமையும் மரபுரிமையும் சட்டம் தன்னைப்பற்றி பின்வருமாறு கூறுகிறது :

"An Ordinance to amend the law relating to Matrimonial Rights of the Tamils who are now governed by "Thesawalamai" with regard to Property & Law of inheritance"

யாழ்ப்பாண மணவழி உரிமையும் மரபுரிமையும் சட்டப்படி உட்பிரிவு 29 மேற்படி கூறுகிறது. மனுதாரரும் தமது மனுவில் யாழ்ப்பாண சட்டத்தை திருத்தும்போது தாமாகவே செருகியுள்ளனர். ஆனால் பூதத்தம்பி எதிர் மயில்வாகனம் வழக்கை உதாரணமாக சமர்ப்பிக்கும் பொழுது '1876ஆம் ஆண்டின் 15ம் இலக்க பொதுவான மணவழி உரித்துக்கள் வழியுரிமை கட்டளை சட்டத்தின் 30ஆம் பிரிவு' பாவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த "பூதத்தம்பி எதிர் மயில்வாகனம்" வழக்கு Roman Dutch Law / ரோமன் டச் சட்டப்படி தீர்க்கப்பட்டது.

நீதிபதி திரு. இளஞ்செழியனும் எந்த சட்டத்தை பாவிக்கின்றார் என்றும் - அந்தச் சட்டப்படிதான் விசாரணை நடந்ததா என்றும் உறுதிப்படுத்த வேண்டிய கடமையில் தவறினார். நாம் எமது வழக்கறிஞருக்கு பூதத்தம்பி

v மயில்வாகனம் கேஸ் எங்களுக்கு சாதகமானதென்றும் அது திட்ட வட்டமாக தேசவழமை பிரிவு 7 மூலம் என்ன விதிமுறையைக் குறிக்கிறது என்றும் கூறியும் அவர் அதை தனது சப்மிஷன் (Submission) இல் உள்ளடக்கவில்லை. எனது அப்பீல் மனுவில் நான் பிரிவு 7 மூலம் என்பதை தெட்டத் தெளிவாகக் கூறியும் அது அனாதையாகக் கிடந்தது. யாழ்ப்பாண நீதிமன்றத்தின் நடைமுறைப்படி அது சரியாக இருக்கலாம். ஆனால் தேசவழமைப்படி விசாரணை செய்யப்பட்ட வழக்கை வேறு ஒரு சட்டமூலம் எப்படித் தீர்மானிக்க முடியும்? வேறு சட்டம் என்றால் விசாரணை அந்தச் சட்டம் மூலமுமல்லவா நடந்திருக்க வேண்டும்? இந்த வழக்கில் மரபுரிமை தேசவழமை சட்டப்படியும் நிர்வாகம் பற்றிய கேள்வி பொதுச்சட்டப்படியும் ஆராயப்பட்டது. முடிவும் அப்படியல்லவா அமைந்திருக்கவேண்டும்? அமையவில்லை.

அப்பீல் சமர்ப்பணத்தில் மனுதாரர் வழக்கறிஞர் Ratnasingham vs Tikiribanda Dissanaika and others / ரட்ணசிங்கம் எதிர் டிக்கிரி பண்டா டிஸ்ஸநாயக்கவும் மற்றவர்களும் என்ற வழக்கை உதாரணமாக / கேஸ்லோ / வழக்குச் சட்டமாக பாவித்து சமர்ப்பித்தார். நீதிபதிகளும் அதை ஏற்று இலங்கைக்கு வெளியே இருக்கும் சொத்துக்களுக்கு இலங்கையில் நிர்வாக உரிமை தீர்மானிக்க முடியாது என்று கூறினார்கள். அப்படியென்றால் மனுதார் மனுவில் கழித்துக் காட்டி ரூபா 675,000 எந்தக் காசிலிருந்து கழிக்கப்படும்? இலங்கைக்கு வெளியில் இருக்கும் காசில் அல்லவா? தங்கள் சமர்ப்பணத்தில் மனுதாரர்கள் இங்கிலாந்தில் இருக்கும் சொத்திற்கு நிர்வாகம் தேவை; அதற்குரியதை இங்கிலாந்தில் செய்வதாகக் கூறி இருக்கிறார்கள். இது மல்லாகம் நீதிமன்றில் கூறப்படவில்லை. தமது தீர்மானத்தில் காரணம் காட்டிய நீதிபதிகள் திரு. இளஞ்செழியனும் திரு. கண்ணனும் பின்வருமாறு மனுதார் வழக்கறிஞர் சமர்ப்பித்ததை உள்ளடக்குகிறார்கள் :

[The observations of Lord Radcliffe with regard to finding of fact by a trial judge, in Alles vs Alles (51 NRL 416) would also be of importance. Per Lord Radcliffe at 421 :

“To reverse this finding on appeal would be a strong step, only justified if the trial judge had demonstrably misjudged the position”]

அதாவது “ஒரு அப்பீல் மூலம் முதல் நீதிமன்றத்தின் முடிவை திருப்புவது ஒரு பலமான நடவடிக்கை. முதல் நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்த நீதிபதி வெளியே தெரியத்தக்கதாக நிலைப்பாட்டை பிழையாக கணித்திருந்தாலே அப்படியாக திருப்பத்தை நியாயப்படுத்த முடியும்”

தேசவழமைப்படி என்று அவர் விசாரணை செய்ததை எப்படி பொதுவான மணவழி உரிமைகளும் மரபுரிமைகளும் என்ற சட்டமூலம் மேல் நீதிமன்றம் பார்வையிடமுடியும். அது அதே விளைவைக் காட்ட சட்டத் தையே மாற்றுதலாக்குதல்லவா? எங்களது அம்மா அப்படித்தான் ஒரு உறவினரது திருமணப் பொருத்தத்தைப் பற்றிக் கூறினா - மற்றப் பொருத்தங்கள் இருந்து நட்சத்திரம் பொருந்தவில்லை என்றதும் பொருத்தம் பார்த்த சாஸ்திரி ஆணின் நட்சத்திரத்தையே மாற்றினார் என்று. அப்படித்தான் இந்தச் சட்டத்தையே / அளவுகோளையே மாற்றிய விஷயமும். பூதத்தம்பி எதிர் மயில்வாகனத்தில் தேசவழமைக்குப் பதிலாக மனுதாரர் வழக்கறிஞர் பொது மணவழி உரித்துக்கள் வழியுரிமை சட்டத்தின் 30ஆம் பிரிவைப் பாவித்திருக்கிறார்கள். பூதத்தம்பி எதிர் மயில்வாகனம் வழக்கை தீர்வு செய்த நீதிபதி திரு. கமரன் தேசவழமை பிரிவுகள் 5, 7ஆம் பற்றியும் தூர உறவுகளுக்கு ரோமன் - டச் சட்டம் என்றும் கூறுகிறார்.

மனுதாரர் வழக்கறிஞர் தேச வழமையையும் நீதிபதியையும் அவமதித் துள்ளார். அதை யாழ் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆமோதித்துள்ளார்கள். சட்ட நாகரிகத்தில் நாம் எவ்வளவு சறுக்கியிருக்கிறோம் என்று இதன்மூலம் நாமே கணித்துக் கொள்ளலாம். அப்படி செய்வதே உண்மையான சுய ஆட்சி.

# 17. அரசன் ஆட்சியா மக்களாட்சியா?

**எம்மிடம் பணமும் மனமும் இருந்தால் பெரிய அமைப்புகள் மூலம் சேவை வழங்கலாம். மனம் மாத்திரம் இருந்து முறைப்படி புறக்கண்ணுக்கு தெரியாமல் அமைத்தால் கடவுள் நிச்சயம் வருவார். அதுவே மக்களாட்சி.**

பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டி உள்ளுக்குள் செயற்பாடுகள் இல்லை என்றால் ஒன்றில் அவை முழுமை பெற்ற ஆட்சியைக் குறிக்க வேண்டும் அல்லது அவை "சொத்தைகள்". அப்படித்தான் துணைவியில் கட்டடம் கட்டப்பட்டது. நாம் போக்குவரத்திற்காக பாதை எமது கோயில் வளவிலிருந்து மக்களுக்கு எழுதினோம். மேலும் நெக்கோட் Necord கொடுத்த நிதி மூலம் கட்டடம் கட்ட அந்த பகுதி என் ஜீ ஓ (NGO – Non Governmental Organization) வளவு தேடியபோது மேலும் எமது வளவில் பங்களித்தோம். அப்ப சொன்னார்கள், கிராம சேவகர் வருவார், தபால் கந்தோர் வரும் என்றெல்லாம். ஆனால் அது, கூறியவர்களின் ஆர்வக்கோளாறு என்று இப்ப தெரிகிறது. அந்தக் கட்டடம் இப்போ "சும்மா" இருக்கிறது. அது எனக்கு ஒரு பாடமாக அமைந்தது. அந்தக் கோயில் வளவு எமது பரம்பரைச் சொத்து. அதில் எனது ஆச்சி (அப்பாவின் அம்மா) இன் சக்தி உண்டு. அந்த ஊர்ச் சனங்களுக்கு பாதை தேவையாக இருந்தது – ஒரு நாகரிக அமைப்புடன் ஒன்றிணைய. மற்றும்படி அங்கு காணி பிடிப்பது ஒரு வழக்கம். கும்பிட்ட கோயில் காணி என்றால் அதைப் பிடிப்பவர்களுக்கு அங்கிருக்கும் சக்தி தானாக தண்டிக்கும். அதேநேரம் நாங்கள் பராமரிக்காமல் விட்டால் அந்த ஊரில் காணி பிடிக்கும் பழக்கவழக்கத்தால் அவர்கள் பின்தங்கி நிற்க நாங்களும் காரணமாவோம். எமது உண்மைப்படி அந்தக் கட்டடம் மூலம் அந்த ஊர் சறுக்காமல் காப்பாற்றப்பட்டது. காரணம் அந்த கட்டடத்தின் சக்தி அல்ல. அந்த வளவின் பரம்பரை சக்தி. நேற்று (01.07.2018) "ஈழத்தில் அமையும் திருவாசக அரண்மனை" என்ற தலைப்பில் விக்டர் ராஜலிங்கம்

என்பவரிடமிருந்து ஈமெய்ல் (Email) வந்தது. அதன்படி நாவற்குழியில் ஒரு ப்ரம்மாண்டமான கோயில் - சிவனுக்கு. அதை அமைத்த ஈழத்து தமிழர்கள் கலாநிதி ஆறு திருமுருகனும் ஒஸ்ரேலியாவில் வசிக்கும் டொக்டர் மனமோகனும் என்று குறிப்பிட்டு அவர்களது உருவங்களையும் அனுப்பியிருந்தார்கள். இதற்கு முதல் எனக்கு இங்கு சிட்னியில் வசிக்கும் கலாநிதி ரவின்றா என்பவர் கலாநிதி திருமுருகன் இங்கு சிட்னி முருகன் கோயிலில் ஆற்றிய உரையை அனுப்பி இருந்தார் - வீடியோ வடிவில் 26.04.2018 அன்று அதை பார்வையிட்டு அதில் பின்வரும் குறைகளை பார்க்குமாறு நான் எனது ஈமெய்ல் குழுவிலிருக்கும் தமிழர்களுக்கு அனுப்பினேன். அவர்களில் விக்டரும் ஒருவர். மூன்று விஷயங்களில் அடிப்படையில் குறை கண்டேன்.

1. கலாநிதி திருமுருகன் கூறினார் – ஒஸ்ரேலியாவில் வாழும் தமிழர்கள், அவர்களோ அவர்களது பெற்றாரோ செய்த புண்ணியத்தால் தான் இங்கு இருக்கிறோம் என்றது. (அது உண்மை என்றால் அவரல்லவோ நாம் சொல்வதைக் கேட்கவேண்டும்)

2. மகாபாரதத்தில் போருக்கு முதல் பாண்டவர் பக்கத்திலிருந்து அர்ஜுனனும் கௌரவர் பக்கத்திலிருந்து துரியோதனனும் கிருஷ்ணரிடம் ஆதரவு கேட்க சென்றார்கள். இதை கலாநிதி ஆறு திருமுருகன் அர்ஜுனனுக்கு பதிலாக “தர்மன்” என்று கூறினார்.

3. மிகப் பெரிய ஜப்பான் நாட்டில் பூகம்பம் வந்ததை பாவத்தால் வந்தது, போல பெரிதாகக் கதைத்தார். அதற்கு நான் எழுதினேன் இந்து சமயத்தில் சிவபெருமானை “பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே” என்று நாம் வழிபடுகிறோம். ஒருவர், இறக்கும்பொழுது சிவபுராணம் ஓதுகிறோம். அதன்மூலம் நாம் இறந்தவரின் வாழ்க்கையில் நாம் போட்ட ஈடுபாட்டை உயர்த்தி சக்தி நிலைக்கு எழுப்புகிறோம். அப்படிச் செய்யும் பொழுது அவர்கள் எங்களுக்குள் தெய்வ சக்தியாக வாழ் கிறார்கள் என்று.

விக்டர் இவை ஒன்றுக்குமே தனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. தமிழர் என்றால் தமிழ் பாஷை பேசுகிறவர்கள் என்றும் அதில் தலைவர்கள் தமிழை சுத்தமாகப் பாவிப்பவர்கள் என்பது போல கதைப்பவர் விக்டர்.

அவருக்கு பாரம்பரிய சின்னங்களைக் காட்டும் பெரிய கட்டடத்தில் கடவுள் முதலிடம் கொடுப்பார் போல இந்த நாவற்குழி சிவன் கோயில். காரணம் விளைவுகளால் உந்தப்படுவது. அமைப்பிற்குள்ளால் அல்லது உண்மைக்குள்ளால் போடாமல் எடுக்கப்படும் விளைவுகள் ஒழுங்கீனத்தை உறுதிப்படுத்தும்.

நான் அவருக்கு எழுதினேன் பல்லவ மன்னன் கட்டிய மாபெரும் கோயிலுக்கு போகுமுதல் சிவபெருமான் தான் பூசலநாயனார் தனது மனதில் படிப்படியாக சாஸ்திர முறைப்படி கட்டிய கோயிலுக்கு போவதாக மன்னனின் கனவில் தோன்றிக் கூறிய உதாரணத்தை. ஆனால் இந்த இரு "ஈழத்தமிழர்களது கனவில் சிவபெருமான் வரவில்லை. காரணம் அவர்கள் இந்த விஷயத்தில் மன்னர்கள் அல்ல. ஆறு திருமுருகன் யாழ் பல்கலைகழக்கத்தில் ஆளுநர்களில் ஒருவர். அதை வெளி உலகம் பார்த்து மெச்சும்படி தராதரத்தை உயர்த்திக் கட்டியிருக்க வேண்டும். இந்த கோயில் விஷயங்களில் யாழ்ப்பாணத்து அரண்மனை நல்லூரில் உள்ளது. அதன் உண்மை அரசர் எனது தலைமுறைக்கு யோகர்சுவாமி. அவரே பூசலநாயனார் அன்று மனதில் கோயில் அமைத்தது போல எமக்கு அரசாட்சி அமைத்தார். மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் சுய ஆட்சி தானாக அமையும்.

நான் நீதிமன்றத்திலும் சட்ட அமைப்புக்களிலும் பூசல நாயனார் மாதிரி என்று என்னைப் பார்க்கிறேன். அதுதான் 26.04.2018 அன்று எனக்குள் இருந்த சிவபெருமான் என்னை வெளிப்படுத்தப் பண்ணினார் - அரச / பெரும்பதவி பெற்ற கலாநிதிகள் தம்மை வெளிப்படுத்து முதல் - என்று நம்புகிறேன். ஆர்வக்கோளாரால் உந்தப்படுபவர்கள் சிற்றறிவால் உந்தப்படுகிறார்கள். ஆசை சிற்றறிவை தூண்டிவிடும். ஆசை வெளிப்படுத்தப் பட்டால் பயமும் வெளிப்படுத்தப்படும் என்பது உண்மை. சிற்றறிவை பகுத்தறிவாக்கினால் இரு பக்கத்தையும் ஒரே நேரத்தில் பார்க்கும் பொதுத் தன்மை உருவாகி வளரும். இருபக்கமும் எமக்குள் ஒன்று கூடும்பொழுது. அந்த அறிவு சக்தியாகி எம்முள் இருந்து எம்மை வழிநடத்தும். அதுவே அமைதி நிலை. இந்த அடிப்படையில்தான் ஒரு பிரச்சனையை தள்ளி வைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தால் தீர்வும் அதற்குள் தெரியும். இல்லாவிட்டால் அது உண்மையான பிரச்சனை அல்ல. அப்படித் தீர்வை

அடையாளம் கண்டு கொள்பவர்களுடன் எமது சக்திகளை நாம் சேர்த்துக் கொண்டால், எமது வேலைகளின் விளைவுகளை அவர்களுடன் பங்கிட்டால் அல்லது அவர்களுக்கு சமர்ப்பித்தால் எமது சிந்தனை உயரும்.

எமது வழக்கு விஷயத்தில் விஷயத்தை "உயர்த்திப்" பார்க்க வேண்டிய கடமை யாழ்ப்பாண உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு இருந்தது. அது நடந்தது உண்மை மூலம். அறிவு மூலம் அல்ல. சிறுபான்மையோர் சிந்தனையை உயர்த்தினால்தான் பெரும்பான்மையோருக்கு சமமாக முடியும். அந்த நீதிமன்றில் நான் வெளியே கொண்டு வந்த உண்மை என்னவென்றால் அந்த நீதிமன்றத்தில் பெரும்பான்மையோர் வழக்கறிஞர்களும் நீதிபதி களும். மக்கள் அங்கு சிறுபான்மையோர். எமது குடும்பத்தவர் நமது உண்மையை நாமே சுதந்திரமாகக் கொண்டு வந்திருந்தால் அந்த இடைவெளி குறுகியிருக்கும். ஆனால் அவர்களோ வழக்கறிஞரது அறிவுக்கு ஊடகமாக வந்து தமது சம உரிமையை விட்டுக்கொடுத்தார்கள். பேருக்குத் தான் அது சத்தியக்கூற்று. உண்மைப்படி அது பெரும்பான்மை சிற்றறிவை காட்டும் ஒரு பத்திரம். உதாரணத்திற்கு அவர்கள் கூறிய பின்வரும் கூற்றைப் பார்ப்போம். "கணவனும் மனைவியுமாகி 1ஆம் 2ஆம் எதிர்மனுதார்கள் மேலே குறிப்பிட்ட இடத்தில் வசிப்பவர்களும், தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்களுமாகும் என நாம் கூறுகிறோம்"

உண்மை, சத்தியம் என்பது ஒரு சக்தி. மற்றவர்கள் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்றால் அது சட்டம் தெரியாத ஒருவருக்கு சிற்றறிவு. தான் தேசவழமைப்படி நடந்தனான் என்று ஒருவர் தன்னைப் பற்றிக் கூறும்போது அது உண்மையான கூற்றாக இருக்கலாம். வேறு சாட்சியங்களை வைத்து அப்படியில்லை என்று கோருமட்டும் அதை சத்தியக் கூற்றென்று நாம் எடுத்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம். 1ம் எதிர்மனுதார் தர்மலிங்கம் நான்கு சகோதரர்களிலும் மூத்தவர். அவர் தேசவழமைப்படி நடந்தேன் என்று கூறினால் அது பொய். ஏனெனில் தேசவழமைப்படி இது ஆண்மகனின் பொறுப்பு. யோகநாதன் ஆண். தர்மலிங்கமும் பரமசிவமும் ஆண்கள். அப்படியிருக்க எப்படி ஒரு சகோதரி இந்த வழக்கை நடத்தமுடியும்? நான்கு சகோதரர்களில் பார்க்லேஸ் பாங்கிற்கு கடிதம் எழுதிய சரஸ்வதி அதி உயர்ந்த நிர்வாக திறமை உடையவர் என்றால் அவ அல்லவா உண்மைப்படி மனுதாரராகியிருக்க வேண்டும்? அப்படியானால்தான்

ஆண் சகோதரமாக இருந்தும் தேசவழமைப்படி மனுதாரராக முன்வராமல் சரஸ்வதியிடம் அந்தப் பொறுப்பை விட்டதாக அவர் கூறியிருந்தால் அது தேசவழமையை மதிப்பவராக காட்டும் கூற்று. அப்படி அவரிடமிருந்து ஒரு கூற்றும் பதியப்படவில்லை என்பதுதான் நடந்தது. அதில் ஒழித்திருந்த உண்மை - அவர் பெண் சகோதரங்களுக்கு அதுவும் தங்கச்சிமாருக்கு அடிபணிந்த அண்ணன் என்று.

அப்படியாக நல்ல பெயர் எடுக்க கொடுப்பவர்கள் தேசவழமைக்கு மாறாக நடக்கிறார்கள். எமது நடத்தை தேசவழமை ஒழுங்கை உறுதிப்படுத்தினால் தேசவழமை எமக்குள் வந்து எம்மை வழிநடத்தும் என்ற ஞானம்தான் எனக்கு இந்த அனுபவத்தினால் வந்த மாபெரும் பலன். அந்தப் பாடம் விளங்க விளங்க – மனம் தெளிவாகிறது. வேறென்ன வேண்டும் பரமே!

எமது உண்மைக்கு உருவம் கொடுத்து மையத்தில் இரண்டாக வெட்டினால் அதுதான் எமது இயற்கையான சட்டம். அந்த வெட்டு மேலும் கீழுமாக இரு பகுதிகளை வெளியிட்டால் ஒன்று நேரத்தால் மூத்தது மற்றது உருவத்தில் இளையது என்றாலும் மேலிருப்பவர் தமது பதவியை எடுக்கக் காரணமாக இளையவர் இருப்பதால் சக்தியால் இரு பகுதிகளும் சமமாகின்றன. அதனால் உண்மையான மூத்தவருக்கு உண்மையான இளையவர் மரியாதை பண்ணி அமைப்பில் ஒன்றாகி அதே அந்தஸ்துக்குரியவராகிறார்.

அதே மைய வெட்டு சமநிலையில் இரு துண்டுகளாக முழுவதைப் பிரித்தால் அவை ஒன்றுக்கு மற்றது எதிராக இருக்கும். அதுதான் ஜனநாயக பாராளுமன்றத்தில் இளையவர்கள் குறைந்த வோட் / (Vote) வாக்கு எடுத்தவர்கள் சம அந்தஸ்துள்ள எதிர்க்கட்சியாக வருகின்றனர். இரண்டும் கொள்கையால் வேறானால் சமநிலையில் நின்றால்தான் அது ஜனநாயக அமைப்பு.

நீதிமன்றில் இந்த சமநிலை இரண்டு கட்சிகளுக்கும் இல்லாவிட்டால் அது மூத்தவர் இளையவர் என்ற அடிப்படையில் அமைந்துவிடும். எது உண்மையோ அது தன்பாட்டில் இயங்கும். மக்களுக்கு நீதிமன்றம் அந்த உண்மையான தீர்ப்பை சட்டத்தின் பாஷையில் வெளிப்படுத்த வேண்டும்.

அப்பீல் பண்ண அனுமதி (Leave to Appeal) கோர அந்த உண்மையை நான் சமபதவி எடுத்து வெளியிட்டேன். அதாவது சட்டப்படி வழக்கை / நாம் நீதிமன்றை மதிக்காததால் தள்ளி வைக்க வேண்டும் என்று மனுதார் வழக்கறிஞர் கூறியபோது நான் எழுந்து நான் வழக்கை வாதாடுகிறேன், நான்தான் முதல் அப்பீல் மனுவை தயாரித்தனான் என்று கூறினேன்.

நீதிபதி இளஞ்செழியன் சமூக ஒழுங்குக்காக யாழ்ப்பாணத்தில் பாடுபட்டவர். யாழ்ப்பாண நீதிமன்றத்தைப் புரட்சிக்காரர் தாக்கியபோது அவரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தார்கள் என்று அறிந்தேன். எனது உண்மையை நான் வெளிப்படுத்தியதும் அவரது உண்மை இயங்கியது என் பக்கமாக. அவர் மனுதாரர் வழக்கறிஞர் யோகேந்திராவிடம் கூறினார் – யாழ்ப்பாணத்தின் நிலைப்பாட்டை அறிந்து அதன்படி செயற்படும்படி. மேலும் நாமும் மற்றும் வருகை தந்திருந்த யாழ்ப்பாணத்து வழக்கறிஞர்களும் அந்த பாதிப்புகள் நடக்கலாம் என்று தெரிந்தும் வந்திருக்கிறோம் என்றார். அடுத்த முறை வழக்கறிஞர் திரு. பரதலிங்கத்திற்கு மதிப்பை தெரிவித்து மரியாதை பண்ணினார். எமக்கு அனுமதியை வழங்கினார். ஆனால் அடுத்த கட்டத்தில் அவர் எமது வழக்கறிஞர் மணிவண்ணன் ஜெனிவா சென்றதை ஏற்று விசாரணையை தள்ளிப்போட்டார். அதில் எனது கஷ்டத்தை அவர் முன் வைக்கவில்லை. மணிவண்ணன் அரசியலுக்காக நீதிமன்றத்தின் முக்கியத்தைக் குறைத்தார். அப்படி நடக்காமல் இருக்க வேண்டும் என்று தான் டொக்டரின் ஓவ் ஸெபரேஷன் ஓவ் பவஸ் (Doctrine of Separation of Powers) அதாவது வேறு வேறு அமைப்புகள் என்ற கொள்கை உண்டு – அரசியலுக்கும் நீதி மன்றிற்கும். மணிவண்ணன் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை அங்கீகரித்தபோது, நீதிமன்றின் தனித்துவம் தாக்கப்பட்டது. அன்று மனுதார் தரப்பில் ஒருவரும் அதை எதிர்க்கவில்லை. எதிர்த்திருந்து அதை நீதிபதி ஏற்றிருந்தால் மணிவண்ணனுக்கு பதிலாக நான் அப்பீல் வழக்கையும் வாதாடுவேன் என்று வெளிப்படுத்தியிருப்பேன். அதற்குத்தான் நீதிபதி சோர்ந்தாலும் வழக்கறிஞர்மார் தமது முக்கியத்துவத்தை திரு. பரதலிங்கம் வெளிப்படுத்தியவாறு வெளிப்படுத்தியிருந்தால் நீதிமன்றும் அரசாங்கமும் சமம் என்ற கொள்கை வலுப்படுத்தப்பட்டிருக்கும். அப்படி இல்லை என்றபடியால் அறிவு பலமாகாத நிலைப்பாட்டில் உண்மையான

நிலை வெளிப்படுகிறது. அதன்படி எமது பக்கத்திலிருந்து நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட சக்தியை விட மனுதாரர் பக்கத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட சக்தி பலமாக இருந்தது. எமது சத்தியக்கூற்றை நீதிபதி அனுமதித்திருந்தால் நீதிமன்றம் தனது தனித்துவ சக்தியை பலப்படுத்தி ஜனநாயக சக்தியையும் அதன் அமைப்பையும் கூட்டியிருக்கும். என்றாலும் திரு. யோகேந்திரா "டிக்கிரி பண்டா" வழக்கை காட்டி, தாம் இலங்கைக்கு வெளியே இருக்கும் சொத்திற்கு அங்கு (இங்கிலாந்தில்) நிர்வாகம் கோருவ தாக சமர்ப்பித்தார். அதுவும் தீர்ப்பில் சேர்க்கப்பட்டது. அதைத் தானே அப்பவே நாம் கேட்டோம். இலங்கை சொத்தில் ஒரு கழிவிற்கும் இடமில்லை.

நாம் முன்னர் பங்காளிகள் என்று யோகநாதன் கூறி செலவு செய்த காசை முக்கியமாக ஒஸ்ரேலியாவிற்கு குடும்ப அங்கத்தினரை எடுப்பித் ததையும் தர்மலிங்கத்திற்கும் சகோதரிகளுக்கும் காசாகவே கொடுத்ததை யும் காட்டி எமக்கும் அவரது மற்ற வாரிசுகள் கடன் என்று காட்டியுள்ளோம். அப்படியென்றாலும் கிட்டத்தட்ட தேசவழமைப்படி உண்மையாக பிரிக்கப் பட்டிருந்தால் வரும் பெறுமதியே வரும். அதுதான் உண்மையின் மகத்துவம். சில மாதங்களுக்கு முன் இதை உறுதிப்படுத்தி பரம் யோகேந்திராவுக்கு ஈமெய்ல் போட்டார். அன்றே திரு. யோகேந்திரா கொழும்பிலிருந்து டெலிவோன் பண்ணினார். பரம் சொன்னார் தனக்கு வரவேண்டியதை தந்துவிட்டு மேலும் காட்டப்பட்ட (அவர்கள் பக்கத்தால்) கடன்களை கட்டிவிட்டு மிகுதியை சமமாக பங்கிட தான் ஓம் படுகிறேன் என்று.

அந்தப் பக்கத்திலிருந்து ஒரு செய்தியும் அதன்பிறகு வரவில்லை. ஆனால் எமக்கு, யோகநாதனுக்கு திதி செய்து மரியாதை பண்ணி அவரது வாழ்க்கையின் பெறுமதியை அவருடைய பொது வாரிசுகளுக்காக உயர்த்தியதை இட்டு மனநிறைவு. அவரது பதவியை நாம் உயர்த்தி உள்ளோம். பதவி காசைவிட உயர்ந்த சொத்து. அது வட்டுக்கோட்டையில் சமூக அளவில் முன்னோர் சக்தியாக இளையவர்களை ஆதரிக்கும். உடல் சம்பந்தமில்லாத உறவுகள் - அதாவது வேலை சம்பந்தமான பொது அமைப்பு சம்பந்தமான உறவுகள் என்றால் அந்த சக்தி கூடிய பலம் கொண்டது. கூடிய தூரத்திற்கு பயனளிக்கும். எனது உயர்படிப்பிற்கு அத்திபாரம் போட்ட யாழ்ப்பாணத்திற்கும் நான் நன்றிக்கடன் செலுத்திவிட்டேன்.

# 18. நாமே மன்னர் நாமே மக்கள்

**ஒரு உண்மை அமைப்புடன்**
**மனம் ஒன்றுபடும்போது நாம் அதுவாகிறோம்.**
**வேறு என்ன வேண்ட உள்ளது? சொல்லுங்கோ?**

இன்று லண்டனிலிருந்து ஒருவர் எழுதினார். தனக்கு நல்லூர் நிர்வாகத்தில் மனம் ஒன்றவில்லை என்று. நான் எழுதினேன் நல்லூர் பாரம்பரிய அமைப்பு. அதற்குள் உள்ள சக்தியுடன் நான் தொடர்பு கொள்ள, அதனால் உந்தப்பட எனக்கு தற்போதைய நிர்வாகத்துடன் ஒத்துப்போக வேண்டிய அவசியம் இல்லை. அவர்களை நான் எதிர்க்கவுமில்லை. அந்த சக்தியை எடுத்து நான் எனது சேவையில் ஒழுங்கை கொண்டுவருகிறேன் என்று. அவர் நல்லூர் கந்தசுவாமி கோயில் ஸோஷோ இக்கநோமிக் (Socio – Economic) / சமூக பொருளாதார திட்டங்களில் ஈடுபடவில்லை என்று குறை சொன்னார். நான் சொன்னேன், நல்லூர் சக்தியால் உந்தப்பட்டு நான் செய்யும் ஸோஷோ இக்கநோமிக் செயற்பாடுகள் அவர்கள் செய்ததாகுது என்றும், அதேநேரம் புதிய அமைப்புகள் கணிக்கக்கூடிய ஒழுங்கு காட்டவேண்டும் – கோயில்களாக இருந்தாலும் என்றும்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன் போன கிழமை ‘இயக்கம் இருக்கும் பொழுது நாங்கள் பயமில்லாமல் ரோட்டில் போனோம், இப்ப அப்படி இல்லை. 6 வயது சிறுமி கூட கற்பழிக்கப்படும் நிலைக்கு வந்து விட்டோம்’ என்று மேடையில் கூறினா என்று நியூஸ் இல் வந்தது. இந்த மாது அரசாங்கத்தின் ஒரு பகுதியான யூ.என்.பி. (U.N.P) டிக்கட்டில் வந்தவ. நானும் யாழ்ப்பாணத்தில் பலமுறை பல பெண்கள் இப்படிக் கூறிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் மந்திரி பதவி வகிக்கவில்லை. எந்தப் பதவியை நாம் சமுதாயத்திலிருந்து ஏற்றுக்கொள்கிறோமோ எமது வெளிப்பாடுகள் அந்த உயரத்தில் – அதற்கு கீழே இருக்கும் எல்லாருக்காகவும் பொதுவானதாக இருக்க வேண்டும். நாம் அந்த நிலையிலிருப்பவர்கள்

செய்வது பற்றி கூறுவது அவர்களுக்கு சாதகமாகவோ பாதகமாகவோ சென்றடையுமா? எமக்கு உண்மையிலேயே அந்த உயரத்தில் தகுதி இருந்தால் நிச்சயம் போய் சேரும். இல்லாவிட்டால் அப்படி ஒருவர் மூலம் நாம் வெளிப்படுத்த கடமைப்பட்டுள்ளோம். இயக்கத்தால் உண்மையாக தாக்கப்பட்டோரின் கஷ்டத்தில் நாம் பங்கு கொண்டால் இப்படியான கூற்றுக்கள் எம்மை உண்மையாகத் தாக்கும். அப்படியென்றால் அந்த தாக்கம் கூறப்பட்டவருக்கே திருப்பிப்போகும். உண்மையின் பாதையை நாம் பின்பற்றினால் அப்படியான கதைகளை கதைத்து விளைவைத் தேடிக்கொள்ளமாட்டோம். ரூட் கோஸ் (Root Cause) / மூல காரணம் என்னவென்று தெரியாதவர்கள் தமது வட்டத்திற்கு அப்பால் கணித்துக் கதைப்பதே நாகரிகம்.

இந்த விஷயத்தில் நான் "எல் டி டி ஈ" (LTTE) சீதனம் எடுத்துச் சென்றார்கள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதினேன். காரணம், ஜனநாயகத்தில் அரசியல் - அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளது முறை யான வழியில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மூலம் வரும் வழிமுறைகள் - ஆயுத சக்தியை விட மூத்தவை. மறைமுகமாக தாக்கும் வழி இதில் இளைய சக்தி. அது அரசியலில் இருந்து பிரிந்து சென்று வேறு வழிமூலம் விளைவுகளைக் காட்டுகிறது. அரசியலே யாழ்ப்பாணத்தின் முதுசம். ஆயுத போராட்டம் சீதன சக்தி. அதனால் பதவி எடுத்தவர்கள் முதுசத்தில் பங்குக்கு வருவது தேசவழமையின் அடிப்படைக்கு மாறாக உள்ளது. நாம் தேசவழமைக்கு உண்மையாக இருந்தாலே எமக்குத் தேவையான வழி சட்டத்திலும் அரசியலிலும் அந்த தேசவழமை காட்டித்தரும். அதுவே தமிழரின் சுய ஆட்சி — முக்கியமாக வெளி உலகம் தெரியாத தமிழருக்கு இது தேவை. இல்லாவிட்டால் பணத்தால் உயர்வைக் காட்டி உயர்பதவி எடுப்பவர்களுக்கு யாழ் மக்கள் இளையவர்களாவர். எமது முதுசத்தை நம்பினால் ஒழுங்கான, அமைதியான வாழ்வு நிச்சயம்.

பரந்து சென்றால் பொது வழியை அமைத்துக் கொள்ள வேண்டும்.

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் திகதி நல்லூர் 9ஆம் திருவிழா. அன்று யானை வாகனம். எனக்கு பூசையில் பூ கிடைத்தது அன்று பௌர்ணமி போயா; கண்டியில் ரண்டோலி பெரகரா நடந்த நாள். கிடைத்த

பூவில் ஒன்றை கையில் வைத்திருந்தேன். எமது North Cate ஹோட்டலில் தங்கியிருந்த பிரதம மந்திரியைக் கண்டால் குடுக்க. கண்டது திருமதி விஜயகலா மகேஸ்வரனை. அவவிடம் பூவைக்குடுத்து பிரதமரிடம் குடுக்கச் சொன்னேன். அன்று யானை வாகனம் என்றேன். UNP சின்னமும் அதுவே. வடக்கு தெற்குக்கு பொதுவான சக்தியாக நான் இருந்ததால் முருகன் என்னிடம் முதலில் வந்தார் என்று எடுத்துக் கொண்டேன் - பூசல நாயனாருக்கு அன்று சிவன் காட்சி அளித்தது போல பிரதமர் குழு அடுத்த நாள்தான் நல்லூர் கோயிலுக்கு சென்றது.

நல்லூரின் உட்சக்தியைப் பிடிப்பவர் சுயஆட்சிதான் செய்வர் - ஜனநாயகம் மூலம்.

ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் இந்தியாவின் வளங்களைப் பெற்றே முன்வந்தன. அதுவே அவர்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு செய்த துரோகம். அதன் பிறகும் சுய ஆட்சிக்காக சண்டை பிடிக்கிறோம் என்றால் அது அவர்களே தங்களை ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்று அர்த்தம். எப்பொழுது இந்தியாவுடன் சேர்ந்தார்களோ அப்பவே அது பொதுச் சண்டை. தனியல்ல.

தமிழ் ஈழ ஆயுதப் போராளிகளுக்கு வட்டுக்கோட்டை தீர்மானம் முதுசமாக இருந்திருந்தால் அவர்கள் இன்றும் அங்கீகரிக்கப்படுவார்கள் உயர்மட்டத்தில். விளைவுகள்தான் எல்லாம் என்றால் இராவணனுக்கும் ராமருக்கும் வித்தியாசம் இருந்திருக்காது. ஆயுதப் போராளிகளில் பெரும்பாலானோர் ஒன்றில் சட்டம் என்னவென்று தெரியாதவர்கள், அல்லது தெரிந்தும் சுயநலத்திற்காக பொதுவிதிகளையும் சட்டத்தையும் மீறியோ அவமதித்தோ நடந்தவர்கள். அதாவது பொது சட்ட முறைகள் அவர்களது முதுசமாக அமையவில்லை. எல் டி டி ஈ தலைவரை எடுத்தால் அவர் தனது பிறந்த வட்டாரத்தில் தலைவராக பதவி பெறவில்லை போருக்கு முன். போர் நடந்து வெற்றி பெற்ற பின்னரே அங்கு அவரது பதவி உயர்ந்தது. வல்வெட்டித்துறையின் முதுசமும் அதில் அடங்கியுள்ளது — அதாவது கள்ளக் கடத்தல் வியாபாரம் - இந்தியருடன்.

அப்படியான சூழ்நிலையை எதிர்க்காத ஒருவருக்கு அப்படியான குணாதிசயங்கள் தாமாக தொத்திக் கொள்ளும். அதுதான் அவர்கள்

உலகம் என்றால் அது பிரச்சனையைக் கொண்டு வராது. ஆனால் அதை வைத்து வெளி உலகத்திலிருந்து பலன்களை எடுக்கும் பொழுது அது பாவமாகிறது. அது ராவணன் வழி.

திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிள்ளைகளுடன் கொழும்பில் வசிப்பவ. அங்கு அவவுடைய பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பது ஆயுதப் போராளிகள் அல்ல. பொது வாழ்க்கையில் எமக்கு அமையும் பிள்ளைகள் எமது சொந்த பயலொஜிக்கல் (Biological) / உடலால் பெற்ற பிள்ளைகளின் அதே வழியில் இளையவர்களாக நாம் கருதவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றை துறந்து தான் மற்றதற்கு வரவேண்டும். சில கிராமங்கள் பொது பாதுகாப்பு வளங்கள் பெறாமலேயே இயங்குகின்றன. அது இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் உண்டு. பரஸ்பர நம்பிக்கை மூலம் அவர்கள் ஓரளவு பிரச்சனைகள் இல்லாமல் வாழ்ந்தனர். துணைவியும் அப்படியான ஒரு கிராமம் தான். படிப்பு மூலமும் ஆயுதப் போராட்ட மூலமும் அவர்களது பிள்ளைகள் வெளி உலகத்துடன் சேரும் பொழுது எவ்வளவோ சோதனைகள். முக்கியமாக தூர இடங்களுக்கு செல்லும் பொழுது தத்தம் கலாசார மூலமே இவர்கள் ஒருவருக்கு மற்றவர் பாதுகாப்பு அளிக்கிறார்கள். அப்படியாக ஒதுங்கி வாழும் சமுதாயத்தில் கற்பழிப்பு, கொலை முதலிய கொடூரங்கள் நடக்கும் பொழுது அரசாங்கத்தில் நேரடியாக பிழை போட்டால் அது அதர்மம். சட்ட அதிகாரத்திலிருந்து விலகி வாழ்பவர்களது நடவடிக்கைகளை தர்மப்படி தான் கணிக்க வேண்டும். தர்மம் எமது உண்மை மூலம் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு அளவுகோல். தர்மப்படி நடப்பவர்களுக்கு சரி / பிழை உணர்வுப்படி தெரியும். இதுதான் யூனிவேசல் (Universal) / சனத்தான உண்மை என நான் நம்புகிறேன். சட்டம் தெரியாதவர்கள் இந்த உணர்வு மூலம் இயங்கினால் அவர்களுக்கு நிச்சயம் நிம்மதியான வாழ்வு அமையும். ஆனால் அநேகருக்கு உணர்ச்சி, பகுத்தறிவு, உணர்வு இவற்றில் எது தம்மை செயற்பட உந்துகிறது என்று தெரிவதில்லை. உணர்வு ஆழமானது. உணர்ச்சி உடல் சம்பந்தப்பட்டது. உணர்வின் அடிப்படையில் வெளியில் தெரியுமாறு கொடுக்கப்படுவது, பொதுச்சட்டம். மற்றொருவரது உணர்வையே நாம் பொதுச் சட்டமாகவும் விதிமுறைகளாகவும் பாவனை செய்கிறோம். அப்படி பாவனை செய்பவர் களது மனங்கள் ஒன்றுபட்டு இயங்கும். சட்டமூலம், கலாசார மூலம்

அப்படித்தான் நாம் உறவினர்களாகி, சொந்தமாகிறோம். அதில் ஆயுதத்திற்கு கல்வியைவிட முக்கிய இடம் கொடுக்கும் கலாசாரத்தின் விதிமுறைகள் வித்தியாசமாக இருக்கும். இலங்கையில் அநேகமாக கல்விக்கு முதலிடம் கொடுக்காத கிராமங்கள், குடும்பங்களிலிருந்துதான் போராளிகள் தெரிவுசெய்யப்பட்டார்கள். உணர்ச்சியால் உந்தப்பட்டால் அப்படியான இயக்கங்கள் நெடுங்காலம் இயங்காது. உணர்வால் இயங்கும் இயக்கங்களே காலாகாலத்திற்குள் சக்தியாக இயங்கும். தமிழரது ஆயுதப் போராட்டத்தில் அப்படியானவர்களும் இருந்திருக்க வேண்டும்.இல்லாவிட்டால் 30 வருடங்கள் ஆயுதப் போராட்டம் தொடர்ந் திருக்காது. அவர்களது சக்தி எப்பவும் அந்த இடங்களில் காவல் சக்தியாக இருக்கும். கற்பழிக்கப்படுவது, தனிப்பட்ட உணர்ச்சிக்காக கொல்வது, இவையெல்லாம் அப்படியான காக்கும் சக்திகள் இல்லாத இடங்களில்தான். சுழிபுரம், வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் அரசியல் உணர்வுகளால் வந்த காக்கும் சக்தியே மேலோங்கியிருக்கும் என்பதை வட்டுக்கோட்டை தீர்மானம் உறுதிப்படுத்துகிறது. அங்கிருப்பவர்கள் அரசியலுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்திற்கு மதிப்புக் கொடுத்தால் அந்த காக்கும் சக்திகள் அப்படியானவர்களுக்கு வேலை செய்யாது. சக்திகள் இருந்தால் மட்டும் போதாது. அவற்றை இயக்க எமக்கு நம்பிக்கை வேண்டும். எமக்கு அவற் றைப் பற்றி தெரியாவிட்டாலும் நாம் அந்த இடத்திற்கு உண்மையானவர் களாக இருந்தால் எமக்குரிய உருவத்தில் அந்த இடத்தின் சக்தி தன்னை வெளிப்படுத்தும். முதுசம், சீதனம் இவையெல்லாம் அப்படியான சக்தியை உள்ளடக்கும் சொத்துக்களே. சொத்தில்லாமலும் முதுசசக்தி, சீதன சக்தி இயங்கும் - எமது மனதில் உறுதியாக. யாழ்ப்பாணம் எனக்கு அப்படியான நகரம் - புண்ணிய முதுசம். பலர் அங்கிருந்து சீதனம் எடுத்து பிரிந்திருப்பார்கள் - வேறு கலாசாரத்திற்கு. கல்வியே யாழ்ப்பாணத்தின் முதுசம். கல்வியால் உந்தப்படுகிறவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கல்வி முதுசத்தை வளர்த்தவர்கள், உறுதிப்படுத்தியவர்கள் தமது ஆசியை வழங்கிக் கொண்டே இருப்பார்கள். அதேநேரம் கல்வியில் யாழ் மக்கள் போட்ட ஈடுபாட்டை திசை திருப்பியவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் சாப சக்திகள் கூட்டாளிகளாவர். எமது சாதகங்களில் அவையே பாவக்கிரகங்கள். ஆனால் இந்தப் பிறவியில் அவற்றை நாம் மீண்டும் எழுப்பாவிட்டால் அவை

எம்மை ஒன்றும் செய்யாது என்பது எனது நம்பிக்கை. அவற்றிற்கு பரிகாரம் செய்யலாம் – அவற்றின் சக்திகளை குறைத்து இல்லாமல் பண்ண. ஆனால் அவற்றை வைத்து இந்தப் பிறவியில் பலனெடுத்தால் அவை மாபெரும் தீய சக்திகளாகி எம்மை துன்புறுத்தும்.

யாழ்ப்பாண லைப்ரரி (Library) எரித்ததை இங்கு எத்தனையோ பேர் குறிப்பிட்டு சொல்வார்கள். ஆனால் அதே நபரகள் அறிவு பூர்வமான அனாலிஸிஸ் (Analysis) காரண உரை வெளிப்படுத்தும்போது அதை அலட்சியப்படுத்துவார்கள். அல்லது அழுத்தி புதைத்து விடுவர். அப்படியான வர்கள் யாழ்ப்பாணத்தின் பாவக்கிரகங்களை இன்வோக் (Invoke) பண்ணுகிறார்கள் / உயிர்ப்பிக்கின்றனர்.

நான் யாழ்ப்பாணத்திற்கு செய்வது எனது கல்வி முதுசத்தை இயக்குவது. யோகநாதனின் கேஸ் மூலம் செய்யும்போது யோகநாதன் கல்வியில் ஈடுபாட்டை போட்ட வட்டுக்கோட்டை, கொழும்பு இடங்களுடன் யாழ்ப்பாண சக்திகளும் ஒன்றுகூட்டப்படுகின்றன. அந்த வழக்கின் அனுபவத்தை உணர்பவர்களுக்கு அவர்கள் எங்கிருந்து உணர்ந்தாலும் அந்த சக்தி ஆசீர்வதிக்கும். விளைவால் உந்தப்பட்டு சுயநலமாக நடப்பவர்களுக்கு அந்த சக்தி சாபசக்தியாகும். அது அவர்களது பகுத்தறியும் சக்தியை மந்தப்படுத்தும். கல்வி சக்தி யாழ்ப்பாணத்தின் முதுசம். அதை போர் – விளைவுகளாக கீழே இறக்குபவர்களுக்கு கல்வியின் பகுத்தறியும் சக்தி மங்கி, இல்லாமல் போய் மற்றவர்களைப் பார்த்து கொப்பி (Copy) அடிக்கும் பழக்கத்தில் கொண்டுவிடும். அப்படியே பட்டம் வரும்பொழுது அது போதையைக் கூட்டும்.

சூரபத்மன் சரணடைந்த முருகனை உண்மையாக துதிப்பவர்களுக்கு அப்படியான போதைகள் வராது. சூரபத்மன் போதையின் வெவ்வேறு தோற்றங்களை வெளிப்படுத்துகிறார் – அதில் யானையும் உண்டு சிங்கமும் உண்டு. அதாவது என்ன நடந்தது என்ற மேலோட்ட சரித்திர அறிவும், உடலின் கூரான தன்மையும் கொடுக்கும் மோகம் – யானை மூலமும் சிங்கம் மூலமும் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதே எனது கண்டுபிடிப்பு. அந்த போதையை பிளந்து சேவலாக – தகவல் பரப்பும் சக்தியும், மயிலாக– பெருமையின் ஊக்க சக்தியையும் தன்னுடன்

சேர்த்துக் கொள்கிறார் முருகன். அகங்காரம் / ஈகோ (Ego) என்ற சக்தி அழிவு சக்தி. அதை இறக்கினால் அது மீடியா (Media) / செய்தி பரப்பும் சக்தியும் எமது அழகில் நாமே பெருமைப்படும் சக்தியாகவும் பிரிகிறது. அதுவே சேவலும் மயிலும். அவை இரண்டும் வெவ்வேறாக இருந்தால் அவை தெய்வீகமாகின்றன. ஒன்று சேர்ந்தால் அசுரத்தன்மை ஆகின்றன. திருமதி விஜயகலா மகேஸ்வரனது விஷயம் பற்றி வாதாடும்போது வ்ரான்ஸ் (France) நாட்டுத் தமிழர் ஒருவர் எனக்கு எழுதினார் எல்.டி.டி.ஈ (L.T.T.E) தன்னுடைய, என்னுடைய உரிமைகளுக்காக சண்டை பிடித்து உயிர் துறந்ததாக. அது அவரது உண்மையாக இருந்தால் அதை நான் மதிக்கிறேன். ஆனால் என்னைக் கேட்காமல் எப்படி அவர் எனது உரிமையைப் பற்றிக் கதைக்கலாம்? எனது உரிமையின் பிறப்பிடம் எனது முதுசம். யாழ்ப்பாணம் எனது முதுசமாகியது எனது கல்வியென்ற சக்தியால். பாடசாலைக்குப் போவதும் பட்டம் பெறுவதும் கல்வி சக்தியைக் கொடுக்காது. அவற்றால் வரும் பலன்களை எடுக்கும் போது / அனுபவிக்கும் போது - அந்தப் பாடசாலைகளை உருவாக்கினவர்கள், அதை நான் படிக்கும் போது ஒழுங்காக நடத்தியவர்கள், அந்தப் பாடங்களை எங்களுக்கு முதுசமாக, வேண்டிய வேலையையும் ஒறுத்தலையும் செய்த மூதாதையோர், எல்லாருக்கும் பொதுவாக அந்த அமைப்பின் மூலம் நன்றி செலுத்தும்பொழுது கல்வி சக்தியாகிறது. வாய்வார்த்தையில் நன்றி சொன்னால் மட்டும் காணாது. வாய்வார்த்தை, பிறருக்கு தெரிகிற மாதிரி நன்றி காட்டி பலன் எடுத்தால் அது சக்திக்குப் போகும் ஈடுபாட்டின் பெறுமதியைக் குறைக்கும். மற்றவர்களும் பங்கு கொள்வதற்கு வசதிப் படுத்தும் அமைப்புகள் எமக்கு நன்மை பயக்கும். கோயில்கள் பாடசாலைகள் முதலிய அமைப்புகள் அப்படியே. நாம் போட்ட ஊக்கம், வேலை, பணம் இவற்றிற்கு மேலாக விளைவுகளை எடுத்தால் அந்த அமைப்பு எமக்கு ஒழுங்கீனத்தைக் கொடுக்கின்றது. அதைத் திருத்தும் காலகட்டம் முடிந்ததும் அது பாவமாகும். பாவத்திற்கு சரி-பிழை போட்டு திருத்த முடியாது. புண்ணியத்தால் மட்டுமே பரிகாரம் செய்யலாம்.

நேற்று (11.07) எனது ஒன்றுவிட்ட தம்பி கிருஷ்ணாவின் பிறந்த நாளும், இறந்த நாளும் திதி. 1985ல் அவர் கத்தி குத்துப்பட்டு இறந்தார் என்று கேட்டு மனம் பதைபதைத்தது. என்னைப் பொறுத்தவரை க்ருஷ்ணா

நல்லவன். அந்த நல்ல தனத்தை மையமாக வைத்தே எமது உறவு சொந்தமாகியது. உறவு சொந்தமாக ஒருவருக்கு மற்றவர் கடன் இருக்கக் கூடாது. இளையவர் நன்றியாலும் மூத்தவர் அக்கறையாலும் கடன்களைக் கழிக்கலாம். இவை உண்மையின் அடிப்படையில் இல்லாவிட்டால் கடன் தொடரும். காலம் கடந்தும் கடன் கொடுத்தும், பொறுமையாக திருப்தி வருமட்டும் காத்திருந்தவருக்கு அது புண்ணியமாகவும், கடன் பெற்றும், பெறாத மாதிரி, கடன் இல்லாத மாதிரி நடந்தவருக்கு அது பாவமாகவும் ஆகிறது. காசால் மட்டுமே கடன் உருவாகுவதில்லை. நேரத்தால் – அதாவது எமது சரீர உதவியாலும் கடன் உருவாகிறது. காசு இல்லாதவர்கள் சரீர உதவியால் கடனைத் தீர்க்கலாம். அதற்கு மற்றவருக்கு அந்த உதவி தேவையாக இருக்க வேண்டும். காசை எமது பதவிப்படி கொடுக்கும்பொழுது அந்தப் பதவியை எமக்கு கொடுக்காதவர்கள் கடனாளிகளாகின்றனர். அப்படி நடக்காமல் இருக்கவே முதுசம் என்றும், சீதனம் என்றும் எமது பதவி சேமிப்பைக் காட்டுகிறோம். அப்படியான சேமிப்புத் தன்மை இல்லாவிட்டால் அமைப்பு இல்லை. அமைப்பு இல்லை என்றால் ஒழுங்கீனம் கூடும் சாத்தியக்கூறுகள் அதிகம்.

சீதனம் பெரியோர்களால் இளையோருக்கு வழங்கப்படுகிறது. முதுசம் இறுதியாக பொறுத்திருந்து ஏற்றுக்கொள்ளப்படும் சொத்து அல்லது கடன்.

க்ருஷ்ணா கிளிநொச்சியில் ஆயுதப் போராளிகளுடன் சேர்ந்தது நல்ல அமைப்பை விட்டு விலகிய காரணத்தால் என்று நான் கணிக்கிறேன். எமது குடும்பம் பொதுவாக படிப்பால் உயர்ந்த குடும்பம். ஆனால் க்ருஷ்ணாவிற்கு படிப்பில் அவ்வளவு ஈடுபாடு இருக்கவில்லை. அப்படி எத்தனையோ பிள்ளைகள் இயக்கங்களில் சேர்ந்தனர். இருந்தும் யாழ்ப்பாணத்தில் நாமெல்லாம் படிப்பில் போட்ட முதுசத்தின் சக்தி போரால் சிதையாமல் மீண்டும் உயிர்த்தெழுந்துள்ளது. எனது இந்த புத்தகமும் அந்த முதுசத்தைப் பலப்படுத்தி கல்வியை முதல் சக்தியாக வணங்கு பவர்களுக்கு ஊக்குவிக்கும் சக்தியாக இருக்கும் என்று பூரணமாக நம்புகிறேன். மனித உறவுகள் இல்லாத இடத்தில் நேரடியாக பூமி எமது சக்தியை ஏற்று அந்தப் பூமியே எமது வம்சமாக மரபுரிமையை காப்பாற்றுகிறது என்பதே நான் கண்டுபிடித்த உண்மை.

யாழ்ப்பாணத்தை, பிறந்து வளர்ந்த ஊரை, விட்டு வெளியே செல்லும் சிலர் சீதனம் பெற்று செல்கிறார்கள். அவர்கள் குடியேறிய இடங்களில் புது அமைப்புகளுடன் சுமுகமாக வாழ்கிறார்கள். அவர்கள் திருப்பி ஊருக்கு வரும்பொழுது மீண்டும் அதே பதவியை தொடர முடியாது. தர்மப்படி அது பிழையாகும். உடலால் வெளியே போனாலும் மனதால் நன்றி செலுத்தி தொடர்புடன் இருப்பவர்களுக்கு அந்தப் பூமி அவர்கள் விட்டுச் சென்ற பொருள், பதவி செல்வங்களை முதுசமாக காத்து வைத்திருக்கும். சொல்வது கூட, செய்வது குறைய என்றால் அவர்களுக்கு அப்புடியான சக்தி வேலை செய்யாது.

எல்லா மதங்களும் தர்மம் வெல்லும் என்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. மனிதர் பல வேளைகளில் தமது வசதிக்காக எமக்கு பிழை போடுவர். ஆனால் அவற்றை ஏற்று நாம் எமது உண்மைப்படி வாழ்ந்தால் அந்த தோல்விகள் எமது வெற்றியின் அத்திபாரங்களாகும். ஒரு சமுதாயத்தில் சட்டம் தெரியாதவர்கள் மேலதிகமாக இருந்தால், நிச்சயம் அவர்களுக்கு உண்மையின் பாதை தேவை. உண்மை, பகுத்தறிவு, கேள்வியறிவு இவற்றில் உண்மை மேலோங்கி நின்றால்தான் கல்வி அறிவு குறைவான ஊர்கள், குடும்பங்கள் நிம்மதியாக வாழ முடியும். உண்மை, உண்மையை கண்டு கொள்ளும். ஒன்று சேர்ந்துகொள்ளும். ஒன்று சேர்த்துக் கொள்ளும். அதற்கு அப்பால் நாம் இயங்க பகுத்தறிவு மூலம் ஒழுங்கை உருவாக்கினால்தான் சுமுகமாக வாழமுடியும். இல்லாவிட்டால் வெளி உலகத்திலிருந்து வரும் வசதிகளை, பணத்தை உழைக்காமல் எடுத்து மோகமான வாழ்க்கை மூலம் ஒழுங்கீனமானவர்களாகிறோம்.

எல்.டி.டி.ஈ. தமிழர் பெரும்பான்மையாக குடியிருந்த இடங்களில் தமது பொதுக் கலாசாரத்தால் வெளியிலிருந்து வருபவர்கள், அந்த பொது கலாசாரத்திற்கு மாறாக நடக்கும்பொழுது தமது உண்மைப்படி அவர்களை தடுக்க ஆயுதம் பாவிக்கலாம். ஆனால் தமிழ் ஓங்கிய பகுதிகளுக்கு அப்பால் சென்று பழிக்குப் பழி வாங்க ஆயுதங்களைப் பாவித்ததால் அவர்கள் ஒழுங்கீனத்தை வளர்த்தார்கள். கெட்டித்தனம் காட்டும் ராவணர்களாகி ராமர் சக்திக்கு எதிராளியானார்கள். வேலுப்பிள்ளை ப்ரபாகரன் மதம் மாறியபோதே அவர் தனது பரம்பரையிலிருந்து தன்னை விலத்திக்

கொண்டார். உடனே கிடைக்கும் விளைவிற்காக பரம்பரை முதுசத்தைக் கைவிடும் பாதையைக் காட்டினார். பெரும்பான்மை சக்தியை பிழையான வழியில் பாவிப்பவர்களை முறியடிக்க சிறுபான்மையோரிடம் உள்ள ஆயுதம் அவர்கள் பரம்பரை சக்தியே. எந்த மதத்தில் பிறந்தோமோ அந்த மதம்தான் அப்படியான பரம்பரை சக்தியால் எமக்கு தைரியத்தையும் நிலையான வெற்றியையும் கொடுக்கும். தேசமும் அப்படியே. வடக்கிலும் கிழக்கிலும் கூட சுயமாக இயங்கும் ஊர்கள் தேசங்களே. ஜனநாயகப்படி வல்வெட்டித்துறையிலிருந்து வந்து வட்டுக்கோட்டை தீர்மானத்தை தமதாக்கியவர்கள் படையெடுப்பவர்களே. மக்கள் ரெவலூஷன் (Revolution) வெல்ல மக்கள் தம்மில் ஒருவரை தமது உண்மைப்படி தெரிவு செய்தல் வேண்டும். அடக்குமுறையில் வருபவர்கள் மன்னன் ஆட்சியை கொண்டு வருகிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளும் மக்கள் இன்னும் பின்தங்கி ஒதுங்கி வாழ்வர். இலங்கைத் தமிழர் அப்படி இல்லாமல் இருக்க - உண்மையோடு பகுத்தறிவையும் பாவித்து அமைப்புகளை உருவாக்கி அவற்றுள் நின்று செயற்பட வேண்டும். நீதிமன்றங்கள் சட்டம் மூலம் விளைவைக் காட்ட வேண்டும். அரசாங்க நிர்வாகம் உண்மையை - சட்டத்தை முறியடிக்காமல் காட்ட வேண்டும். இரண்டும் ஜனநாயகத்தில் ஒன்றல்ல. ஒன்றாகினால் அது ஜனநாயகம் அல்ல – மன்னன் ஆட்சி.

படித்து பட்டம் பெற்று கல்வியால் உழைப்பவர் மாத்திரம் அல்ல அரசியலில் ஈடுபட உரிமை உள்ளவர். கல்வி அறிவில்லாமலும் அரசியல் நடத்தும் உரிமை எமக்குண்டு. ஆனால் அது உண்மையால் நடத்தப்பட வேண்டும். உண்மையல் எம்மைச் சாராதவர்களுக்கு - அதாவது பொது நம்பிக்கையால் எம்முடன் இணைக்கப்படாதவர்களுக்கு நாம் சரி - பிழை போட முடியாது. அது அறிவால்தான் முடியும். தன்தன் உண்மை தனக்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும். அதுதான் இயற்கை. ஏந்த செல்வமும் - காசோ, பதவியோ, உடல் இன்பங்களோ, மூளை இன்பங்களோ, நாம் உழைத்து எடுக்க வேண்டும் அல்லது இன்னொருவருக்கு மரியாதை பண்ணி எடுக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் வரும் செல்வங்கள் எம்மைச் சாராதவை. அவற்றை நாம் எடுத்தால் கடனாளிகளாகிறோம். கடன் கழிக்காவிட்டால் பாவமாகிறது. அந்தநிலையில் ஒழுங்கீனம் தன்பாட்டிலேயே தலை தூக்கும். அதை

புண்ணியத்தால்தான் சரிப்பண்ண முடியும். சட்டத்தால் அல்ல. அப்படியான புண்ணியவான் ஒருவரை நாம் எமது தலைவராக தெரிவு செய்தாலே அங்கு ஒழுங்கு வரும். அதுவே ஜனநாயகத்தில் உண்மையான அரசியல் தீர்வு. அதுவே ஜனநாயக ஆட்சி. வேறு வேறு கொள்கைகளை அறிவு மூலம் கொண்டு வருவது ஜனநாயக ஆட்சி அல்ல. அது இன்னொருவிதமான மன்னன் ஆட்சி. வாக்கு மூலம் தெரிவு செய்யும்பொழுது நாம் எவ்வளவிற்கு வாக்கு போடுபவருடன் நம்பிக்கையால் இணைந்திருக்கிறோமோ அதன்படி வாக்களித்தால் நிச்சயம் அங்கு எமக்கு சுய ஆட்சி அமையும். அது கடவுள் கொடுத்த வரம். அரசியல்வாதியிடமிருந்து என்ன சலுகைகள் வரும் என்று எதிர்பார்த்து அதற்கேற்ப வாக்களித்தால் அது சுயஆட்சியில் எமக்கு கடனைத்தான் தரும். நாமே எம்மை ஒழுங்கீனமானவர்களாக்கிக் கொள்கிறோம்.

மனமுவந்து சட்டத்தைப் பின்பற்றும்போது அது எம்முள் இருந்து உண்மையாகிறது. அப்படியானவர்கள் தமது உணர்வுப்படி வாக்களிக்கும் பொழுது அந்த சட்டத்திற்கே நாம் வாக்களிக்கிறோம். அது நிச்சயம் எமக்கு சுய ஆட்சி வழியை அந்த உயர் மட்டத்தில் காட்டித்தரும். வழி நடத்தும். அதற்கு மற்றவர்கள் எமக்கு பிழை போடுவது பிழை என்று தெரிந்தும் அந்த பதவி என்ன சொல்கிறது என்று பார்க்கும் தன்மை வேண்டும். பதவியை மரியாதை பண்ணி, பதவியிலிருப்பவர்கள் போடும் பிழைகளை பிழையென்று தெரிந்து தாங்கி அந்த பதவியை நாம் காப்பாற்றும்போது அந்த பதவியில் சரியாக இருந்த எல்லோரது ஆசீர்வாதமும் எமக்கு தாமாக வரும். அவை உயர்மட்டத்தில் சந்தர்ப்பங்களாகும்.

ஒவ்வொரு பரிமாறலிலும் நாம் மற்றவர் தேவையையும் உள்ளடக்கி செயற்படும்பொழுது எமக்கு ஊக்க சக்தி உருவாகிறது. ஜனநாயகத்தில் ரிவ்யூ (Review) என்று இளையவர்கள் மூத்தவர்களுக்கு கொடுப்பார்கள். போன கிழமை அப்படி பரம் ஒரு ஸ்டுடன்ட் (Student) / மாணவர் எழுதியதை வாசித்துக் காட்டினார். மாணவரின் பெயர் தெரியாது. அனால் அவர் கூற்றிலிருந்த உண்மை தெரிந்தது. அதுவே அந்தப் பதவியில் இயங்க அவருக்குக் கிடைக்கும், அவர் உருவாக்கிய ஊக்க சக்தி. அதுதான் உண்மையான சுயதொழில். எமது ஆசைக்காக, ஆர்வக் கோளாருக்காக

வேலை செய்யும்பொழுது அந்த சக்தி உருவாகாது. அதில் சரி — பிழை பார்த்து இயங்கினால் ஒழுங்கிருக்கும். இல்லாவிட்டால் ஒழுங்கீனம் நிச்சயம். ஒழுங்கீனம் திருத்தப்படாவிட்டால் பாவமாகும் – அந்த நபருக்கும் அவரது சுற்றாடலுக்கும்.

சில வருடங்களாக இலங்கையில் நாம் இரண்டு வழக்குகளில் ஈடுபட்டுள்ளோம். ஒன்று பரத்தின் அண்ணர் யோகநாதனின் வழக்கு. மற்றது கொழும்பில் எனது காணி வழக்கு. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பொழுது அந்த உண்மையின் பங்களிப்பும் தீர்வும் தெரியாது. யாழ்ப்பாண வழக்கில் அவர்கள் கேட்டது சம பங்கு. அவர்கள் சகோதரிகள் உண்மையாக ஆசைப்பட்டது – எல்லாம் தங்களுக்கு எழுதித்தர வேண்டும் என்று. உண்மைப்படி அதை வெளிப்படுத்த அதன் மறுபக்கம் அதனுள் இருக்க வேண்டும். அதாவது ஆண் சகோதரங்கள் பயப்பட வேண்டும். அவர்கள் அண்ணன் தர்மலிங்கம் பயத்தின் மூலம் எழுதிக் கொடுத்தார். பரம் தைரியமாக மறுத்தார். அந்தத் தைரியத்திற்கு நானும் ஒரு காரணம். என் மூலம் உண்மை எப்படி உயர்ந்த இடங்களிலிருந்து சந்தர்ப்பங்களை கொண்டு வருகிறது என்று அனுபவம் மூலம் அறிந்திருந்தார். அவருக்கும் கல்வியால் தான் உயர்ந்தது தெரியும். ஆகவே மறுத்தார். சகோதரிகள் நீதிமன்றிற்கு போக வேண்டி இருந்தது. நான்தான் அவர்களுக்கு எழுதினேன் அவர்களாக உள்ளுக்குள் தீர்வு எடுக்க முடியாமலிருப்பதால் ஒரு வழக்கறிஞர் மூலம் இதை தீர்க்கும்படி. அதாவது சட்டப்படி தீர்வு காணும்படி. ஆனால் அவர்களோ முடிவை எடுத்துக்கொண்டு அதற்கேற்ப சட்டத்தை பாவிக்க வெளிக்கிட்டார்கள். வழக்கறிஞர் சட்டப்படி ஆண் பெண் சகோதரருக்கு சமபங்கு என்றார். நிர்வாகம் தேவையில்லை என்றார். நாம் அதை எதிர்த்தோம். மல்லாகம் நீதிமன்றத்தில் நான் குற்றவாளி ஆக்கப்பட்டேன். யாழ்ப்பாண உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் பண்ண எனது சக்தி முழுமையாக பயன்பட்டது. அங்கு போனபடியால்தான் அதே வழக்கறிஞர் யு.கே (U.K) வங்கியிலிருக்கும் பணத்திற்கு நிர்வாகம் தேவை அதை அங்கு கோருவதாக கூறினார். பாவிக்கப்பட்ட கேஸ் (Case) ரட்ணசிங்கம் எதிர் டிக்கிரி பண்டா, டிஸ்ஸநாயக்கவும் மற்றோரும். அதாவது அங்கு முன்னைய நீதிபதிகள் வந்து நீதியை வழங்கினார்கள். நிர்வாகம் தேவை இல்லை என்பவர்கள் தாமே நிர்வாகம் தேவை என்றார்கள். அதுவே எமது வெற்றி.

அப்படித்தான் தமிழரது அரசியல் தீர்வும். இந்தக் கிழமை முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன் அவர்கள் தேசிய அரசாங்கத்துடன் அபிவிருத்தித் திட்டங்களில் ஒத்துழைக்க மாட்டேன் – அரசியல் தீர்வு வரும்வரை என்றார். அதற்கு நான் எழுதினேன் ஏற்கனவே தீர்வு வந்துதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேசிய பாராளுமன்றத்தில் சமபதவி பெற்றுள்ளது. புத்தூரில் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் உரையாற்றும்பொழுது 13.07.2018 அன்று அவர் தான் ஆளுநருடன் இணைந்து செயற்பட்டதை வெளிப்படுத்தினார். “குரு ப்ரம்மா, குரு விஷ்ணு, குரு தேவோ மகேஸ்வரா, குரு ஸாடஷாத் பரம் பிரம்மா தஸ்மை ஸ்ரி குரவே நம” என்ற மந்திரத்தை அவர் பேச்சு துவங்கும்பொழுது பாவிப்பது வழக்கம். அதன்படி உருவம் அமைப்பவர் ப்ரம்மா.

மேற்படி சமபதவி உருவம் அமைத்தவர்கள் இவ்விஷயத்தில் ப்ரம்மா. வாக்கு கொடுத்தவர்கள் கடைசி ஊடகமே. தமிழரின் உண்மையான உழைப்பால், ஒறுத்தலால்தான் அப்படி அமைந்தது. வேறு நாடாகப் பிரிய வேண்டும் என்பவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆகவே இந்த உண்மையான அமைப்பு அமைந்தும் அவர்களுக்கு அமையாதது போல உள்ளது. அவர்கள் தமது மூதாதைகளுக்கு அஞ்சலி செலுத்தினால் விளங்கும். அமைப்பில் பங்குகொண்ட எனக்கு அமைப்பு தீர்வு தெரிந்தது. அந்த அமைப்பை உருவாக்கியவர்களுக்கு அந்த அமைப்பு எப்படி அதை இயக்கி வாழ வேண்டும் என்பதையும் காட்டிக் கொடுக்கும். எனக்கு இங்கு ஒஸ்ரேலியாவில் சட்டமூலம் அந்த சக்தி உண்டு. நானே சட்டமாகி எனது பதவியை எடுத்து எனது வெளிப்பாட்டை தெரிவிக்கிறேன். சம பதவி என்று விட்டு பிரியக்கூடாது. சிறு இடைவெளிக்கு அப்பால் நின்று எமது வெளிப்பாடுகளை சட்டத்தின் மொழிமூலம் அல்லது பொது நம்பிக்கையின் பாஷையில் காட்ட வேண்டும். துணைவியிலும் வட்டுக்கோட்டையிலும் நான் அப்படித்தான் ஒஸ்ரேலியன் தமிழ் மனெஜ்மன்ட் சேவிஸ் (Australian Tamil Management Service) மூலம் அமைப்புக்களை உருவாக்கி நடத்துகிறேன். அதில் சிங்களவர் செயலாளர் ஆக இருக்கிறார். பதவிக்கும் சேர்த்து நான்தான் வேலை செய்கிறேன். அவர் என்னை நம்புகிறார். அமைப்பை அமைத்தவர்கள் தத்தம் உண்மையான இடங்களை எடுத்தால் அமைப்பு தன்னால் இயங்கும். அதுவே “குரு விஷ்ணு” விளைவுகள் வர

வர நாம் அந்த உடலமைப்பை / அமைப்பின் தேகத்தின் உருவத்தையும் தாண்டி அவற்றை அனுபவமாக்கினால் அதனுள் இருக்கும் உண்மையை உணர்வோம். அதுவே பாவ, புண்ணியங்களை மட்டுமே எடுத்துச் செல்கிறோம் என்பதன் அர்த்தம். அதுவே "குரு தேவோ மகேஸ்வரா". தமிழில் கல்லைக் கண்டால் கடவுளைக் காண மாட்டோம், கடவுளைக் கண்டால் கல்லைக் காண மாட்டோம் என்பதன் அர்த்தம் அதுவே - என்னைப் பொறுத்தவரை. குரு ஸாட்ஷாத் என்றால் அமைப்பு தெரியும் குரு. "பரம் ப்ரம்மா" என்றால் எங்கும் வியாபித்திருக்கும் அமைப்பு. "தஸ்மைஸ்ரி குரவே நம" என்பது தமிழ் சிவபுராணத்தில் "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்று மாணிக்கவாசக சுவாமிகளால் எங்களுக்கு தரப்பட்ட பொக்கிஷம். அதாவது வரட்டு கௌரவம் / ஈகோ (Ego) இல்லாமல் விளைவுகளை உண்மை தந்தது என்று ஏற்றுக்கொண்டால் நாமும் அந்த உண்மையாகிறோம்.

இன்று 03-08-2019 – ஆடிப்பூரம். எமது பெற்றார் காலத்திலிருந்து தவறாமல் சங்கரத்தை-துணைவி கோயிலில் கொண்டாடுவோம். நேற்றும் அங்கு கேட் (Gate) பூட்டு உடைக்கப்பட்டது என்றும் அம்மாப்பிள்ளையின் மகன் மகிந்தனும் அவரது உறவினரான சதீஷும் கோயில் வளவிற்குள் அத்துமீறி வந்திருந்ததாகவும் அறிந்து மனம் நொந்தேன். அதையும் மீறி எம்முடன் ஒத்துழைக்கும் உழைப்பாளிகள் கௌசி, ராஜேஸ்வரி ஒத்துழைப்புடன் ஆடிப்பூர பூசைகளை ராதா ஐயர் சிறப்பாக நடத்தியதை யிட்டு மகிழ்ந்தோம். அந்த மகிழ்ச்சியின் சிகரமாக அமைந்தது – நான் 31-07-2019 அன்று 'ஈஸ்ட பொமிங்ஸ் டேஜாவு? / Easter bombings in Sri Lanka – Déjà vu?' ( உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு மீண்டுமா?) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை இன்று Financial Times / வைனான்ஷல் டைம்ஸ் பிரசுரித்ததை கவனித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அது எனக்கு அம்மன் தந்த பஞ்சாமிர்தம். அந்தக் கட்டுரை உண்மை 1942 ஆம் ஆண்டின் குண்டு வெடிப்பின் பின் மீண்டும் அதே உயிர்த்த ஞாயிறு அன்று வந்த தொடர்பு பற்றியது.

உண்மையில் நிற்பவர்களுக்கு உண்மை வழிகாட்டும். நடந்ததை வைத்து சூதாடினால் உண்மை அதை அவதானித்து விலகி நிற்கும்.

தமிழ் ஈழப் பிரச்சினையை ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு விதமாகப் பார்க்கிறோம். கொழும்புத் தமிழராக நான் பிரச்சனைக்கு உள்ளே வராமல் அது ஆயுதம் தாங்கியவர்களது என்று தெரிந்து அவதானித்தேன். கொள்கை அளவில் சிங்களம் மட்டும் ஒவிஷல் லங்வேஜ் (Official Language) என்றது எனது குடும்பத்தில் படித்த பெரியவர்களுக்கு ஒத்து வரவில்லை என்று தெரிந்து அந்தக் கொள்கையை எனக்குள் எதிர்த்தேன். பின்னர் ஜே.வி.பி (J.V.P) புரட்சி பண்ணியது ஆயுதப் போராட்டம் என்று அவதானித்தேன். தமிழர் புரட்சியிலும் அப்படித்தான். இப்பொழுதும் அது சம்பந்தமான கொள்கைக்கு எனது பங்களிப்பை அனுபவ மூலமும் கொண்டு வந்தபடியே இருக்கிறேன். துணைவியில் அவர்களில் ஒருவராக கோயில் விஷயங்கள் மூலம், பங்கு கொண்டேன். இப்பொழுது அங்கே கோயிலில் இருக்கும் ஒழுங்குகளை ஏற்றுக்கொள்பவர்களுக்கு துணைவிக்கும் அப்பால் உள்ளவர்களது மனங்களுடன் இணைய அது ஒரு வழி. நேற்று ஜீவன் கூறினார் தான் வுட்போல் (Football) வேல்ட் கப் (World Cup) மச் (Match) பார்த்ததாக. அதைப்பற்றி என்னுடன் வோனில் வட்ஸ்அப் (Whatsapp) மூலம் கதைத்தார். சட்டங்களும் பரந்த நிர்வாகங்களும் அப்படியே. போரின் பின் தற்போது தமிழ் மக்கள் உலகளவில் எப்படி சமூகங்கள் இயங்குகின்றன என்று ஒரு பக்கமோ அல்லது மறுபக்கமோ எடுக்கக்கூடியதாக பங்கும் உள்ளது. நேரடியாக பங்குகொள்ள உந்தப்படுபவர்களுக்கு அப்படியான அறிவு இல்லாவிட்டால் – ஆயுதம் பாவித்து போராடுவர். அது ஜீவன் தமது ஊரில் வுட்போல் விளையாடுவது போல. நாம் படிக்கும் எல்லாவற்றையும் மேடை ஏற்ற முடியாது. ஒன்றை மேடையேற்றி மற்றவையை மற்றவர்கள் மேடையில் தமது கலைகளை நடத்தும் பொழுது அனுபவிக்கலாம் / பிழை சரி எமது மட்டத்தில் போடலாம். திருமதி விஜயகலா மகேஸ்வரன் யாழ் தொகுதியில் மேடை ஏறி ஆயுத அதிகாரத்தால் அரசியல் நடத்த வேண்டும் என்று எல்.டி.டி.ஈ மூலம் கூறியது எனது முதுசத்திற்கு அவர் துரோகம் செய்கிறார் என கருதுகிறேன். அப்படியே அவர்கள் வந்தால் திருமதி மகேஸ்வரன் அங்கு மக்களின் பிரதிநிதியாக இருக்க மாட்டா. இதற்குத்தான் இறந்த காலத்தை எமது வசதிக்காக நிகழ்காலமாக்ககூடாது. அது நாம் இறந்த காலத்திற்கு செய்யும் துரோகமாகும். துணைவிக் கோயிலில் நான் எனது

ஆச்சியின் படம் வைத்திருக்கிறேன். ஆனால் அவ கோயிலை நடத்திய வழிமுறைகளும் நான் நடத்துவதும் வித்தியாசம். மறைந்தவர்களை நாம் அவர்களின் புண்ணியங்கள் மூலம் மரியாதை பண்ணி எமக்குள் வைத்திருக்க வேண்டும். பாவங்களுக்கு பரிகாரம் செய்யலாம். அவற்றை உயிர்ப்பிக்கக்கூடாது - அதே உடலுடன். சக்தியில் அவர்கள் சேரலாம். உடல் / உருவம் எமது என்பதே உண்மையின் நியதி. இறந்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்தினால் அவர்களது நல்ல அம்சங்கள் எமக்கும் அமையும். நன்றிக்கடன் இருந்தும் பரிகாரம் செய்யாவிட்டால் அவர்களது கூடாத அம்சங்கள் எமக்கும் அமையும் என நான் நம்புகிறேன்.

தேசவழமை சட்டம் யாழ்ப்பாணத் தமிழருக்குரிய தனிவழியைக் குறிக்கிறது. அதையே சரியான வழியில் படித்த தமிழர் – நீதிபதிகள் உட்பட பாவிப்பதில்லை. தனி நாடு / ஈழம் எப்படி சரிவரும்? தற்போது இருக்கும் அரசியல் அமைப்பையே இயக்கத் தெரியாதவர்கள் எப்படி தமிழ்ப்பகுதிகளில் அரசாங்கம் செய்து அதே நேரம் உலகளவு அரசியல்களிலும், நீதி சம்பந்த அனுபவங்களிலும் கலந்துகொள்ள முடியும்? தனி ஈழம் என்பது துணைவிக்கென்று வேறு சட்டங்கள் / விதிமுறைகள் வுட்போலில் இருப்பது போல. அப்படியென்றால் ஜீவனுக்கு உலகப் போட்டிகளை நேரடியாக அனுபவிக்க முடியாது. சட்டமும் அப்படியே. உண்மை ஒன்றே பிரபஞ்சம் முழுவதிலும் இடம், நேரம் என்ற கட்டுப்பாடில்லாமல் அனுபவத்தை தரும். எப்பொழுது உண்மையைப் பாவிப்பது, எப்பொழுது அறிவைப் பாவிப்பது? கிட்டத்தட்ட 50 வயது மட்டும் நான் எனது சூழ்நிலைக்கேற்ப அந்தந்த சமுதாயங்களில் இயங்கினேன். வெளியாரிடமிருந்து எமக்கு பலன்கள் தேவை என்றால் எமது உண்மையுடன் அறிவையும் இணைக்க வேண்டும். அறிவில் பகுத்தறிவு கூட கேள்வி அறிவு குறைவாக இருந்தால் ஒழுங்கு கூடவாக இருக்கும். கேள்வி அறிவு கூடவாக இருந்தால் நிச்சயம் ஒழுங்கீனம் கூடுதலாக இருக்கும். மேற்கல்வி நிறுவனங்களில் இதை ப்ளேஜரிஸ்ம் (Plagiarism) / கொப்பி அடிப்பது என்ற குற்றச்சாட்டாக நியதி வைத்துள்ளார்கள். அதேநேரம் நாமே ரிஸேச் (Research) / ஆராய்ந்து எம்மைப் பற்றி, எமது வேலையைப் பற்றி வெளிப்படுத்துவது மிகவும் சரி என்ற உன்னத கோட்பாடும் அப்படியான நிறுவனங்களில் உண்டு. யூனிவேஸிட்டி (University) / பல்கலைக்கழகத்திற்கு அது கரு.

சுழிபுரத்தில், ரெஜினா என்ற 6 வயதுப் பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதான வந்த செய்தியை பலரும் பலவிதமாக எடுத்தார்கள். ஒரு சிலரே பெற்றாரின் வேதனையில் பங்கு கொண்டார்கள். துணைவியில் சாவகச்சேரி மாணவியை கூட்டிக் கொண்டு வந்து ஒரு இளைஞர் கூட்டம் கற்பழித்ததாக சில வருடங்களுக்கு முன் அறிந்தேன். அதில் பெண்ணின் உறவினர் முறைப்பாடு செய்துதான் அதிகாரிகளுக்கு தெரியவந்தது. அந்த விஷயம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அப்படியான ஒழுங்கீனங்கள் ஒதுங்கி வாழ்ந்த கிராமங்களில் பொதுவாக உண்டு. உணர்ச்சி வசப்படும் பொழுது ஒரு எல்லையை தாண்டியதும் எம்மை நாம் கட்டுப்படுத்த முடியாது. அதுவும் இயற்கையான போதைதான்.

அந்த எல்லை கடந்ததும் நாம் மிருகங்கள் தான். அப்பொழுது மிருக தர்மம் தான் எமக்கு வேலை செய்யும். மிருக தர்மம் என்ன? அதற்குரிய பாதுகாப்பிற்குள் அனுபவிப்பதே. தனது இனத்துடன் மிருகத்திற்கு பாதுகாப்பு உண்டு. தனது பிள்ளையுடனேயே சேர்க்கை கொள்வதும் மிருகத்தின் தர்மம். எமது இனத்தை விட்டு வெளியே வரும்பொழுது அறிவை போட்டு ஒழுங்கு முறைகளைப் போட்டால் தான் தர்மமான வாழ்க்கை வாழலாம். எப்பொழுது பனை ஏறி கள்ளு எடுப்பது எமது தொழிலோ, அப்பொழுது அந்தக் கள்ளை நாம் குடிக்காமல் இருப்பதே எமது தொழில் தர்மம். இல்லையென்று குடித்து போதைக்கு அடிமையாகும்பொழுது அந்தத் தொழிலையே நாம் போதையாக மாற்றுகிறோம். ஊரில் கள்ளு எடுக்கும் தொழில் செய்பவர்களை நளவர் என்கிறோம். அவர்களும் தமக்குள் சாதி மூலம் உட்பிரிவுகள் வைத்து அதிகாரம் செலுத்தியது நான் துணைவியில் அவர்களில் ஒருத்தியாக வாழ்ந்துதான் தெரிந்து கொண்டேன். அவர்களும் எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் விசுவாசமாக இருந்தார்கள். சிலர் கூடிய விசுவாசமாக இருந்தார்கள். செல்லமணி அதில் முதலாம் இடம். அவ யாழ்ப்பாண பெரிய பஸ் ஸ்டான்ட் (Bus Stand) இல் கச்சான் விற்பதை தொழிலாக கொண்டுள்ளா. இந்த துணைவி அபிவிருத்தி தொடங்கிய காலத்தில் ஒரு நாள் நான் அவவிடம் கச்சான் வேண்டிக் கொண்டிருக் கையில், செல்லமணி தனக்குப் பக்கத்திலிருந்தவவிற்கு கூறினா — என்னைக் காட்டி “இந்த அம்மாதான் எங்கட பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் குடுக்கிறா, சாப்பாடும் குடுக்கிறா” என்று. அப்ப அங்கு அறநெறி

பாடசாலை நடத்தினோம். டுஷி ராஜேந்திரன் என்ற சாய் பக்தை பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்க பண உதவி வசதிப்படுத்தினா. ஆனால் செல்லமணி இப்படி சொன்னபொழுது அது நடக்கவில்லை. நாம் ப்ரசாதம் கொடுத்தோம் அறநெறி பாடசாலை பிள்ளைகளுக்கு. அதை நான் "உணவு" என்று கருதவில்லை. ஆகவே செல்லமணி பிழையாக வேறொருவரை நான் என்று நினைத்தா என்று எடுத்துக் கொண்டேன். ஆனால் செல்லமணியோ விடவில்லை "ரொஞ்சா" (அவவின் பேத்தி) உங்களிடந்தான் படிக்கிறா என்றா. அதற்குப் பிறகு விளங்கியது. அவ என்னைத்தான் காட்டுகிறா என்று. அவவின் மகள் பவானியும் நான் இங்கு ஒஸ்ரேலியாவில் இருக்கும்போது தான் என்னை கோயில் மூலஸ்தானத்தில் பார்த்ததாகச் சொன்னா. சாய் சுவாமி மூலம் எனக்கு வந்த அனுபவங்களால் அதை நான் பொய் என்று கருதவில்லை. மனதில் உண்மையான நன்றி இருந்தால் கடவுள் எமக்கு அந்த உருவத்தில் தோன்றுவா. எமது கோயில் கிணற்றைப் பாவித்தவர்களில் செல்லமணியும் ஒன்று. அவவும் அவவின் குடும்பத்தினரும் அதை ஒழுங்காகவே பாவித்தனர். குளிக்கப் போக வர நானும் செல்லமணியும் கதைப்போம். நானோ பரமோ புல்லு பிடுங்கும் வேலையை பார்த்தால் செல்லமணி சொல்லுவா" "அம்மா / ஐயா நீங்க இந்த வேலை செய்யக்கூடாது" என்று. நான் சொல்வேன் "செல்லமணி நீங்க உங்கட வளவை துப்பரவு செய்ற மாதிரி நாங்களும் வளவை துப்பரவு செய்ய வேணும் தானே" என்று. அதற்கு செல்லமணி சொல்லுவா "எங்களுக்குப் பழக்கம். உங்களுக்கு இல்லை" என்று. அதில் அர்த்தம் உண்டு. தொழிலை மையமாக வைத்து அமைக்கும் அமைப்பில் படிப்பு சொல்லிக் கொடுப்பவர்கள் வளவு துப்பரவு செய்பவர்களை விட உயர்ந்த பதவியில் உள்ளவர்கள். வட்டுக்கோட்டையில் வேலைக்குப் போனவர்கள் செல்வாக்கான பெண்கள் முத்தம் கூட்டுவதை /வளவு துப்பரவு செய்வதை பார்த்திருக்க மாட்டார்கள். க்றீஸ் (Grease) மனிதன் பயம் இருந்த நாட்களில் அந்த ஊர் இளைஞர் ஒருவர் செல்லமணியின் கூரைக்குக் கல்லெறிந்து உடைத்தார். செல்லமணி துப்பறிந்து அவரைப்பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்து அதற்குரிய காசையும் பெற்றுக்கொண்டா. என்னைப் பொறுத்தமட்டில் அதன் மூலகாரணம் அவ யாழ்ப்பாண விதிமுறைகளை ஏற்று கச்சான் விற்கும் தொழில் செய்ததே. நேற்று (17.07.2018) ஐ.பி.ஸி

(I.B.C) தமிழ் சக்ர வியூகம் என்ற ப்ரோக்ராம் (Program) இல் 04.07.2018 அன்று 6 வயது ரெஜீனாவின் கொலை சம்பந்தப்பட்ட விஷயம் ஆராயப் பட்டது. மகாபாரதத்தில் சக்கர வ்யூகம் அமைப்பு அர்ஜுனனின் மகன் அபிமன்யூவின் வீரத்தை விளக்கும் அத்தியாயம். தாய் சுபத்திரையின் வயிற்றில் இருக்கும் பொழுது தகப்பன் அர்ஜுனன் எப்படி சக்கர வ்யூகத்தை திறந்து உள்ளிடுவதென்று கூறுவதை அபிமன்யூ கேட்டார். ஆனால் தாய் நித்திரை கொண்டதால் எப்படி வெளியே வருவதென்று அர்ஜீனனும் கூறவில்லை. அபிமன்யூவும் கற்றுக்கொள்ளவில்லை. அர்ஜுனனை வேறு திசைக்குப் போகப் பண்ணிய அன்று கௌரவர்கள் சக்ரவ்யூகம் அமைத்தார்கள். அபிமன்யு தனக்கு உள்ளிடத் தெரியும் என்று சென்றார். அவர் பாலகன். வெளியே வரத்தெரியாமல் அநியாயமாக ஒழுங்கீனமான கௌரவர்களால் தாக்கப்பட்டு இறந்தார். ஒரு விதத்தில் இளைய சாதியினரது நிலையும் அப்படித்தான். தமது பெற்றார் மற்ற இனத்தவருடன் ஒரே அமைப்பில் இருந்தபொழுது எப்படி பெரிய அமைப்புகளுக்குள் முறையாக நுழைவது என்று படித்தார்கள்.

இப்பொழுது அவர்கள் எப்படி சமூக அமைப்புகளில் தமது தனித்துவத்தை இழக்காமல் இயங்குவது என்று தெரியாமல் தவிக்கிறார்கள்.

முன்னர் க்றீஸ் -மனிதன் பிரச்சனை இப்பொழுது கல்லெறியும் பிரச்சனையாக அராலி, வட்டுக்கோட்டை பக்கங்களில் உருவெடுத்துள்ளது. உண்மையான பங்காளிக்கு விழும் அடி எல்லாருக்கும் விழும். அதுதான் சிவபெருமான் புட்டுக்கு மண் சுமந்த கதையின் தத்துவம். அவரவர் தத்தம் பதவிப்படி கடமை செய்தால் ஒழுங்கு உண்டு. உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் உருவாகும் அமைப்புகள் அந்த இடத்திற்கு ஒழுங்கைக் கொடுக்கும். அப்படியானவர்களுக்கு முன்னோரது ஆசீர்வாதமும் உலகோரது ஆதரவும் உண்டு. அப்படியான ஒழுங்கை நானும் யாழ்ப்பாணத்திலும் பகிர்கிறேன்.

# முடிவுரை

# நன்றி மறவேல்

### கலியாணம் முடித்து கணவன் குடும்பத்துடன் சேரும் பெண்ணிற்கு தேசவழமை காட்டிய உரிமைகள்

பாலாவின் வீடு
கொழும்பு
08-08-2019

ஆத்தை, ஆச்சன், தர்மலிங்கம் அறிவது,

குடும்ப அளவில் யோகநாதனின் சொத்து விஷயத்தில் இது எனது முடிவுரை. நான் ஈடுபடத் தொடங்கியது யோகர் என்னுடன் February 2012 இல் Phone பண்ணி கதைத்த பிறகு. அதற்கு முதல் யோகநாதனுக்கும் எனக்கும் இருந்த உறவை அவரது நினைவு மலர் மூலம் முழுமை அடையச் செய்தேன். அது பெரும்பாலும் எமது வேலை சம்பந்தமான பொது வேதனையின் அடிப்படையில் அமைந்தது. குடும்ப அளவில் நாம் இருவருமே அதில் அநாதைகள். ஆகவேதான் அந்த அளவில் எமது உறவு தொடர்ந்தது.

யோகர் தனது தாய்க்கும் சித்திக்கும் குஞ்சுமாமாவின் பங்கை எழுதிக் கேட்டு, தர்மலிங்கம் ஏற்கனவே எழுதிக் குடுத்துவிட்டார் என்றார். குஞ்சுமாமா பரத்திடம் கூறியதும் அவர் முடியாது என்றார். அதுவே அவரது உண்மை. ஆனால் உங்கள் மூவருக்கும் இளையவராக பதவியாலும் மனத்தாலும் இருந்தபடியால் அதை செயற்படுத்த அவரால் முடியவில்லை. இது உங்களுக்கு - முக்கியமாக ஆத்தைக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும் - உங்களுக்கு அவரில் அக்கறை இருந்திருந்தால். ஏனெனில் என்னை பரம் கலியாணம் செய்தபொழுது ஆத்தை மூன்று பிள்ளைகளது பொறுப்பு கஷ்டம் என்றா. அவரை அந்த மூன்று பிள்ளைகள் ஏற்பது அவர்களுக்கும் கஷ்டம் என்று அவ யோசிக்கவில்லை. எனது பிள்ளைகளும் நானும்

அதனால் வந்த கஷ்டங்களையும் இழப்புகளையும் - முக்கியமாக எனது பக்க குடும்பத்திலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் பரம் ஒஸ்ரேலியாவில் வாழ விரும்பியதால் நல்ல வேலையை விட்டு ஒஸ்ரேலியா வந்து சின்னச் சின்ன வேலைகளிலிருந்து பட்ட கஷ்டங்களை நீங்கள் ஒருவரும் அறிய மாட்டீர்கள். நீங்கள் அப்படி யாருக்காவது மனமுவந்து செய்திருந்தால் விளங்கியிருக்கும். மகள் காயத்ரி இவருடன் அக்ஸிடன்ட் பட்டு அதனால் வந்த கஷ்டங்களில் நீங்கள் ஒருவருமே பங்கு கொள்ளவில்லை. ஆனால் எப்பவோ நீங்கள் பட்ட கஷ்டங்களைக் காட்டி பரம் என்னுடன் வாழ்ந்து உழைத்த காசிலும் வசதியிலும் பங்கு கேட்டீர்கள் - யோகநாதன் இறக்கு முதலேயே - உங்கள் பிள்ளைகளை ஆத்தையும் ஆச்சனும் பரத்தை உங்கள் பிள்ளைகளை எடுப்பிக்கச் சொல்லி கேட்டு. அதற்கு முதல் ஆத்தை தம்பி கணேஷனை PNG க்கு எடுப்பிக்குமாறு பரத்திடம் கேட்டீர்கள். அப்ப எங்க போனது பரத்திற்கு பொறுப்பு எடுக்க வராது என்ற சிந்தனை? இன்று அவரது கஷ்டங்களில் என்னுடன் சேர்ந்து பங்கு கொண்ட அந்த மூன்று பிள்ளைகளும் தான் அவருக்கு தகப்பனாக மரியாதை பண்ணுகிறார்கள். நான் குறை சொன்னாலும் அவர்கள் அந்த மரியாதையை குறைப்பதில்லை. காயத்ரி இரண்டு தரம் அப்படி சொல்லாதீங்கோ என்று தனது கஷ்டத்தை வெளிப்படுத்தினா. மற்றும்படி நேசமும் மரியாதையும் தான். அதனால் தான் அவர்கள் என் மூலம் இந்த உலகத்தில் வந்து பிறந்தார்கள். நாம் தான் ஆச்சன் ஆத்தை பிள்ளைகளுக்கு பொறுப்பெடுத்தோம். ஆனால் நீங்கள் அதற்கு நன்றியாக இல்லை. எல்லயருமே எம்மை பிறத்தியாக நடத்தினீர்கள். நீங்கள் கேட்டபடி இவர் செய்யவில்லை என்றதும் விலகி நின்றீர்கள்.

யோகநாதனுடன் பரத்தின் தகப்பனது அமைப்புகள் முடிவுற்றன. நீங்கள் யோகர் மூலம் கேட்டு, பின் யோகேந்திரா Lowyer மூலம் அவருக்கு சிறுபங்கு என்று கேட்டபோது இவர் கைகட்டி, வாய் பொத்தி "ஓம்" பட்டிருக்கலாம். நான் அதில் தலையிடவில்லை. முறைப்படி செய்யத்தான் உதவி செய்தேன். இல்லாவிட்டால் நான் சமுதாயத்திலும் உங்களைவிட குறைந்த பதவி உள்ளவவாகிறேன்.

எங்களது ஒவ்வொரு செயலும் சமுதாயத்திலும் ஒரு தாக்கத்தைக் கொடுக்கும். தமிழர்கள் கலாசாரத்தின் பெயரில் அநியாயம் செய்துதான் இப்ப குடும்பங்கள் உறவினர்களை போரில் இழந்து கஷ்டப்படுகிறார்கள். அடுத்த தலைமுறைக்கு நாம் அந்த ஒழுங்கீனங்களை எமது குடும் பங்கள் மூலம் குடுத்தால் நாமும் அடுத்த பிறவியில் ஒழுங்கீனமானவர் களாகிறோம். அந்த ஒழுங்கீனத்தில் எங்களுக்கு பங்களிப்பில்லாமல் இருக்க நாங்கள் இந்த வழக்கு மூலம் பட்ட கஷ்டங்கள் எமக்கு உதவும் - முக்கியமாக பரத்திற்கு அது தேவைப்பட்டது. அது அவர் குடும்பத்திற்கு முக்கியமாக தகப்பனுக்கு பட்ட நன்றிக்கடனை கழிக்க உதவியது. எனது நம்பிக்கையின்படி ஒருவர் இறந்தாலோ, நாம் அவரை விட்டு நிரந்தரமாகப் பிரிந்தாலோ - அவரது கஷ்டங்களில் பங்கு கொண்டிருந்தால் - அவரது நல்ல குணங்கள் எமக்கும் சேரும். அவை அவரது புண்ணியங்கள். ஆனால் அவரது கஷ்டங்களில் பங்கு கொள்ளாமல், அல்லது அதற்கு மேலாக அவரிடமிருந்து பலன், சொத்துக்கள் அனுபவித்தால் - அவரது பாவங்கள் எமக்குக் கூடாத குணங்களாக வந்து சேரும்.

யோகநான் அநாதைபோல மூன்று நேரமும் வெளியில் இருந்து சாப்பாடு எடுத்த பொழுது அதில் பங்கு கொள்ளாத சகோதரங்கள் - பரம் உட்பட - அன்றிலிருந்து உறவில்லை. அப்பதான் அவர் உங்கள் சகோதரன் என்ற உறவில் இறந்தார். செய்யாவிட்டாலும் கஷ்டத்தில் பங்கு கொள்பவர்கள் சொந்தங்கள். சொந்தங்கள் மூலம் நாம் அவர்களது நல்ல குணங்களை எமதாக்குகிறோம். அவர்களும் அப்படியே.

நீங்கள் தர்மப்படி நடந்திருந்தால் இவரை படித்தவராக கொண்டு இதில் தலைமைகொள்ள வசதிப்படுத்தியிருப்பீர்கள். இவர் உங்கள் ஒருவரது தயவுமில்லாமல் Australia வந்து, Masters படித்து பின் Citizen ஆனார்.

அதில் அந்த நோவில் பங்கு கொள்ளாத உங்களுக்கு என்ன உரிமை இருந்தது உங்கள் பிள்ளைகளை இவரது பராமரிப்பில் அனுப்ப? கும்பலில் கோவிந்தா போடுவது நீங்கள் உறவினர் என்று காட்ட. அதாவது அந்தமாதிரி வேலைகளை நீங்கள் செய்வது. அதற்கு கூலியாக இப்ப பங்கு கேட்டால் நீங்கள் அந்தக் குடும்பத்திற்கே கடன், ஆழமான நோவில்

பங்கு கொள்ளாதவர்களுக்கு “மரியாதை” என்ற வழி நன்றிக் கடன் கழிக்க இருப்பதை எமது பெரியவர்கள் வழிகாட்டி உள்ளனர். ஆனால் உங்கள் பிள்ளைகளோ, செந்திலோ, அந்த வழியைப் பின்பற்றவில்லை. போனகிழமை, இவரது Engineer நண்பன் தன்னை செந்தில் வந்து பார்த்ததாக இவருக்கு சொன்னார். யோகரின் 50ஆவது பிறந்தநாளை கொண்டாட, செந்திலும் இன்பாவும் Sydney வந்ததாக. வேணுவின் கலியாணம் Sydney யில் நடந்ததையும், அதில் செந்திலும் இன்பாவுமே வேணுவிற்கு தாய், தகப்பனாக நின்று தெத்தம் பண்ணிக் கொடுத்ததையும் அவர்தான் இவருக்கு அறிவித்தார். கேவலமாக இருந்தது.

இவரது மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று உங்களுக்கு யோசிக்க முடியவில்லை என்றால் நீங்கள் இவருக்கு உறவில்லைதான். சொந்தமும் அதனால் வரும் பொது பலன்களும் ஒன்று சேரும் பொழுதுதான் உறவு உருவாகிறது. உங்களுக்கு தேசவழமை தெரியாது - அனுபவத்தாலோ, அறிவாலோ, ஆனால் இவரைவிட தகப்பனிடமிருந்துகூட சொத்துக்களை பெற்றீர்கள். அதைவிட்டுக்குடுத்த இவருக்கே தகப்பன் கூடிய சொந்தமாகிறார், சீதனம் குடுக்கவில்லை என்று Courtஇல் சொல்லி நீங்கள் இவருக்கு கடன்பட்டுள்ளீர்கள். இப்படி எதிர் வழக்காடாமல் இவர் ¼ பங்கு எடுத்திருந்தாலும் - அவருக்கும் அந்தக் கடனில் பங்கு வந்திருக்கும். இந்த வழக்கின் மூலம் இவரும் என்னைப் போன்ற மறுமணம் முடித்த பெண்கள். இளக்காரப்படுத்தப்படாமலிருக்க பங்களித்திருக்கிறார். மேலும் திருமணத்திற்குப்பின் சீதனம் எடுத்த பெண்கள் பங்கு கேட்பது பிழை என்பதை நிலைநாட்ட பங்களித்திருக்கிறார். அதுவே அவரது சந்ததிகளுடன் இப்பவும், எப்பவும் அவரை இணைக்கும் சக்திகள். அதுதான் பாசமாம் பற்றறுக்கும் பாரியனே என்பதின் அர்த்தமும். சட்டப்படி காசு சொத்து வந்தால் அது உங்களது கடன்களைக் குறைக்கும். கடனை வேளைக்கு கட்டாவிட்டால் - நன்றி மூலமென்றாலும் - அது பாவமாகிறது அப்படி உங்களுக்கு பாவம் வராமலிருக்க நீங்கள் இந்த Caseக்காக செய்த செலவுகளும், வேலைகளும், வேறு கஷ்டங்களும் உதவும். நாம் எல்லாரும் குடும்பத்திலும் சமுதாயத்திலும் எமது வாழ்க்கைக்கு வசதிப்படுத்தியவர்களுக்கு கடன் படுகிறோம். அந்தக்

கடனை மனமுவந்து நன்றி செலுத்தினால் உடனேயே அடைத்து இருவர் ஒருவராகிறோம். படிப்படியாக செய்வதென்றால் சேவை பெற்றவர் சேவை செய்தவருக்கு மரியாதை பண்ணவேண்டும். அதுவே எமது மூதாதைகள் எமக்கு காட்டிய வழி நீங்கள் சொல்லித்தான் கடன் உங்கள் தம்பிக்கு இருந்ததென்றால் சகோதரிமார்கள் குடும்பத் தலைவிகளாகிறார்கள். உங்கள் தகப்பனார் அல்ல. அதை எப்படி இவர் ஏற்றுக் கொள்ளமுடியும். ஏற்றுக் கொண்டால் அது உண்மையென்றால் தகப்பனால் வந்த கல்வி மூலம் இவருக்கு இப்ப இருக்கும் வேலை இருக்காது. உங்கள் பப்பா குடும்பத்திற்காக பட்ட கஷ்டங்களை இவர் மறக்காமல் இருப்பதாலும் தகப்பனது அமைப்பை இன்றுவரை மதித்ததாலும் தான் அவருக்கு படிப்பு சம்பந்தமான வேலைகள் அமைந்தன. அதே படிப்பால்தான் நான் அமைந்தேன். குடும்பம் என்றால் நம்பிக்கை மூலம் உறவு கொள்வது. பணம், பண்டம் மூலம் வெளிப்படுத்தப்படுவது உண்மை என்றால் அது இருவரையும் பிரித்துவிடும். உங்கள் விஷயத்தில் தகப்பனுக்கு நன்றியாக இருந்தவர்களையும் இல்லாதவர்களையும் பிரித்துவிடும். யோகநாதனின் காசைக் கண்டதும் உங்களுக்கு அந்தப் பிரிவுதான் வட்டுக்கோட்டை படித்த சமுதாயத்திலிருந்து வந்தது. இதற்காகத்தான் “இளம்பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது” என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.

உங்கள் குடும்பத்தில் எமது குடும்பத்தில் இல்லாத ஒரு வழக்கம்- சகோதரிகள் - முக்கியமாக ஆத்தை தான் தான் சகோதரங்களைப் பராமரித்தா என்று கூறியது. அம்மா இருந்தும் நானும் எனது அக்காவும் வீட்டு வேலைகள் செய்து தம்பியையும், அம்மா தம்பியை பெற்றிருந்தபோது அப்பாவையும் பராமரித்தோம். வேலை செய்வதால் மாத்திரம் உரிமை உருவாகாது. எமது வேலையின் பலனை ஒறுத்து பகிரும்போது தான் உரிமை உருவாகிறது. எப்ப எனது வேலையின் பலன் உங்களுக்கு தேவைப்பட்டதோ அப்பவே எனக்குத்தான் உங்களில் உரிமை உண்டு. எனது உயர்வில் உண்மையை வெளிப்படுத்தினால் அது குடும்பத்தை படித்த சமுதாயத்துடன் இணைக்கும். யோகர் நடத்தும்பொழுது தலையிருக்க வால் ஆடுவது போல, நீங்கள் மூவரும் உங்கள் மகன்மாரில் தங்கியிருப்பதால் இந்த விஷயங்களை அவர்கள் மூலம் வெளிப்படுத்துகிறீர்கள். நானும்

பரமும் எமது பிள்ளைகளில் தங்கி இல்லை. என்னை கலியாணம் முடித்ததால் பரத்துக்கு வந்த பெரும் தன்மதிப்பு அதுதான். பிள்ளைகள்கூட கடமையில் தவறினால் நான் கண்டிப்பேன். அவர்கள் கேட்காவிட்டால் நான் என்னை விலத்திக் கொள்வேன். அது நான் தானாக உருவாகக் காரணமாக இருந்த குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் நான் கடன் கழித்து சேவை செய்கிறேன் என்பதை எனக்கு உறுதிப்படுத்துகிறது. அதில் யோகநாதனுக்கும் பங்கு குடுக்கிறேன். எப்படி என்ற அமைப்பின் மூலம் அவரது வாழ்க்கையின் பெறுமதியை கூட்டியுள்ளேன். உங்கள் மட்டத்தில் நீங்களும் அப்படிச் செய்திருந்தால் நாங்கள் வேறு நீங்கள் வேறு – உண்மையாகவே – உங்கள் விதிமுறைப்படி எனது வழிப்படி இது யாரெல்லாம் யோகநாதனுக்கு மரியாதை பண்ணி அவரை வழியனுப்பி விடுகிறார்களோ – அவர்கள் எல்லாருக்கும் அவரது நல்ல குணங்களில் பங்குவரும் ஒரு பாதை. காசை மட்டும் வைத்துக் கணக்குப் பார்த்தால் அவருக்கு காசு கொடுத்தவர்கள் மட்டுமே கேட்கலாம். யோகரோ, சிறீயோ கொடுக்கவில்லை. நீங்கள் கொடுத்திருந்தால் அதை உங்கள் வாக்கு மூலம் கொடுத்து உறுதிப்படுத்தி எடுங்கள். நாம் குறுக்கே நிற்கமாட்டோம். இல்லாவிட்டால் இதிலிருக்கும் குறை நிறைகள் சட்ட அமைப்புகளுக்கே செல்லும்.

இப்படிக்கு

**கஜலஷ்மி பரமசிவம்**